# சமூக அறிவு நூல்

## ஐந்தாம் புத்தகம்

ஐந்தாம் பாரத்திற்குரியது

[புதிய பாடத்திட்டப்படி]

எம். ஆர். ஸ்ரீனிவாசன், பி.ஏ., எல்.டி.,
தலைமை ஆசிரியர், மதுரைக் கல்லூரி உயர்நிலைப்பள்ளி, மதுரை.

வர்தா பதிப்புக் கழகம்
திருவல்லிக்கேணி : : சென்னை

முதற் பதிப்பு—மே 1949
மறு பதிப்பு—1956

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Fort St. George Gazette dated 19—5—1954
Supplement to Part I-B, Page 112]

*All Rights Reserved*

Kabeer Printing Works, Madras (3118)

# முகவுரை

இப்புத்தகம் சென்னைக் கல்வி இலாகா அதிகாரிகளால் 1949-இல் பிரசுரிக்கப்பட்ட பாடத்திட்டத்தை அனுசரித்து எழுதப் பெற்றுள்ளது. மாணவர்கள் வருங்காலத்தில் நல்ல நாகரிக மக்களாக விளங்கவேண்டுமென்பதே சமூகப் பாடத்திட்டத்தின் நோக்கமாகும். உலக மக்கள் அனைவரும் ஒரு தாயின் மக்கள்— சகோதரர்கள் என்ற உணர்ச்சி கொண்டு சண்டை பூசல் இல்லாமல் ஒற்றுமையுடனும், நேச மனப்பான்மையுடனும் வாழ இத்திட்டம் இன்றியமையாத தொன்றாகும். எனவே தேசப் பற்றுக் கொண்டு சமூகத் தொண்டில் ஈடுபட்டு, சமூக முன்னேற்றத்திற்குப் பாடு படவேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும்.

சமூக முன்னேற்றத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. தற்காலத்திய பொருளாதாரப் பிரச்னைகளையும், அவற்றின் முன்னேற்றத்திற்கான வழிகளையும் மாணவர்கள் அறிந்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். இந்த அறிவே பிற்காலத்தில் அவர்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு மிகவும் பயன்படும். இக்கருத்துக்கொண்டே நமது நாட்டின் பழைய நாகரிகமும், கலைப்பண்பும் இப்புத்தகத்தில் மிகத் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன. நம் நாட்டின் தற்போதைய நிலையையும், அதன் காரணங்களையும், நாட்டின் முன்னேற்றத்திற்கு நாம் செய்ய வேண்டிய காரியங்களையும் புத்தகத்தின் மூலம் நன்கு அறிந்து மாணவ உலகம் மேன்மையுற இந்நூல் அவர்களுக்குப் பெரிதும் பயன்படுமென்று எதிர்பார்க்கிறேன்.

மதுரை,<br>30-5-49

எம். ஆர். ஸ்ரீனிவாசன்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | இந்தியா | | |
| 1. | இந்தியா ஓர் உபகண்டம் | ... | 1 |
| 2. | உலகத்தில் இந்தியாவின் இருப்பிடம் | ... | 3 |
| 3. | இந்தியாவின் இயற்கை அமைப்பு | ... | 5 |
| 4. | முக்கியமான ஆறுகள் | ... | 9 |
| 5. | தட்ப வெப்ப நிலை | ... | 15 |
| 6. | நீர்ப்பாசனமும் அதன் அவசியமும் | ... | 19 |
| 7. | ஜனத் தொகையும், ஜன நெருக்கமும் | ... | 22 |
| 8. | இரண்டு நாடுகள் | ... | 23 |
| 9. | இந்தியாவின் இயற்கைப் பிரிவுகள் | ... | 26 |
| II. | நமது விலைபொருள்கள் | | |
| 1. | முக்கியமான உணவுப் பொருள்கள் | ... | 29 |
| 2. | தோட்டப் பயிர்கள் | ... | 33 |
| 3. | மலைப் பயிர்கள் | ... | 35 |
| 4. | வறண்ட பிரதேசத்தில் விளையும் பருத்தி | ... | 39 |
| 5. | காட்டில் விளையும் பொருள்கள் | ... | 42 |
| 6. | தாதுப் பொருள்கள் | ... | 44 |
| 7. | வாணிபம் | ... | 50 |
| III. | துறைமுகங்களும் போக்குவரவு மார்க்கங்களும் | ... | 52 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| IV. | இந்தியாவின் இயற்கைப் பிரதேசங்கள் | | |
| 1. | இமயமலைப் பிரதேசம் | ... | 63 |
| 2. | சிந்து ஆறு பாயும் பிரதேசம் | ... | 64 |
| 3. | கங்கை—பிரம்மபுத்திரா சமவெளி | ... | 66 |
| 4. | ராஜபுதனமும், மத்திய இந்தியாவும் | ... | 68 |
| 5. | தக்காணப் பீடபூமி | ... | 69 |
| 6. | மேற்குக் கரைப் பிரதேசம் | ... | 70 |
| 7. | கிழக்குக் கரைப் பிரதேசம் | ... | 71 |
| V. | சென்னை ராஜ்ய மக்களின் வாழ்க்கை நிலை | ... | 74 |
| VI. | ஆர்டனன்ஸ் சர்வே படம் படித்தல் | ... | 78 |
| VII. | தென் இந்தியாவின் வரலாறு | | |
| 1. | தென் இந்தியாவின் பழங்குடி மக்கள் | ... | 81 |
| 2. | ஆதி சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்கள் | ... | 82 |
| 3. | தென் இந்திய வாணிபமும் நாகரிகமும் | ... | 85 |
| VIII. | வட இந்தியாவின் வரலாறு | | |
| 1. | மொகஞ்சோதாரோ நாகரிகம் | ... | 87 |
| 2. | ஆரியரின் வருகை | ... | 90 |
| 3. | இருக்கு வேதகால மக்களின் நிலைமை | ... | 93 |
| 4. | இதிகாசங்களும் அவை உண்டான காலத்து நாகரிகமும் | ... | 95 |
| 5. | இதிகாச கால நாகரிகம் | ... | 96 |
| IX. | புகழ்பெற்ற மன்னர்களும், சக்கரவர்த்திகளும் | | |
| 1. | சந்திர குப்தர் (கி. மு. 323—298) | ... | 98 |
| 2. | அசோகர் (கி. மு. 273—232) | ... | 101 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 3. | கனிஷ்கர் (கி. பி. 120—162) | ... | 107 |
| 4. | மகா குப்தர்களும் இந்து மறு மலர்ச்சியும் (கி. பி. 320—647) | ... | 108 |
| 5. | ஹர்ஷ சக்கரவர்த்தியார் (கி. பி. 606—647) | ... | 115 |
| 6. | பல்லவர் (கி. பி. 225—890) | ... | 119 |
| 7. | பல்லவ ஆட்சியின் பயன்கள் | ... | 121 |
| 8. | பிற்காலச் சோழ அரசர்கள் | ... | 125 |
| 9. | கிருஷ்ணதேவராயர் | ... | 129 |
| 10. | இந்தியாவில் முஸ்லிம் செல்வாக்கு | ... | 132 |
| 11. | பாபர் (கி. பி. 1526—1530) | ... | 141 |
| 12. | அக்பர் மகா சக்கரவர்த்தி (கி. பி. 1556—1605) | ... | 145 |
| 13. | ஔரங்கஜீப் (கி. பி. 1658—1707) | ... | 154 |
| 14. | சிவாஜியும், ஸ்வராஜ்யத் தோற்றமும் | ... | 160 |
| X. | மாபெரும் மதங்கள் | ... | 168 |
| XI. | ஐரோப்பியரின் வருகை | ... | 189 |
| XII. | நமது சுதந்திரப் போராட்டம் | ... | 218 |
| | கலைச்சொற்கள் | ... | 237 |

# SYLLABUS IN SOCIAL STUDIES FOR THE REORGANIZED SECONDARY SCHOOL COURSE

## FORM V

1. India compact sub-continent; its position in the world; physical configuration; important rivers; climatic conditions. Irrigation and the need for it. Density of population. The two Dominions. Natural Regions of India.

A. Our economic products: The great food crops; wheat, rice and millets. The plantation crops: sugar, jute and oil seeds. The crops of the hills: tea, coffee and spices. The dry region crop: cotton. The produce of the forests: timber, sandalwood and rubber. The mineral resources: coal, iron, manganese, mica and gold. Production for consumption and production for export. Trade and commerce.

B. The major and minor sea-ports and their hinterlands. Centres of inland trade. Our country's position in world trade. Means of communication and transport.

C. A detailed study of the regions of India.

D. A human geography of Madras Presidency with special emphasis on cultural traits.

E. A study of the topography of the locality with the aid of the one-inch map of the survey of India.

2. *South India*: Prehistoric excavations. The early Chola, Chera and Pandya kingdoms. Karikala, Chenguttuvan and Nedunčelian. Oversea trade and commerce with the West. South Indian culture and civilization.

3. *Northern India*: The Indus valley civilization—The coming of the Aryans—Hinduism—The Epics.

4. Great kings and emperors:—Chandragupta and Asoka. The Rule of Dharma Kanishka. The Gandhara Art. The Great Guptas. Hindu renaissance. Harsha. Association with China. The Pallavas: Mahendravarman and Narasimhavarman. Art and Architecture in the Deccan and South India. Rajaraja and Rajendra. The glory of Tamil culture—Greater South India. Krishnadeva Raya—Telugu renaissance. Muslim influence over India. Babar and Akbar.

Process of Indianization. Aurangazeb's reaction. Rise of Shivaji and the birth of Swarajya.

5. Great religions. The Vedic religion of the Aryans, Mahavira and Jainism. Gautama and Buddhism. St. Thomas—the Apostle of Christ and the spread of Christianity in India. Tiruvalluvar, Sankara, Ramanuja, Madhvacharya and Chaitanya.

The impact of Islam. Mahomed the Prophet and his teachings. New syntheses—Bhakti-cult—Kabir, Nanak and Amir Khusru—*samarasa* of Ramalinga.

The fusion of Indian culture : Arya Samaj and Brahmo Samaj; Ramakrishna and Vivekananda; Mahatma Gandhi, the apostle of religious oneness.

6. The coming of the Europeans. The English East India Company—the Founders of the British Empire in India—Clive and Warren Hastings—Wellesley and Dalhousie. The good and bad of the British rule in India.

7. Our struggle for freedom. Fundamental unity of India. The Indian National Congress. Ranade, Gokhale, Mehta, Naoroji, Besant and Tilak ; the Home Rule Movement. V. O. Chidambaram Pillai and Subramania Bharati ; Deshodharaka Nageswara Rao. Social reformers : Kandukuri Virasalingam Pantulu. Stages in the grant of Self-Government. Mahatma Gandhi's leadership. Hindu-Muslim unity. Triumph of non-violence.

Quiad-e-azam Mohamad Ali Jinnah and the two nation theory. Sir Stafford Cripp's offer of 1942 and after. The Cabinet Mission of 1945. Grant of Independence. Pakistan and the Indian Dominion. The merger and accession of the States. The problem of the linguistic distribution of the Provinces. The New Spirit.

Provincial administration. Free India in the World Order.

## Suggestions for activities

1. Group work of a relief model of India with important rivers. Group study of weather reports from newspapers and keeping a record (for at least three months) of temperature, rainfall, and barometric pressure (if possible) of the school region. Dressing up in different costumes of the various peoples of India.

A. Collecting specimens and localizing them on maps (Group

Project); or gathering, arranging and exhibiting materials on tables or shelves for the study of the rest of the school.

B. Group study of a railway guide or shipping news. Newspaper reports of commodity imports "just unpacked." Visit to a harbour, a warehouse or a goods shed.

C. Excursions to places of local cultural interest—temples, museums, etc. Preparing dinner menus of each group. Dressing up in costumes of various groups.

E. Going out to identify the features on the one-inch map.

2, 3, 4. Visit to places of architectural excellence and to archaeological sections of museums wherever possible. Collection of pictures. Dramatization of historical incidents like *Vanjikandam of Silapathikaram* or the Palnad ballads. Stories from the Ramayana and the Mahabharata. An epidiascope or a lantern lecture. Imaginative letters from Asoka to the class. A group study of Asoka's edicts. A simple exhibition of arts during the Gupta period with the idea of interpreting them to school pupils. Natya and music. Tree planting. Social service—hospital or prison visiting. Collecting fruits for patients, etc. Dramatization of scenes from *Mudrarakshasa*, *Malavikagnimitram*, *Sakuntalam*, *Sivagamiyin Sabatham*, *Partheban Kanavu*, *Potana*, *Yogi Vemana*, etc. Songs of similar repute in Kannada and Malayalam.

5. Kalakshepams on lives of saints. Dramatization. Common-prayers. Visits to places of worship.

A discussion on the contribution of the western nations to our life in India.

7. Learning songs of Bharatiyar in Tamil and songs of similar repute in other languages. Recitation of famous speeches. Depicting incidents in the lives of men and women who made our nation.

Study of Current events.

## ACKNOWLEDGEMENTS

The Publisher's thanks are due to the following for permission to reproduce their photographs :—

1. British Information Services, Madras.
2. Press Information Bureau, Government of India, Madras.

# சமூக அறிவு நூல்

# ஐந்தாம் பாரத்திற்குரியது

## I. இந்தியா

### 1. இந்தியா ஓர் உபகண்டம்

நாம் வசிக்கும் இந்நாட்டிற்குப் பல பெயர்கள் உண்டு. பண்டைக்காலத்தில் பரதன் என்னும் சக்கரவர்த்தி சீரும் சிறப்பும் பெற்று ஆண்டுவந்தான் என்பதற்காக இது பாரத தேசம் என்றும், பரத கண்டம் என்றும் பெயர்பெற்றது. பிற்காலத்தில் இதை இந்தியாவென்றே பிறநாட்டவர் குறிப்பிட்டு வந்தனர். இன்றும் இந்நாடு இப்பெயரையே தாங்கி வருகிறது.

இந்தியா இயற்கையில் ஒரு தனி நாடாக விளங்குகிறது. உலகத்திலுள்ள ஏனைய நாடுகளிலிருந்து இது தனியாக வேறுபடுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு இயற்கை எல்லைகள் உண்டு. பிற நாட்டினருடன் வீணில் எல்லைத் தொல்லைகள் வைத்துக் கொள்ளாமல் நம்மவர் எளிதில் நமது நாட்டின் பரப்பைக் குறிக்கக்கூடியவாறு கடவுள் நமக்கு அழியா எல்லைகளை அமைத்திருக்கிறார். இவ்வெல்லைகளைக் கடந்து நாம் வெளிநாட்டு மக்களுடன் உறவு கொண்டாடலாம். அதனால் நமக்கென இயற்கையாகவே எல்லைகள் அமைந்திருப்பது பற்றி நாம் பெருமைப்பட வேண்டியதுதான். பல நாடுகளுக்கு இயற்கை எல்லை இல்லாததால் அந்நாடுகள் பிறநாடுகளுடன் அடிக்கடி எல்லைச் சண்டை இடவேண்டி வருகிறது. சீனத்துக்கு இயற்கை எல்லை மேற்றிசையில் இல்லை. ஆகையால் அவ் வழியே பகைவர்கள் வரக்கூடுமென்று எண்ணிய சீனர்கள், மேற்றிசையில் பல்லாயிரக்கணக்கான மைல்கள் நீளம் சுவர் கட்டி வைத்திருக்கிறார்கள். நம் நாட்டிற்கு இயற்கையாகவே சுவர் அமைந்திருக்கிறது.

நமது நாட்டின் வடக்கு, வடகிழக்கு, வடமேற்குக் கோடியில் எல்லைச் சுவர் இருக்கிறது. இதைத்தான் நாம் இமயமலைத் தொடர் என வழங்குகிறோம். இம்மலைத் தொடர் பல வரிசைகளாக நமது நாட்டைக் காக்க ஏற்பட்ட பல அரண்கள் போல் அமைந்திருக்கின்றது. நம் நாட்டின்மீது பகைவர் படையெடுத்து வராமல் தடுக்கும் சுவர்போல் உறைபனி மூடிய இம் மலைகளிருப்பினும், ஆங்காங்கு இவற்றினிடையே சிறிய வழிகளையும் கடவுள் ஏற்படுத்தி இருக்கிறார். இதன் நோக்கம் என்னவாக இருக்கக்கூடும்? இந்தியர் மற்ற நாடுகளுடன் உறவு கொண்டாடுவதற்காக இவ்வழிகளை ஏற்படுத்தியிருக்கலாம்.

இந்தியா ஒரு தனி நாடு என்று கூறினோம். ஆனால் நாடு என்னும் சொல் குறிப்பிடும் நிலப்பரப்பில் எவ்வளவு வேறுபாடுகள் இருக்கின்றன என்பதைப் பாருங்கள். சீனம், அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்தியா, ருஷியா ஆகிய இவை நாடுகளே. ஸ்விட்ஸர்லாந்து, அல்பேனியா, லக்ஸெம்பர்க் என்னும் மிகச் சிறிய நிலப்பரப்புக்களும் நாடுகளே. இந்தியா மிகப் பெரிய நாடுகளுள் ஒன்று. ஐரோப்பா கண்டத்தில் ருஷிய நாடு ஒன்று மட்டும் இல்லை என்றால் ஐரோப்பா முழுவதும் நமது நாட்டிற்கு ஈடாக இருக்கும். நமது நாட்டு அறிஞருள் ஒருவரான திருவாளர் மின்னு மஸானி என்பவர் 'நமது இந்தியா' என்னும் நூலை இயற்றியுள்ளார். அதில் அவர் இந்தியாவிற்குள் ஐரோப்பிய நாடுகள் எவ்வாறு அடங்குகின்றன என்பதைப் புள்ளி விவரங்களுடன் நன்கு விளக்கியுள்ளார். நம் நாடு எவ்வளவு பரந்தது பார்த்தீர்களா? இந்தியா பெரிய நாடாக இருப்பதோடு இங்குப் பலவகைத் தட்ப வெப்ப நிலைகளும் இருக்கின்றன. வட தென் துருவப் பகுதிகளின் குளிர்ச்சியை இமயமலைப் பகுதியில் காணலாம். ஆப்பிரிக்கா கண்டத்து வெப்பம் மிகுந்த பாகத்திற்கு ஈடாக நமது நாட்டிலுள்ள வடமேற்கு மாகாணங்களைக் கூறலாம். மழை மிகுந்த அஸ்ஸாமும், வறண்ட பாலைவனமாகிய தார் நிலப்பரப்பும் நமது நாட்டில் அடங்கியுள்ளன. பீடபூமிகளில் தக்காணம் சிறப்பு மிக்கது. ஆறுகளையடுத்துள்ள செழித்த சமவெளிகளில் சிந்து—கங்கைச் சமவெளி புகழ் பெற்றது.

மக்களைக் கவனியுங்கள். வெள்ளையரையும் வெட்கப்படச் செய்யும் நிறத்தையுடைய காஷ்மீரிகள் முதல் நீக்ரோவரைப் போன்ற கருத்த மேனியுடையவர்வரை எல்லா நிறத்தவரும் இங்கே ஒருங்கே சேர்ந்து வாழ்கின்றனர்; பதினெட்டு பெருப்

மொழிகளைப் பேசுகின்றனர். நாடு ஒன்று; மக்கள் ஒரே வகையினர். ஆனால் காட்சிகள் பலதிறப்பட்டவை. எனவே, நமது நாட்டை ஒரு கண்டம் ஒன்று சொல்லலாம். ஆயின் இஃது ஆசியா கண்டத்தில் அடங்கியதாதலின் இதனை ஓர் உபகண்டமென்று கூறுவதுண்டு.

## 2. உலகத்தில் இந்தியாவின் இருப்பிடம்

உலகப் படத்தில் நமது இந்தியாவின் இருப்பிடத்தைக் கவனியுங்கள். இஃது ஆசியா கண்டத்தின் தென் பாகத்தில் இருக்கிறது. இக்கண்டத்தின் தென் பாகத்தில் மூன்று பெரிய தீபகற்பங்களிருப்பதைப் பாருங்கள். அம்மூன்றினுள் நடுவிலிருக்கும் தீபகற்பம் இந்தியா ஆகும். இந்தியாவுக்கு மேற்கில் அரபிக்கடலுக்கப்பாலுள்ள தீபகற்பம் அரேபியா ஆகும். கிழக்கில் வங்காளக்குடாக் கடலுக்கப்பாலுள்ளது இந்தோ சீனம், மலேயா நாடுகளடங்கிய தீபகற்பம். இந்தியாவுக்குத் தெற்கில் இந்துமகா சமுத்திரம் இருக்கிறது. இதன் வழியே சென்று ஆப்பிரிக்காவையும், ஆஸ்திரேலியாவையும் அடையலாம். எனவே, இந்தியா ஆசியாவின் நடுநாயகமாக விளங்குகிறது; மேலும், ஆசியா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா கண்டங்களின் நடுவில் மிகவும் முக்கியமான இடமாக அமைந்திருக்கிறது. ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஆஸ்திரேலியா, நியூஜிலந்து நாடுகளுக்குப் போகும் கப்பல்கள் இந்தியா வருகின்றன. அவை மத்தியதரைக் கடல், செங்கடல் வழியாக வந்தால் பம்பாய்த் துறைமுகத்தில் தங்கிவிட்டே போக வேண்டும். அல்லது அவை அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் நேரே தெற்காகச் சென்று ஆப்பிரிக்காவின் தென் கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக்கொண்டு கிழக்கு முகமாகப் பிரயாணம் செய்தால் இந்தியாவைக் கடந்தே போகவேண்டும்.

இக்காலத்தில் வானவழி சிறப்பிடம் பெற்றுள்ளது. உலகை வலம் வரும் வான வழிகள் அனைத்தும் இந்தியாவினூடே அமைந்திருக்கின்றன. எனவே உலகப் பெரும்பாதைகளினூடே நிலம், நீர், வானம் இம்மூன்றில் எந்தப் பாதையாயினும் சரி— இந்தியா இருப்பதால் உலகத்திலே இது மிக முக்கியமான ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. மீண்டும் உலகப் படத்தைப் பாருங்கள். உலகிலுள்ள நிலப்பாகத்தின் பெரும் பகுதி வட கோளார்த்தத்தில் இருக்கிறது. ஒரு சிறு பகுதி மட்டுமே தென்

கோளார்த்தத்தில் இருக்கிறது. இந்தியா பூமத்திய ரேகைக்கு அருகில் இருப்பதால் தென் பாகத்திலுள்ள நாடுகளுக்கும், வட பாகத்திலுள்ள நாடுகளுக்கும் இங்கிருந்து விரைவாகவும் எளிதாகவும் போகமுடியும்.




உலகத்தில் இந்தியாவின் இருப்பிடம்
[வட துருவத்திலிருந்து பார்ப்பது போல]

படத்திலுள்ள ரேகைகள் சம்பந்தமாக இந்தியாவின் இருப்பிடத்தைக் கவனிப்போம். வடக்கு அட்சரேகை 8° முதல் வடக்கு அட்சரேகை 37° வரையில் தெற்கு வடக்காகச் சுமார் 29°—

அதாவது சுமார் 2000 மைல்—பரவியிருக்கிறது. கிழக்கு மேற்காகவும் 2000 மைல் தொலே பரவியுள்ளது. 68° கிழக்கு தீர்க்க ரேகை முதல் 97° கிழக்கு தீர்க்கரேகை வரையிலும் பரவி இருக்கிறது. 80° கிழக்கு தீர்க்கரேகையைச் சற்றேறக்குறைய மைய மத்தியான ரேகையாகக் கொள்ளலாம்.

கிழக்கு கோளார்த்தத்தில் இந்தியா நடுநாயகமாக விளங்குகிறது ; மேற்குக் கோளார்த்தத்திலுள்ள அமெரிக்காவிலிருந்து தொலேவில் எட்டி இருக்கிறது. உலக மக்களில் முக்கால் பங்குக்கு மேற்பட்ட மக்கள் இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளிலே வாழ்கின்றனர். எனவே இந்தியா உலகத்தில் ஒரு முக்கிய நாடாகும்.

## 3. இந்தியாவின் இயற்கை அமைப்பு

இயற்கை அமைப்பையொட்டி இந்தியாவை நான்கு முக்கியமான பாகங்களாகப் பிரிக்கலாம். அவையாவன : (1) வடக்கிலுள்ள பரந்த மலேப்பகுதி, (2) வட இந்தியாவின் பாகமாகிய சிந்து-கங்கைச் சமவெளி, (4) தீபகற்ப பாகத்திலுள்ள மேட்டுப் பகுதியாகிய தக்காணப் பீடபூமி, (4) தக்காணத்திற்கிருபுறங்களிலும் கடலேயடுத்துள்ள குறுகிய நீண்ட சமவெளிகள். இவற்றுள் இரண்டாவது பாகமான சிந்து-கங்கைச் சமவெளியின் சில பாகங்கள் தனியரசாகப் பிரிந்து பாகிஸ்தான் என்னும் பெயருடன் தனிநாடாக அமைந்துவிட்டன. ஆயினும், அவை இயற்கையில் இந்நாட்டின் மற்றைய பாகங்களோடு இணைந்திருப்பவையாதலால் அவைகளேயும் சேர்த்தே இந்தப் பாடத்தில் விவரித்துள்ளோம்.

### வடக்கிலுள்ள பரந்த மலேப் பிரதேசம்

இமயமலேத் தொடர்கள் இந்தியாவை ஆசியாவின் மற்ற பாகங்களிலிருந்து பிரித்துவிடுகின்றன என்பதைக் கவனித்தோம். இமயமலேத் தொடர்கள் பாமீர் முடியிலிருந்து தென்கிழக்காக, பிரம்மபுத்திரா ஆற்றுக்கும் சிந்து ஆற்றுக்கும் நடுவில் செல்கிறது. இம்மலேயில் மூன்று முக்கியமான தொடர்கள் இருக்கின்றன. அவை மூன்றும் தனித்தனியே செல்கின்றன. அவைகளில் வடக்கில் இருப்பது வெளித்தொடர். அதில் உப்பு மலே, சிவாலிக்மலே முதலிய பல மலேகள் இருக்கின்றன. நடுவி

லிருப்பது இமயமலையின் முக்கியமான தொடர். மூன்றாவதாகத் தென் பக்கத்தில் செல்வது உள்தொடர். இரண்டாவது மூன்றாவது தொடர்களுக்கு நடுவில்தான் அழகிய காஷ்மீர் பள்ளத்தாக்கு இருக்கிறது. உலகத்திலேயே மிகவும் உயரமான மலை இமாலயம் என்பது உங்களுக்குத் தெரியும். இங்கே மிக உயர்ந்த சிகரங்கள் பல இருக்கின்றன.




இந்தியாவின் இயற்கை அமைப்பு

இமயமலைத் தொடர்களுக்கு வடக்கில் கைலாசமலை இருக்கிறது. அதன் அருகில் ஸத்லெஜ், பிரம்மபுத்திரா ஆறுகள் உற்பத்தியாகி, ஒன்று மேற்கு முகமாகவும் மற்றொன்று கிழக்கு

முகமாகவும் பாய்ந்து, குறுகிய கணவாய்களின் வழியாக இந்நாட்டிற்குள் புகுந்து, வட இந்தியாவின் மேற்கிலும் கிழக்கிலும் பாய்கின்றன.

சிந்து ஆற்றுக்கு மேற்கில் கீர்தார், சூலைமான், இந்துகுஷ் மலைகள் இருக்கின்றன. இம்மலைகள் இந்தியாவை ஈரான் பீட பூமியினின்றும் பிரித்து விடுகின்றன. இந்த மலைகளிலுள்ள கணவாய்களின் வழியாகத்தான் வடமேற்கு நாடுகளிலிருப்பவர்கள் இந்நாட்டிற்குள் வந்தார்கள். கணவாய்களுள் முக்கியமானவை கைபர் கணவாய், போலன் கணவாய், கோமல் கணவாய் என்பன. கைபர் கணவாய் பிஷாவரிலிருந்து காபூல் போகும் வழியிலிருக்கிறது. போலன் கணவாய் காண்டஹார், குவெட்டாவிலிருந்து சிந்து மாகாணத்திலுள்ள ஜாகோபாபாத் என்னுமிடத்திற்குப் போகும் வழியில் இருக்கிறது.

இமய மலையின் கிழக்குக் கோடியிலிருந்து அஸ்ஸாம், பர்மா பகுதிகளுக்கு மலைத்தொடர்கள் பிரிந்து செல்கின்றன. அவைகளுக்கு ஆங்காங்குத் தனித்தனிப் பெயர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இமயமலையின் கிழக்குக் கோடியிலுள்ள நாகமலைகளினின்றும் ஜயந்தியா, காசி, காரோமலைகள் மேற்கு முகமாகச் செல்கின்றன.

## சிந்து-கங்கைச் சமவெளி

இமயமலைப் பிரதேசத்திற்குத் தெற்கில் சிந்து-கங்கைச் சமவெளி இருக்கிறது. இதன் மத்தியிலுள்ள தார் பாலைவனம் நீங்கலாக மற்றைய பாகங்கள் யாவும் மிகவும் செழிப்பானவை. இதன் ஒரு பாகம் மேற்கில் சிந்து ஆறும், அதன் உப ஆறுகளும் பாயும் சமவெளி. மற்றொன்று கிழக்கில் கங்கை, பிரம்மபுத்திரா ஆறுகளும், அவைகளின் உப ஆறுகளும் பாயும் பிரதேசம். எனவே, இச்சமவெளி மலைகளால் சூழப்பட்டு மேற்குக் கடலிலிருந்து கிழக்குக் கடல்வரை பரவியுள்ளது. தெற்கில் மத்திய இந்திய மேட்டுப் பிரதேசமும், சாத்பூரா, விந்திய மலைகளுமே இதன் எல்லையாகும். உலகின் மக்கள் தொகை பெருகியுள்ள மிகவும் செழிப்பான பிரதேசங்களில் இது ஒன்று. இதன் செழிப்புக்குக் காரணம் இவ்விரு ஆறுகளும் எண்ணற்ற கிளையாறுகளும் கொண்டு வரும் வண்டல்மண் படிவதுதான். இச்சமவெளி மேடுபள்ளங்களற்றது; கடல் மட்டத்திலிருந்து 700 அடிக்கு உயரமான நிலம் எங்கு

மில்லாதது; போக்கு வரவு மார்க்கங்கள் ஏற்படுத்துவதற்கும், பயணம் செய்வதற்கும் மிகவும் வசதியானது. இங்கே பாயும் ஆறுகளில் பெரும்பான்மையானவை இமயமலைப் பிரதேசத்தில் உற்பத்தியாவதால், பனி உருகி வெள்ளப்பெருக்கு எடுக்கும். அவை எக்காலத்தும் வற்ருத ஜீவ நதிகள்.

## தக்காண பீடபூமி

விந்தியா, சாத்பூரா மலைகளுக்குத் தெற்கில் தென் இந்தியாவின் உட்பிரதேசத்தில் இரண்டு மலைத்தொடர்களுக்கு மத்தியில் தக்காணம் இருக்கிறது. இது முக்கோண வடிவமானது. இது வடக்கே அகன்றும், தெற்கே குறுகியும் இருப்பதை நீங்கள் படத்தில் கவனியுங்கள். இது மிகவும் பழைய கடினமான பாறைகளால் அமைந்தது. இதுபோன்ற பழைய பாறைப் பிரதேசம் மத்திய ஆப்பிரிக்காவிலும், ஆஸ்திரேலியாவின் மேற்கு பீடபூமியிலும் இருக்கின்றன. ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, தக்காணம்—இவைகளைப் பிரிப்பது இந்துமகா சமுத்திரமும் அதன் பாகங்களும். இந்நீர் நிலைகளின் அடியிலுள்ள நிலப்பாகத்தின் அமைப்பும் பழயை பாறைகளாலானதே. எனவே, பூகர்ப்ப ஆராய்ச்சியாளர்கள் இம்மூன்று நிலப்பாகங்களும் ஒரு காலத்தில் ஒன்ருகச் சேர்ந்து தொடர்ச்சியான நிலமாக இருந்தனவென்று கூறுகிருர்கள். அந்த நிலப் பாகத்தைத் தங்கள் ஆராய்ச்சி நூல்களில் காண்ட்வனு என்று விவரிக்கிருர்கள். இலங்கைத் தீவு ஒரு காலத்தில் இந்தியாவோடு சேர்ந்திருந்ததென்றும், பூமியினுட் பகுதியில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் கடல் பொங்கி எழுந்து இலங்கைத் தீவை இந்தியாவிலிருந்து வேறுபடுத்தியதென்றும் கூறப்படுகிறது. இந்தக் கடினமான பழங்காலப் பாறையின் விளிம்பே மேற்குத் தொடர்ச்சி மலையும், கிழக்குத் தொடர்ச்சி மலையுமாகும். மழை ஏராளமாகப் பெய்ததன் பயனாக நாளடைவில் மேட்டு நிலத்தின் பக்கத்திலுள்ள பாகம் கரைந்துபோய் விளிம்பு மாத்திரம் அப்படியே நின்றுவிட்டபடியால் அது மலைத் தோற்றத்தை அளிக்கிறது. இதற்கு மடியாமலை என்பது பெயர். இமயமலை மடிப்புமலை. பூமியின் அதிர்ச்சியினுல் நிலத்தின் மேல்பரப்பு அசைய, மிருதுவான பாகம் கடினமான பாகத்தின் மீது மோதும்போது தழும்புபோன்ற மடிப்பு ஏற்பட்டது. அதுதான் மடிப்பு மலையாகும். தென் இந்தியாவிலுள்ள கிழக்கு, மேற்குத் தொடர்ச்சி மலைகள் மடியா மலைகள்.

தக்காணப் பீடபூமி வடமேற்கிலிருந்து தென்கிழக்காகச் சரிந்திருக்கிறது. படத்தில் ஆறுகளின் போக்கை நீங்கள் கவனித்தால் இது தெளிவாக விளங்கும். இந்தப் பீடபூமியின் வடக்கிலுள்ள நர்மதை, தபதி ஆறுகள் மாத்திரம் மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக் கடலில் விழுகின்றன. இதன் வட மேற்குப் பிரதேசத்தில் எரிமலை மண் படிந்திருக்கிறது. இது மிகவும் செழிப்பான களிமண் பிரதேசம். ஆதலால்தான் இங்கே பருத்தி விளைவு மிகுதியாக இருக்கிறது. இந்தப் பீடபூமியின் மிகவும் மேடான பாகம் இதன் தென் கோடியில் இருக்கிறது. இங்கே நீலகிரி மலை இருக்கிறது. கிழக்குத் தொடர்ச்சி மலையும், மேற்குத் தொடர்ச்சி மலையும் இங்கே கூடுகின்றன. கிழக்குத் தொடர்ச்சி மலை இங்கே நின்றுவிடுகின்றது. ஆனால் மேற்குத் தொடர்ச்சி மலை மாத்திரம் இன்னும் தெற்கு நோக்கிச் செல்கிறது. இந்தத் தொடர்ச்சியில்தான் பாலக்காட்டுக் கணவாயும், ஆனைமலை, ஏலமலை, பழனிமலை முதலியனவும் இருக்கின்றன.

கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைக்குமுள்ள வேறுபாடுகளைக் கவனியுங்கள். மேற்குத் தொடர்ச்சி மலை விட்டு விட்டு இராமல், ஒரே தொடர்ச்சியாய் இருக்கிறது. பாலக்காட்டுக் கணவாய் இருக்குமிடத்தில்தான் விடுபட்டிருக்கிறது. ஆனால் கிழக்குத் தொடர்ச்சிமலை ஆங்காங்கு ஆறுகளால் அறுபட்டுப் பல பள்ளத்தாக்குக்களாலும், கணவாய்களாலும் துண்டிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக நோக்குமிடத்து மேற்குத் தொடர்ச்சி மலையின் உயரம் மிகுதி. கிழக்குத் தொடர்ச்சி மலையின் உயரம் குறைவு.

தக்காணப் பீடபூமியின் வழியாகப் பாயும் ஆறுகளில் கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, பெண்ணையாறுகள் முக்கியமானவை.

## 4. முக்கியமான ஆறுகள்

இந்தியாவில் பாயும் ஆறுகளை இருவகைகளாகக் கொள்ளலாம். வட இந்தியாவில் பாய்வன ஜீவநதிகள். இவை எக்காலத்திலும் வற்றாதவை. கோடையில் இமயமலை மீதுள்ள பனிப்பாறைகள் உருகுவதால் இவ்வாறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படும். ஆனால் தென்னிந்தியாவிலுள்ள ஆறுகளில் மழைக் காலத்தில் மட்டுமே வெள்ளம் ஏற்படும். மழையில்லாத காலத்தில் அவை வறண்டு கிடக்கும்; சிறு ஓடைகளாக ஓடிக்கொண்டிருக்கும் ; சில முற்றிலும் வற்றிப்போவதுண்டு.

## வட இந்தியாவிலுள்ள ஆறுகள்

வட இந்தியாவிலுள்ள ஆறுகளில் சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா ஆகியவை முக்கியமானவையாகும். அவைகளைப் பற்றியும், அவைகளின் கிளையாறுகளைப் பற்றியும் படிப்போம்.

சிந்து ஆறு: இது இமயமலைத் தொடர்களுக்கு வட பக்கத்தில் கைலாச மலைக்கருகில் உற்பத்தியாகிறது; அங்கிருந்து வட மேற்காகக் காஷ்மீர் நாட்டுப் பள்ளத்தாக்கின் வழியாக ஓடி, திசையை மாற்றிக்கொண்டு தென்மேற்காகப் பாய்கிறது; இவ்விடத்தில் இரண்டு மலைகளுக்கிடையே குறுகிய, வெகு ஆழமான பள்ளத்தாக்கின் வழியாகப் பாயும்போது மிகுந்த வேகத்தை அடைகிறது; அட்டாக் என்னுமிடத்திற்குச் சமீபத்தில் மலைப் பிரதேசத்தை விட்டுச் சம நிலத்தை அடைகிறது; சமநிலத்தில் பாய்கையில் ஆப்கானிஸ்தானத்திலிருந்து காபூல் என்னும் ஆறு வந்து இதனுடன் கூடுகிறது. பிறகு சிந்து ஆறு பஞ்சாப், சிந்து மாகாணங்களின் வழியாகப் பாய்கிறது. பஞ்சாப் மாகாணத்தில் பஞ்சநதம் என்னும் கிளையாறு இதில் வந்து சேருகிறது. பஞ்சநதம் என்பது ஐந்து ஆறுகளின் சேர்க்கையால் ஏற்பட்ட ஆறு. அவை ஜீலம், சீனுப், ராவி, பியாஸ், ஸத்லெஜ் என்பவை. இவைகளை ஸிந்து ஆற்றின் உப ஆறுகள் என்று சொல்லுவது வழக்கம். ஆயினும், இவை தனித்தனியே வந்து சிந்துவில் கூடுவதில்லை. ஜீலம் சீனுபுடன் சேருகிறது; அந்தக் கூட்டு ஆறு ராவி ஆற்றுடன் கூடுகிறது; ஸத்லெஜுடன் பீயாஸ் ஆறு கலந்து பின்னர் இரண்டும் முன் கூறிய ஆறுகளுடன் கலக்கின்றன. இங்ஙனம் ஒன்றுபட்ட ஆறு ஸத்லெஜுடன் கலந்து பஞ்சநதம் என்னும் பெயருடன் சிந்துவில் விழுகிறது. இவ்வைந்து ஆறுகளும் பாய்வதால் அந்தப் பிரதேசத்திற்குப் பஞ்சாப் என்னும் பெயர் ஏற்பட்டது. இவ்வைந்து ஆறுகளிலிருந்தும் கால்வாய்களை வெட்டிப் பஞ்சாப் மாகாணத்தின் பற்பல பாகங்களுக்கும் நீர்ப்பாசன வசதி செய்திருக்கிறார்கள்.

சிந்து ஆறு, பஞ்சாப் மாகாணத்தைக் கடந்த பிறகு உப ஆறு எதுவும் இதில் வந்து கலப்பதில்லை. ஏன்? பஞ்சாப் மாகாணத்திற்குத் தென்மேற்கிலுள்ள சிந்து மாகாணம் வறண்ட பாலைவனப் பிரதேசமாகும். ஹைதராபாத் நகரைக் கடந்த பிறகு இவ்வாறு பல கிளைகளாகப் பிரிந்து கழிமுகத்தை ஏற்படுத்திக் கொண்டு கடலில் கலந்துவிடுகிறது. இவ்வாற்றில் அடிக்கடி பெருவெள்ளம் வந்து அதன் போக்கு மாறுபடுவதால்

சேதம் மிகுதியாக ஏற்படுகிறது. இதனுலேயே, அதன் கரையில் முக்கிய நகர் ஒன்றும் இல்லை. கராச்சித் துறைமுக நகரம் இதன் கழிமுகத்திற்குச் சிறிது தொலைவில் இருக்கிறது. ஸக்கர் என்னு மிடத்தில் அரசியலார் இவ்வாற்றின் குறுக்கே ஓர் அணை கட்டி யிருக்கிருர்கள். அதற்கு லாயிடு அணை அல்லது ஸக்கர் நீர்த் தேக்கம் என்பது பெயர். இதன் பயனுகப் பல கால்வாய்களை வெட்டி, நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீரை வறண்ட பாலைவன நிலங்களுக்குப் பாய்ச்சி நல்ல சாகுபடி செய்யப்படுகிறது.

**கங்கையாறு:** இந்துக்கள் கங்கையாற்றை ஒரு புனித ஆருகக் கருதுகிருர்கள். ஏன் தெரியுமா? படத்தில் இவ்வாறு பாயும் பிரதேசத்தைப் பாருங்கள். அந்தப் பிரதேசத்தில் எண்ணற்ற நகரங்களும், கிராமங்களும் இருக்கின்றன.



ஸக்கர் நீர்த்தேக்கம்

இதனுல் அங்கே மக்கள் நெருங்கி வாழ்கின்றனர் என்பது நன்கு விளங்குகிறது. இவ்வளவு மக்கள் நெருக்கமாக இருப்பானேன்? முன் பாடமொன்றில் கங்கைச் சமவெளி செழிப்பான நில மென்று படித்திருக்கிறீர்கள். இங்கே நிலம் வண்டல்மண் படிந்து செழிப்பானதாக இருப்பதற்குக் கங்கை ஆறே முக்கியக் காரணமாகும்.

கங்கை ஆறு மத்திய இமயமலைத் தொடர்ச்சியில் கங்கோத் திரி என்னும் ஒரு பனிக்கட்டியாற்றுக் குகையொன்றில் உற்பத்தி யாகி மலைமீது நெடுந்தூரம் பாய்கிறது. இங்ஙனம் மலைமீது

பாயும்போது பனிக்கட்டிகள் உருகி இதில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. இங்கே இவ்வாறு சலசலவென்று பாயும் காட்சி அழகானதாகும். இவ்வியற்கை வனப்பைக் கண்டு களிக்க ஐரோப்பியர் பலர் வந்த வண்ணமிருக்கின்றனர். மலைகளைக் கடந்தபிறகு இவ்வாறு ஹரித்துவாரம் என்னுமிடத்தில் சமவெளியை அடைகிறது. இதன் வலது கரைப்பக்கம் ஓர் உபநதி வந்து கூடுகிறது. அதன் பெயர் யமுனை. யமுனை இவ்வாற்றில் அலஹாபாத் என்னுமிடத்தில் வந்து கலக்கிறது. யமுனையாறும் இமயமலையில் உற்பத்தியாகிறது; இவ்வாறும் புகழ்பெற்றது; புனிதமானதெனக் கருதப்படுவது. இதன் கரையில் டில்லி, ஆக்ரா போன்ற புகழ்பெற்ற நகரங்களிருக்கின்றன.

கங்கையாறு கிழக்கு முகமாகப் பாய்ந்து வங்காளத்தை அடையுமுன் அதன் இடக்கரையில் கோமதி, கோக்ரா, கண்டகீ என்னும் இமயமலையில் உற்பத்தியாகும் ஆறுகள் வந்து கூடுகின்றன. அதன் பிறகு, வலக்கரைப் பக்கம் சோனையாறு வந்து சேருகிறது. கங்கையாறு, ராஜமஹால் குன்றுகளைச் சுற்றிக்கொண்டு தென்முகமாகப் பாய்ந்து ஒரு பெரிய கழிமுகப் பிரதேசத்தை ஏற்படுத்திக் கொள்கிறது. இந்தக் கழிமுகப் பிரதேசம் பிரம்மபுத்திரா ஆற்றுக்கும் மேகனு ஆற்றுக்கும் பொதுவானது கழிமுகப் பிரதேசத்தில் கங்கையாறு பல கிளைகளாகப் பிரிந்து கடலில் சங்கமமாகின்றது. கிளைநதிகளில் ஹூக்ளி முக்கியமானது. இதன் கரைமீதுதான் கல்கத்தா நகரம் இருக்கிறது.

பிரம்மபுத்திரா ஆறு: இது இமயமலையின் வெளித்தொடருக்கு அப்பால் திபெத்து நாட்டின் பக்கத்தில் கைலாச மலைக்குக் கிழக்கில் உற்பத்தியாகிக் கிழக்குமுகமாகப் பாய்ந்து அஸ்ஸாம் ராஜ்யத்தில் தென்முகமாகத் திரும்பி ஓடுகிறது. இவ்வாற்றின் மொத்த நீளத்தில் சற்றேறக்குறைய பாதித்தூரம் இமயமலைக்கு வடக்கில் இருக்கிறது. இது அஸ்ஸாம் சமவெளியில் 500 மைலுக்குமேல் பாய்ந்து, காரோ மலையைச் சுற்றிக்கொண்டு பிறகு கழிமுகப் பிரதேசம் ஏற்படுத்திக் கொள்ளுகிறது. இந்தக் கழிமுகம் கங்கைக் கழிமுகப் பகுதியோடு கலந்துவிடுகிறது. கங்கை, சிந்து ஆறுகளைப் போல் பிரம்மபுத்திரா நீர்ப்பாசன வசதிகளைச் செய்துகொள்ளப் பயன்படவில்லை. ஆயினும் இந்த ஆறு ஏராளமான வண்டல்மண் கொண்டுவருவதால் அது அஸ்ஸாமிலும் கீழ்வங்காளத்திலும்

ஆற்றையடுத்த நிலங்களின்மீது படிந்துவிடுகிறது. இதனுல், நெல், சணல் உற்பத்தி பெருக ஏதுவாகிறது. பிரம்மபுத்திரா வில் கடல் முகத்திலிருந்து 800 மைல் தொலேவுவரை ஓடங்கள் செல்ல வசதியுமுண்டு. கங்கை, பிரம்மபுத்திரா ஆறுகளின் பொதுக் கழிமுகப் பிரதேசத்தின் கடற்கரையோரப் பாகம் சுந்தரவனம் என்னும் பெயர்கொண்டது. இது சதுப்பு நிலம்; சுகாதாரக் குறைவான இடம்; இங்கே மக்களேக் காய்ச்சல் பீடிக்கும்.

## தென் இந்திய ஆறுகள்

தென் இந்திய ஆறுகளுக்கும் வட இந்திய ஆறுகளுக்கும் உள்ள வேறுபாடுகளேப் பற்றி இதுவரை கூறியுள்ளோம். இங்கே தென் இந்திய ஆறுகளில் முக்கியமானவற்றைப்பற்றிச் சிறிது தெரிந்துகொள்வோம்.

**கோதாவரியாறு:** இது தக்காணத்தின் வடமேற்குக் கோடியில் மேற்குத் தொடர்ச்சி மலேயில் நாஸிக் என்னும் பட்ட ணத்திற்குச் சமீபத்தில் உற்பத்தியாகி, பீடபூமி வழியாய்த் தென் கிழக்காகப் பாய்ந்து, கிழக்குத் தொடர்ச்சி மலேயைக் குடைந்து கொண்டு, கிழக்குக் கடற்கரைச் சமவெளியை அடைகிறது. இவ் வாற்றின் தண்ணீரை ஹைதராபாத் நாட்டு மக்கள் அண்மையில் பயன்படுத்தத் துவக்கியிருக்கிருர்கள். கோதாவரியாறு கிழக்குத் தொடர்ச்சி மலேயைக் கடக்குமிடத்தில் அரசியலார் ராமபாத சாகரம் என்னும் ஒரு தேக்கத்தை ஏற்படுத்தத் திட்டங்கள் வகுத்திருக்கிருர்கள்; இவ்வாறு கடற்கரைச் சமவெளியில் பாயும்போது இதன் குறுக்கே தவளேஸ்வரமென்னுமிடத்தில் அணே கட்டித் தண்ணீரைக் கால்வாய்களின் வழியாகக் கோதாவரி ஜில்லாவின் பற்பல பாகங்களுக்குக் கொண்டுபோய் நிலங் களுக்குப் பாய்ச்சுகிருர்கள். இதன் கழிமுகப் பரப்பு விரிவானது; மிகவும் செழிப்பானது. இந்தக் கழிமுகப் பகுதியில் பல சிறிய தீவுகள் இருக்கின்றன. அவற்றை இலங்கைகள் என்பார்கள். இந்த இலங்கைகள் புகையிலேக்குப் புகழ் பெற்றவை.

**கிருஷ்ண:** இது பூனுவுக்குச் சமீபத்திலிருக்கும் மஹாப லேஸ்வர் என்னும் மலேவாசத்தலத்திற்கு அருகில் மேற்குத் தொடர்ச்சி மலேயில் உற்பத்தியாகிக் கிழக்கு முகமாகத் தக்கா ணத்தின் குறுக்கே பாய்கிறது. இதில் மைசூரிலிருந்து துங்க பத்திரை என்னும் உப ஆறு வந்து கலக்கிறது. இதுவும்

கிழக்குத் தொடர்ச்சி மலைகளினிடையேயுள்ள பள்ளத்தாக்கின் வழியாகச் சமவெளியை அடைகிறது. விஜயவாடாவில் இவ் வாற்றின் குறுக்கே அரசியலார் ஓர் அணைகட்டித் தண்ணீரைக் கால்வாய்களின் மூலமாகப் பாய்ச்சுகிறார்கள். இதன் கழிமுகப் பகுதி செழிப்பானது. நெற்பயிருக்குப் புகழ் பெற்றது.

காவேரியாறு : இது மேற்குத் தொடர்ச்சி மலையில் குடகு நாட்டில் உற்பத்தியாகித் தக்காண பீடபூமியின் தென் பாகத்தில் மைசூர் நாட்டின் வழியாகப் பாய்ந்து, கர்நாடகச் சமவெளியை அடைகிறது. பீடபூமியிலிருந்து சமவெளியில் வரும்போது சிவ சமுத்திரம் என்னுமிடத்தில் ஒரு நீர் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதிலிருந்து மைசூர் அரசியலார் மின்சாரம் எடுத்துப் பல



மேட்டூர் அணை

தொழில்களை நடத்துகிறார்கள். மேட்டூர் என்னுமிடத்தில் சென்னை அரசியலார் ஓர் அணைகட்டி நீரைத் தேக்கிக் கால்வாய் களின் வழியாகத் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள நிலங்களுக்குப் பாய்ச்சுகிறார்கள்.

இவையன்றி வடபெண்ணை, தென்பெண்ணை, வைகை, தாம்பிரபரணி முதலிய ஆறுகளும் தென்இந்தியாவில் பாய்

கின்றன. இவை யாவும் கிழக்கு முகமாகப் பாய்கின்றன. மேற்கு முகமாகப் பாய்ந்து அரபிக்கடலில் சங்கமமாகும் நர்மதை, தபதி ஆறுகளைப் பற்றி நீங்கள் முன்னரே தெரிந்து கொண்டிருக்கிறீர்கள்.

## 5. தட்ப வெப்பநிலை

பொதுவாக நோக்குமிடத்து, இந்தியாவின் தட்ப வெப்ப நிலை அயனமண்டலத் தட்பவெப்பமாகும். மேலும் நம் நாடு




ஜுலை வெப்பநிலை

பருவக்காற்றுப் பிரதேசத்திலிருப்பதால், காற்றடிக்கும் திசை அவ்வப்போது மாறிக்கொண்டே இருக்கும். இந்தியாவின் சம

வெப்பக் கோடுகளின் படத்தைப் பார்த்தால் வட இந்தியாவை விடத் தென் இந்தியாதான் அதிக வெப்பமான நிலப்பரப்பென்று தெரிகிறது. ஜனவரி மாதப் படத்தில் தெற்கிலிருந்து வடக்கே படிப்படியாக வெப்பநிலை குறைந்துகொண்டே போகிறது.




ஜனவரி வெப்பநிலை

வடக்கே இமயமலைப் பிரதேசத்தில் குளிர்ச்சி மிகுதியாக இருக்கிறது. இக்காலத்தில் சூரியன் மகரரேகையில் தலைக்கு நேராக இருக்கிறது. எனவே, தென் இந்தியாவின்மீது சாய்கதிர்கள் விழுகின்றன. வட இந்தியாவின்மீது விழும் கதிர்கள் இன்னும் மிகவும் சாய்ந்திருக்கின்றன. ஆகையால் வட இந்தியாவில் குளிர்ச்சி மிகுதியாக இருக்கிறது. ஜுலை மாதப் படத்தைப் பார்த்தால் பஞ்சாப், சிந்து, ராஜபுதனப் பிரதேசங்களில் வெப்பம் மிகுந்திருப்பதும், கிழக்கிலும், தெற்கிலும் சிறிதளவு

குறைந்திருப்பதும் தெரியும். இந்தியாவின் வடமேற்குப் பிரதேசத்தில் மழை குறைவு. அது வறண்ட பிரதேசம்; மேலும் கடலிலிருந்து நெடுந்தொலைவில் இருக்கிறது. ஆகையால் இங்கே வருஷவாரி வெப்ப வியாப்தி 40° வரையில் இருக்கிறது. இதுபோன்ற தட்ப வெப்பநிலைக்குக் கண்ட தட்ப வெப்பம் என்பது பெயர். இந்தியாவின் தென்கோடியில் ஜனவரி, ஜுலை இரண்டு காலங்களிலும் 80° சம வெப்பக்கோடு செல்வதைக் கவனியுங்கள். இங்கே கடல் அருகில் இருப்பதால் ஏற்றத் தாழ்வுகள் குறைவாக இருக்கின்றன.




குளிர்கால மழை அளவு

குளிர்காலத்தில் குளிர்ந்த காற்று வடகிழக்கிலிருந்து வீசுகிறது. இதன் காரணம் என்னவென்றால் காற்றின் அழுத்தம் தெற்கில் குறைவாக இருக்கிறது. இந்த வட கிழக்குக் காற்று

தென் இந்தியாவின் கிழக்குக்கரைப் பிரதேசத்தில் வீசுவது தவிர மற்றெல்லாப் பாகங்களிலும் வறண்ட காற்றுக இருக்கிறது. இது அக்டோபர் முதல் ஏப்ரல் வரையிலும் வீசும். கோடையில் சிந்து வடிகால் பிரதேசத்தில் அழுத்தம் குறைவாக இருக்கிறது. இங்கே வெப்பமும் மிகுதி என்பதைக் கவனித்தோம். பூமத்திய ரேகைக்குத் தெற்கில் வீசும் தென்கிழக்குத் தடக்காற்றுக்கள் பூமத்திய ரேகையைக் கடந்துகொண்டு வரும்போது பூமியின் சுழற்சியால் திசைமாறி இந்தியா, பர்மா முதலிய தேசங்களில் தென் மேற்குப் பருவக்காற்றுக வீசுகிறது. இந்தக் காற்று பரந்த




கோடைகால மழை அளவு

கடலைக் கடப்பதால் ஈரமானது. இந்தியாவில் மேற்குக்கரை நாடுகள், வங்காளம், அஸ்ஸாம் முதலிய பாகங்களுக்கும் பர்மாவுக்கும் ஏராளமான மழையைக் கொடுக்கிறது.

வங்காளக்குடாக்கடலின் வழியாக வீசும் பருவக்காற்று வங்காள மாகாணத்தின் வழியாகச் சென்று கங்கைச் சமவெளியில் வீசுகிறது. அது கங்கைச் சமவெளியில் மேற்கு நோக்கிச் செல்லுமளவும் மழை படிப்படியாக குறைந்துகொண்டே வருகிறது. தீபகற்ப இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சிமலை பருவக்காற்றின் போக்கைத் தடுப்பதால் அம்மலைகளுக்குக் கிழக்கிலுள்ள பீடபூமியில் மழை குறைவு.

சிந்து வடிகால் பிரதேசமும், காஷ்மீரமும் வறண்ட பிரதேசங்கள். பொதுவாக இந்தியாவெங்கும் ஜுன் முதல் செப்டம்பர் வரைதான் மழை பெய்கிறது. ஆனால் சென்னை ராஜ்யத்தின் கிழக்குக் கரையின் தென்கிழக்குப் பாகத்தில் மட்டும் அக்டோபர் முதல் ஜனவரி வரையில் பெய்கிறது. இந்தக்காலத்தில் தென்மேற்குப் பருவக்காற்று பின்வாங்கி வடகிழக்குப் பருவக்காற்று என்னும் பெயரால் வீசுகிறது. வடபஞ்சாபிலும், அஸ்ஸாமிலும் குளிர்காலத்திலும்கூடச் சிறிது மழை பெய்கிறது.

**இந்தியாவின் பருவங்கள் ;** மேற்கூறிய இரண்டு பருவக்காற்றுக்கள் வீசும் காலங்களைச் சேர்த்து நான்கு பருவங்களாகப் பிரிக்கலாம்.

1. டிசம்பர் முதல் மார்ச்சு வரை வடகிழக்கிலிருந்து வறண்ட வடகிழக்குப் பருவக்காற்று வீசுகிறது. அக்காலத்தில் மழை குறைவு.
2. கோடைகாலம்—ஏப்ரல், மே மாதங்கள். இக்காலத்தில் தென்மேற்குப் பருவக்காற்று வீசத் தலைப்படுகிறது.
3. தென் மேற்குப் பருவக்காற்றுக் காலம்—ஜுன் முதல் செப்டம்பர் வரை. இக்காலத்தில் நல்ல பருவக்காற்று மழை உண்டு.
4. வடகிழக்குப் பருவக்காற்று வீசத் துவக்கமாகும் காலம் அக்டோபர் - நவம்பர். இக் காலத்தில் சூறுவளிப் புயற்காற்றுக்கள் வீசும்.

## 6. நீர்ப்பாசனமும் அதன் அவசியமும்

இந்தியாவின் மழைப்பருவங்களும், மழை அளவும் நிலையற்றவை என்று நாம் படித்தோம். விவசாயமே முக்கியமான தொழிலாகக்கொண்டுள்ள மக்களுக்கு, நிலத்தின் விளைவையே நம்பியிருப்பவர்களுக்கு நல்ல நீர் வசதி வேண்டுமல்லவா? மேலும் பஞ்சாப், சிந்து, தக்காணம் முதலிய பாகங்களில் மழை

மிகவும் குறைவு. நீர்ப்பாசன வசதிகள் இருந்தாலன்றி இங்கே விவசாயம் ஓங்காது. நமது நாட்டில் எவ்வகையான நீர்ப்பாசன வசதிகள் இருந்து வருகின்றன என்பதைக் கவனிப்போம்.

**கிணறுகள் :** தொன்றுதொட்டு நம்மவர் நீர்ப்பாசனத்திற்காகக் கிணறுகளை வெட்டிக்கொள்கிறார்கள். ஒவ்வொரு கிணறும் ஒரு சிறிய நிலப்பாகத்திற்குப் பாய்ச்சவே உதவும். கிணறுகளுக்கு "பம்பு"கள் வைத்தல் அவசியம். குடியானவன் ஏழையாக இருந்தால் சில குடியானவர்கள் சேர்ந்து ஆழமாகவும், பெரிதாகவும் கிணறு வெட்டிப் "பம்பு" வைத்துக்கொண்டு நீர் வசதி செய்துகொள்ளலாம். இந்தியாவில் நீர்ப்பாசன வசதி பெற்றுள்ள நிலங்களில் நாலில் ஒரு பங்குக்குக் கிணறுகளே தண்ணீரளிக்கின்றன. இந்நாட்டில் சுமார் 135 லட்சம் கிணறுகள் இருக்கின்றன என்று மதிப்பிடப்படுகிறது.

**ஏரிகள் :** மழைக் காலத்தில் கிடைக்கும் தண்ணீரை வீண் போக்காமல் சேகரித்து வைப்பதற்காக ஏரிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இவை தென் இந்தியாவில்தான் மிகுதியாயிருக்கின்றன. பஞ்சாபிலும் சிந்துவிலும் ஏரிகளே கிடையா. ஏன் தெரியுமா? அங்கே மழை மிகவும் குறைவு. பின்னர் அதன் நீரைச் சேகரிப்பதென்பது எப்படி? ஏரிகள் கோடையில் வறண்டு விடுகின்றன. இவைகளை அவ்வப்போது பழுது பார்க்கவேண்டும்.

**ஊற்றுக்கால்கள் :** தென் இந்தியாவில் பாயும் வட பெண்ணை, தென் பண்ணை, பாலாறு போன்ற ஆறுகள் கோடையில் வறண்டு கிடக்கின்றன. ஆனால் அவைகளின் படுகைகளில் ஊற்றுக்கள் தோண்டிக் கால்வாய்களின் மூலமாக அந்தத் தண்ணீரை நிலங்களுக்கு எடுத்துச் செல்வார்கள். இவ்வித வசதி பெற்றுள்ள கிராமங்கள் பல.

**கால்வாய்கள் :** இந்நாட்டு நீர்ப்பாசன வசதிகளுள் கால்வாய்களே முக்கியமானவை. இந்தியாவில் 70,000 மைல் கால்வாய்கள் இருக்கின்றன. நீர்ப்பாசன வசதியைப் பெறும் நிலங்களில் 100-க்கு 60 கால்வாய்ப் பாய்ச்சல் வசதி பெற்றவை. கால்வாய்கள் வெள்ளப் பெருக்குக் கால்வாய்கள், நிரந்தரக் கால்வாய்கள் என இருவகைப்படும். வெள்ளப் பெருக்குக் கால்வாய்கள் வெள்ளம் இருக்கும் காலத்தில் நீர் நிரம்பி இருக்கும். ஆனால் கோடையில் வற்றிப்போகும். நிரந்தரக் கால்வாய்கள் எக்காலத்திலும் நீர் நிரம்பி இருக்கும். சிந்து, கங்கை ஆறு

களின் கால்வாய்கள் நிரந்தரக் கால்வாய்கள். ஆறுகளுக்குக் குறுக்கே அணைகட்டிக் கால்வாய்கள் வெட்டி நீர்பாய்ச்சுகிறுர்




இந்தியாவில் இன்றுள்ள நீர்ப்பாசன வசதிகள்

கள். பஞ்சாப், உத்தரப் பிரதேசத்திலுள்ள தோஆப்பு (இரண்டு ஆறுகளுக்கு மத்தியிலுள்ள பிரதேசம்)களில் இவ்வித வசதி உண்டு.

சிந்து ஆறும், அதன் உப ஆறுகளும் பஞ்சாப் மாகாணத்தைச் செழிக்கச் செய்துவிடுகின்றன. இதனுல் சிந்து மாகாணம் பயன்பெறுமல் இருந்து வந்ததைத் தவிர்க்க அரசியலார் ஸக்கர் அணை கட்டி இருக்கின்றனர். இதைப்பற்றி நீங்கள் முன்னரே படித்திருக்கிறீர்கள்.

நமது அரசாங்கத்தார் பல நூறு கோடி ரூபாய்கள் செலவில் நல்ல நீர்ப்பாசன வசதித் திட்டங்களை அமைத்து அவைகளை உருவாக்கி வருகிறுர்கள். இந்தத் திட்டங்களின் பயனுக இன்னும் 15 ஆண்டுகளுக்குள்ளாக நாட்டின் விளைவு பெரிதும் வளர்ந்து பஞ்சம் பறந்து போகும். நாம் பிற நாடுகளிடமிருந்து உணவுப் பொருள்களை எதிர்பார்க்கும் பரிதாபகரமான நிலைமையும் நீங்கும்.

அண்மையில் தாமோதர் நதித் திட்டத்தில் ஓர் அம்சம் பூர்த்தி அடைந்தது. அதை நமது நாட்டுப் பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு தொடங்கினுர். இதனுல் ஒரிஸ்ஸாவுக்கு ஏராளமான நன்மையுண்டு.

# 7. ஜனத்தொகையும் ஜனநெருக்கமும்

இந்தியாவின் ஜனத்தொகை ஏறக்குறைய 36 கோடி ஆகும். உலக மக்களில் $\frac{1}{7}$ பாகம் இந்தியர் ஆவர். இவ்வளவு திரளான மக்கட் சமூகம் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் சமமாகப் பரவியில்லை. சில பாகங்களில் மக்கள் நெருக்கம் மிகுதி. சில




ஜன நெருக்கம்

பாகங்களில் நெருக்கம் குறைவு. மக்கள் நெருக்கம் அதிகமாயுள்ள பாகங்கள் : செழித்த கங்கைச் சமவெளி, நீர்ப்பாசன வசதி மிகுதியாயுள்ள வடபஞ்சாப், மழை மிக்க மேற்குக் கரைப் பிரதேசம், சுமாரான மழையும் நீர்ப்பாசன வசதியும் பெற்றுள்ள கிழக்குக்கரை நாடு.

மக்கள் நெருக்கம் குறைவான பாகங்கள்—தார் பாலைவனம், பலுசிஸ்தானம், இமயமலைப் பிரதேசத்தின் மேல் பாகங்கள், தராய் காட்டுப் பிரதேசம், சுந்தரவனப் பிரதேசம், அஸ்ஸாமில் காட்டுப் பிரதேசங்கள்.

இந்தியாவிலுள்ள மக்களில் 100-க்கு 90 பேர் கிராமவாசிகள். 10 பேர் மட்டுமே நகரங்களில் வசிக்கிறார்கள். மக்கள் பல இனங்களைச் சேர்ந்தவர்கள். தென்னாட்டில் வசிப்பவர்கள் பெரும்பாலும் திராவிடர்கள். பஞ்சாப், காஷ்மீர், ராஜபுதனம் முதலிய பாகங்களில் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர் மிகுதி. ஆனால் ஆரியர், திராவிடர் எனத் தனித்தனியே கூறிக்கொள்ளக்கூடிய அளவில் மாறுபாடுகள் இக்காலத்தில் காணப்படுவதில்லை. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகச் சேர்ந்து வாழ்ந்து வந்தபடியால் இவர்களுக்குள் இருந்த வேற்றுமைகள் மறைந்துவிட்டன. இதுபோலவே வங்காளம், அஸ்ஸாம் பாகங்களில் மங்கோலியக் கலப்பு ஏற்பட்டிருக்கிறது. வடமேற்கில் துருக்கியர், ஈரானியருடைய கலப்பு மிகுதி. எந்த இனத்தைச் சேர்ந்தவராயினும் இந்நாட்டிலிருப்பவர்கள் யாவரும் இந்தியர்கள்.

நம் நாட்டில் மக்கள் பேசும் மொழிகளும் பலதிறப்பட்டவை. தென் இந்தியாவில் பேசப்படும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலியவை திராவிடக் கூட்டத்தைச் சேர்ந்தவை. ஸம்ஸ்கிருதக் கூட்டத்தைச் சேர்ந்த மராத்தி, குஜராத்தி, ராஜஸ்தானி, பஞ்சாபி, ஹிந்தி, வங்காளி முதலிய மொழிகள் வட இந்தியாவின் பற்பல பாகங்களில் வழங்கப்படுகின்றன. இவைகளுள் ஹிந்தி எல்லோராலும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியது. எனவே அதையே நம் நாட்டுப் பொது மொழியாகக் கொண்டுள்ளனர்.

இமயமலைப் பிரதேசத்தில் சீன மொழிக் கலப்புள்ள மொழிகள் பேசப்படுகின்றன. இந்தியாவின் பழங்குடிகள் பேசிய மொழி முண்டாமொழி எனப்படும்.

## 8. இரண்டு நாடுகள்

இந்தியா இயற்கையில் தனிமை பெற்றது. பெரிய நாடாயினும் இயற்கையில் இது மற்ற நாடுகளினின்றும் வேறுபட்டு இருக்கிறது என்பதை முதல் பாடத்தில் படித்தோம். ஆனால் நம்மவர்களில் ஒருசிலர் இந்நாட்டைத் துண்டாடி இரண்டு

அரசுகளாகச் செய்யவேண்டுமெனக் கூறினர். நாட்டின் நலனை யும் அமைதியான வாழ்க்கையையும் கருதி, நாடும் அவ்வாறே இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இந்தியா என்னும் ஒரு நாட்டில்




இந்தியாவும், பாகிஸ்தானும் (அரசியல்)

பாகிஸ்தான் என்னும் புதிய அரசாங்கம் தோன்றிப் பழைய நாட்டின் சில பாகங்களை உட்கொண்டது. இந்த பாகங்கள் நீங்க

லாக மற்றைய பாகங்கள் யாவும் பழைய இந்திய நாடாகவே நின்றன. பழைய நாட்டின் எந்தெந்தப் பாகங்கள் தனிப்பட்டுப் போயின, எந்தெந்தப் பாகங்கள் பழைய ஏற்பாட்டிலேயே இருக்கின்றன என்பதைக் கவனிப்போம்.

பழைய ஏற்பாட்டில் இந்தியாவில் 11 பெரிய மாகாணங்களிருந்தன. அவையாவன :—சென்னை, பம்பாய், வங்காளம், பஞ்சாப், சிந்து, அஸ்ஸாம், ஒரிஸ்ஸா, பீஹார், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், வடமேற்கு எல்லை மாகாணம். இவைகளில் சிந்து, வடமேற்கு எல்லை மாகாணங்கள் முழுவதும், வங்காளத்தின் கிழக்குப் பாகமாகிய கீழ்வங்காளமும், பஞ்சாபின் மேற்குப் பகுதியாகிய மேற்குப் பஞ்சாபும் பாகிஸ்தானில் சேர்ந்துவிட்டன. பாகிஸ்தானில் சேர்ந்துள்ள பாகத்தில் பெரும்பான்மையானவை இந்தியாவுக்கு வடமேற்கிலும், ஒரு பாகம் கிழக்கிலும் இருக்கின்றன. பாகிஸ்தானில் இவ்விரண்டு பாகங்களுக்கும் தொடர்பு இல்லை. பாகிஸ்தானின் நிலப்பரப்பில் பெரும்பாகம் மேற்கிலிருந்த போதிலும், மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் கிழக்குப் பகுதியில் வசிக்கின்றனர். பாகிஸ்தானின் தலைநகரம் கராச்சி ஆகும். இந்தியாவிலிருந்து வந்த 11 பெரிய மாகாணங்களில் சிந்துவும், வடமேற்கு எல்லை மாகாணமும் பாகிஸ்தானில் சேர்ந்துவிட்டன. பஞ்சாபும், வங்காளமும் பிரிவினை செய்யப்பட்டனவாயினும் அவைகளில் எஞ்சிய பகுதிகள் தனி மாகாணங்களாகவே இருந்து வருகின்றன. எஞ்சியவை சேர்ந்த இந்தியாவில் ஒன்பது மாகாணங்கள் இருந்தன. அவை—சென்னை, பம்பாய், மேல் வங்காளம், கிழ் பஞ்சாப், அஸ்ஸாம், பீஹார், ஒரிஸ்ஸா, மத்திய மாகாணம், ஐக்கிய மாகாணம். இந்தியா குடியரசு நாடாக மாறிய பின்னர் இம்மாகாணங்கள் ராஜ்யங்களென வழங்கப்படுகின்றன. மத்திய மாகாணமும் ஐக்கிய மாகாணமும் தற்போது மத்தியப் பிரதேஷ், உத்தரப் பிரதேஷ் என வழங்கப்படுகின்றன. ஐக்கிய இந்தியக் குடியரசில் இவை அங்கங்களாகும். இவையன்றி இதுவரையில் சுதேச மன்னர்களின் தனியாட்சியில் இருந்துவந்த சுதேச ராஜ்யங்களும் இந்திய ஐக்கிய அமைப்பில் சேர்ந்துவிட்டன. இதைப்பற்றிப் பின்னொரு பாடத்தில் படிப்பீர்கள். இந்தியாவின் தலைநகரம் டில்லி ஆகும். சென்னை ராஜ்யத்தில் தெலுங்கு பேசப்படும் ஜில்லாக்கள் பிரிக்கப்பட்டுத் தனியாக ஆந்திர ராஜ்யம் அமைக்கப்பட்டுள்ளது.

# 9. இந்தியாவின் இயற்கைப் பிரிவு

இந்தியா பரந்த நாடென்றும் இதில் பல திறப்பட்ட தட்ப வெப்ப நிலை, நிலப்பரப்பு, மழை, நீர்வளம், தாவரம் முதலியன




இந்தியாவின் இயற்கைப் பிரதேசங்கள்

இருக்கின்றனவென்றும் கவனித்தோம். எந்தெந்த இடங்கள் எவ்வெவ் வகையான இயற்கை வசதிகளைப் பெற்றிருக்கின்றனவோ அவைகளை அவ்வியற்கைப் பிரிவாகக் கொள்ளலாம். ஓர் இயற்கைப் பிரிவுக்கும் மற்றோர் இயற்கைப் பிரிவுக்கும்

வேற்றுமைகள் காணலாம். ஆனால் ஒரே பிரிவைச் சேர்ந்த பல இடங்களில் சற்றேறக்குறைய ஒரே விதமான நிலைமை இயங்கும்.

இந்தியாவை அடியிற்கண்ட இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம் :

1. குளிர் மிகுந்த காடுகள். அடர்ந்த மலைத்தாவரங்களைக் கொண்ட இமயமலைப் பிரதேசம். இங்கே சுமாரான மழையுண்டு.

2. வறண்ட, நீண்ட வெப்ப வியாப்தியைக் கொண்ட வடமேற்குப் பாகங்கள்.

3. செழித்த வண்டல் படிந்த நிலத்தைக் கொண்ட சம வெளியாய் ஆற்றுப் பாய்ச்சல் கொண்ட கங்கை, பிரம்மபுத்திரா ஆறுகளின் சமவெளிப் பிரதேசம்.

4. சிந்து, ராஜபுதனம் அடங்கிய வறண்ட பாலைவனப் பிரதேசம். இதில் தார் பாலைவனம் அடங்கியுள்ளது.

5. மழை குறைவாயுள்ள புராதன நிலப்பரப்புக் கொண்ட தக்காணம் என்னும் பீடபூமி.

6. மேற்குக்கரை நாடு—இது மேற்குத்தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடையில் இருக்கிறது.

7. கிழக்குக்கரை நாடு–இது கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும் வங்காளக் குடாக்கடலுக்கும் இடையில் இருக்கிறது. இதன் வடபாகம் குறுகியும் தென்பாகம் அகன்றும் இருக்கிறது. இங்கே அக்டோபர், நவம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவக் காற்றினால் மழை பெய்கிறது.

## பயிற்சிகள்

1. இந்தியாவில் வேற்றுமைகள் பல காணப்படுகின்றனவாயினும் இயற்கையில் அது ஓர் ஒற்றுமைப்பட்ட தனி நாடு என்பதை விளக்குக.

2. இந்தியாவை உபகண்டமெனக் கொள்ளலாம். ஏன்?

3. உலகத்தில் இந்தியாவின் இருப்பிடம் மிகவும் முக்கியமானதென் பதை விளக்கச் சான்றுகளைக் கொடுக்க.

4. இந்தியா படம் வரைந்து அதில் முக்கியமரன ஆறுகளையும், மலைத்தொடர்களையும் குறிப்பிடுக.

5. இந்தியா படங்கள் வரைந்து ஒன்றில் ஜனவரி சமவெப்பக் கோடுகள், ஒன்றில் ஜூலை சமவெப்பக் கோடுகள், மற்றொன்றில் மழை பெய்யும் பருவங்கள், அளவுகள் இவைகளைக் குறிப்பிடுக.

6. வடமேற்குப் பிரதேசங்களில் மழை குறைவாயிருப்பதற்கும், தட்ப வெப்ப நிலைமை ஏற்றத் தாழ்வாய் இருப்பதற்கும் காரணங்களைக் கூறுக.

7. நீர்ப்பாசனம் என்றால் என்ன? நம் நாட்டில் ஏற்பட்டுள்ள நீர்ப்பாசன வசதிகள் யாவை? அவைகளின் தேவையை விளக்குக.

8. நம் நாட்டில் மக்கள் நெருக்கம் எங்கே மிகுதி? ஏன்?

9. துங்கபத்திரா, ராமபாதசாகர், ஹீராகுட், கூசி திட்டங்களைப் பற்றிப் படித்து அவைகளினால் எவ்வித நன்மைகள் உண்டென்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

10. இந்தியா இரண்டு நாடுகளாகப் பிரிக்கப்பட்டதன் விளைவாகப் பாகிஸ்தானில் சேர்ந்துள்ள பாகங்கள் எவை? இந்தியாவில் நின்ற பாகங்கள் எவை?

11. இயற்கைப் பிரதேசம் என்றால் என்ன?

12. இந்தியாவை எத்தனை இயற்கைப் பிரதேசங்களாகப் பிரிக்கலாம்? இந்தியா படமொன்று வரைந்து அதில் இயற்கைப் பிரதேசங்களைக் குறிப்பிடுக.

13. இந்தியக் குடியரசு, பாகிஸ்தான் இவற்றின் பரப்பைக் காட்டப் படம் வரைக.

14. இந்தியாவில் நீர்ப்பாசன வசதி விவரங்களைச் சேகரித்துக் கிணறுகள், ஏரிகள், கால்வாய்கள் இவைகளால் ஏற்படும் அனுகூலங்களுக்கு ஏற்றவாறு விகிதாசாரக் கோடுகள் வரைந்து விளக்குக.

15. இந்தியா படமொன்று வரைந்து அதில் அதே அளவில் வரையப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் படங்களைக் கத்தரித்து ஒட்டவும்.

# II. நமது விலைபொருள்கள்

நம் நாடு இயற்கைச் செல்வத்தில் சிறந்தது. இயற்கையிலேயே கிடைக்கும் பொருள்களோடு பல பொருள்களை உற்பத்தியும் செய்கிறோம். இவைகளை நாம் வீணாக்காமல் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். இயற்கை கொடுப்பனவற்றை வீணாக்குபவர் இருந்தும் இல்லாதவராவர். இங்கே நம் நாட்டில் கிடைக்கும் விலைபொருள்களைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளுவோம்.

# 1. முக்கியமான உணவுப் பொருள்கள்

## கோதுமை

நமது நாட்டிலுள்ள மக்களில் பெரும்பாலோருக்கு அரிசி தான் முக்கியமான உணவு. ஆயினும் கோதுமையும் ஒரு முக்கியமான உணவுப் பொருளாக இருந்து வருகிறது. வட




இந்தியாவில் விளையும் முக்கிய தானியங்கள்

இந்தியாவில் மாரி குறைவாயுள்ள பாகங்களில் கோதுமைதான் முக்கியமான உணவுப் பொருள். இது மித தட்பவெப்ப மண்டலப் பயிர்; கரிசல் மண் நிலத்தில் நன்ருகப் பயிராகும்; இதற்கு ஈரமும் வெப்பமும் மிதமாக இருக்கவேண்டும். கோது

மைப் பயிர் புல் வகையைச் சேர்ந்தது. அது வளரும்போது முதலில் புல்போலக் காணப்படும். அப்போது அது செழித்து வளருவதற்கு வேண்டிய ஈரமிருக்க வேண்டும்; மூன்று மாதங்களுக்குப் பிறகு கதிர்விட ஆரம்பிக்கும்; அப்போது கதிரிலுள்ள தானிய மணிகள் பழுப்பதற்கு வெப்பம் வேண்டும். கோதுமைக்கு மிகுந்த குளிரும் மிகுந்த வெப்பமும் கூடா. வட இந்தியாவில் கோதுமை குளிர்காலப் பயிராகச் செய்யப்படுகிறது. ஈரம் மிகுந்த கோடை காலத்தின் முடிவில் அதாவது செப்டம்பர் மாதத்தில் மேனுட்டினர் கோதுமை விதைக்கிருர்கள்.




உலகத்தில் கோதுமை விளைவு

பிப்ரவரி மாத வெப்பத்தின் உதவியால் இது பழுக்கிறது; மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் அறுவடையாகிறது. கோதுமை வைக்கோல் மாட்டுக்குத் தீனியாகும். சராசரியில் நமது நாட்டில் ஏக்கருக்கு 690 ராத்தல் தானியம் கிடைக்கிறது. இங்கிலாந்தில் ஏக்கருக்கு 2000 ராத்தல் தானியம் கிடைக்கிறது. நன்ருக உழுது, எருப்போட்டுச் செழித்து வளருவதற்கான பாடுபட்டால் ஏக்கருக்கு 1500 ராத்தல் கோதுமை எளிதில் கிடைக்கக்கூடும். நமது நாட்டில் வட இந்தியாவில் பஞ்சாப், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீஹார், பம்பாய் ஆகிய இடங்களில் கோதுமை மிகுதியாகப் பயிர் செய்யப்படுகிறது. நமது நாட்டில் கோதுமைப் பயிர் மிகுதியாக இருந்து வந்தபடியால் நம் மக்களுக்கு வேண்டியதை வைத்துக்கொண்டு எஞ்சியதை நம் நாட்டினர் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தார்கள். ஆனல் இப்போது தானியக் குறைவினல் ஏற்றுமதியே கிடையாது. பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து தானியக் குறைவை ஈடு செய்துகொள்ள வேண்டியிருக்கிறது.

கோதுமை பயிரிடுவதில் இந்தியா எந்த நிலைமையில் இருக்கிறதென்பதைக் கவனிப்போம். 1950-ஆம் ஆண்டில் பல்வேறு நாடுகளின் கோதுமை உற்பத்தி விவரம் பின்வருமாறு:

(மில்லியன் மெட்ரிக் டன்கள் கணக்கில்)

| | |
|---|---|
| சோவியத் ருஷ்யா | 40·9 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 35·4 |
| சீனம் | 21·7 |
| இந்தியா | 7·1 |
| கனடா | 18 7 |
| அர்ஜெண்டினா | 7 6 |
| ஆஸ்திரேலியா | 5·2 |
| இங்கிலாந்து | 2·6 |

இந்தியா உலக உற்பத்தியில் சுமார் 9 சதவிகிதம் பங்கு கொள்ளுகிறது.

கனடா, அர்ஜெண்டினா, ஆஸ்திரேலியா தேசங்கள் இந்தியாவை விடக் குறைவாக உற்பத்தி செய்தாலுங்கூட அந்நாடுகள் கோதுமையை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. காரணம்—அந்நாடுகளில் செழிப்பான நிலம் நிறைய இருக்கிறது. மக்கள் தொகை மிகவும் குறைவு. வேண்டியதற்கு மிகுதியாகத் தானியம் பயிரிடப்படுகிறது.

நெல் : தென் இந்தியாவில் பல பாகங்களிலும் வடஇந்தியாவில் சில பாகங்களிலும் அரிசியே முக்கிய உணவுப் பொருள்.




உலகத்தில் அரிசி கிடைக்கும் அளவு

நெல்லுக்கு வண்டல் மண்ணும், மணலும் களிமண்ணும் சேர்ந்த கலப்பு மண்ணும் ஏற்றவை. நெல் விளைவதற்கு வெப்பமும் தண்ணீரும் மிகுதியாக வேண்டும். நெல் வயலில் அறுவடைக்கு முன் சில நாட்கள் வரையில் தண்ணீர் தேங்கி இருக்கவேண்டும். ஆகையால் தண்ணீர் ஓடிவிடாமல் தங்கியிருக்கக்கூடிய வரப்புகளிட்ட சமநிலமே நெல் சாகுபடிக்கு ஏற்றதாகும்.

சென்னை ராஜ்யத்தில் பலவிடங்களில் மூன்று போகம் நெல் அறுவடையாகிறது. நவம்பர் முதல் ஜனவரி வரை அறுவடை

யாகும் முதல் போகமே முக்கியமானது. உலகத்திலேயே தென்கிழக்கு ஆசியாவிலிருக்கும் நாடுகளில்தான் நெற்பயிர் மிகுதி. இவை பருவக்காற்றுப் பிரதேசங்கள். ஆகவே பருவக்காற்றுப் பிரதேசங்களில் நெற்பயிர் மிகுதியாக இருக்கிறது.

முக்கியமான நாடுகளின் நெல் உற்பத்தியும், ஏற்றுமதியும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| நாடு | உற்பத்தி | ஏற்றுமதி |
|---|---|---|
| | (மில்லியன் டன்களில்) | |
| சீனம் | 50 | — |
| இந்தியா | 36·5 | — |
| ஜப்பான் | 12·4 | — |
| பர்மா | 5·8 | 11 |
| இந்தோ சீனம் | 6·4 | 1·2 |

யுத்த காலத்திற்கு முன்பு இந்தியாவிலிருந்து கோதுமை சிறிதளவு இலங்கைத் தீவுக்கு ஏற்றுமதியாகிவந்தது. அது இப்போது நின்று விட்டது.




ஓர் ஏக்கரில் விளைவு

**தினை வகை :** கம்பு, கேழ்வரகு, சோளம், வரகு, தினை, சாமை முதலிய தானியங்கள் தினைவகையைச் சேர்ந்தவை.

இவை யாவும் புன்செய்ப் பயிர்கள். இவற்றிற்கு நீர் மிகுதியாகத் தேவை இல்லை. பருத்தி பயிராகக்கூடிய நிலங்களில் பருத்தியைச் சேகரித்த பிறகும், நெல் பயிராகும் நிலங்களில் நெல் அறுவடையான பிறகும் அடுத்த போகத்திற்கு வேண்டிய அளவு நீர் வசதி இல்லாவிடினும் தினை வகைகளைப் பயிரிடுவார்கள். இவை தனித்தனியாகவும், கலப்புப் பயிராகவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. கம்பும், சோளமும் 6 அடி முதல் 8 அடி வரையில் வளரும். மற்றவை 4 அடி உயரமே வளரும். தட்டை எனப்படும் இவற்றின் தாள் பசுமையாக இருக்கும்போது மாட்டுக்குத் தீனியாகவும், காய்ந்த பிறகு அடுப்பு எரிக்கவும் பயன்படும். வரகுத் தட்டு வைக்கோலாகவும், கேழ்வரகுத் தட்டு கூரைமீது பரப்பவும் பயன்படுகின்றன. இவை பஞ்சாப், பம்பாய், சென்னை ராஜ்யங்களிலும், மத்திய, உத்தரப் பிரதேசங்களிலும் பயிராகின்றன.

**புகையிலை :** இது ஒரு நன்செய்ப் பயிர். இதற்குச் செழிப்பான நிலமும், நல்ல தண்ணீர் வசதியும் வேண்டும். இது




புகையிலை உற்பத்தியளவு

முதலில் அமெரிக்காவில் பயிரிடப்பட்டு வந்தது. அந்தக் கண்டத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் பரவிற்று. நம் நாட்டில் கோதாவரி டெல்ட்டாவில் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த புகையிலை விளைவிக்கப்படுகிறது.

## 2. தோட்டப் பயிர்கள்

**கரும்பு :** நாம் நாள்தோறும் பயன்படுத்தும் உணவுப் பொருள்களில் சர்க்கரை முக்கியமானது. சர்க்கரை வெப்ப மண்டல நாடுகளில் கரும்பிலிருந்தும், மித வெப்ப மண்டலநாடுகளில் "பீட்ரூட்" என்னும் கிழங்கிலிருந்தும் செய்யப்படுகிறது. பீட்டுக் கிழங்கிலிருந்து செய்யப்படும் சர்க்கரை ஐரோப்பிய நாடு

களில், முக்கியமாக ஜெர்மனியில் மிகுதி. தொன்றுதொட்டுச் சர்க்கரை கரும்பிலிருந்தே செய்யப்பட்டு வந்தது. நெல்லைப் போல் கரும்பும் வண்டல் மண்ணில் நன்ருக வளரும். அதற்குத்




கரும்பு உற்பத்தி அளவு

தண்ணீரும் வெப்பமும் மிகுதியாக வேண்டும். ஆனல் வயலில் தண்ணீர் தேங்கக்கூடாது. கரும்பு சாதாரணமாக 6 அடி முதல் 12 அடி வரையில் வளரும். கடற்காற்று வீசும் தாழ்ந்த நிலங்களில் கரும்பு மிகவும் செழிப்பாக வளரும்.

கரும்பு நிறைய விளையும் நாடுகளில் இந்தியா, மேற்கு இந்தியத் தீவுகளில் ஒன்ருகிய கியூபா, ஜாவா, பிரேஸில், பிரிட்டிஷ் கயானு முதலியவை குறிப்பிடத்தக்கவையாகும். இயந்திரங்களின் உதவியால் கரும்பிலிருந்து சாறு பிழிந்து சர்க்கரை எடுக்கப்படுகிறது. இந்தியாவில் கரும்பு பயிரிடுவதில் உத்தரப் பிரதேசம் சிறப்பிடம் பெற்றிருக்கிறது. பஞ்சாப், பீஹார், வங்காளம், சென்னை ராஜ்யங்களிலும் கரும்பைப் பயிரிடுகின்றனர். உலகத்திலேயே சர்க்கரை உற்பத்தியில் இந்தியாதான் முதன்மையானது. இந்தியாவில் 15 லட்சம் ஏக்கர்களில் கரும்பு பயிராகின்றது. ஆனல் இங்கே மக்கள் தொகை மிகுதியாகையால் உள்நாட்டு உற்பத்தி போதாமல் வெளிநாடுகளிலிருந்து, முக்கியமாக ஜாவாவிலிருந்து சர்க்கரையை இறக்குமதி செய்கிருர்கள். இந்தியாவில் பாகிஸ்தான் பாகத்தில் கரும்புச் சாகுபடி மிக மிகக் குறைவு.

சணல்: இது ஒருவகைச் செடி. இதிலிருந்து நார் எடுத்துக் கோணி, கயிறு, கித்தான் முதலியவை செய்கிருர்கள். சணல் பயிரிடுவதற்கு மிகுந்த வெப்பமும், மழையும், சதுப்பான வண்டல் படிந்த நிலமும் வேண்டும். இந்தியாவில் வங்காளத்திலே தான் சணல் பயிரிடப்படுகிறது. கீழ் வங்காளம் பாகிஸ்தானில் போய்விட்டபடியால் இந்தியாவில் முன் கிடைத்து வந்த சணலில் 100-க்கு 15 விகிதம்தான் இப்போது கிடைக்கின்றது. சணல் உற்பத்தியைப் பெருக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

சணல் 10 அடி உயரம் வளரும். அறுவடையான பிறகு செடிகளைக் கட்டுகளாகக் கட்டி 3 வாரங்கள் வரை தண்ணீரில் ஊற வைப்பார்கள். பிறகு வெளியிலெடுத்து அடித்து நாரைப் பிரித்தெடுப்பார்கள். சணற் தொழிற்சாலைகள் கல்கத்தாவிலிருக்கின்றன. இவையாவும் ஹூக்ளி ஆற்றங்கரை மீதுள்ளன. உலகத்திலேயே சணல் தொழிலுக்குக் கல்கத்தா சிறப்பிடம் வகிக்கிறது. இதற்கு அடுத்தபடியாக ஸ்காட்லாந்து நாட்டிலுள்ள டண்டி முக்கியமானது.

**எண்ணெய் வித்துக்கள் :** நிலக்கடலை, எள், ஆமணக்கு, ஆளிவிதை, கொப்பரை முதலியவை முக்கியமான எண்ணெய் வித்துக்கள். நிலக்கடலையை வேர்க்கடலை என்றும், மணிலாக் கொட்டை என்றும் சொல்வதுண்டு. இதற்கு நிலம் கொஞ்சம் மணல் கலந்ததாகவும் செம்மண் பூமியாகவும் இருப்பது நலம். இது புன்செய்ப் பயிர். நிலக்கடலை தென் இந்தியாவிலே மிகுதியாகப் பயிராகிறது. நன்ருக உலர்ந்த பிறகு இதிலிருந்து எண்ணெய் எடுப்பார்கள். இதன் எண்ணெய் சமையலுக்கும் சோப்புச் செய்வதற்கும் பயன்படுகிறது. தமிழ் நாட்டில் முக்கியமாகத் தென் ஆற்காடு, வடஆற்காடு ஜில்லாக்களில் இது ஏராளமாகப் பயிரிடப்படுகிறது. நாம் இதை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிருேம்.

ஆமணக்கும் கொப்பரையும் தோட்டப் பயிர்கள். மற்றவை புன்செய்ப் பயிர்கள். மலையாளக் கரையில் ஏராளமாகக் கொப்பரை கிடைக்கிறது. இதில் ஒரு பாகம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மற்ருெரு பாகம் உள்நாட்டில் எண்ணெய் எடுக்கப் பயன்படுகிறது. எள் சிறு செடியாக இருக்கும். இதற்குத் தண்ணீர் மிகுதியாகத் தேவை இல்லை. இதைக் கலப்புப் பயிராகவும் தனிப் பயிராகவும் உற்பத்தி செய்யலாம். வங்காளம், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பம்பாய் முதலிய இடங்களில் இது மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. இதன் எண்ணெய் உணவுக்கு உபயோகிக்கப்படுகிறது. ஆளிவிதை சணலில் உற்பத்தியாவதால் வங்காளத்தில் இது மிகுதியாகும்.

## 3. மலைப் பயிர்கள்

**தேயிலை :** நாம் அன்ருடம் அருந்தும் பானங்களில் தேநீர் ஒன்று. தேநீர் ஒருவகைச் செடியின் இலை. இது 12 அடி உயரம் வளரக்கூடிய செடி. ஆனுல் அவ்வளவு உயரம்

வளரவிடுவதால் இலைகளை எட்டிப் பறிக்க முடியாது. பறிப்பதற்கு வசதியாக இருப்பதற்காகத் தோட்டக்காரர்கள் இச் செடியை 5-அடிக்குமேல் வளர விடுவதில்லை. மணல் கலந்த களிம்புமண் அல்லது செம்மண் இதற்கு ஏற்றது. இதற்கு அதிக மழையும் வெப்பமும் வேண்டும். ஆனால் மழைநீர் வேரில் தங்காமல் வடிந்துவிடவேண்டும். அன்றியும் காற்றடைப்பாக




இந்தியா : சில முக்கியமான விளைவுகள்

உள்ள இடம் தேயிலைக்குத் தகுந்தது. தேயிலைச் செடி 8 முதல் 10 வருடம் வரையில் பலன் தரும். செடியின் இளங்கொழுந்தே சிறந்த இலை. செடியிலிருந்து பறித்த இலைகள் நாள் முழுவதும் நிழலில் உலர வைக்கப்படும். பிறகு அவை இரும்புச் சட்டிகளிலிட்டு வறுக்கப்படும். இதனால் இலை தூளாவதுமின்றி நிறமும் மாறும்.

இந்தியாவில் அஸ்ஸாம் ராஜ்யத்திலும், இமயமலைச் சாரலில் டார்ஜீலிங், டேராடூன் முதலிய இடங்களிலும், நீலகிரி மலைச் சாரலிலும் தேயிலை பெருவாரியாக உற்பத்தி செய்யப்படுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பிரதேசத்திலும், காடுகளை அழித்துத் தேயிலைத் தோட்டங்களை வைத்து வருகிறார்கள். இது இலங்கைத் தீவு, சீனம், ஜப்பான் நாடுகளிலும் மிகுதியாகப் பயிர் செய்யப்படுகிறது. இந்தியாவிலிருந்து தேயிலை இங்கிலாந்திற்குப் பெரும் அளவில் ஏற்றுமதியாகிறது.

**காப்பி :** காப்பியும் தேயிலையைப் போன்ற ஒரு பானமாகும். இது ஒரு சிறு மரத்தின் கொட்டையிலிருந்து தயார் செய்யப்படுகிறது. காப்பிச்செடி வெப்ப மண்டலத்தில் 3000




தேயிலை உற்பத்தி அளவு

முதல் 5000-அடி உயரமுள்ள பாகங்களில் நன்றாகப் பயிராகும். இதற்கு மழை மிகுதியாக வேண்டும். தேயிலைக்குத் தகுதியாக உள்ள மண் இதற்கும் தகுதியாக இருக்கும். ஆனால் தேயிலையைப் போல் அவ்வளவு உயரமான இடங்களில் காப்பி நன்றாகப் பயிராகாது. காப்பிக்கு வெப்பம் மிகுதியாக வேண்டுமாயினும் நிழலும் வேண்டும். கோடை மழை பெய்தவுடன் தோட்டக்காரர்கள் நிலத்தைப் பண்படுத்தி எருவிட்டுப் பாத்திகளைக் கட்டுவார்கள். அவற்றில் காப்பிப் பழத்தின் விதைகளை நட்டு நாள்தோறும் தண்ணீர் பாய்ச்சுவார்கள். செடி ஓரடி உயரம் வளர்ந்ததும் பாத்திகளிலிருந்து எடுத்து நாற்று

நடுவார்கள். காப்பிச் செடி நட்ட மூன்று ஆண்டுகளில் மலர் விடும். பிறகு பிஞ்சுகள் தோன்றி அவை பழுக்கும். காப்பிப் பழம் சிவப்பாய் இருக்கும். தோட்டக்காரர்கள் பழங்களை எடுத்து உலரவைப்பர். உலர்ந்த கொட்டைகள் இயந்திரங்களின் உதவியால் சுத்தம் செய்யப்படும்.

தென் இந்தியாவில் மைசூர் பீடபூமி, குடகு, நீலகிரி மலைச் சரிவு முதலிய இடங்களில் காப்பி பயிராகிறது. இந்தியாவில் உற்பத்தியாகும் காப்பிதான் உலகத்திலேயே மிகவும் மேலானது. ஆனால் காப்பி மற்றெல்லா நாடுகளையும் விடத் தென் அமெரிக்காவில் பிரேஸிலில்தான் மிகுதி. அரேபியா நாட்டின் தென் மேற்குப் பாகத்திலுள்ள ஈமன் என்னும் பிரதேசத்திலும் காப்பி பயிரிடப்படுகிறது.

**வாசனைத் திரவியங்கள் :** இந்தியா வாசனைப் பொருள்கள் உற்பத்திக்குப் புகழ்பெற்றது. இந்த வாசனைப் பொருள்களை நாடித்தான் பதினாறும் நூற்றாண்டிலும் பதினேழாம் நூற்றாண்டிலும் ஐரோப்பியர் இந்நாட்டிற்கு வந்தார்கள். இந்தியாவில் உற்பத்தியாகும் வாசனைப் பொருள்களில் சற்றேறக்குறைய முழு பாகமும் மேற்குத் தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் விளைகின்றது.

வாசனைப்பொருள்களில் ஏலம் ஒன்று. இது மருந்திற்கும், பதார்த்தங்கள், பலகாரங்கள் முதலியவற்றில் சேர்த்துச் சமைப்பதற்கும் உதவும். காப்பிச் செடியைப்போல் ஏலச் செடியும் நிழலில் வளரும். இதற்குத் தண்ணீர் அதிகம் வேண்டும். இது மலையாளக் கரையில் திருவாங்கூரைச் சேர்ந்த மேற்குத் தொடர்ச்சியின் பாகத்தில் ஏராளமாக உற்பத்தியாகிறது. இங்குள்ள மலைக்கே ஏல மலை என்னும் பெயரிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தியா தவிர, கிழக்கு இந்தியத் தீவுகள் பலவற்றிலும் வாசனைப்பொருள்கள் கிடைக்கும்.

இஞ்சி, மிளகு, இலவங்கம், ஜாதிக்காய் முதலியவைகளும் வாசனைப்பொருள்களைச் சேர்ந்தவை. இவற்றில் இஞ்சி இந்தியாவில் எல்லா இடங்களிலும் தோட்டப்பயிராகச் செய்யப்படுகிறது. மிளகு கொடியாகப் படரும் ஒருவகைச் செடியிலிருந்து கிடைக்கிறது. ஜாதிக்காய் ஒருவகை மரத்தின் கொட்டை. இது மலையாளக் கரையிலும், இலங்கைத்தீவிலும் உற்பத்தியாகிறது. இலவங்கம் ஆப்பிரிக்காக் கண்டத்தின் கிழக்குக் கரையிலுள்ள ஸான்ஸிபார் தீவிலிருந்து மிகுதியாகக் கிடைக்கிறது.

## 4. வறண்ட பிரதேசத்தில் விளையும் பருத்தி

வர்த்தகத்திற்காகப் பயிரிடும் பொருள்களுள் பருத்தி முக்கியமானது. ஆடைகளைத் தயாரித்துக் கொள்வதற்குத் தொன்றுதொட்டுப் பயன்பட்டு வருவது பருத்தி. இந்தியர்கள் பருத்தி ஆடையையே பெரும்பாலும் பயன்படுத்துகின்றனர். பருத்தி கம்பளிபோன்ற மெல்லிய இதழ்களைக்கொண்ட ஒருவகை நார். இது பருத்திச் செடியின் காய்களின் உள்ளே காணப்படும் கொட்டைகளைச் சூழ்ந்திருக்கும். பருத்தி புன்செய்ப் பயிர். பருத்தி சாகுபடிக்குக் களிமண் கலந்த கரிசல்நிலமே ஏற்றதாகும். இதற்கு நீர் மிகுதியாக வேண்டுவதில்லை. உப்பங்காற்று இதற்கு நல்ல பலனைத் தரும். உழவர்கள் கோடைமழையின் உதவியால் நிலத்தை உழுது விதைப்பதற்கு 20 நாட்களுக்கு முன்பே எரு விட்டு, பூமியைப் பண் படுத்தி, ஜூன், ஜூலை மாதங்களில் பருத்தியை விதைப்பார்கள். விதைகள் முளைத்துச் சிறு செடி களாய் இருக்கும்போது மழை வேண்டும். செடி முற்றிக் காய்க் கும் தருணத்தில் மழை உதவாது. பருத்திச்செடி 6 மாதத்தில் பலன் தரும். காய்க்கும் காலத்தில் பனி பெய்யக்கூடாது. பனி இருந்தால் காய்கள் உதிர்ந்துவிடும். காய்கள் சூரிய வெப்பத்தால் வெடிக்கும். வெடித்த காயிலிருந்து பருத்தி வெளிவரும். ஒவ் வொரு செடியும் மூன்று நான்கு முறை காய்ப்பதுண்டு.

இவ்விதம் வெடித்து வெளிவரும் பருத்தி சேகரிக்கப்பட்டுப் பஞ்சு வேறு விதை வேருகப் பிரிக்கப்படும். பிரிக்கப்பட்ட பஞ்சு நூல் நூற்கப்பட்டு நெசவுசெய்யும் ஆலைகளுக்கு அனுப்பப்படும். பருத்திக் கொட்டையும் வீண்போவதில்லை. அதிலிருந்து ஒருவித எண்ணெய் எடுக்கிருர்கள். அந்த எண்ணெய் சோப்புச் செய்யவும் விளக்கெரிக்கவும் உதவும்.

பருத்தியில் பலவகையுண்டு. அவைகளில் இந்தியன், கருங் கண்ணி, உக்கன், கம்போடியா, அமெரிக்கன், இஜிப்ஷியன் என் பவை முக்கியமான வகைகள். பருத்தியின் மதிப்பு அதன் சிம்பின் நீளத்தைப் பொருத்தது. நீளம் அதிகமாயிருப்பின் மெல்லிய நூல் நூற்பதற்குப் பயன்படும். ஆதலால் அதன் மதிப்பு உயரும். இந்தியன் பருத்தியின் சிம்பு நீளம் குறைவாக இருக்கும். அதிலிருந்து மெல்லிய நூலை நூற்கமுடியாது. ஆகவே இந்தியப் பருத்திக்கு நல்லவிலை கிடைப்பதில்லை. இந்தி யாவின் பருத்தி உற்பத்தியைச் சீர்படுத்துவதற்காக வெளிநாடு

களிலிருந்து உயர்ந்தரகப் பருத்தியின் விதைகளைத் தருவித்து நம் நாட்டவர் விளைவிக்கின்றனர்.

உலகில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்தியா, எகிப்து, சீனம், பிரேஸில், சூடான் முதலிய இடங்களில் பருத்தி மிகுதியாகப் பயிராகிறது. அமெரிக்கா, எகிப்து நாடுகளில் விளையும் பருத்தி மிகவும் நேர்த்தியானது. அமெரிக்காவில் கிடைக்கும் 'சீ ஐலண்டு' பருத்தி உலகச் சிறப்புடையது. இந்தியாவில் விளையும் பருத்தியில் பாதிக்குமேல் பம்பாய் ராஜ்யத்திலும் பீராரிலும் உற்பத்தியாகிறது. மற்றைய பாகம் சென்னை ராஜ்யம், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், பஞ்சாப், சிந்து முதலிய இடங்களில் பயிராகிறது. இவற்றில் பஞ்சாப், சிந்து, உத்தரப் பிரதேசங்களில் அமெரிக்கன் பருத்தி பயிராகிறது. சென்னை ராஜ்யத்தில் கம்போடியா, கருங்கண்ணி வகைகள் பயிரிடப்படுகின்றன. இந்தியன் வகைப் பருத்தியில் புரோச், சூரத் என்னுமிடங்களில் பயிராகும் பருத்தியே சிறந்தது.

பருத்தி விளைவில் கிடைக்கும் ஆதாயத்தை நோக்குமிடத்து, நம் நாடு மற்ற நாடுகளுக்குப் பின்னடைந்திருப்பது விளங்கும். இந்தியா பருத்தியின் பிறப்பிடம். ஆயினும், நம்மவர் அதன் வகையிலாவது விளைவிலாவது வளர்ச்சியடைவதற்கான முயற்சி




பருத்தி விளைவின் அளவு

களைச் சரிவர எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. சிம்பின் நீளம் குறைவாயிருப்பதால் மட்டவகை என்ற காரணத்தால் நல்லவிலை கிடைப்பதில்லை என்பதைக் கவனித்தோம். பயிரிடும் குடியானவனுக்குக் கந்தாயமாவது சரியாக இருக்கிறதாவென் பதைப் பாருங்கள். பருத்தி விளைவிக்கப்படும் ஓர் ஏக்கர் நிலத்

தில் எகிப்தில் 450 ராத்தல் பருத்தி கிடைக்கிறது. அந்த ஓர் ஏக்கரிலே அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 200 ராத்தலும், இந்தியாவில் 98 ராத்தலும் கிடைக்கின்றன. ஏன் நம் நாட்டில் இவ்வளவு குறைவாக விளையவேண்டும்? நம் நாட்டில் நிலம் சுரம்பானதா? அல்லது பயிரிடும் குடியானவனுடைய தவறுதல் ஏதேனும் உண்டா?

எகிப்தில் நைல் ஆறு ஆண்டுதோறும் வெள்ளப்பெருக்கு எடுத்துக் கரைபுரண்டு நிலங்களின்மீது தண்ணீர் தேங்குகிறது. நீர் வடியும்போது வண்டல்மண் நிலத்தின்மீது தங்கிவிடுகிறது. இதனுல் ஆண்டுதோறும் புதுமண் நிலத்தில் படிகிறது. இவ்வளவு நேர்மையான நிலைமை இருப்பதால் நல்ல விளைவு எகிப்தியருக்குக் கிடைக்கிறது. அமெரிக்காவில் பலவிதமான எருக்களைப் போட்டு நிலத்தின் பலன்தரும் சக்தியைப் பெருக்கிவிடுகிருர்கள். ஆனுல் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக மாசூலைக் கொடுத்துக்கொண்டே வரும் நிலத்திற்கு உணவு போன்ற எருவை நாம் மிகுதியாகப் போடாமல், கறக்கும் பசுவுக்குத் தீனிபோடாமல் மேன்மேலும் கறந்துகொண்டே போவது போல், வழக்கப்படி பயிர் செய்துகொண்டே போனுல் விளைவு எப்படிப் பெருகும்? நம்மவர் நிலத்தை ஆழமாக உழும் முறைகளையும் நல்ல உரம் போடுவதையும் கவனிக்கவேண்டும்.

இனி, பருத்தியினுல் நடைபெறக்கூடிய நூல் நூற்றல், நெசவு ஆகிய தொழில்களின் நிலைமையைக் கவனியுங்கள். நேர்த்தியான மெல்லிய ஆடைகள் நெய்வதில் திறமை வாய்ந்தவர்கள் இந்தியர்கள். இந்நாட்டில் உற்பத்தியாகும் பருத்தியை இங்கிலாந்துக்கும் ஜப்பானுக்கும் நாம் ஏற்றுமதி செய்துவிட்டு அந்நாடுகளிலிருந்து கப்பல் கப்பலாகத் துணியை இறக்குமதி செய்துகொண்டிருந்தோம். இப்போது இந்தியாவில் பருத்தித் தொழில் வளர்ந்து வருகிறது. இது பற்றிய தொழிற்சாலைகளையுடைய இடங்களில் பம்பாய், ஆமதாபாத், நாக்பூர், சூரத், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி முதலியவை முக்கியமானவை. பருத்தி விளைவிலும், பருத்தித் தொழிற்சாலைகளை நடத்துவதிலும் வளர்ச்சியடைவதற்கு அவகாசமும் அவசியமும் இருக்கின்றன.

## 5. காட்டில் விளையும் பொருள்கள்

நமக்குள்ள இயற்கைச் செல்வத்தில் காடுகளும் ஒரு முக்கியப் பகுதி என்பதைக் கவனித்தோம். காடுகள் நம் வாழ்க்கையை மேம்படுத்தப் பல வகைகளில் உதவுகின்றன. ஆகையால்தான் காடுகள் வீணே அழிந்துவிடக் கூடாதென்று கருதி அரசியலார் அவைகளைப் பாதுகாத்து வருகிறார்கள். காடுகளிலிருந்து நமக்குப் பலவிதமான பொருள்கள் கிடைக்கின்றன. அவற்றுள் மரவகைகள், சந்தன மரம், ரப்பர் மரம் முதலியவற்றைப் பற்றி இங்கே கவனிப்போம்.

மரம் : காடுகளில் உற்பத்தியாகும் மரங்கள் பலவகைப் பட்டவை. அவை மனிதனுக்குப் பல வழிகளில் பயன்படுகின்றன. குளிர் மிகுந்த நாடுகளில் ஊசியிலை மரங்களடங்கிய காடுகளுண்டு. ஊசியிலை மரங்கள் மிருதுவானவை. அவை மரக்கூழ் செய்து காகிதம் செய்யப் பயன்படுகின்றன. 'பிளைவுட்' எனப்படும் மெல்லிய பலகைத் தகடுகள் அவற்றினின்று உரித்து எடுக்கப்படுகின்றன; அவை வீடுகள் கட்டுவதற்குப் பயன்படுகின்றன. மிதத் தட்ப மண்டலங்களில் கிடைக்கும் 'ஓக்' முதலிய மரங்களினால் கப்பல்களும் படகுகளும் கட்டப்படுகின்றன. "பைன்" மரத்திலிருந்து தார் எடுக்கப்படுகிறது. ஆஸ்திரேலிய நாட்டில் காடுகளில் கிடைக்கும் காரி, ஜாரா மரங்கள் இருப்புப் பாதைகளின் கீழ்ப் போடப்பட்டிருக்கும் ஸ்லீபர்கள் செய்யப் பயன்படும். அவை சாலைகள் அமைப்பதற்கும் பயன்படுகின்றன. சிங்கோனா, யூக்கலிப்டஸ் மரங்களிலிருந்து முறையே கொய்னா மருந்தும், தைலமும் கிடைக்கின்றன. மருந்துச் சாமான்களும், பட்டை வகைகளும், கற்பூரமும் மரங்களிலிருந்தே கிடைக்கின்றன. தேக்கு, கருங்காலி, செம்மரம் ஆகியன வீடுகள் கட்டவும், விலையுயர்ந்த மேஜை முதலிய மரச் சாமான்கள் செய்யவும் பயன்படும்.

இந்தியாவில் பலவிடங்களில் காடுகள் இருக்கின்றன. இமய மலைப் பிரதேசத்தில் குளிர் நாட்டுக் காடுகள் இருக்கின்றன. இங்கே பைன், தேவதாரு முதலிய மரங்களுண்டு. மத்திய இந்தியக் காடுகளில் நானாவித மரங்களிருக்கின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள காடுகளில் தேக்கு, கருங்காலி, செம்மரம் முதலியன கிடைக்கின்றன. பர்மாவிலிருந்து தேக்கு முதலிய மரங்கள் நிறைய வருகின்றன. மேற்குக் கரைப் பிரதேசத்தில் கள்ளிக்கோட்டையும் இதையடுத்துள்ள கல்லாயும் மர வியாபாரத்திற்குச் சிறந்த இடங்கள்.

மைசூரிலும், தக்காணத்தின் மற்றைய பாகங்களிலும் சந்தன மரம் கிடைக்கின்றது. இது வாசனைப் பொருளாகவும், மருந்தாகவும் பயன்படுகிறது.

ரப்பர்: இது முதலில் காடுகளில் கிடைத்து வந்தது. அமேஸான், காங்கோ ஆறுகள் பாயும் பிரதேசங்களிலுள்ள காடுகளில் பலவித மரங்களிலிருந்து ரப்பர் திரட்டப்பட்டு




இந்தியாவில் நடைபெறும் சில தொழில்கள்

வந்தது. ஆனால் காடுகளில் சென்று திரட்டுவது எளிய செயலன்று. ஆகையால் ரப்பர் மரங்கள் வைத்துத் தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. ரப்பர் மரங்களிலிருந்து பால் சேகரித்து அதனை உலர வைத்து ரப்பராகச் செய்து, ரப்பர்ச் சாமான்கள் செய்யும் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகின்றது.

ரப்பரிலிருந்து எண்ணற்றவகைப் பொருள்கள் செய்யப்படுகின்றன. இந்தியாவில் திருவிதாங்கூர்ப் பிரதேசத்தில் ரப்பர் பயிரிடப்படுகிறது. உலகத்திலே கிடைக்கும் ரப்பரில் பெரும் பாகம் மலேயாவில் உற்பத்தியாகிறது. இலங்கைத் தீவிலும் ரப்பர் நிறையக் கிடைக்கிறது. ரப்பர் உலகமெங்கும் பயன் படுத்தப்பட்டாலும் அது வெப்ப மண்டலத்தில் உற்பத்தியாகும் பொருள்.

## 6. தாதுப்பொருள்கள்

ஒரு கதை உண்டு. வயது முதிர்ந்த தந்தை யொருவன் மரணத் தறுவாயிலிருக்கையில் சோம்பேறிகளாய்த் திரிந்து வந்த தன் மைந்தர்களைக் கூப்பிட்டு, 'உங்களுக்காக நிலத்தில் புதையல் வைத்திருக்கிறேன், தேடி எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொன்னனம். அதன் பயனக அவர்கள் நிலமெங்கும் கொத்திப் பார்த்தார்களாம். புதையல் கிடைக்கவில்லை. ஆனல் நிலம் ஆழமாகக் கொத்தப்பட்டதால் புதையல் கிடைத்தது போல் அவர்களுக்கு அவ்வாண்டு ஒன்றுக்குப் பத்தாகத் தானியம் விளைந்ததாம். அதுதான் புதைத்து வைத்திருந்த புதையல் என்பதை அம் மைந்தர்கள் கண்டு கொண்டார்கள். பழைய காலத்தில் பாங்குகள் இல்லை. பாதுகாப்பு குறைவாக இருந்தது. ஆகையால் மக்கள் தங்கள் சேமிப்பை நிலத்தில் புதைத்து வைத்தார்கள். இயற்கையும் அவ்வாறே செய்கிறது. பூகர்ப்பத்தில் எண்ணற்ற வகையான பொருள்கள் புதைந்து கிடக்கின்றன. நாம் இவைகளைத் தாதுப்பொருள்கள் அல்லது கனிஜ வகைகள் என்கிரும். தாதுப்பொருள்கள் உலோகங்கள் மாத்திரமல்ல. உப்பு வகைகள், மண்ணெண்ணெய் முதலியவையும் தாதுப்பொருள்களேயாம். இயற்கை தனது செல்வத்தை எல்லா இடங்களிலும் அல்லது எல்லோருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கவில்லை. சில நாடுகளில் நிலத்திற்கடியில் பல பொருள்கள் குவிந்திருக்கின்றன. சான்ருக, அமெரிக்க ஐக்கிய நாடுகளை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே கிடைக்காத கனிஜப் பொருள் இல்லை என்றே சொல்லலாம். ஒரே நாட்டிலுங்கூட, எல்லாப் பாகங்களிலும் கிடைக்காமல் ஒரு பாகத்திலேயே பல பொருள்கள் மிகுதியாகக் கிடைக்கலாம். இந்தியாவில் பீஹாரில் இரும்பு, நிலக்கரி, அப்பிரகம், உப்பு வகைகள் முதலிய பல பொருள்கள் கிடைக்கின்றன. இங்கே நமது நாட்டில் நிலக்கரி,

இரும்பு, மங்கனீசு, அப்பிரகம், பொன் இவை கிடைக்கும் விவரங்களைத் தெரிந்து கொள்வோம்.




இந்தியாவில் கிடைக்கும் முக்கியமான தாதுப்பொருள்கள்

நிலக்கரி: மரத்தை எரித்தால் அல்லவா கரி கிடைக்கும்? நிலத்திற்குள் நிலக்கரி எவ்விதம் உண்டாயிற்று? நிலக்கரி ஓர் உண்மையான புதையலேயாகும். ஆயிரக்கணக்கான நூற்றுண்டுகளுக்கு முன்னர்ப் புற்றரைகளும், பெரிய பெரிய காடுகளும் நிலத்துக்குள் புதைந்து விட்டன. அவைகளின்மீது படிப்படியாக மணல், மண் கற்கள் குவிந்து படிந்து விட்டபடியால் இவைகளின்கீழ் அமுங்கி இக்காடுகளும் மரங்களும் கருகி நிலக்கரியாயின.

நிலக்கரியும் வைரமும் ஒரே பொருள் என்று இரசாயன

அறிஞர்கள் கூறுகின்றனர். இது பொருளமைப்பினால் ஒன்று. ஆயினும் உண்மையில் பார்க்குமிடத்து வைரத்தைவிட நிலக்கரிக்கே மதிப்பு அதிகமாயுள்ளது. நிலக்கரிக்குப் பல திறப்பட்ட




நிலக்கரி உற்பத்தி அளவு

பலன் உண்டு. நிலக்கரியிலிருந்து "காஸ்" எடுத்து விளக்கு ஏற்றலாம். தொழில்கள் நடத்த அதனைச் சக்தியாகப் பயன் படுத்தலாம். நிலக்கரியின் துணையால் நீராவி எடுத்து எந்திரங்களை ஓட்டும் சக்தியைப் பெறலாம். "கோல் தார்" எடுத்து அதிலிருந்து சாயச் சாமான்களும், இரசாயனப் பொருள்களும் செய்யலாம். மருந்துகளையும், வாசனைப் பொருள்களையும் செய்யலாம். நிலக்கரியின் உபயோகங்கள் எண்ணற்றவை.

நிலக்கரி மூன்று வகைப்படும். லிக்னைட் என்பது ஒருவகை. அது பழுப்பாக இருக்கும். அதில் மரத்தின் தன்மை முற்றிலும் மாறுபட்டிராது. பிடுமின் என்பது மற்றொரு வகை. இது கறுப்பாய் இருக்கும். ஆனால் கடினமாய் இராது. இது குளிர்ப் பிரதேசங்களில் சமையல் வேலைகளுக்கும் குளிர் காய்வதற்கும் பயன் படுகிறது. இதில் புகை அதிகம். ஆன்த்ரஸைட் என்பது இன்னொருவகை. இது கறுப்பாயும், கடினமாகவும், பளபளப்பாகவும் இருக்கும். இதில் புகை ஏற்படாது. சூடு மிகுதியாக உண்டாகும். இது எந்திரங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதிக வெப்பம் தேவையாயிருக்கும் இரும்பு முதலிய உலோகங்களை உருக்கும் சாலைகளில் இது பயன்படுகிறது.

நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்வது மிகவும் கடினம். சுரங்கத்தில் வேலை செய்கிறவர்களுக்காக வெளியிலிருந்து நல்ல

காற்றைச் சுரங்கத்திற்குள் செலுத்தவேண்டும். சுரங்கத்தில் நீர் சுரந்தால் அதை வெளிப்படுத்தவேண்டும். சுரங்கத்தின் கூரை விழாதபடி முட்டுக் கட்டைகள் கொடுக்க வேண்டும். சுரங்கத்தி லுள்ள கார்பன்-டை-ஆக்ஸைடு எளிதில் தீப்பிடிக்கும். எனவே உள்ளே வெளிச்சத்தைக் கொடுக்க ஒரு வகை விளக்கு பயன் படுகிறது.

நிலக்கரிச் சுரங்கங்கள் எல்லா நாடுகளிலும் உண்டு. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இதில் முதன்மையானது. அதன் பின் தொடர்பாக, கிரேட் பிரிட்டன், ஜெர்மனி, பிரான்சு, போலண்டு, பெல்ஜியம், ஜப்பான், இந்தியா, கனடா, ஆஸ்தி ரேலியா முதலியவை முக்கியமானவை.

இந்தியாவில் எங்கெங்கே நிலக்கரி கிடைக்கிறது. ஆண்டு தோறும் எவ்வளவு எடுக்கப்படுகிறது என்பதைக் கவனிப்போம். இந்தியாவில் ஆண்டில் 3 கோடி டன் நிலக்கரி எடுக்கப்படுகிறது. 1,62,000 தொழிலாளர் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். இந் நாட்டில் நிலக்கரி நிதி அதாவது இன்னும் எவ்வளவு நிலக் கரி பூகர்ப்பத்தில் இருக்கிறது என்பதை ஒருவாறாக அறிஞர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். 6000 கோடி டன்கள் நிலக்கரி இரும்பு இருக்கிறதென்றும், இன்று எடுப்பதைப் போலவே எடுத்துக் கொண்டே வந்தால் இன்னும் 2000 வருஷங்கள் எடுக்கலா மென்றும் அவ்வறிஞர்கள் சொல்கிறார்கள். வங்காளம், பீஹா ரைத் தவிர்த்து, தக்காணத்திலுள்ள ஹைதராபாதிலும் நிலக்கரி கிடைக்கின்றது. வங்காளத்துச் சுரங்கங்கள் தாமோதர் ஆற்றின் பள்ளத்தாக்கிலுள்ளன. ராணிகஞ்சில் மற்றொரு சுரங்கம் இருக்கிறது. இவற்றிற்கும் கல்கத்தாவுக்கும் இருப்புப் பாதை அமைக்கப்பட்டிருப்பதால் இதுவே முதலில் வெட்டி எடுக்கப்பட்டது. இப்போது ஜெரியா என்னுமிடத்திலுள்ள சுரங்கத்தில் நிலக்கரி மிகுதியாகக் கிடைக்கிறது. கிருதி, பொகாரோ, ஜயிண்டி என்பவை வங்காளத்திலும் பீஹாரிலு முள்ள இதர சுரங்கங்கள்.

அண்மையில், காஷ்மீரிலும் நிலக்கரி கிடைப்பதாகக் கூறப் படுகிறது. தென் இந்தியாவில் தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ள நெய்வேலிக் கருகில் பழுப்பு நிலக்கரி மிகுதியாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவைகளை வெட்டி எடுக்கத் துவக்கி இருக்கிறார்கள். இதனால் வடக்கில் காஷ்மீரம் முதல் தெற்கில் கன்னியாகுமரி வரை தொழிற்சாலைகள் பல தோன்றித் தொழில் வளர்ச்சி அடையக்கூடும். நெய்வேலி பழுப்பு நிலக்கரி

வயல்களை நடத்துவதற்காக யூனியன் மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் சென்னை அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் அடங்கிய கூட்டுக் கமிட்டியொன்று நிறுவப்பட்டிருக்கிறது. இந்தச் சுரங்கம் முற்றிலும் சென்னை அரசாங்கத்திற்கே சொந்த மானது. இங்கே கிடைக்கும் நிலக்கரியைக் கொண்டு சேலத்தில் கிடைக்கும் இரும்பை உருக்கும் தொழில் நடத்துவதைப் பற்றிப் பரீசீலனை செய்யப்பட்டு வருகிறது.

இரும்பு: தொழில் முன்னேற்றத்திற்காக எந்திரங்கள் வேண்டும். எந்திரங்கள் செய்ய இரும்பு மிக்க அவசியமானது. இரும்பும் நிலக்கரியும் நிரம்பக் கிடைத்ததன் காரணமாகவே




இரும்பு உற்பத்தி அளவு

இங்கிலாந்தும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் தொழில் முறையில் முன்னேற்றமடைந்திருக்கின்றன. நம் நாட்டிலும் நிலக்கரி கிடைக்கும் அதே பீஹார், வங்காள ராஜ்யங்களில் நிலக்கரிச் சுரங்கங்களுக்கு அருகிலேயே இரும்பும் கிடைக்கிறது. இந்தப் பிரதேசத்தில் 300 கோடி டன் இரும்பு உள்ளிருப்பு இருக்கிற தாகக் கூறப்படுகிறது. இரும்பு இவ்வளவு மிகுதியாக இருப்ப தோடு உயர்ந்த வகையைச் சேர்ந்ததாகவும் இருக்கிறது. நமது நாட்டில் சில இடங்களில் சிறந்த இரும்பு கிடைக்கிறது. இவ் வளவு இயற்கை வசதிகள் இருந்தும் நாம் உலக உற்பத்தி வரிசையில் ஏழாவது இடத்தில் இருக்கிறோம்.

வங்காளத்தில் பராகர், ஒரிஸ்ஸாவில் ஸிங்பூம், மைசூரில் பத்ராவதி, சென்னை ராஜ்யத்தில் சேலம், சாந்தூர் என்னு மிடங்களிலும், ஜப்பல்பூரிலும் இரும்பு கிடைகிறது. வங்காளம், பீஹார் பிரதேசத்தில் கிடைக்கும் இரும்பு டாட்டா இரும்புத் தொழிற்சாலையில் பயன்படுகிறது. மைசூரில் இரும்பை உருக்க

நிலக்கரி இல்லையாயினும் அருகிலுள்ள காட்டுமரங்கள் பயன்படுகின்றன. ருஷியா, ஜெர்மனி ஆங்கில வியாபாரிகளின் உதவியைக் கொண்டு புதிய இரும்பு, எஃகுச் சாலைகளை ஒரிஸ்ஸாவிலுள்ள ரௌர் கேலா, மத்தியப் பிரதேசம் முதலிய இடங்களில் நிறுவி வருகிறுர்கள்.

மங்கனீசு : இது உலோகப் பொருள்களில் ஒன்று. இதை இரும்புடன் சேர்த்து உருக்கி எஃகு செய்யப்படுகிறது. உலகத்திலேயே சோவியத் ருஷியாவில்தான் மங்கனீசு மிகுதியாகக் கிடைக்கிறது. மங்கனீசு உற்பத்தியில் ருஷ்யா முதன்மையாயிருப்பினும் உள் இருப்பில் நமது நாடுதான் முதன்மையானது. மங்கனீசு உற்பத்தியிலும் ருஷியாவுக்கு அடுத்த இடம் இந்தியா




மங்கனீசு உற்பத்தி அளவு

பெறுகிறது. இது நம் நாட்டில் நாகப்பூரில் அதிகமாகக் கிடைக்கிறது. பாலக்காடு, விஜயநகரம், குவாலியர், மஹாபலேஸ்வர், சதாரா, பெல்காம், தார்வார்—இவை மங்கனீசு கிடைக்கும் மற்ற இடங்கள். இவ்வளவு மங்கனீசு கிடைத்தும், எடுத்தும், நாம் அதைக்கொண்டு எஃகுச் செய்கிறோமா அல்லது வெளுப்பதற்கான இரசாயனப் பொருளாக மாற்றுகிறோமா? எடுக்கும் மங்கனீசின் பெரும்பாகத்தை வெளி நாடுகளுக்கு அனுப்பிவிடுகிறோம்.

அப்பிரகம் : இது கண்ணுடியைப்போல் இருக்கும். இது தகடுபோல் இருப்பதால் ஊடுருவிப் பார்க்கக்கூடியதாகும். இது உருகாது. எவ்வளவு சூட்டையும் தாங்கும். இரும்பு உருக்கும் உலைகளின் ஜன்னல்களுக்கும், மின்சார அதிர்ச்சி ஏற்படாமல்

தடுப்பதற்கும் இது பயன்படுகிறது ; இதன் உலக உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கு நம் நாட்டில் கிடைக்கிறது. பீஹாரிலும், தென் இந்தியாவில் நெல்லூரிலும் கிடைக்கிறது. இதை நாம் முழுவதையும் இங்கிலாந்து, அமெரிக்கா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிடுகிறோம்.

பொன் : இது உலோகங்களில் விலை உயர்ந்தது. இது 'குவார்ட்சு' என்னும் பாறையுடன் கலந்து இருக்கும். தென் இந்தியாவில் கோலாரில் இது கிடைக்கிறது. நம் நாட்டில் புதிய சுரங்கங்கள் வெட்டிப் பொன் எடுக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆயினும் அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா நாடுகளில்தான் பொன் மிகுதியாகக் கிடைக்கிறது ; இந்தியாவில் கிடைப்பது ஒரு சிறிய பாகமே.

## 7. வாணிபம்

நாட்டின் நாகரிக வளர்ச்சியையும் செல்வ உயர்வையும் காட்டுவது வாணிபத்தின் நிலைமையே. உலகம் நாளுக்குநாள் சுருங்கி வருகிறது. எங்கோ தொலைவிலிருந்த இங்கிலாந்தும் அமெரிக்காவும் மிக அருகில் வந்துவிட்டன. கிழக்கு இந்தியக் கம்பெனியார் இந்தியாவில் தமது பற்றிடங்களை ஏற்படுத்திக் கொண்டு வாணிபம் செய்த காலத்தில் கப்பல்கள் சென்றுவர ஆறு மாதங்களாயின. ஆனால் இன்று புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட எந்திரங்களின் உதவியால் நேரமும், தொலைவும் சுருங்கிவிட்டன. காலையில் புறப்பட்ட ஒருவன் விமான வழியாய் மறுநாள் காலை லண்டன் சேரமுடிகிறது. அடுத்த நாள் அமெரிக்காவிலிருக்கலாம். அந்நாடுகளிலுள்ளவர்களுடன் நம்மவர் நேருக்கு நேர் பேச விரும்பினால் கம்பியில்லாத் தந்தி அல்லது டெலிபோன் மூலமாகச் சில நிமிஷங்களில் பேசிவிடலாம். இவ்வளவு அருகில் உலக மக்கள் நெருங்கி வந்துவிட்ட பிறகு இந்தியா தனித்து நிற்கமுடியாது. வாணிபம் நடைபெறவேண்டும். ஏற்றுமதி, இறக்குமதிகள் இருக்கத்தான் வேண்டும். ஆனால் இன்று இருக்கும் வாணிப நிலைமையையும், ஏற்றுமதி இறக்குமதிகளையும் கவனியுங்கள். நாம் கச்சாப் பொருள்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கிறோம். பருத்தி, நிலக்கடலை முதலியவைகளையும், சாய தானியங்களையும், இரும்பு, மங்கனீசு, அப்பிரகம் முதலிய தாதுப் பொருள்களையும், தோல் முதலிய மற்றைய பொருள்களையும் நாம் இந்தியாவி

லேயே ஏன் தொழிற்சாலைகளில் பயன்படுத்தலாகாது? இவைகளை எல்லாம் இப்போது நாம் செய்பொருள்களாக வெளி நாடுகளிலிருந்து தருவித்துக்கொள்கிறோம். இதனால் தொழில் செய்து பிழைக்கக்கூடிய மக்களுக்குத் தொழில் இல்லாமல் போய்விடுகிறது. இந்நிலையைப் போக்கி நாட்டின் தொழில்களை வளர்த்து நமது விளைபொருள்களை நமக்கு வேண்டிய அளவு வைத்துக் கொண்டு, மீதம் இருப்பின் வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும்.

நமது வெளிநாட்டு வாணிபம் பெரும்பாலும் இங்கிலாந்தோடு நடைபெறுகிறது. மகா யுத்தத்திற்கு முன் இங்கிலாந்துக்கு அடுத்தபடியாக ஜப்பான் நமது வெளிநாட்டு வாணிபத்தில் பங்கெடுத்துக் கொண்டது. ஆனால் இன்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் இரண்டாவதாக இருக்கின்றது. இங்கிலாந்திலிருந்து வரும் பொருள்களில் துணி, இரும்புச் சாமான்கள் முக்கியமானவை. அமெரிக்காவிலிருந்து எந்திரங்கள், மோட்டார்கள் முதலிய பலவகைப் பொருள்கள் வருகின்றன. மண்ணெண்ணெய் அமெரிக்காவிலிருந்தும், பாரசீகத்திலிருந்தும் வருகிறது.

நாம் அயல் நாடுகளுக்கு அனுப்பும் பொருள்களில் பருத்தி, தோல், எண்ணெய் வித்துக்கள், உலோகங்கள் முக்கியமானவை.

நம் நாட்டில் மண்ணெண்ணெய் சுத்தம் செய்யும் மாபெரும் தொழிற்சாலைகள் பம்பாய்க்குச் சமீபத்திலுள்ள டிராம்பேயிலும் விசாகப்பட்டினத்திலும் கல்கத்தாவிலும் அமைத்துள்ளனர். இதனால் நாட்டின் மண்ணெண்ணெய்த் தேவை பூர்த்தி செய்யப் படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பயிற்சிகள்

1. உலகப் படமொன்று வரைந்து அதில் கோதுமை, நெல், தினை வகைகள் பயிராகும் பிரதேசங்களைக் குறிப்பிடுக.
2. கோதுமை, நெல் இவை உற்பத்தியாகும் நாடுகளின் தட்ப வெப்ப நிலைமையில் என்ன வேற்றுமைகளை நீ காண்கிறாய்?
3. இந்தியா சர்க்கரை உற்பத்தியில் முதன்மையானது. ஆயினும் சர்க்கரையை மிகுதியாக இறக்குமதி செய்கிறது. இதன் நியாயத்தை விளக்குக.
4. சணல் உற்பத்தியிலும், தொழிலிலும் அண்மையில் ஏற்பட்ட சங்கடமென்ன?
5. சணல் தொழில் கல்கத்தாவில் மட்டும் நடைபெறுவதன் காரணமென்ன?

6. இந்தியாவில் காப்பி, தேயிலை எங்கே நன்ருக உற்பத்தியாகின்றன? மற்ற இடங்களில் உற்பத்தியாகாததற்குக் காரணம் என்ன?

7. காடுகளினுல் நமக்கு உண்டாகும் நலன்கள் யாவை?

8. காடுகளில் ரப்பர் நடுவதைவிட, தோட்டப்பயிராக வளர்க்கப்படுவதற்குக் காரணங்களைக் கூறுக.

9. காடுகளிலிருந்து கிடைக்கும் மரவகைகளில் நான்கினைச் சொல்லி அவைகளின் பயனை விளக்குக.

10. நிலக்கரி இருப்பிலும் எடுத்துப் பயன்படுத்துவதிலும் இந்தியாவின் நிலைமையை விளக்கி அதை அயல் நாடுகளின் நிலைமையோடு ஒப்பிடுக.

11. இந்தியா படம் வரைந்து இரும்பு, நிலக்கரி, மங்கனீசு, அப்பிரகம் கிடைக்கும் இடங்களைக் குறிப்பிடுக.

12. பீஹார் ராஜ்யம் இயற்கைச் செல்வத்தில் சிறப்பு வாய்ந்தது என்பதற்குக் காரணம் என்ன?

# III. துறைமுகங்களும், போக்குவரவு மார்க்கங்களும்

நாகரிகம் முதிர்ந்து மனிதன் தனது வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக்கொண்டே போகிருன். பல பொருள்கள் நம் நாட்டில் கிடைப்பதில்லையாயினும், அவற்றை நாம் பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகொள்ளுகிருேமல்லவா? அதுபோலவே பிறநாட்டினரும் நம்மிடமிருந்து எவ்வளவோ பொருள்களைத் தருவித்துக் கொள்கிருர்கள். எந்த நாட்டினரும் தனித்து நிற்க முடியாது வாணிப உறவை வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது; எல்லா நாட்டினரும் தங்கள் தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது.

அயல் நாடுகளோடு வாணிபம் நடைபெறுவதற்கு நில வழியைவிடக் கடல் வழியே முக்கியமாக இருக்கிறது. கடல் வழியே வாணிபம் நடைபெற வேண்டுமாயின் நல்ல துறைமுகங்கள் வேண்டும். அவை ஆழமாக இருக்க வேண்டும். கப்பல்கள் காற்றினுல் அசைந்து அலைபடாமல் இருக்கக்கூடிய வகையில் நல்ல பாதுகாப்பைத் துறைமுகங்கள் கொடுக்கவேண்டும்.

ஒரு துறைமுகம் நன்ருக வளரவேண்டுமானுல் அதற்குத் தொழிலிலும், வாணிபத்திலும் வளர்ந்துள்ள பின் நிலம் வேண்டும். ஒரு துறைமுகத்தின் வழியாகத் தனது ஏற்றுமதி இறக்குமதிகளை நடத்திக்கொள்ளும் பிரதேசம் அத்துறைமுகத்தின் பின் நிலமாகும்.

இந்தியாவில் பல துறைமுகங்கள் இருக்கின்றன. இவற்றுள் கடலோடும் பெரிய கப்பல்கள் தங்கக்கூடிய வசதியைப் பெற்றுள்ளவை ஒரு சில. மற்றுஞ் சில சிறியவை. இந்நாட்டின் துறை




இந்தியத் துறைமுகங்களிலிருந்து கடல் மார்க்கங்கள்

முகங்களில் முக்கியமானவைகளில் சிலவற்றைப் பற்றி இங்கே படிப்போம்.

பம்பாய் : இது இந்தியாவின் மேற்குக் கரைப் பிரதேசத்தின் வடபாகத்தில் இருக்கிறது. இங்கே இயற்கையான துறைமுகம் ஏற்பட்டிருக்கிறது. தக்காணத்தின் கரிசல் மண் பிரதேசமாகிய மேற்குப் பகுதியும், இராஜபுதனம் முதல் டில்லி வரை பரவியுள்ள வட இந்தியாவின் பாகங்களும் இத்துறைமுகத்தின் பின் நிலம். இந்தியாவின் துறைமுகங்களுள் இதுவே மிகவும்

முக்கியமானது. இதன் மூலமாக மிகப்பெரும் வாணிகம் நடைபெறுகிறது. இதன் பின் நிலத்தில் உற்பத்தியாகும் பருத்தி, எண்ணெய்வித்துக்கள் முதலியன ஏற்றுமதிகளில் முக்கியமானவை. துணி, இரும்பு, எஃகுச் சாமான்கள், எந்திரங்கள் முதலிய பலவிதமான செய்பொருள்கள் இங்கு இறக்குமதியாகின்றன. ஐரோப்பிய நாடுகளுக்கு அருகிலுள்ள துறைமுகங்களில் இதுதான் மிகவும் பெரியது, முக்கியமானது, வசதிகளுடையது. இதன் இருப்பிடத்தையும் பின் நிலத்தையும் படத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.




பம்பாய், கல்கத்தா துறைமுகங்களின் பின் நிலங்கள்

1. ரங்கூனுக்கு 2. சிங்கப்பூருக்கு, ஆஸ்திரேலியாவுக்கு
3. கேப்டவுனுக்கு 4. ஏடனுக்கு 5. பாரசீக வளைகுடாவுக்கு.

**கல்கத்தா:** இந்நகரம் ஹூக்ளி ஆற்றங்கரையில் இருக்கிறது. கடலிலிருந்து இது 80 மைல் தொலைவில் இருக்கிறதாயினும், பெரிய கப்பல்கள் கல்கத்தா வரை வரக்கூடிய அளவுக்கு ஹூக்ளி ஆறு ஆழமாக இருக்கிறது. நல்ல இருப்புப் பாதைகளாலும், கால்வாய்களாலும் இத்துறைமுகம், கங்கை, பிரம்மபுத்திரா ஆறுகள் பாயும் விசாலமான சமவெளியின் எல்லாப்

பாகங்களோடும் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தப் பெரிய பிரதேசம் கல்கத்தா துறைமுகத்தின் பின் நிலமாகும். இதன் வழியாகக் கழிமுகப்பகுதியில் விளையும் சணல், இமய மலைச் சாரலிலும், பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கிலும் கிடைக்கும் தேயிலை, உத்தரப் பிரதேசத்தின் எண்ணெய் வித்துக்கள், வங்காளம், பீஹார் ராஜ்யங்களின் நெல், நிலக்கரி முதலியவை ஏற்றுமதியாகின்றன. இந்தப் பிரதேசத்திற்கு வேண்டிய சகல சாமான்களும்—அதாவது துணி, எந்திரங்கள், மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய சில்லறைச் சாமான்கள் முதலிய எல்லாப் பொருள்களும் இங்கே இறக்குமதி செய்யப்படுகின்றன.

**சென்னை:** தென் இந்தியாவின் கிழக்குக் கரையிலிருக்கும் இந்தத் துறைமுகம் தென் இந்தியாவிலிருக்கும் சென்னை




சென்னை, விசாகப்பட்டணம் துறைமுகங்களின் பின் நிலங்கள்

1. ரங்கூனுக்கு 2. சிங்கப்பூருக்கு, ஆஸ்திரேலியாவுக்கு
3. கேப்டவுனுக்கு 4. ஏடனுக்கு 5. பாரஸீக வளைகுடாவுக்கு

ராஜ்யம், மைசூர் நாடு, தக்காணப் பீடபூமியின் கிழக்குப்பகுதி ஆகிய பிரதேசங்களைப் பின்நிலமாகக் கொண்டது.

இந்தியத் துறைமுகங்களில் கராச்சி மூன்ருவது இடம் வகித்து வந்தது. ஆனுல் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிக்கப்பட்டது முதல் அதை இந்தியாவின் துறைமுகமாகக் கருத முடியாதல்லவா? ஆகையால் அதைப்பற்றி விரிவாக இங்கே கூறவில்லை.

இப்போது பல சிறிய துறைமுகங்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன. இந்தியா படத்தைப் பார்த்து அதில் கீழே கொடுக்கப்பட்டுள்ள துறைமுகங்களின் இருப்பிடங்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.

காத்தியவார் தீபகற்ப பாகத்தில் **போர்பந்தர், ஜாம்நகர், ஒக்ஹா** இவை யாவும் இயற்கைத் துறைமுகங்கள். பம்பாய்த் துறைமுகத்தின் மூலம் நடைபெறும் வாணிபத்தின் ஒரு பகுதியைப் பெற இவை முயற்சிக்கின்றன.

அரபிக்கடலில் வடமேற்குக் கரையோரமாயுள்ள கச்சு என்னுமிடத்திற்குச் சமீபத்தில் **கண்ட்லா** என வழங்கும் பெரியதோர் துறைமுகத்தைப் பல கோடி ரூபாய்கள் செலவில் மத்திய அரசாங்கத்தார் நிறுவி இருக்கிருர்கள். கராச்சியை இந்தியா இழந்த குறையை இத்துறைமுகம் ஈடுசெய்து குஜராத்து மேற்கு ராஜஸ்தானம் முதலிய பிரதேசங்களுக்கு வெளிநாட்டு வியாபார வாயிலாக இருக்கிறது.

மேற்குக் கரையில், அரபிக்கடலைச் சார்ந்துள்ள **மார்ம கோவா** இருக்கிறது. இது போர்த்துகீசியர் வசம் இருந்து வருகிறது. இதற்குத் தெற்கிலுள்ள **மங்களுர், கள்ளிக்கோட்டை** ஆகியவை சிறிய துறைமுகங்களாகும்.

**கொச்சி:** இது ஒரு மணல் திட்டால் அரபிக்கடலிலிருந்து பிரிக்கப்பட்ட துறைமுகம்; உப்பங்கழியொன்றை ஆழமாகவும் அகலமாகவும் செய்ததால் ஏற்பட்டது. இதற்கு இயற்கை வசதிகள் பல உண்டு. இது விரைவாக வளர்ச்சியடைந்து வருகிறது.

கிழக்குக் கரையில் **தூத்துக்குடி, நாகைப்பட்டினம், புதுச் சேரி, காக்கிநாடா** முதலிய சிறிய துறைமுகங்களிருக்கின்றன.

**விசாகப்பட்டணம்:** இது அண்மையில் சிறிது காலத்திற்குள் விரைவாக வளர்ச்சியடைந்து இன்று இந்தியத் துறைமுகங்களில் முக்கியமான ஒன்ருக விளங்குகிறது. இங்கே இயற்கை வசதிகள் பல இருக்கின்றன. கப்பல் கட்டும் தொழில் இங்கே நடைபெறுகிறது. ஆந்திர ராஜ்யத்தின் வடகோடியும், மத்தியப்

பிரதேசத்தின் கிழக்குப் பகுதியும், ஒரிஸ்ஸாவின் தென் பகுதியும் இத் துறைமுகத்தின் பின் நிலங்களாகும்.

## இந்தியாவின் வாணிபம்

இந்தியாவின் வெளிநாட்டு வாணிபம் பெரிதும் கடல் வழியே நடைபெறுகிறது. ஒரு சிறுபாகமே நிலவழியாக வடமேற்கிலுள்ள ்கானிஸ்தானம் முதலிய பிரதேசங்களோடும், வடக்கிலுள்ள ந் நாட்டோடும் நடைபெறுகிறது. ஆனால் இது மிகவும் பமே. பம்பாய்த் துறைமுகத்திலிருந்து பருத்தியையும், தாவிலிருந்து சணலையும் நாம் பெருவாரியாக ஐரோப்பிய களுக்கும், அமெரிக்க நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து கிறோம். இவைகளுக்குப் பதிலாக அந்நாடுகளின் தொழிற் லகளில் தயாரிக்கப்படும் செய்பொருள்களை நாம் இறக்குமதி ய்து கொள்கிறோம். நமது நாட்டிலிருந்து கச்சாப் பொரு ாகப் பருத்தியும் சணலும் ஏற்றுமதியாகின்றன. தயாரித்த பருத்தித் துணிகளைப் பாரஸீகம், தென் ஆப்பிரிக்கா, பர்மா, மலேயா முதலிய நாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்கிறோம்.

இந்தியாவில் வெளிநாட்டு வாணிபத்தில் பெரும் பாகம் இங்கிலாந்தோடு நடைபெற்று வந்தது. ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான் முதலிய நாடுகளோடும் நல்ல வாணிப உறவு இருந்து வந்தது. ஆனால் யுத்தம் நடைபெற்ற காலத்திலே இது சிதறிப் போய்விட்டது. இப்பொழுது அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, அர்ஜெண்டீனா முதலிய நாடுகளோடு வாணிப உறவு வளர்ந்து வருகிறது.

நில வழியே நடைபெறும் அயல் நாட்டு வாணிபம் மிகவும் குறைவாக இருப்பதற்கு இந்நாட்டின் இயற்கை அமைப்பு தான் காரணம். இந்தக் குறைந்த வாணிபமும் எந்தத்திசைகளில் நடைபெறுகின்றது என்பதைக் கவனிப்போம்.

1. வடமேற்கில் பலுசிஸ்தானத்தோடும், அதன் மூலமாகப் பாரஸீகத்தோடும் நம் வாணிபம் நடைபெறுகிறது. இங்கே இருப்புப்பாதை ஏற்பட்டிருப்பதும் பெரிதும் பயன்படுகிறது.

2. கைபர் கணவாய் வழியாய் ஆப்கானிஸ்தானத்தோடு வாணிபம் நடைபெறுகிறது.

3. காஷ்மீர் நாட்டின் வழியாக மத்திய ஆசியாவிலுள்ள காஷ்கர், சாமர்கண்ட், பொகாரா முதலிய இடங்களோடு வாணிபம் நடைபெறுகிறது.

4. இமயமலைச் சாரலிலுள்ள நேபாளத்துடன் வாணிபம் நடைபெறுகிறது.

5. டார்ஜிலிங், ஷிப்கி கணவாய் வழியாகத் திபெத்துடன் வாணிபம் நடைபெறுகிறது.

## போக்குவரவு மார்க்கங்கள்

போக்குவரவு மார்க்கங்கள் மூவகைப்படும். (1) நில (2) நீர் வழி, (3) வான வழி. நிலவழியில் சாலைகளும் இரு பாதைகளும் அடங்கியுள்ளன.

சாலைகள் : நமது நாட்டின் முக்கியமான நகரங்க பிணைத்துச் சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும் ந நாட்டின் நிலைமைக்கு ஏற்ற அளவு சாலைகள் அமைக்கப்ட வில்லை. இந்தியாவில் 1953-இல் 3,01,000 மைல் ரோடுகள் போட பட்டிருந்தன. இதில் 95,054 மைல்களே செப்பனிடப் பட்டவை செப்பனிடப்பட்ட ரோடுகளிலும் 17,000 மைல் நீளம் தான் நவீன முறைகளிலான கடினமான மேல் பரப்புக்கொண்டது. உலகத்தில் முன்னேற்ற மடைந்துள்ள பிற நாடுகளோடு ஒப்பிடுவோமாயின் நாம் எவ்வளவு பின்னடைந்திருக்கிறோம் என்பது விளங்கும்.

| நாடு | ச. மைலுக்கு ரோடின் நீளம் | 1,00,000 ஜனங்களுக்கு ரோடின் நீளம் | குறிப்பு |
|---|---|---|---|
| கிரேட் பிரிட்டன் | 2·02 | 392 | மோட்டார் செல்லக் கூடியவை |
| பிரான்ஸ் | 1·84 | 934 | ,, |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 1·01 | 2499 | ,, |
| ஜெர்மனி | 0·95 | 260 | ,, |
| இட்டாலி | 0·89 | 247 | ,, |
| இந்தியா | 0·18 | 76 | 40 சதவிகிதம் தான் மோட்டார் போகக்கூடியது. |




இந்தியாவின் ஆகாய மார்க்கங்கள்

1. ஸ்ரீநகர்
2. ஜம்மு
3. லாகூர்
4. டில்லி
5. கல்கத்தா
6. அலகாபாத்
7. குவெட்டா
8. கராச்சி
9. ஜோதிபுரி
10. ஜெயபுரி
11. பூஜ்
12. ஆமதாபாத்
13. போபால்
14. நாகபுரி
15. பம்பாய்
16. ஹைதராபாத்
17. விசாகப்பட்டணம்
18. ரங்கூன்
19. பங்களூர்
20. சென்னை
21. கோயம்புத்தூர்
22. கொச்சி
23. திருவனந்தபுரம்
24. யாழ்ப்பாணம்
25. கொழும்பு
26. திரிசிராப்பள்ளி
27. மங்களூர்




இந்திய இருப்புப்பாதைகள்

குறிப்பு: ஊர்களின் பெயர்களை அடுத்த பக்கத்தில் காண்க.

## இந்திய இருப்புப்பாதைகளால் இணைக்கப்பட்ட ஊர்களின் பெயர்கள் (பக்கம் 60)

(1) பெஷாவர்
(2) ராவல் பின்டி
(3) அமிருதஸரஸ்
(4) சிம்லா
(5) அம்பாலா
(6) ஸஹரன்பூர்
(7) டில்லி
(8) குவெட்டா
(9) லாகூர்
(10) மூல்டான்
(11) பஹவல்பூர்
(12) ரோஹரி
(13) கராச்சி
(14) ஹைதராபாத் (சிந்து)
(15) ஜோதிபுரி
(16) மட்ரா
(17) ஆக்ரா
(18) லக்னௌ
(19) ஜான்ஸி
(20) கான்பூர்
(21) அலகாபாத்
(22) காசி
(23) கயா
(24) கல்கத்தா
(25) போபால்
(26) இடார்ஸி
(27) மன்மாட்
(28) பம்பாய்
(29) பூனா
(30) வர்தா
(31) நாகபுரி
(32) கட்டாக்
(33) விசாகப்பட்டணம்
(34) வாடி
(35) ஹைதராபாத் (தக்காணம்)
(36) வாரங்கல்
(37) விஜயவாடா
(38) கோவா
(39) குண்டக்கல்
(40) மங்களூர்
(41) பெங்களூர்
(42) சென்னை
(43) ஜோலார்பேட்டை
(44) ஈரோடு
(45) கொச்சி
(46) திரிசிராப்பள்ளி
(47) நாகைப்பட்டணம்
(48) மதுரை
(49) தூத்துக்குடி
(50) திருவனந்தபுரம்
(51) மைசூர்

இருப்புப் பாதைகளின் நிலைமை எப்படி இருக்கிறது என்பதைக் கவனிப்போம். 1954-இல் 42,100 மைல் இருப்புப்பாதை இருந்தது. அதாவது இங்கிலாந்திலிருப்பதைப்போல் இரட்டிப்பு நீளம். ஆனல் கிரேட் பிரிட்டனில் 100 சதுரமைலுக்கு 20 மைல் நீளம் இருப்புப்பாதை இருக்கிறது; இந்தியாவில் $2\frac{1}{2}$ மைல் மட்டுந்தானிருக்கிறது.

நம் நாட்டில் ரோடுகளும், இருப்புப் பாதைகளும் இன்னும் பெருகவேண்டுவது மிக்க அவசியம். நீர்வழியில் கடல்வழி பற்றி முன்பே தெரிந்துகொண்டீர்கள். அதில் மற்றென்றுன உள்நாட்டுக் கால்வாய்கள் நம் நாட்டில் மிகவும் குறைவு. கங்கை ஆறும் அதன் உப, கிளையாறுகளும் ஓரளவுக்குப் போக்குவரவு மார்க்கங்களாகப் பயன்படுகின்றன.

வானவழியில் பிரயாணிகளும் தபாலும் போகப் பல திட்டங்கள் நடைமுறையில் இருந்து வருகின்றன. அந்த வழிகளைப் படத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

### பயிற்சிகள்

1. இந்தியா படம் வரைந்து அதில் முக்கியமான துறைமுகங்களையும் அவைகளின் பின் நிலங்களையும் குறிப்பிடுக.

2. பின் நிலம் என்றுல் என்ன?

3. இந்தியாவின் வெளிநாட்டு வாணிபத்தின் தன்மையை விளக்கிக் கூறுக.

4. நிலவழியே நடைபெறும் இந்நாட்டின் வாணிபம் குறைவாயிருப்பதற்குக் காரணம் என்ன?

5. புதிதாக வளர்ச்சியடைந்து வரும் துறைமுகங்களெவை? அவற்றின் வளர்ச்சிக்கு எவ்வித இயற்கை வசதிகள் இருந்து வருகின்றன?

6. இந்தியா படமொன்றில் ‘முக்கியமான இருப்புப் பாதைகளைக் குறிப்பிடுக.

7. சென்னையிலிருந்து டில்லி, பம்பாய், கல்கத்தா நகரங்களுக்கும், மங்களூரிலிருந்து பாட்னுவுக்கும் போகவுள்ள இருப்புப்பாதைகளைக் கூறுக.

8. இந்தியாவின் போக்கு வரவு மார்க்கங்களின் நிலைமையை ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் நிலைமையோடு ஒப்பிடுக.

# IV. இந்தியாவின் இயற்கைப் பிரதேசங்கள்

இயற்கைப் பிரதேசமென்றால் என்னவென்பதை முன்னொரு பாடத்தில் கூறியுள்ளோம். ஓர் இயற்கைப் பிரதேசத்தில் எல்லாப் பாகங்களிலும் சற்றேறக்குறைய ஒரேவிதமான நிலப் பரப்பு, நில அமைப்பு, தட்ப வெப்பநிலை முதலியன இருப்பதன் காரணமாக அங்கே நடைபெறும் விவசாயம், தொழில்கள், மக்களின் வாழ்க்கை, மொழி முதலியன ஒருமிக்க இருக்கும்.

இந்தியாவை ஏழு இயற்கைப் பிரதேசங்களாகப் பிரிக்கலாம் :

(1) இமயமலைப் பிரதேசம்

(2) சிந்து ஆறு பாயும் சமவெளிப் பிரதேசம்

(3) கங்கை—பிரம்மபுத்திரா ஆறுகளின் வடிகால் நிலம்

(4) ராஜபுதனமும், மத்திய இந்தியாவும்

(5) தக்காண பீடபூமி

(6) மேற்குக் கடற்கரைப் பிரதேசம்

(7) கிழக்குக் கடற்கரைப் பிரதேசம்

## 1. இமயமலைப் பிரதேசம்

இந்தப் பிரதேசத்தில் இந்தியாவுக்கு வடக்கிலுள்ள இமய மலைத் தொடர்ச்சிகள் இருக்குமிடமும், வடமேற்கில் பல தொடர்களாக அமைந்திருக்கும் இந்துகுஷ், சுலைமான் முதலிய மலைகளுள்ள பாகமும் அடங்கியுள்ளன. வடமேற்கிலுள்ள மலைத் தொடர்கள் இமயமலைகளவ்வளவு உயரமல்ல. மேலும் அவைகளின் இடையே கணவாய்களும் இருக்கின்றன. இக் கணவாய்கள்தான் ஆப்கானிஸ்தானத்திற்குப் போகும் வழிகளாகும். இமயமலைத் தொடர்ச்சிகள் ஐந்து மைல் உயரமும் 800 மைல் நீளமும் கொண்டவை. கிழக்குக் கோடியில் பிரம்மபுத்திரா பாயும் இடுக்கு வரை இம்மலை ஒரே தொடராக இருக்கின்றது. இதில் மிகவும் உயரமான சிகரம் எவரெஸ்ட். இதன் உயரம் 29,000 அடிகளிலும் மிக்கது. இம்மலைகளின் அடிவாரத்தில் தராய் என்னும் காடுகளடர்ந்த பாகம் இருக்கிறது. இது கொடிய காய்ச்சலைக் கொடுக்கும் பிரதேசம்; மானிட வாழ்க்கைக்கு ஏற்றதன்று. இமயமலை மீது காணப்படும் இயற்கைத் தாவரத்திற்கு 'மலைத் தாவரம்' என்னும் பெயர்

வழங்கப்படுகிறது. இமயமலையில் 5,000 அடி உயரத்திற்கு மேல் 9,000 அடி வரையில் எக்காலத்திலும் பசுமையாக இருக்கக்கூடிய ஒக் போன்ற மரங்கள் வளரும் காடுகள் இருக்கின்றன. 9,000 அடி முதல் 12,000 அடி வரையில் ஊசியிலைக் காடுகள் இருக்கின்றன. 12,000 அடி முதல் 15,000 அடி வரையில் ஆல்ப்ஸ் தாவரம் இருக்கிறது. அதற்கும் உயரமான பாகங்கள் வெண் பனியால் மூடப்பட்டிருக்கின்றன.

இமயமலைத் தொடர்ச்சியின் மேற்குப் பகுதி நான்கு பிரிவுகளாக இருப்பதுடன் அவை ஒன்றுக்கொன்று விலகி இருப்பதால் அவைகளினிடையில் பள்ளத்தாக்குக்கள் இருக்கின்றன.

**காஷ்மீரம்:** மேற்கூறிய பள்ளத்தாக்குக்களைக் கொண்டது காஷ்மீரம். இது மலைகளடர்ந்தது. ஆனால் பள்ளத்தாக்குக்களின் மத்தியில் ஊலூர் ஏரியும், காஷ்மீர் நாட்டுத் தலைநகரமாகிய ஸ்ரீ நகரும் இருக்கின்றன. இந்நாடு இயற்கை அழகுக்குப் புகழ் வாய்ந்தது. காஷ்மீரம் ஒரு மன்னரால் ஆளப்பட்ட சுதேச நாடு. இப்போது இந்தியாவோடு இணைந்து இந்தியக் குடியரசில் சேர்ந்துள்ளது. இங்கே மக்கள் தொகை குறைவு. இங்கே உழுது பயிரிடக்கூடிய நிலம் மிகவும் குறைவு. மக்கள் சிறிய கைத்தொழில்களைச் செய்தும் ஆடுகளை வளர்த்தும் பிழைக்கின்றனர். காஷ்மீரம் நேர்த்தியான சால்வைகளுக்குப் புகழ் பெற்றது.

**நேபாளம்:** இது இமயமலைப் பிரதேசத்திலுள்ள மற்றொரு நாடு; சுதந்திரமானது. இங்கே தாழ்ந்த பாகங்கள் செழிப்பானவை. இங்கேதான் இந்நாட்டின் தலைநகரமாகிய காட்மாண்டு உள்ளது.

## 2. சிந்து ஆறு பாயும் பிரதேசம்

சிந்து ஆறு பாயும் பிரதேசம் முற்றிலும் வறண்ட பாலை நிலமென்றும், அதன் வடபாகம் பஞ்சாப் என்றும், தென் பாகம் சிந்து மாகாணமென்றும் நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். இவ்விரண்டு மாகாணங்களுள் பஞ்சாபின் மேற்குப் பகுதியும், சிந்து மாகாணம் முழுவதும் பாகிஸ்தான் டொமினியனில் அடங்கியிருக்கின்றன.

பஞ்சாப் வறண்ட பிரதேசமாயினும் நீர்ப்பாசன வசதியைப் பெற்றிருப்பதால் இது ஒரு முக்கியமான மாகாணமாக

விளங்குகிறது. பஞ்சாப் என்பது ஐந்து ஆறுகள் பாயும் பிரதேசம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இவ்வைந்து ஆறுகள் ஜீலம், சீனுப், ராவி, பியாஸ், ஸத்லெஜ் என்பவை என்பதும் உங்களுக்குத் தெரியும். இங்கே ஆற்றுப்போக்கைக் கவனித்தால் நிலம் தென்மேற்காகச் சரிந்திருப்பது விளங்கும். பஞ்சாபுக்குத் தெற்கில் மேட்டுப் பிரதேசமான தார் பாலைவனம் இருக்கிறது. இமயமலைச் சாரல்களில் நல்ல மழை பெய்யும் காலத்தில் ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். சில சமயம் நீரோட்டத்தின் வேகத்தால் ஆற்றின் போக்கு மாறக்கூடும். இதனுல் சேத மேற்படுவதுண்டு.

பஞ்சாப் மாகாணத்தை மூன்று இயற்கைப் பிரதேசங்களாகப் பிரிக்கலாம். (1) இமயமலையை அடுத்துள்ள, மற்றைய பாகங்களைவிடச் சிறிது மேடான சமவெளி, (2) வறண்ட தென் மேற்குப் பாகம், (3) சுமாரான, அதாவது 20″ முதல் 40″ வரை மழையுள்ள தென்கிழக்குப் பாகம்.

பஞ்சாப் சமவெளியில் மழை குறைவு. கோடை காலத்தில் வெப்பம் மிகுதியாகவும், குளிர் காலத்தில் குளிர் மிகுதியாகவும் இருக்கும். இச் சமவெளி வண்டல் மண் படிந்தது. இதன் வட பாகத்திலுள்ள உப்பு மலை சிந்து ஆற்றுக்கும், ஜீலம் ஆற்றுக்கும் இடையில் கிழக்கு மேற்காகப் பரவி இருக்கிறது. இம் மலையிலிருந்து உப்பு வெட்டி எடுக்கப்படுகிறது. இம்மலைத் தொடருக்கு வடக்கிலிருக்கும் சமவெளி வறண்ட பிரதேசமாகையால் அங்கே நவதானியங்கள் பயிரிடப்படுகின்றன.

பஞ்சாப் சமவெளி நீர்ப்பாய்ச்சல் வசதி பெற்றிருப்பதால் அங்குத் தானிய விளைவு மிகுதி. கோதுமைப் பயிரே மிகுதியாக விளைகிறது. உயர்ந்த வகையைச் சேர்ந்த அமெரிக்கன் பருத்தியும் அங்கே உற்பத்தியாகிறது.

லாகூர் ஒரு பழைய நகரம். இது மேற்குப் பஞ்சாபின் தலை நகரம். மூல்டான், அமிர்தஸரஸ் முதலியவை பஞ்சாபின் முக்கியமான நகரங்கள்.

சிந்து மாகாணத்தில் ஸக்கர் அணை இருப்பதைப் பற்றியும், அதன் பலனுகப் பாலைவனத்திலிருந்து மீட்கப்பட்ட நிலங்கள் செழித்து நல்ல பலனைக் கொடுக்கின்றன என்பதையும் படித்து விட்டீர்கள். எனவே சிந்து ஆறு இல்லாவிட்டால் இம்மாகாணம் ஒரு பாலைவனமாகவே இருந்திருக்கும். ஆகையால் இம் மாகாணத்தைச் ‘சிந்துவின் கொடை’ என்று சொல்லலாம்.

இந்தப் பிரதேசத்தின் பெரிய பட்டணம் கராச்சி. இது பாகிஸ்தானின் தலைநகரம். இது இந்தியாவின் மூன்றுவது பெரிய துறைமுகமாக இருந்தது; இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்து போன பிறகு அந்த டொமினியனில் முதன்மையான துறைமுகமாக இருக்கிறது. ஹைதராபாத் என்பது மற்றொரு பெரிய நகரம். இது சிந்து மாகாணத்தின் தலைநகரமாக இன்று விளங்குகிறது.

## 3. கங்கை—பிரம்மபுத்திரா சமவெளி

டில்லிக்குக் கிழக்கில் கங்கை பிரம்மபுத்திரா ஆறுகளும், அவைகளின் உபஆறுகளும் இச் சமவெளியில் அடங்கியுள்ளன. கங்கையாற்றின் உபஆறுகளில் பல இமயமலைச் சரிவுகளிலிருந்து வருகின்றன; ஒரு சில விந்தியப் பிரதேசத்திலிருந்தும் சோட்டா நாகப்பூரிலிருந்தும் வருகின்றன. இச் சமவெளியில் உத்தரப் பிரதேசம், பீஹார், வங்காளம், அஸ்ஸாம் அடங்கியுள்ளன. மேற்குப் பகுதியில் கங்கையின் வடிகால் நிலமும், கிழக்கில் பிரம்மபுத்திராவின் வடிகால் நிலமும் இருக்கின்றன.

தட்ப வெப்பநிலை இந்த இயற்கைப் பிரதேசமெங்கும் ஒரே வகையாக இல்லை. அஸ்ஸாமில் கனத்த மழை பெய்கிறது. உலகத்திலேயே மிகுதியாக மழை பெய்யும்படியான சிரப்பூஞ்சி என்னுமிடம் இங்கேதான் இருக்கிறது. வங்காளத்தில் 60″-க்கு மேல் பெய்கிறது. பீஹாரில் 40″-க்கு மேல் 60″-க்குள்ளாகவும், உத்தரப் பிரதேசத்தில் 25″ முதல் 40″ வரையிலும் பெய்கிறது. மழை மேற்கில் குறைந்து கொண்டே போவது போல், மேற்கில் கடுமையான கோடையும், குளிர்மிகுந்த பனியும் ஆக இருக்கும். கிழக்கில் வெப்ப வியாப்தி குறைவு. நிலைமை மிதமாக இருக்கும்.

இச் சமவெளி வண்டல் மண் படிந்த பாகம். ஒரு காலத்தில் இங்கெல்லாம் கடல் பரவி இருந்ததென்றும், வண்டல் மண் படிப்படியாகப் படிந்து விட்டதால் நிலம் மேடிட்டுக் கடல் அகன்று விட்டதென்றும் கூறப்படுகிறது.

இங்குள்ளவர்களின் முக்கியமான தொழில் உழவு. நல்ல நீர் வசதியும், சிறந்த வண்டல் மண் படிந்த நிலமும் இருக்கும் போது உழவு ஓங்கி இருப்பது இயற்கையே. மேற்கே மழை குறைவான பாகத்தில் கோதுமைச் சாகுபடி செய்யப்படுகிறது. கிழக்கே வங்காளத்திலும், அஸ்ஸாமிலும் நெற்பயிர் மிகுதி. மேற்கிலிருந்து வருமளவும் கோதுமை குறைந்து கொண்டே

வருகிறது. கிழக்கிலிருந்து மேற்கே போகப் போக நெற்பயிர் குறைந்து கொண்டே வருகிறது. உத்தரப் பிரதேசத்தின் கிழக்குப் பாகங்களில் இரண்டும் சமமாகப் பயிரிடப்படுகின்றன.

கீழ் வங்காளத்தில் மழை மிகுதி; நிலம் சதுப்பாயிருக்கும்; வெப்பமும் மிகுதி. இந்தத் தட்ப வெப்பம் சணல் பயிரிடுவதற்கு ஏற்றதாய் இருக்கிறது. உலகத்திலேயே சணல் இங்கேதான் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. பருத்தி உத்தரப் பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் மழை குறைவான பாகத்தில் விளைகிறது.

அஸ்ஸாமில் தேயிலைத் தோட்டங்கள் மிகுதி. உலகத்திலேயே தேயிலைப் பயிருக்கு முக்கியமான இடங்களில் அஸ்ஸாம், வங்காளம், இமயமலைச் சாரல்கள் ஆகியன முக்கியமானவை. இந்தியாவின் தானியக் களஞ்சியமென்றே இந்த இயற்கைப் பிரதேசத்தைச் சொல்ல வேண்டும். இங்கே கரும்பும், எண்ணெய் வித்துக்களும் நன்ருக விளைகின்றன.

உத்தரப் பிரதேசத்தில் கான்பூர், ஆக்ரா நகரங்களில் நெசவுத் தொழிலும், தோல் சம்பந்தமான தொழிலும் நடைபெறுகின்றன. அலகாபாத்தில் மாவு மில்களும், அச்சுத் தொழிற்சாலைகளும் மிகுந்துள. பனாரஸ் (காசி) புனிதத் தலமாகும்; பட்டு நெசவுக்குப் புகழ் பெற்றது. வங்காளத்தில் கல்கத்தாவுக்கு அருகில் ஹூக்ளி ஆற்றங்கரைமீது பல சணற்சாலைகள் இருக்கின்றன. இஞ்சினீரிங் தொழிலும் இங்கே விரிவாக நடைபெறுகிறது.

அஸ்ஸாமில் தேயிலை சம்பந்தமான தொழில் நடைபெறுகிறது. தாமோதர் ஆற்றுப் பள்ளத்தாக்கில் இரும்பும், நிலக்கரியும் கிடைக்கின்றன என்று முன்பே படித்தீர்கள். இங்கே ஜெரியா, ராணிகஞ்சு ஆகியவை முக்கியமான தொழில் நடக்கும் பிரதேசங்கள். இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகளுள் மிகப் பெரியது ஜாம்ஷெட்பூரில் இருக்கிறது.

கங்கைச் சமவெளி தொன்று தொட்டு நாகரிகத்திற்குப் புகழ் பெற்றது. இங்கே வரலாற்றுப் புகழ் வாய்ந்த பல அரசுகள் தோன்றி இருந்தன. இங்கே தொழில் நுட்பம் தெரிந்த தொழிலாளர்கள் மிகுந்துள்ளனர். இந்தப் பிரதேசத்தில் நல்ல போக்குவரவு மார்க்கங்களுண்டு. இந்தியாவின் இருப்புப் பாதைகள், சாலைகள் ஆகியவற்றின் படத்தைப் பார்த்தால் இங்கே வலை பின்னியதைப்போல் அவை நெருக்கமாக அமைந்திருப்பது விளங்கும்.

## 4. ராஜபுதனமும், மத்திய இந்தியாவும்

இந்த இயற்கைப் பிரதேசத்தில் இரண்டு பாகங்களிருப்பது பெயரிலிருந்தே விளங்கும். இவை சுதேச நாடுகள் அடங்கிய பிரதேசங்கள். இது மழையற்ற வறண்ட பாலைவனப் பிரதேசம். மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், சிந்து இவைகளால் இப்பிரதேசம் சூழப்பட்டுள்ளது. இதன் நிலப் பரப்பு ஒரு வகையானதன்று. நர்மதா ஆற்றையடுத்து விந்தியமலைகள் இருக்கின்றன. அதிலிருந்து மத்திய இந்தியா மேட்டுப் பிரதேசம் வடக்கே உயர்ந்து கொண்டே போகிறது. பல ஆறுகள் இங்கே ஓடுவதால் பல பள்ளத்தாக்குக்களிருக்கின்றன. இந்தப் பிரதேசத்தின் மத்தியில் ஆரவல்லி மலைகள் இருக்கின்றன. இந்தப் பிரதேசத்தின் மேற்குப் பாகம் பாலைவனமாயிருப்பதால் இங்கே இயற்கைத் தாவரம் மிகக் குறைவு. பிகானீரில் கோடையில் 123° வரையில் வெப்பம் ஏறும். குளிர்காலத்தில் 24° வரையில் விழுந்து விடுவதுண்டு. இங்குள்ள மலைப்பிரதேசங்களில் இந் நாட்டுப் பழங்குடிகளின் சந்ததியார் வாழ்கிறுர்கள். மற்றைய பாகங்களில், ராஜபுத்திரர் இருக்கிறுர்கள். இந்தப் பிரதேசத்தின் மத்தியில் ஆஜ்மீர்—மெர்வாரா ராஜ்யம் இருக்கிறது.

ஆரவல்லி மலையின் மேற்குச் சரிவில் லூனி என்னும் ஆறு பாய்கிறது. இதில் வெள்ளம் ஓடும் காலத்தில் ஜோத்பூர் வாசிகள் உழவு நடத்துவார்கள். இங்கே சில இடங்களில் கிணறுகள் 200, 300 அடி ஆழமும் இருக்கும். ஸத்லெஜ் ஆற்றின் தண்ணீரைக் கொண்டு பிகானீரில் பாசன வசதி செய்யப்பட்டிருக்கிறது. பாலைவனப் பிரதேசத்தை யடுத்துள்ள புற்றரைப் பிரதேசங்களில் மேய்ச்சல் தொழில் நடைபெறுகிறது. இங்கே மக்கள் குதிரைகளையும், ஒட்டகங்களையும் வளர்க்கிறுர்கள்.

ஆரவல்லிக்குக் கிழக்கிலுள்ள பாகங்களில் சிறிது கோதுமையும், எண்ணெய் வித்துக்களும் பயிரிடப்படுகின்றன. இங்கே ராஜபுத்திர மன்னர்களின் அழகிய நகரங்கள் பல இருக்கின்றன. இவற்றுள் சலவைக் கற்களாலான கட்டடங்கள் மிகுந்த உதயப்பூர், சிவப்புக் கற்களால் கட்டப்பட்ட ஜயப்பூர், ஆகியவை குறிப்பிடத் தக்கவை. இங்கே பருத்தி விளைவதால் பருத்தி எந்திரசாலைகளும் இருக்கின்றன. ஜயப்பூரில் வட்டி வாணிபம் மிகுதி. போப்பால் நல்ல நகைகள் செய்வதற்குப் புகழ்பெற்றது.

# 5. தக்காணப் பீடபூமி

இந்தப் பீடபூமியை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். (a) வடமேற்கிலுள்ள எரிமலைக் குழம்புப் பிரதேசம். (b) வட கிழக்குப் பாகம். (c) பீடபூமியின் தென் பாகம்.

(a) வடமேற்கிலுள்ள எரிமலைக் குழம்புப் பிரதேசம், பம்பாய் ராஜ்யத்தைச் சேர்ந்த மேற்குத் தொடர்ச்சி மலைப் பாகத்தையும், நர்மதை, தபதி ஆறுகள் பாயும் மத்தியப் பிரதேசத்தையும், ஹைதராபாத்து ராஜ்யத்தின் மேற்குப்பகுதியையும் கொண்டது. இது 1,000 அடி முதல் 2,000 அடி வரை கடல் மட்டத்திற்கு மேல் உயர்ந்திருக்கிறது. இது மழை மறைந்த பாகம். இங்கே வருஷத்தில் 40"-க்குமேல் மழை கிடையாது. இங்குள்ள காடுகளில் நல்ல தேக்கு மரம் கிடைக்கிறது. இங்கே கோதுமையும், தினை வகைகளும் பயிரிடப்படுகின்றன. இங்குள்ள மண் பருத்தி விளைவுக்கு ஏற்றது. ஆகையால் ஏராளமான பருத்தி விளைவிக்கப்படுகிறது. ஆனால் இந்தப் பருத்தியின் சிம்பு நீளக்குறைவாயிருக்கும். இங்கே மக்கள் நெருக்கம் இல்லை. இங்குள்ளவர் மராத்தியர். இந்தப் பாகத்தில் பூனு மிகவும் பெரிய நகரம். இது பம்பாய்க்குப் போகும் வழியில் இருக்கிறது.

(b) வடகிழக்கு மேட்டுப் பிரதேசம் மகாநதி வடிகால் நிலத்தையும் கடந்துகொண்டு பீஹார் ஒரிஸ்ஸாவரை பரவியுள்ளது. இது 3,000 அடி வரையில் உயர்ந்திருப்பதால் குளிர்ச்சியாய் இருக்கும். இதன் வடகிழக்குப் பாகத்தின் வடகோடியில் காடுகள் அதிகம். காடுகளிலிருந்து மரம் வெட்டுவதும், அரக்குத் திரட்டுவதும் இங்குள்ளவர்களின் முக்கியமான தொழில். இங்குத் தாதுப்பொருள்கள் நிரம்பக் கிடைக்கின்றன. இங்கே இந்தியாவின் பழங்குடி மக்களாகிய ஸாந்தலர்கள் காட்டுப் பிரதேசங்களில் வசிக்கின்றனர். கோதாவரி ஆறு குறுகிய பள்ளத்தாக்கை ஏற்படுத்திக்கொண்டு கிழக்கு மலைத்தொடரைக் குடைந்து செல்லும்போது பல நீர்வீழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. இங்கே மக்கள் நெருக்கம் குறைவு.

(c) தக்காணத்தின் தென்பாகம்–இதுதான் சாதாரணமாகத் தக்காண பீடபூமி என்று வழங்கப்படுகிறது. இதன் தென் பாகத்தில் மேடு அதிகமாய் இருக்கிறது. வடபாகத்தில் கிருஷ்ணை பெண்ணை ஆறுகளும், அவைகளின் உப ஆறுகளும் பாய்கின்றன. இதுவும் மழை மறைந்த பிரதேசமாகையால் மழை

குறைவு. மழை நீரைத் திரட்டிக்கொள்ள இங்கே ஏரிகள் அமைத்திருக்கிருர்கள்.

இது பழங்காலப் படிகப் பாறைகளாலான நிலமாதலால் இங்கே தாதுப் பொருள்கள் கிடைக்கின்றன. ஹைதராபாத்தைச் சேர்ந்த சிங்கரேணியில் நிலக்கரியும், மைசூரிலுள்ள கோலாரில் தங்கமும் வெட்டி எடுக்கப்படுகின்றன. ஆண்டொன்றுக்கு சுமார் 8 கோடி ரூபாய் மதிப்புடைய தங்கம் கோலாரில் வெட்டி எடுக்கப்படுகிறது. பற்பல இடங்களில் இரும்பும் மங்கனீசு முதலிய உலோகங்களும் கிடைக்கின்றன. மங்கனீசு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இங்கே நிலம் செழிப்பானதன்று. இங்கே உழவு பயன்தரத் தக்கதாயில்லை. மேற்குத் தொடர்ச்சி மலைகளின் கிழக்குச் சரிவில் மழை மற்றைய பாகங்களில் பெய்வதைவிட மிகுதி. ஆகையால் இங்கே தினை வகைகள்தான் மிகுதியாகப் பயிரிடப்படுகின்றன. மைசூரில் பாபா, பூடான் போன்ற மலைச்சரிவுகளில் காப்பித் தோட்டங்களுண்டு. இந்தப் பிரதேசமெங்கும் ஆடு வளர்த்தலும் ஒரு முக்கியமான தொழிலாக இருந்து வருகிறது. இங்கே மக்கள் நெருக்கம் குறைவு. மைசூர், ஹைதராபாத் ராஜ்யங்கள் இந்தப் பாகத்தில் அடங்கியுள்ளன என்பதைக் கண்டோம். முக்கிய மான நகரங்களான மைசூர், பெங்களூர், ஹைதராபாத், நீலகிரி மலைகளின்மீது கோடை வாசஸ்தலங்களான உதகமண்டலம், கூனூர் முதலிய இடங்கள் இங்கு இருக்கின்றன. இப்பகுதியில் பல்லாரி, கர்நூல் பட்டணங்களிருக்கின்றன.

## 6. மேற்குக் கடற்கரைப் பிரதேசம்

மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தின் வடபாகம் பம்பாய் ராஜ்யத்திலும், தென் பாகம் சென்னை ராஜ்யத்திலும் அடங்கி யுள்ளன. வடபாகத்தின் கடற்கரையை அடுத்துள்ள பாகம் மணற்பாங்காயும், சதுப்பாயும், மாங்கிரோவ் காடுகள் அடர்ந் தும் இருக்கின்றது. மத்தியிலுள்ள பாகம் நல்ல செழிப்புள்ளது. இங்கே 40" மிகுதியாக மழை பெய்வதால் நெல் சாகுபடி செய்யப் படுகிறது. உட்பாகம் மேற்குத் தொடர்ச்சிமலையும் அதையடுத் துள்ள பாகத்தையும் கொண்டது. இங்கே அடர்ந்த காடுகளிருக் கின்றன.

இந்த வடபாகத்தில்தான் பம்பாய் நகரம் இருக்கிறது. இது ஒரு பெரிய தொழிற் பிரதேசமென்பதும், துறைமுகமென்பதும்

உங்களுக்குத் தெரியும். போர்ச்சுகீசியரிடமிருந்துவரும் கோவா இங்கே கடற்கரையோரமாக இருக்கிறது. பம்பாய் நகரத்திற்கு மேற்குத்தொடர்ச்சி மலையின் கிழக்கிலுள்ள பிரதேசங்களி லிருந்து போவதற்கு போர்காட், தால்காட் என்னும் கண வாய்கள் இருக்கின்றன.

தென்பாகத்தில் சென்னை ராஜ்யத்தைச் சேர்ந்த தென் கன்னடம், மலையாளம் ஜில்லாக்களும், கொச்சி, திருவாங்கூர் ராஜ்யங்களும் இருக்கின்றன. இங்கு மங்களூர், கள்ளிக் கோட்டை, எரணுகுளம், கொச்சி, திருவனந்தபுரம் ஆகியவை முக்கியமான பட்டணங்கள். இங்கே கடலையடுத்துள்ள மணற் பாங்கான பிரதேசத்தில் தென்னை நன்றாக வளருகிறது. மத்திய பாகத்தில் நெல் பயிரிடப்படுகிறது. மலைகளிலிருந்து தேக்கு, காப்பி, ஏலம், தேயிலை, ரப்பர் கிடைக்கின்றன. கடலோரமாக, ஆனால் கடலிலிருந்து மணல் திட்டுக்களால் பிரிக்கப்பட்டு, இந் தப் பிரதேசம் நெடுக விட்டுவிட்டு உப்பங்கழிகள் இருக்கின்றன. இவற்றில் படகுகள் மூலம் போக்குவரவு நடைபெறுகிறது. இவ்வித உப்பங்கழியொன்று அகலமாயும் ஆழமாயும் இருந்த தால்தான் கொச்சித் துறைமுகம் ஏற்பட்டது. இங்குள்ளவர்கள் உழவுத்தொழிலுடன், நெசவு, மீன்பிடித்தல், கயிறு திரித்தல், மரம் அறுத்தல் முதலிய தொழில்களையும் நடத்துகின்றனர்.

## 7. கிழக்குக்கரைப் பிரதேசம்

இது கிழக்குத் தொடர்ச்சி மலைக்குக் கிழக்கில் கடல்வரையி லும் பரவியிருக்கிறது. இதன் வடபாகம் குறுகி நீண்டு இருக் கிறது. இங்கே தென்மேற்குப் பருவக்காற்றால் கோடையில் நல்ல மழையுண்டு. இங்கே, கோதாவரி, கிருஷ்ணா ஆறுகளின் கழி முகப் பகுதிகள் இருக்கின்றன. விசாகப்பட்டணம், கீழ் கோதாவரி, மேல் கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் ஜில்லாக்கள் இதில் அடங்கியுள்ளன. கழிமுகப்பகுதிகளில் நெல், புகையிலை மிகுதியாக விளைகின்றன. கிழக்குத் தொடர்ச்சி மலைத் தொடர் களின் சரிவுகளில் காடுகள் இருக்கின்றன. இங்குள்ள ஆறுகளில் வெள்ளப் பெருக்குக் கால்வாய்கள் வெட்டப்பட்டிருக்கின்றன.

இந்தப் பிரதேசத்தின் வழியாகச் சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குச் செல்லும் இருப்புப் பாதை அமைக்கப்பட்டிருக் கிறது. பெஜவாடா (இப்போது விஜயவாடா) என்னும் பட்டணம் கிருஷ்ணா ஆற்றங்கரை மீதுள்ளது. இங்கே மேற்கூறிய

இருப்புப் பாதையோடு மசூலிப்பட்டணத்திலிருந்து தீபகற்பத்தின் குறுக்காக மேற்குக் கரையிலுள்ள மார்மகோவா வரையிலும் செல்லும் இருப்புப்பாதை சந்திக்கிறது. விஜயவாடாவில் கிருஷ்ணா ஆற்றில் ஒரணை கட்டி, பல கால்வாய்கள் வெட்டி, ஆற்று நீரை நிலங்களுக்கு எடுத்துச் செல்வதோடு கால்வாய்களைப் போக்குவரவு மார்க்கங்களாகவும் மக்கள் பயன்படுத்துகிறார்கள். விசாகப்பட்டணத்திற்கு அருகில் டால்பின்ஸ் நோஸ் என்னும் மலைப்பாறை கடலில் சிறிது தூரம் சென்றிருப்பதால் கப்பல்கள் தங்கக்கூடிய நல்ல துறைமுகம் ஏற்பட்டிருக்கிறது. இத்துறைமுகம் நல்ல முறையில் வளர்ச்சியடைந்து வருகிறது. காக்கிநாடா மற்றொரு துறைமுகமாகும். ஆனால் கரையோரத்தில் இங்குக் கடல் ஆழமாக இல்லாததால் கப்பல்கள் இரண்டு மைல்களுக்கப்பால் நின்று நங்கூரம் பாய்ச்சும். அதிலிருந்து படகுகள் மூலமாய்ச் சரக்குக்களைக் கொண்டுவர வேண்டும். ராஜமஹேந்திரவரம், குண்டூர், நெல்லூர், முதலியவை மற்ற முக்கியமான பட்டணங்கள் ஆகும்.

கிழக்குக்கரைப் பிரதேசத்தின் தென்பாகம் வடபாகத்தைவிட அகன்று இருக்கிறது. இது ஒரு பெரிய சமநிலம். இங்கே காவேரி, தென்பெண்ணை, பாலாறு, தாம்பரபரணியாறுகள் ஓடுகின்றன. இங்கே அக்டோபர், நவம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவக்காற்றினால் மழை பெய்யும். ஆனால் சில ஆண்டுகளில் மழைபெய்யத் தவறிவிடுவதால் பஞ்சம் ஏற்படுவதுண்டு. மழைக் காலத்தில் நீரைச் சேர்த்து வைத்துக்கொள்வதற்காக மக்கள் ஏரிகள் பல அமைத்திருக்கிறார்கள்; பாலாறு போன்ற வற்றிவிடக்கூடிய ஆறுகளில் ஊற்றுக்கள் தோண்டிக் கால்வாய்கள் வெட்டித் தண்ணீரை நிலங்களுக்குப் பாய்ச்சுகிறார்கள். கடற்கரையை அடுத்துள்ள பிரதேசங்களில் தென்னந்தோப்புகள் மிகுதி. நல்ல நீர்வளம் பொருந்திய நன்செய் நிலங்களில் நெல், கரும்பு, புகையிலை ஆகியவை சாகுபடி செய்யப்படுகின்றன. மேட்டு நிலங்களில் கரும்பு, கேழ்வரகு, சோளம், நிலக்கடலையும், பருப்பு வகைகளும் பயிரிடப்படுகின்றன.

இந்தப் பிரதேசத்தில் சென்னை இருக்கிறது. சென்னைமா நகரமே இந்த ராஜ்யத்தின் தலைநகரம். இங்கே செயற்கைத் துறைமுகம் ஒன்று இருக்கிறது; பஞ்சாலை முதலிய பல தொழிற்சாலைகளிருக்கின்றன. இங்கிருந்து இருப்புப் பாதைகள் பம்பாய், பெங்களூர், திருவனந்தபுரம், கொச்சி, மங்களூர் முதலிய இடங்களுக்குச் செல்கின்றன.

மதுரை இச்சமவெளியின் தென் பாகத்தில் வைகையாற்றங் கரையில் இருக்கிறது. இங்கே நெசவு ஆலை இருக்கிறது. சென்னைக்கு அடுத்தபடியாக இந்த ராஜ்யத்தில் இதுதான் பெரிய நகரம். திரிசிராப்பள்ளி காவிரியாற்றங் கரையிலுள்ளது. இதையடுத்துள்ள ஸ்ரீரங்கம் ஒரு தீவு. காவிரி நதியின் கழிமுகப் பகுதி தஞ்சை ஜில்லாவாகும். இங்கே நிலம் மிகவும் செழிப்பாயிருப்பதால் இந்த ஜில்லாவைத் 'தென்னிந்தியாவின் நெற் களஞ்சியம்' என்று சொல்வதுண்டு.

கோயம்புத்தூர் நெசவுச்சாலைகள் நிறைந்த தொழிற் பிரதேசம். பிரெஞ்சுக்காரரிடமிருந்து தற்சமயம் நாம் பெற்றுள்ள புதுச்சேரி தென் இந்தியாவின் கிழக்குக் கரைத் துறைமுகங்களில் ஒன்று.

### பயிற்சிகள்

1. இந்தியா படம் வரைந்து அதில் இயற்கைப் பிரதேசங்களைக் குறிப்பிடுக.

2. இயற்கைப் பிரதேசம் என்றால் என்ன?

3. இந்தியாவை எத்தனை இயற்கைப் பிரதேசங்களாகக் கொள்ளலாம்? அவை யாவை?

4. இமயமலைப் பிரதேசத்தின் இயற்கைத் தாவரங்களைப்பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

5. இமயமலையில் அடங்கிய சுதந்திர நாடு எது? அதைப்பற்றி உனக்கென்ன தெரியும்?

6. சிந்து சமவெளியின் இரண்டு பாகங்களெவை? அவைகளில் ஒன்று செழித்தும் மற்றொன்று பாலைவனமாகவும் இருக்கக் காரணமென்ன?

7. கங்கை-பிரம்மபுத்திரா சமவெளியின் படம் வரைந்து அதில் உணவுப் பொருள்கள் விளைவிப்பதில் நீ காணும் வேறுபாடுகளைக் காரணத்தோடு கூறுக.

8. சணல் தொழிற்சாலைகள் கல்கத்தாவில் இருப்பதற்குக் காரணமென்ன?

9. தக்காண பீடபூமியின் வடமேற்குப் பகுதியைப்பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

10. மேற்குக்கரைப் பிரதேசத்தின் வடபாகத்திற்கும் தென் பாகத்திற்குமுள்ள வித்தியாசங்களைக் கூறுக.

11. கிழக்குக்கரை நாடுகளின் வடபாகத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுக.

# V. சென்னை ராஜ்ய மக்களின் வாழ்க்கை நிலை

தென் இந்தியாவில் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் திராவிடத் தொகுதியைச் சேர்ந்தவர். சென்னை ஆந்திர ராஜ்யங்களில் வாழும் மக்கள் நான்கு வகையான கலாசாரங்களைக் கையாண்டு, முக்கியமாக நான்கு வகையான மொழிகளைப் பேசி வருகின்றனர். வடபாகத்திலிருப்பவர் ஆந்திரர் எனப்படுவர். சென்னையிலும், அதற்குத் தெற்கிலும் கன்னியாகுமரி முனை வரையில் இருப்பவர் தமிழர். மேற்குக் கரையோரமாயுள்ள பிரதேசத்தில் வசிப்பவர் மலையாளம் பேசுகின்றனர். மைசூர் நாட்டைச் சுற்றியுள்ள சென்னை ராஜ்யத்தின் பாகங்களில் வாழ்பவர் கன்னடம் பேசுகின்றனர். இவர்களைக் கன்னடியர் என்று கூறுவது வழக்கம்.

சென்னை ஆந்திர ராஜ்யங்களின் மக்கள் தொகை சுமார் 5 கோடி. அதில் ஆந்திரர் 2 கோடியும் தமிழர் 2 கோடியுமாக இருக்கின்றனர். மற்ற மொழிகளைப் பேசுபவரின் எண்ணிக்கை இந்த ராஜ்யத்தில் குறைவே. ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்தவர்களைப்பற்றியும் சிறிது விவரமாகப் படிப்போம். ஒவ்வொருவருடைய உடல் அமைப்பும், பாவனைகளும் அவர்கள் வாழும் பிரதேசத்தின் நில அமைப்புக் கேற்றவாறுதான் இருக்கும்.

ஆந்திர ராஜ்யத்தின் கரையோரத்தில் வாழ்பவர் மீன் பிடிக்கும் தொழிலை நடத்தி வருகிறார்கள். இவர்கள் விடியற் காலையில் தங்கள் சிறிய படகுகளில் ஏறிக்கொண்டு கடலில் சில மைல் தூரம் வரை சென்று மீன் பிடித்துக் கொண்டு மாலையில் இருட்டு முன் திரும்பி விடுவர். இவர்கள் மீன் பிடிக்கச் சென்றிருக்கும் போது இவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த பெண்மக்கள் வலை பின்னுவது, மீன் எடுத்துச் செல்லப் பனை ஓலையினால் கூடை முடைவது ஆகிய வேலைகளைச் செய்வார்கள். இவர்கள் வாழும் குப்பங்கள் பெரிய பட்டணங்களுக்கு அருகில் குழுமி இருக்கும். அவர்கள் பிடிக்கும் மீனை அந்தப் பட்டணங்களில் விற்று அவர்கள் பிழைப்பார்கள். மசூலிப்பட்டணம், காக்கிநாடா, பீமிலி பட்டணம் என்னுமிடங்களில் பெரிய மரப் படகுகளை வைத்துக்கொண்டு கரையோரமாயுள்ள ஊர்களுக்குச் சரக்குக்களை எடுத்துச் சென்று பிழைத்து வருபவர்களுமுண்டு.

கழிமுகப் பிரதேசத்தில் வாழ்பவர்கள் உழவர்கள். இவர்கள்

உடலுரமுடையவர்கள்; பாடுபட்டு வேலைசெய்யும் இயல்புடையவர்கள்; தங்கள் வேளாண்மையைச் சேர்த்துவைக்க நிலங்களின் மத்தியில் களஞ்சியங்களைக் கட்டிக்கொள்வார்கள். இவர்களுடைய முறுக்கேறிய உடலும், கனத்த மீசையும்,




தென் இந்திய மொழிவாரிப் பிரிவினைகள்

தலையில் அழுக்கற்றுச் சுற்றப்பட்ட பாகையும், இவர்கள் நீட்டி நீட்டி உரத்தகுரலில் பேசும் மொழியும் இவர்களை வடசர்க்கார் வாசிகள் எனத் தெரிவித்துவிடும். வடசர்க்காரப் பிரதேசத்தில்

தொழிற்சாலைகள் மிகவும் குறைவு. விசாகப்பட்டினத்தில் கப்பல் கட்டும் தொழில், பந்தலபாகா என்னுமிடத்திலுள்ள நெசவுச் சாலை, குண்டூரில் சிகரெட் பாக்டரி இவைபோன்ற சில தொழிற்சாலைகளில் மட்டுமே திரளாகத் தொழிலாளர் சேர்ந்து வேலைசெய்கின்றனர்.

தமிழ் நாட்டிலும் மக்களில் பெரும்பான்மையோர் குடியான வர்களே. கிராமங்களில் வாழ்பவர் 100-க்கு 70 பேருக்கு மேலிருப் பர். இவர்கள் நிலத்தையே நம்பி இருப்பவர்கள். ஆனால் இவர் களில் பெரும்பான்மையோருக்கு நிலம் சொந்தமாகக் கிடையாது. இவர்கள் பண்ணையாட்களே. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி, மேட்டூர், சேலம் ஆகிய இடங் களில் நூல் நூற்று நெசவு செய்யும் எந்திரச் சாலைகளில் பதினு யிரக்கணக்கான தொழிலாளர் வாழ்கின்றனர். இவர்களுக்கு இடவசதி குறைவானபடியால் இவர்களுடைய ஆரோக்கியமும், வளர்ச்சியும் தடைப்படுகின்றன. சென்னையில் இன்னும் பல தொழிற்சாலைகளிருக்கின்றன. பெரம்பூரில் ரயில்வே தொழிற் சாலையும், நூற்றுக்கணக்கான மற்றைய தொழிற்சாலைகளுமிருக் கின்றன. திரிசிராப்பள்ளியில் ரயில்வே தொழிற்சாலை இருக் கிறது.

கடற்கரையோரத்தில் மீன் பிடிக்கும் செம்படவர் வாழும் குப்பங்கள் ஆங்காங்கு இருக்கின்றன. இவர்கள் கட்டுமரங்கள் கட்டிக்கொண்டு மீன் பிடிக்கச் செல்வார்கள். இந்த ராஜ்யத்து மக்களில் பலருக்கு மீன் முக்கியமான உணவுப்பொருள்களில் ஒன்றுக இருக்கிறது.

மேற்குக்கரைப் பிரதேசத்தில் வாழ்பவர்கள் மலையாள மொழி பேசுகிறுர்கள். இங்கே கோடையில் பருவக்காற்றுல் நல்ல மழை பெய்கிறதல்லவா? இதனுல் இங்குள்ள வீடுகள் யாவும் மேட்டுக் கூரையுடையவை. மழைநீர் விழுந்து தங்காமல் ஓடிவிடக்கூடிய வசதி பெற்றுள்ளவைகளாக வீடுகள் கட்டப் பட்டிருக்கின்றன.

இங்கேயும் கரைப்பிரதேசத்தில் மீன்பிடித்தல் முக்கியமான தொழில். இங்கே பிடிக்கும் மீன்களை உலரவைத்து, உப்பிட்டுத் தென் இந்தியாவின் மற்றைய பாகங்களுக்கு அனுப்பி வருகிறுர் கள். மத்தியப் பிரதேசத்தில் நெசவும் உழவும் நடைபெறு கின்றன. இங்கே தென்னை மரம் மிகுதி. இங்குள்ளவர்கள் தேங்காய் எண்ணெயைச் சாப்பாட்டுக்குப் பயன்படுத்து

கிறார்கள்; தென்னை மரத்தின் ஒவ்வொரு பாகத்தையும் வீண் போக்காமல் பயன்படுத்துகிறார்கள். தேங்காய் நாரினால் கயிறு திரித்தல், மிதியடி, பாய் முதலியன செய்தல் ஆகியவை இங்குள்ளவர்களில் பலர் செய்துவரும் முக்கியமான கைத் தொழில்களாகும்.

மலைப்பிரதேசத்தில் கிடைக்கும் தேக்கு, ஏலம், மிளகு முதலியவற்றைச் சேர்த்து வாணிபம் செய்வதும் இங்குள்ளவர் களின் மற்றொரு முக்கியமான தொழில். கள்ளிக்கோட்டையிலும் அதையடுத்துள்ள கல்லாயிலும் வாட்சாலைகள் அதிகம்.

மலையாளிகள் இயற்கையாகவே எங்கும் பரவி, எவ்விடத்தி லும் வாழக்கூடிய தன்மையுடையவர்கள். அவர்கள் கல்வி கேள்விகளில் நல்ல தேர்ச்சியுடையவர்கள். அங்குள்ள பெண் மணிகளில் பெரும்பாலோருக்கு நல்ல கல்வித் தேர்ச்சியுண்டு.

மலையாளத்திலுள்ள முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் மாப்பிள்ளைகள் எனப்படும் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அரேபியாவிலிருந்து வந்தவர்களென்று சொல்லப்படு கிறது. ஆனால் அவர்கள் மலையாள மொழிதான் பேசுகிறார்கள்.

மைசூர் நாட்டைச் சுற்றிலுமுள்ள பாகங்களில் கன்னடம் பேசப்படுகிறது. பல்லாரி ஜில்லாவின் பெரும்பகுதி, சேலம் ஜில்லா, ஹோசூர் தாலுக்காவில் சில கிராமங்கள், தென் கன்னடம் ஜில்லா இவை யாவும் கன்னடியர் நாட்டிலடங்கியவை. தென் கன்னடம் ஜில்லாவில் காப்பிக்கொட்டை வாணிபம் மிகுதி. இவர்களுடைய வாழ்க்கை இவர்களைச் சுற்றியுள்ள மற்றவர்க ளுடைய வாழ்க்கையைப் போன்றது. இந்தப் பிரதேசத்தில் இக் கால நாகரிகம் நிதானமாகப் பரவி வருகிறது. பல்லாரி ஜில்லா வில் பருத்தி விளைவு மிகுதி.

நமது ராஜ்யத்தில் மொழி வாரியாக நான்கு பிரிவினைகளை நாம் கவனித்தோம். இங்குள்ள மக்களில் இந்துக்கள் பெரும் பான்மையோர். 100-க்கு 80 வீதம் இவர்கள் இருக்கின்றனர். முஸ்லிம்கள் 100-க்கு 14 பேரும், கிறிஸ்தவர் 5 பேரும், ஏனையோர் ஒருவருமாவர். சென்னை ராஜ்யம் கல்வி, நாகரிகம் முதலிய எல்லாத் துறைகளிலும் இந்தியாவின் முன்னணியில் நிற்கின்றது.

**பயிற்சிகள்**

1. சென்னை ஆந்திர ராஜ்யப் படம் வரைந்து அதில் நான்கு மொழிகள் பேசப்படும் பகுதிகளைக் குறிப்பிடுக.

2. ஆந்திர ராஜ்யத்தில் நடைபெறும் முக்கியமான தொழில்கள் யாவை?

3. மலையாளத்தில் வீடுகள் கட்டுவதில் என்ன வேறுபாடு காணலாம்? ஏன்?

# VI. ஆர்டனன்ஸ் சர்வே படம் படித்தல்

பாடசாலைகளில் பலவிதமான தேசப்படங்களிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சில கண்டங்களைக் காட்டுகின்றன. சில நாடுகளைக் குறித்த விவரங்களைக் கொடுக்கின்றன. மற்றுஞ் சில வரலாறு பற்றியவை. இவைகளைப்போல் ஆர்டனன்ஸ் சர்வே படம் என்னும் வகையைச் சேர்ந்தவைகளும் உண்டு. அவைகள் இராணுவத்தின் வசதிக்காகவும், அரசாங்கத்தினர் ஓரிடத்தின் விவரங்களை எளிதில் தெரிந்து கொள்வதற்காகவும் எழுதப்பட்டவை.

இந்தப் படங்கள் எந்த இடத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கின்றன? நாட்டுப் படங்கள் அரசியல் பிரிவினைகளைக் காட்டுகின்றன. உதாரணமாகச் சென்னை ராஜ்யத்தின் படம் என்பது ஒரு ராஜ்யத்தின் படமாகும். அதுபோலவே ஜில்லா படம் என்பது ஒரு சிறிய அரசியல் பாகத்தைக் காட்டும். ஆனால் இந்த சர்வே படங்கள் எதைக் காட்டுகின்றன என்பதைக் கவனியுங்கள். இது ஓர் அரசியல் பாகத்தின் படமன்று. இதை இந்தத் தாலூக்காவின் படம், இந்த ஜில்லாவின் படம் என்றெல்லாம் கூறமுடியாது. ஆனால் இது சங்கேதமான படம். நாட்டுப் படங்களில் தீர்க்கரேகைகளும், அட்சரேகைகளும் இருக்கின்றன அல்லவா? இவை அவைகளை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டவை.

குறிப்பிட்ட அட்ச, தீர்க்கரேகைகளுக்கிடையில் அடங்கியுள்ள இடங்களெல்லாம் இப்படங்களில் காட்டப்பட்டிருக்கும். பல அரசியல் பிரிவினைகளைச் சேர்ந்த பகுதிகளும் ஒரே படத்தில் இருக்கக்கூடும்.

இது என்ன அளவில் எழுதப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்கவேண்டும். சர்வே படங்கள் பல அளவுகளில் எழுதப் படுகின்றன. சில, மைலுக்கு ஆறு அங்குலங்களாக எழுதப் பட்டிருக்கின்றன. மைலுக்கு ஓர் அங்குலம் என்னும் அளவில் பல எழுதப்பட்டிருக்கின்றன. முக்கியமான இடங்களின் விவரங்களை நன்கு விளக்கவேண்டுமானால் 6 அங்குல அளவில்




ஆர்டனன்ஸ் சர்வே படக் குறிகளின் விளக்கம்

எழுதுவார்கள். 1 மைலுக்கு 1 அங்குலம் என்ற அளவை 63,360 அங்குலங்களுக்கு 1 அங்குலம் என்றும் சொல்லலாம் அல்லவா?

அதாவது $\frac{1}{63360}$ அளவில் படம் எழுதப்பட்டிருக்கிறது. இந்த பின்னத்தைப் பிரதி பின்னம் (Representative fraction) என்பார்கள்.

இந்தப் படத்தில் என்னென்ன விவரங்கள் அடங்கியுள்ளன என்பதைக் கவனியுங்கள். படத்தினடியில் சங்கேதக் குறிகள் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு விவரத்திற்கும் ஒரு குறி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் உதவியால் எங்கே ஆறுகள் இருக்கின்றன? ஆறுகளைக் கடக்கப் பாலங்கள் எங்கே இருக்கின்றன? சாலைகள் எங்கே கூடுகின்றன? குளங்கள் எங்கே இருக்கின்றன? பயிரிடும் நிலங்கள் எங்கே? காடுகள் எங்கே? இவைபோன்ற பல விவரங்களைக் கண்டறியலாம்.

நிலத்தின் மேடுபள்ளங்களைக் கண்டுகொள்ளச் சம உயரக் கோடுகள் இருக்கின்றன. இவை 50' அடி உயர வேறுபாட்டில் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடும் எவ்வளவு உயரத்தைக் குறிக்கின்றது என்பதை அதன்மீதே கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கோடுகளைக் கொண்டு மேடுபள்ளங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

இவ்விதமான படமொன்றில் உங்கள் ஊர் அடங்கி இருக்க வேண்டும். அதை எடுத்துக்கொண்டு அதில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் உங்களூரில் காணப்படுகின்றனவா என்பதைக் கவனியுங்கள். மற்ற ஊர்களின் படங்களையும் படித்துப் பழகுங்கள்.

# VII. தென் இந்தியாவின் வரலாறு

## நம் நாட்டின் பெருமை

இந்திய வளநாட்டின் வரலாறு மிக்க இனிமையானது. இந்திய நாகரிகத்தின் பெருமையையும், அதனது வளர்ச்சியையும் இந்திய வரலாற்றை ஊன்றி வாசிப்பவர் நன்குணர்வர். வெளி நாட்டினர் பலர் நாகரிகமின்றி ஆடையும் அணியாது திரிந்த காலத்தில் இந்தியர் வியப்புறும் வகையில் உயர் நிலையில் இருந்தனர். அண்மையில் மொகஞ்சோதாரோவில் வரலாற்று ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கும் உண்மைகள் கி. மு. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்திய சமூகம் நாகரிக

மேம்பாடு அடைந்திருந்ததென்பதற்கு அழியாத சான்ருக உள்ளன. அப்பழைய நாட்களிலேயே பெரிய நகரங்களும் நல்வாழ்க்கைக்குரிய பிறவழிகளும் நல்ல அரசியல் முறைகளும் விளங்கின என்பதற்கு மொகஞ்சோதாரோவே சான்ருகும்.

## 1. தென் இந்தியாவின் பழங்குடி மக்கள்

வரலாற்றுக்கு எட்டாத காலத்தில் இந்நாட்டில் வாழ்ந்து வந்த மக்கள் நாகரிகக்குறைவான வாழ்க்கையை நடத்தினரென்றும், அவர்கள் கற்களாலான கருவிகளை உபயோகித்து வந்தனரென்றும் தொல்பொருட் கலைஞர்கள் கூறுகின்றனர். அத்தகைய மக்கள் வாழ்ந்து வந்த காலத்தைக் கற்காலமென்றும், அதில் பழங்கற்காலம், புதுக்கற்காலமென்று இருபிரிவுகள் உண்டென்றும் கூடக் கூறுகிருர்கள்.

**பழங்கற்காலத்து** (Paleolithic Age) மக்கள் நாகரிகமற்றவர்கள். அவர்கள் பாதுகாப்பிற்காகப் பாறைகளிலும், குகைகளிலும், மரங்களின் பொந்துகளிலும் வசித்தார்கள்; வேட்டையாடி வனத்தில் கிடைக்கும் உணவுப்பொருள்களை உண்டு காலம் கழித்தார்கள். பாண்டம் செய்வதை அவர்கள் அறியமாட்டார்கள்; உலோகங்களையும் அறியமாட்டார்கள். அவர்கள் கற்களால் செய்யப்பட்ட ஆயுதங்களைத் தவிர வேறு ஆயுதங்களை அறியார்கள். இத்தகைய மனிதர்களே இந்தியாவின் பழங்குடிகள்.

**புதுக் கற்காலத்து** (Neolithic Age) மக்கள் தங்கத்தைத் தவிர மற்ற உலோகங்களை அறியமாட்டார்கள். இவர்கள் முதலில் கையாலும், பின்பு சக்கரத்தின் உதவியாலும் பாண்டம் செய்தார்கள்; நிலத்தை உழுது பயிரிட்டார்கள். பழங்கற்கால மக்களின் நாகரிகத்தைவிட இவர்களது நாகரிகம் சிறந்தது. இவர்கள் மக்கள் சவங்களைப் புதைத்துக் கல்லறைகளைக் கட்டினுர்கள். திருநெல்வேலி ஜில்லாவில் புதுக் கற்காலத்தில் பிணங்களைப் புதைத்த இடங்கள் பல உள்ளன. பிரேதங்களை அக்காலத்தில் மண்ணுல் செய்யப்பட்ட பெரிய தாழிகளில் அடக்கம் செய்து வந்தார்கள். இவ்விதத் தாழி ஒவ்வொன்றுக்கும், மூன்று அல்லது நான்கு கால்கள் உண்டு. சில தாழிகளில் பிரேதங்களின் பாதங்களையே அக்காலத்து மக்கள் அடக்கம் செய்வதுண்டு. செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள **கடமலைப்புத்தூரிலும், பெரும்பேற்றிலும், திருநெல்வேலி**

ஜில்லாவில் உள்ள ஆதிச்சநல்லூர் முதலிய இடங்களிலும் அநேகத் தாழிகள் அகப்பட்டிருக்கின்றன. இக்கால மக்கட்கு வர்ண வேலைகளில் விருப்பம் உண்டு. பழம், கிழங்கு முதலிய வைகளும், மாமிசம் முதலியவைகளுமே இவர்களது உணவு. சமையல் செய்யும் கலையில் இவர்கள் முன்னேற்றமடைந் திருந்தார்கள். தழைகளும் மரவுரிகளும் இவர்களது உடை. இவர்கள் துணி நெய்யப் பருத்தியை உபயோகித்தார்கள். வேட்டையாடுவதும், மீன் பிடிப்பதும் இவர்களது முக்கியத் தொழில்கள். ஆடு மாடுகளை வளர்ப்பது, பயிரிடுவது முதலிய தொழில்களிலும் இவர்கள் ஈடுபட்டார்கள். பலவகைப்பட்ட அழகிய மட்பாண்டங்களைச் செய்வதில் இவர்கள் திறமை வாய்ந்து விளங்கினார்கள்.

## 2. ஆதி சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்கள்

தென்னிந்தியாவில் முற்காலத்தில் குடியேறியவர் அநேக மாய்த் திராவிடர் எனப்படுவர். இத்தென்னிந்தியாவில் **தமிழர்** என்னும் வகுப்பினர் பண்டைக் காலத்திலேயே நாகரிகமடைந் தவரெனக் கூறலாம். வடக்கில் **வேங்கடமும்**, தெற்கில் **குமரி யாறும்**, கிழக்கிலும் மேற்கிலும் கடலும் எல்லையாக உடைய நிலமே **தமிழகம்** எனப்படுவதாயிற்று. இத்தமிழ் நாட்டிலிருந்து தொன்று தொட்டு அரசு புரிந்து வந்தோர் **சேர, சோழ, பாண்டியர்** என்னும் மூவேந்தராவர். இத் தமிழ் வேந்தர்கள், தமிழகத்தின் பழைய பெருமையைச் சிறப்பித்து வந்தவர்க ளென்பது யாவரும் அறிந்த உண்மை. கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ் மன்னர் ஆட்சியில் தமிழகமானது செல்வத்திலும் நாகரிகத்திலும் சிறந்திருந்த தென்பதற்கும், எகிப்து, கிரீசு முதலான தேசங்களோடு வாணிபம் நடத்தி வந்ததென்பதற்கும் சான்றுகள் உள்ளன. பாரத காலத்திலும், இராமாயண காலத்திலும் மூவேந்தர் நாடுகள் மேன்மையுற்றிருந்தன. கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகளில் தமிழகத்தின் நிலைமையை அறிவதற்குக் கடைச் சங்க நூல்கள், ரோமரது நாணயங்கள் முதலிய சான்று கள் உள.

சோழ அரசரான **கரிகாலன்** ஆட்சிக்காலத்தில் சோழ நாடு மிக்க உயர்நிலையை அடைந்தது. இவர் வீரருட் சிறந்த வீரர்.

இவர் சேரன் பெருஞ் சேரலாதனையும், பாண்டிய மன்னர் ஒருவரையும் கோவிலுண்ணி என்னும் ஊர்ப் புறத்தே எதிர்த்து வெற்றிபெற்ருர். பின்னர், இவர் கச்சியைத் தலைமையாகக் கொண்ட அருவா நாட்டையும், நாகைப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்ட பன்றி நாட்டையும், பாண்டி நாட்டையும் சேர நாட்டையும் வென்று, தமிழகம் முழுவதும் தம் அடிப்படுத்தினர். இவர், சில ஆரிய மன்னர்பால் திறைகொண்டார். பின்னர், இவர் இலங்கைமீது படையெடுத்து அந்நாட்டு மன்னரை வென்றும், அந்நாட்டுப் பன்னீராயிரம் மக்களைச் சிறை கொண்டும் தம் நாடு வந்து சேர்ந்தார்.

கரிகால்சோழர் தம் குடைக்கீழ் வாழும் குடிகள் செல்வத்தாலும் நாகரிகத்தாலும் மேம்பாடு அடையவேண்டுமென எண்ணி அதற்கு வேண்டியவற்றைப் புரிந்தார். இவர் காவிரி நதிப் பெருக்கால் அடிக்கடி ஏற்பட்டு வந்த தீமையைப் போக்குவதற்காகவும், வேளாண் வாழ்க்கையை விருத்தி செய்வதற்காகவும் காவிரி ஆற்றின் இருமருங்கிலும் கரைகளை அமைத்தார். இவர் பற்பல வாய்க்கால்களை வெட்டினர். திசை மயங்கிச் செல்லும் கலங்களைத் திசைக்குறி காட்டி அழைக்கும் கலங்கரை விளக்கம் காவிரிப்பூம் பட்டினத் துறைமுகத்தருகே கட்டப்பட்டிருந்தது. ஆங்கு ஆயத்துறைகள் அமைக்கப்பட்டிருந்தன. கரிகால்சோழர் பற்பல தேசத்துத் தொழில் வல்லாரையும் தம் நகரிற் குடியேற்றினர். ஏற்றுமதி இறக்குமதிகள் ஒய்வின்றி நடைபெற்றுவந்தன. வாணிபம் ஓங்கிற்று. குடிகள் செல்வத்தால் மேம்பாடெய்தினர்கள். கரிகால்சோழர் கல்வியின் அருமை பெருமைகளை நன்கு உணர்ந்தவர். இவர் கற்ற அறிஞர் பலரை ஆதரித்தார் ; கலைக் கழகங்களை ஏற்படுத்தினர் ; ஆண்மக்களைப் போலவே பெண் மக்களைக் கல்வி பயிலச் செய்தல் தம் கடமை எனக் கருதினர். இவர் காலத்தில் இயல், இசை நாடகத் தொழில்களும் செழித்துத் தழைப்புற்றிருந்தன. இக்காலமே நமது தாய்மொழியாகிய தமிழ் மொழிக்கு மிக உயர்ந்த காலமெனக் கூறுதல் மிகையாகாது.

கரிகால்சோழர் காலத்தில் மகாஜன சபை, நிமித்தருடைய சபை, மருத்துவருடைய சபை, குருக்களுடைய சபை, அமைச்சருடைய சபை ஆகிய ஐந்து சபைகள் இருந்தன. இச் சபைகள் ஐம்பெருங்குழு என வழங்கப்படும். இவ்வைம் பெருங்குழுவினேடு ஆலோசித்தும், நல்லிசைப் புலவரைத் துணைக் கொண்டும் கரிகால்சோழர் செம்மையாகச் செங்கோல் ஓச்சினர்.

கரிகால் பெருவளத்தான் என்னும் இவ்வேந்தர் பெருமான் நீர்நிலைகளைப் பெருக்கி, உழவு, வாணிபம், கைத்தொழில்களை வளம்படுத்திக் கல்வியை மேம்பாடு அடையச் செய்து, கடல் அருகிலுள்ள பூம்புகாரைத் தலைநகராகக்கொண்டு, ஏற்றுமதி இறக்குமதிகளாற் செல்வம் பெருக்கி, தமிழ் நாட்டின் கண்ணும் பிறநாட்டின் கண்ணும் தம் ஆணை செல்ல, சமாதானம் மேலிட, நாட்டை ஆட்சி புரிந்த நெடுந்தகையாவார்.

வீரம், வண்மை, நீதி, சூழ்ச்சித் திறன், ஆட்சி வன்மை முதலியவற்றிற் கெல்லாம் எடுத்துக்காட்டாகும் பெருமை உடைய கரிகால் பெருவளத்தான் புவியிலே விளங்கிய காலம் கி. பி. முதல் நூற்ருண்டு என்பது பலவாற்ருனும் வலியுறு கின்றது. கரிகால்சோழருக்கு முன் ஆட்சி புரிந்த அரசர் காலம் முதல் அவருக்குப் பின் வந்த இரண்டு அரசர் காலம் வரை, சோழரே தென்னிந்தியாவில் ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தனர்.

கரிகாலனுக்குப் பின் வந்த அரசர், சோழரையும் பாண்டிய ரையும் காரியாறு என்னுமிடத்தில் தோற்கடித்தார். விரைவில் புகார் நகரம் பகைவரால் அழிக்கப்பட்டு நாசமடைந்தது. நாட்டின் இளவரசர் இச்சமயத்தில் உயிர் துறக்கவே, ஒரு கலகம் தோன்றியது. சேர அரசர் இத்தருணத்தை நெகிழவிடாது சோழ நாட்டின்மீது படையெடுத்தார். கரிகாலன் மகள் சேர அரச குமாரருக்கு மனைவியாதலின், சேரர் தம் உறவினரையே அரசராக்கினர். சோழரது ஆதிக்கம் சேரர்களிடம் சென்றது.

சேரர் ஆதிக்கம் செங்குட்டுவன் காலத்தில் மேலோங்கியது. சேரன் செங்குட்டுவன், வஞ்சிமாநகரில் கண்ணகியின் ஞாப கார்த்தமாகக் கட்டிய பத்தினிக் கடவுள் கோவில் பிரதிஷ்டைக் குக் கடல்சூழ் இலங்கையில் செங்கோல் செலுத்திய முதற் கயவாகு மன்னர் விஜயம் செய்தார். செங்குட்டுவன் காலத்தில், தமிழர்கள் என்றும் மறக்கக் கூடாத இரண்டு சரித்திர விசேஷங் கள் நிகழ்ந்தன. அவை, கோவலன் - கண்ணகியைப் பற்றிய செய்தியும், மணிமேகலையைப் பற்றிய செய்தியுமாகும். செங்குட்டுவன் ஆண்ட சேரநாடு, கோயம்புத்தூர், சேலம், நீலகிரி ஜில்லாக்களும், மைசூரின் சில பகுதிகளும், மலை நாடுமாம். இவர் ராஜதானி வஞ்சிமா நகர் எனப்படும். செங்குட்டுவனுக்குத் தரைப்படையோடு கடற்படையும் மிகுந் திருந்தது. இவர் இணையற்ற வீரர். இவர் உத்தர கோசலத் திற்குச் சென்று குயிலாலுவத்தில் ஆரியவரசராகிய கனக விசயர் முதலியோரை வெற்றி கொண்டார்; இதைப்போல் வேறு

பல யுத்தங்கள் நடத்தியுள்ளார்; இவர் ஆட்சிக் காலம் தமிழ் நாட்டின் மகோன்னத நிலைமைக்கு முக்கியக் காரணமாயிருந்தது. இவர் தமிழரது பெருமையிலும் வீரத்திலும் பெரு மதிப்பு வைத்திருந்தவர்; நல்லிசைப் புலவர்களை நன்கு ஆதரித்தவர். இவர் அரசியலில் தலைமை வகித்தோர், அமைச்சர், புரோகிதர், சேனாதிபதியர், தூதுவர், சாரணர் என்பவர். இவர் சேர நாட்டை ஐம்பத்தைந்து ஆண்டுகள் ஆண்டிருக்க வேண்டுமென்று உய்த்துணரப்படுகிறது. செங்குட்டுவனுக்குப் பின்னர், சிங்காதனமேறிய அரசர் காலத்திலேயே சேரர் ஆதிக்கம் குறைவுபட்டுப் பாண்டியர் அதிகாரம் உயரலாயிற்று.

சேர ஆதிக்கம் குறைவுபட்ட காலத்தில் பாண்டியர் முன்னேறினர். பாண்டிய மன்னர்களில் நெடுஞ்செழியன் புகழ் பெற்றவர். இவர் செங்குட்டுவனை ஜெயித்து அவரைச் சிறைப்படுத்தியதாகச் சில நூல்கள் கூறுகின்றன. இவர் காலத்தில் பாண்டியர்களுடைய வாணிபம் ஓங்கிற்று. ரோம் முதலிய ஐரோப்பிய நாடுகளிலிருந்து வர்த்தகர்கள் மதுரைமா நகருக்கு வந்தனர். மதுரையில் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது.

## 3. தென் இந்திய வாணிபமும் நாகரிகமும்

கிறிஸ்தவ அப்தத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளில் தமிழகத்தின் சரித்திரத்தை மேற்கண்டவாறு பொதுப்படையாகக் கூறினோம். இனி, அக்காலத்துத் தமிழகத்தின் கைத்தொழில், சமூகம், கலை, காவியம் இவைகளின் வளர்ச்சியைச் சிறிது கவனிப்போம். கொற்கை, புகார் முதலியன தமிழகத்தின் துறைமுகப்பட்டினங்களாக விளங்கின. வெளி நாட்டு வியாபாரிகள் தமிழகத்துடன் வியாபாரம் செய்துவந்தார்கள். தமிழ் மக்களிடையிலும், திரை கடலோடியும் திரவியம் தேட வேண்டிய துணிவு மல்கிக் கிடந்தது. பிளினி என வழங்கும் மேல் நாட்டு நூலாசிரியர் ரோம சாம்ராஜ்யத்திலிருந்து ஆண்டு தோறும் தமிழகம் இக்காலத்திய நாணயத்தில் 486,979 பவுன்களை வியாபாரத்திற் பெற்றது எனக் கணக்கிட்டிருக்கிறார். கைத்தொழிற் கலைகள் தமிழ் மக்களால் நன்கு பயிலப்பட்டன. பண்டைத் தமிழர் கலையை, உழவு, கைத்தொழில், ஓவியம், வாணிபம், காவியம், உயர் கலைகள் என ஆறுகப் பிரித்தனர். இவற்றுள் விவசாயமும் வாணிபமும் மிகவும் உயர்ந்தனவென்று அவர்கள் எண்ணினார்கள். துணி நெய்வதில் மக்களிற் பெரும்

பாலோர் ஈடுபட்டனர். பருத்தி, பட்டு, கம்பளம் முதலிய வற்ருல் நல்லாடைகள் நெய்யப்பட்டன. சீன தேசத்திலிருந்து பட்டு இறக்குமதி செய்யப்பட்டது. மேலைக் கடற்கரையிலுள்ள முசிரி என்னும் துறைமுகத்திலிருந்து மிளகு, முத்து, தந்தம், வைரம் முதலிய விலையுயர்ந்த பண்டங்கள் மிகுதியாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. கண்ணுடி, தாமிரம், காரீயம், பவளம், கோதுமை முதலியவைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன. கீழ்க் கடற்கரையிலிருந்த புகார் நகருக்கு இந்தியாவின் பல பாகங்களில் உற்பத்தியான பண்டங்களும், பர்மா, சிங்களம் முதலிய இடங்களிலிருந்து உணவுப் பொருள் களும், கடற்கு அப்பாலுள்ள நாடுகளினின்று குதிரைகளும் வியாபார நிமித்தம் கொண்டுவரப்பட்டன. ஆங்காங்குத் தீர்வை செலுத்தி நகரங்களிலும் கிராமங்களிலும் வியாபாரம் நடத்தப் பட்டது. ஆயத்துறை அதிகாரிகளும், கடற் சுங்கம் வாங்கும் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டார்கள். இம் முறையில் அரசாங்கம் பெருத்த வருமானங்களை அடைந்தது. தமிழர்கள் தங்கள் கப்பல்களைத் தாங்களே கட்டிக்கொண்டார்கள். அரசரது கட்டட வேலைகளில் உதவிபுரிய வெளிநாடுகளிலிருந்து தேர்ச்சி பெற்ற வேலைக்காரர் வருவிக்கப்பட்டனர். புகார் நகரில் அரசருக்காக அரண்மனை கட்டுவதன் நிமித்தம் மகதத்திலிருந்து கைதேர்ந்த கட்டட நிபுணர்களும், மஹாராஷ்டிரத்திலிருந்து எந்திர வேலை செய்பவர்களும், அவந்தியிலிருந்து கருமான் களும், தமிழ்நாட்டுக் கைத்தொழிலாளர்களும் வருவிக்கப் பட்டார்கள்.

அக்காலத்து அரசர் அரசாங்கம் நடத்துவதில் உயரிய எண் ணங்களை உடையவர். அவர்கள் ஐம்பெருங் குழு, எண்பே ராயம் என்று சொல்லப்பட்ட சபைகளைக் கலந்துகொண்டே அரசு புரிவர். கல்விமான்களும் கவிவாணரும் அனுபவசாலி களும் சபையில் தம் மனக்கருத்தைச் சங்கோசமில்லாமல் வெளி யிட அனுமதிக்கப் பட்டனர்என்று அறிகிறேம். அரசர்களின் தவருன செய்கைகள் அறிஞர்களால் பலமுறை தடுக்கப்பட் டுள்ளன. அக்காலத்தில் நியாயம் வழங்கப்பட்ட முறை போற் றத் தக்கது. அரசர் நியாய பரிபாலனம் செய்வதில் அடைந்த வெற்றியின் அளவைக்கொண்டே அவர் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று மக்களால் மதிக்கப்பட்டார். கல்வியை அரசர் ஆதரித் தனர். பாண்டிய மன்னர் தமிழ்ச் சங்கத்தைப் போற்றி வளர்த் தனர். மத விஷயங்களிலும் சமரசமே காணப்பட்டது. ஜைனர்,

பௌத்தர், சைவர், வைஷ்ணவர் முதலிய எல்லோரும் அமைதியுடன் தத்தம் மதக் கோட்பாடுகளை அனுசரித்தனர்.

### பயிற்சிகள்

1. இந்தியாவின் பெருமையைச் சுருக்கமாக எழுதுக.
2. தமிழகத்தின் பண்டைக்கால மக்களின் வாழ்க்கையை விளக்கிக் கூறுக.
3. 'தமிழகம்' என்னும் நாட்டின் எல்லைகளையும், அதிலடங்கியிருந்த தமிழ் ராஜ்யங்களையும் கூறுக.
4. கரிகாலர் காலத்து ஆட்சி முறையைப்பற்றிச் சுருக்கமாக எழுதுக.
5. தமிழர் நெடுங்காலமாகத் தொலைநாடுகளோடு வாணிபம் நடத்தி வந்தனரென்பதற்குச் சான்றுகள் கூறுக.
6. தென் இந்தியா படம் வரைந்து தமிழகம், தமிழ் ராஜ்யங்கள் இவற்றைக் குறிப்பிடுக.

# VIII. வட இந்தியாவின் வரலாறு

## 1. மொகஞ்சோதாரோ நாகரிகம்

பஞ்சாபிலுள்ள ஹரப்பா என்னுமிடத்திலும், சிந்துப் பிரதேசத்திலுள்ள மொகஞ்சோதாரோ என்னுமிடத்திலும் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நம் நாட்டு மிகப் பழைய நாகரிகமானது உலகம் திகைத்து வியக்கும்படி செய்துவிட்டது. இதனையறிந்த நூற்றுக்கணக்கான மக்கள், அவ்விடங்களிற் காணப்படும் பண்டைகாலப் பொருள்களை நேரிற்கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றார்கள். அம்மகிழ்ச்சிக்குரிய நாகரிகத்தின் சிறப்பை இனிக் காண்போம்.

ஹரப்பா என்னுமிடத்திலும் மொகஞ்சோதாரோ என்னுமிடத்திலும் சிறந்த பழைய நகரங்கள் தோண்டி வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நகரங்களிற் கிடைத்த பொருள்களிலிருந்து அங்கு வாழ்ந்தவர்கள் நாகரிகத்திலும், வாணிபத்திலும் மிக்க முன்னேற்ற மடைந்திருந்தமையை அறியலாம். அங்கு வசித்தவர்கள் அரேபியா, பாரசீகம், மத்திய தரைக்கடலோரமாயுள்ள நாடுகள் முதலியவைகளோடு வியாபாரம் செய்துவந்தார்கள். அங்கே

கிடைத்த உருவச் சிலைகளிலிருந்து, புராதன இந்துக்கள் குட்டையாயும், ஸ்தூலமாயும், தடித்த பெரிய உதடுகளையும், குறுகிக் கோணிய கண்களையும் உடையவர்களாயும் இருந்திருக்கக் கூடுமென அறியலாம். அக்காலத்து ஆண்மக்கள் மீசையையும், குறுகிய தாடியையும் உடையவர்கள். அவர்கள் வெண்கலம், தங்கம், வெள்ளி ஆகிய உலோகங்களின் உபயோகங்களை நன்கு அறிந்திருந்தார்கள். மக்கள் கழுத்தணிகளும், காதணிகளும், காலணிகளும், விரலணிகளும் அணிந்திருந்



ஓர் அழகிய குளம்—மொகஞ்சோதாரோ
(*Copyright—Archaeological Survey of India*)

தார்கள். மொகஞ்சோதாரோவில் கண்டுபிடிக்கப்பட்ட பெரிய செப்புப் பாத்திரம் ஒன்றில் மிக்க வேலைப்பாட்டுடன் கூடிய நகைகள் பல இருந்தன. நகரங்கள் ஒழுங்கான முறையில் அமைக்கப்பட்டிருந்தன. குடிகள் செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகளில் வசித்து வந்தார்கள். வீடுகளில் குளிப்பதற்கு அறைகளும் கிணறுகளுமுண்டு. பெருந் தூண்களையுடைய சில மன்றங்களும் அங்குக் கட்டப்பட்டிருந்தன. அவை அநேக



மக்களின் அணிகள்—மொகஞ்சோதாரோ
*(Copyright—Archaeological Survey of India)*

மாய்ப் பலர் கூடிப் பொதுக் காரியங்களைப் பற்றி உரையாடுவதற்கு உபயோகப்பட்டு வந்தன. கட்டடங்களில் சில கோயில்களாகவும் இருந்திருக்கலாம். மொகஞ்சோதாரோவிலிருந்த நகர

பரிபாலன சபையார் சுகாதார முறைகளையும், வீடுகள் கட்டப் பட வேண்டிய முறைகளையும் அறிந்திருக்க வேண்டும். பயிர்த் தொழிலையும், நெசவுத் தொழிலையும் மொகஞ்சோதாரோக் குடி கள் மேற்கொண்டிருந்தார்கள். அவர்கள் பார்லியையும், கோதுமையையும் பயிரிட்டார்கள். செம்பு, பித்தளை முதலிய உலோகங்கள் பாத்திரங்கள் செய்யப் பயன்பட்டன.

நன்ருகக் கட்டப்பட்டதும், அகலமான படிக்கட்டுக்களை யுடையதுமான ஒரு குளம் அங்குக் காணப்படுகிறது. அதன் சுவர் மிகவும் வன்மை வாய்ந்தது. படிகளின் அடிப்பாகத்தில் விசாலமான மேடை ஒன்றிருக்கிறது. அது அக்குளத்தில் நீராடும் மக்களின் வசதிக்காகவே கட்டப்பட்டுள்ளது. அவ் வழகிய குளம் மொகஞ்சோதாரோவின் பெருமைக்கு ஓரறிகுறி யாய் விளங்குகின்றது. சலவைக் கல்லால் செய்யப்பட்ட ஒரு மனிதனது உருவச்சிலை மொகஞ்சோதாரோவில் கிடைத்திருக் கிறது. இன்னும் அவ்விடத்தில் சுமார் 350 முத்திரை அச்சுக்கள் கிடைத்துள்ளன. இவற்றிலிருந்து உருவத்தின் மூலம் உள்ளக் கருத்துக்களைத் தெரிவிக்கும் திறமையை அம்மக்கள் பெற்றிருந் தார்கள் என்பதை அறிகிருேம். மொகஞ்சோதாரோவின் நாகரிக மானது, சில வழிகளில் மெஸபட்டோமியா, எகிப்து முதலிய இடங்களின் நாகரிகத்தைவிட உயர்வானதென்று ஊகிக்கப் படுகிறது. மொகஞ்சோதாரோவின் மக்கள் பூமிதேவியையும், சிவபெருமானையும் வணங்கி வந்தார்கள்.

மொகஞ்சோதாரோவில் காணப்பட்ட இத்தகைய உயரிய நாகரிகத்தையுடைய மாந்தர் யாவர்? ஆரிய நாகரிகத்தினின்றும் இந்நாகரிகம் வேருகக் காணப்படுவதால், இதனை உடையவர் ஆரியரல்லாதார் என்பதும், இந்நாகரிகம் வேதகால நாகரிகத் தினும் முற்பட்டது என்பதும் உள்ளங்கை நெல்லிக் கனியென விளக்க முறுகின்றன.

## 2. ஆரியரின் வருகை

வெகு காலத்துக்கு முன்பு ருஷ்யாவின் தெற்கில் ஓர் உயர்ந்த ஜாதி ஜனங்கள் இருந்தார்கள். அவர்களுடைய இனத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் ஐரோப்பிய நாடுகளிலும், ஆசியாவின் தெற்கிலும் மேற்கிலும் குடியேறின. அறிஞர்கள் அவர்களை இந்தோ-ஐரோப்பியர் எனக் கூறுகின்றனர்.

## ஆரியரின் பூர்வீக வாசஸ்தானம்

இவர்கள் வெகுகாலம் வரையில் தென் ருஷியாவில் ஆடு மாடுகளை மேய்த்தும், பயிர்செய்தும் வாழ்ந்து வந்தார்கள். நாள் செல்லச் செல்ல இவர்கள் ஜனத் தொகையில் பெருகிப் போனார்கள். அன்றியும் இவர்களுடைய நாடு மிகக் குளிரானது. அங்கு ஆடுமாடுகளுக்குப் போதுமான புல்வெளிகள் இல்லை. பயிர் செய்வதற்கும் அந்நாடு அதிக வசதி பெற்றிருக்கவில்லை. அதனால் இவர்கள் புதிய நாடுகளுக்குக் குடியேறிச் சென்றனர். அல்லாமலும் ஆடு மாடுகளை மேய்ப்பவர்களுக்கு ஊர் ஊராகப் புல்வெளிகளை நாடிச் செல்வது இயற்கை அல்லவா? இக்காரணங்களினால் இவர்கள் இனத்தைச் சேர்ந்த பலர் இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, கிரீஸ் முதலிய நாடுகளில் குடியேறினர். இவர்களது வமிசத்தினர்தாம் ஆங்கிலேயரும், ஜெர்மானியரும், ரோமரும், கிரேக்கரும் ஆவர்.

ருஷியாவினின்றும் சென்று பாரஸிகத்தில் குடியேறினவர்களின் சந்ததியார்கள் பாரஸிகர் ஆயினர். காபூல் வழியாக வந்து வடமேற்குக் கணவாய்களைக் கடந்து பஞ்சாப் நாட்டில் குடிபுகுந்தவர்கள் ஆரியர்கள் எனப்பட்டனர். எனவே, தமக்குள் வேறுபட்டுப் பன்னாடுகளிலும் வசிக்கும் பல ஜாதியினர் ஒரு குடும்பத்தினின்றும் தோன்றியவர்களாவர். இவ்வாறு வெளிநாட்டிலிருந்து வந்து இந்தியாவில் குடியேறினவர்களுள் ஆரியர்கள் தாம் முதன்மையானவர்.

## ஆரியரின் வாழ்க்கையும் நாகரிகமும்

ஆரியர்கள் கல்வியிலும் நாகரிகத்திலும் மேம்பட்டிருந்தனர். அவர்கள் தங்களுக்கு வேண்டிய ஏர், கலப்பை, மண்வெட்டி முதலிய கருவிகளையும், வில், அம்பு, கத்தி, கோடரி முதலிய போராயுதங்களையும் செய்துகொள்ளக் கற்றிருந்தார்கள். அவர்கள் வண்டிகளையும், படகுகளையும் செய்துகொண்டார்கள். அவர்களுக்குத் துணி நெய்யவும், தோல் பதனிடவும் தெரியும். அவர்களின் உணவு கோதுமை, நெல் முதலிய தானியங்களும், பால் தயிர் வெண்ணெயும், காய் கனி கீரைகளும் ஆகும். சில விசேஷ காலங்களில் மட்டும் மாமிசம் புசிப்பார்கள். ஆரியர்களில் இடையர்களையும், விவசாயிகளையும் தவிர, மண்வேலை, மரவேலை, உலோக வேலை முதலிய தொழில்களைச் செய்துவந்தவர்களும் இருந்தார்கள். ஆரியர்கள் ஆடல் பாடல்களையும், சூதாட்டத்தையும் பெரிதும் விரும்பினர்.

ஆரியக் குடும்பங்கள் பல ஓர் இடத்தில் தங்கி ஒரு தலைவனது ஆணையில் அடங்கி வாழ்ந்தன. தாயும், தந்தையும் குடும்பத் தலைவியும், தலைவனும் ஆயினர். ஆரியர்கள் தங்கள் பெண்டிரை மிக்க மதிப்பாக நடத்தி வந்தார்கள். கணவன் மனைவியின்றி யாதொரு சடங்கையும் செய்யக்கூடாது. ஆரியப் பெண்கள் வயது வந்த பின்னரே மணம் செய்துகொள்வார்கள். ஒருவன் ஒரு பெண்ணையே மணக்கலாம். கணவன் இறந்தால் பெண்கள் உடன்கட்டை யேறுவதுண்டு; சிலர் புனர் விவாகம் செய்துகொண்டும் இருந்தனர்.

ஆரியக் குடும்பங்கள் பல ஒன்று சேர்ந்து தேர்ந்தெடுத்த தலைவனே அவர்களுக்கு அரசனுவான். அவன் கடவுளர்க்குப் பலிகள் தந்து அவர்களைப் திருப்திப்படுத்துவான். அவன் குடிகளின் வழக்குக்களை விசாரித்துத் தீர்ப்புச் சொல்லுவான். அவன் சண்டையில் முன்னின்று படைகளை நடத்துவான். ஓர் அரசனுக்குப் பின்பு அவன் மூத்த மகன் அரச பதவியை ஏற்பான். சில சமயங்களில் குடிகள் சேர்ந்து ஒரு புதிய அரசனைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதும் உண்டு.

## ஆரியரின் இருக்குவேதம்

ஆரியர்கள் அக்னி, இந்திரன், வருணன், சூரியன், யமன் முதலிய தெய்வங்களை வணங்கினர் ஆயினும் அக்னிதான் அவர்களுடைய முதல் தெய்வம். குளிரைப் போக்கவும், அழுக்கை நீக்கவும், உணவைச் சமைக்கவும் நெருப்பு உதவுவதனுல் அவர்கள் அக்னியை மிகவும் கொண்டாடினர். அல்லாமலும் அவர்கள் அக்னியை மற்றைய தெய்வங்களின் முகம் என்று எண்ணினுர்கள். அதனுல் அவர்கள் தாங்கள் மற்ற தெய்வங்களுக்குச் செலுத்தவேண்டிய காணிக்கைகளைத் தீயில் இட்டு வந்தார்கள். இவ்வாறு வணங்கி வந்த தெய்வங்களைப் புகழ்ந்தும், தாங்கள் செய்த சண்டைகளை விவரித்தும் பாடிய பாடல்களே இருக்குவேதம் என்பது. அறிஞர்கள் இருக்குவேதத்திற்கு முற்பட்ட நூல் உலகத்தில் இல்லை என்கிறுர்கள்.

முதன் முதல் பஞ்சாபில் வாழ்ந்திருந்த ஆரியக்குடும்பங்கள் பெருகத் தலைப்பட்டபோது அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கங்கா நதி தீரம் முழுவதும் பரவிவிட்டனர். இங்கே அவர்கள் பல ராஜ்யங்களை உண்டாக்கி அரசு செலுத்தி வந்தனர். அப்பொழுது இவர்களில் சிலர் பகைவரோடு சண்டையிட்டு நாட்

டைக் காத்து வந்தனர். வேறு சிலர் வேதங்களை ஓதியும், யாகங்கள் செய்தும் கடவுளின் அருளைச் சம்பாதித்தார்கள். மற்றும் சிலர் பயிரிட்டும், வாணிபம் செய்தும் நாட்டின் செல்வத் தைப் பெருக்கினர். நாட்டின் பழங்குடிகள் பிறதொழில்களைச் செய்து சமூகத்துக்குத் தொண்டு புரிந்தார்கள். இவ்வாறாக இவர்களுக்குள் தொழில் பிரிவினைகள் ஏற்பட்டன. ஆயினும் இவர்கள் வேற்றுமையின்றி ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள்.

## 3. இருக்கு வேத கால மக்களின் நிலைமை

இதுவரை ஆரியரல்லாதாரது நாகரிக நிலையைக் கண் டோம். இனி ஆரியரது நாகரிக நிலையை நாம் வேதங்களி லிருந்து காண்போம். வேதங்கள் இருக்கு, யஜுர், சாமம், **அதர்வணம்** என நான்கு வகைப்படும். அவற்றுள் காலத்தால் முற்பட்டது இருக்கு வேதமே.

இவ்வேதத்தில் பத்து அரசர்களின் யுத்தத்தைப் பற்றிய செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. அந்த யுத்தம், பிரமாவர்த்தத் தில் வசித்த பரதர்களுக்கும், துர்வாசர், புரு முதலிய பத்து வேறு குலத்தினருக்கும் நடந்ததாகும். பரதர்களின் அரசர் **சுதாஸ்** என்பவர். அவர்களுக்குக் குரு **வசிஷ்டர்**; மற்றைய பத்து அரசர்களுக்கும் **விசுவாமித்திரர்** குருவாகவும் சேனாதிபதி யாகவும் இருந்தார். சுதாஸ் இந்த யுத்தத்தில் வெற்றி பெற்றார். புரு குலத்தினர் வன்மை வாய்ந்தவர். அவர்கள் சரஸ்வதி நதி தீரத்தில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய அரசரான **புருகுத்ஸர்**, சுதாஸுடன் புரிந்த போரில் இறந்தார். புரு குத்ஸரின் மகனாகிய **திரிசதஸ்யு** ஒரு வீரன். இவனது வீரா வேசத்தைக் கண்டு அநாரியர் அஞ்சினர். அக்கால ஆண் மக்களின் ஒழுக்கம் சிறிது குறைந்திருந்தது. இறந்தவர் களுக்குச் செய்யவேண்டிய கருமங்களைச் செய்யப் புதல்வர்கள் இல்லாவிடின், அவர்களுடைய மனைவிகள் மறு விவாகம் செய்து கொள்ளலாமென அறிகிறோம். இருக்கு வேத காலத்தில் ஜாதி வித்தியாசம் காணப்படவில்லை; ஆனால் அக்காலத்திலேயே புரோகிதர் யாகங்களைச் செய்து வந்தனர். ஆதலின் அவர் களுக்கு ஓர் உயர்வு ஏற்பட்டிருந்தது. இதுவும் பின்னர்த் தோன்றிய ஜாதி வேறுபாட்டிற்கு ஒரு காரணமெனக் கூறலாம்.

இனி ஆரியரது ராஜ்ய நிர்வாக முறையைச் சிறிது அறி வோம்: நாட்டை ஆண்டு வந்தவனை மக்கள் ராஜன் என்று

வழங்கி வந்தார்கள். அரச வமிசம் பரம்பரையானது. மக்களை விரோதிகளிடமிருந்து காப்பாற்றுவது அரசன் கடமையாகும். தனக்காகவும், தன் குடிகளுக்காகவும் யாகங்களைச் செய்ய அரசன் மதக் குருக்களைக் காப்பாற்றி வந்தான். அரசனுக்குப் பலவிதத்தில் வருமானம் வந்தது. ஓர் அரசன், பிற அரசர்களை வென்று தனக்குக் கப்பம் கட்டுமாறு செய்வான். குடிகள் அரசனுக்கு வெகுமதிகள் கொடுத்தார்கள். அவர்கள் நாளடைவில் இவைகளை நிரந்தரமாகக் கொடுக்க நேர்ந்தது. யுத்தங்களில் அபகரிக்கப்படும் நிலங்கள், அடிமைகள், ஆடுமாடு முதலியவைகளில் பெரும்பகுதி அரசனைச் சேரும். அரசன் தான் நினைத்தபடி தன் அதிகாரத்தைச் செலுத்த முடியாது. அவனை நேர் வழியிற் செலுத்தச் சமிதி என்னும் குடிகளின் சபை ஒன்று இருந்தது. இச்சபை, குடிகளின் பொதுக் காரியங்களைக் கவனித்தது. இச்சபையில் சமூகக் கொண்டாட்டங்களும் நடைபெற்றன. நீதியளிக்கும் முறையில் அரசனுக்குப் பொறுப்பு குறைந்திருந்தது. சொத்திழந்தவனே திருடனைத் தண்டிக்கலாம், அல்லது மன்னிக்கலாம். கொலை செய்தவன் கொலை செய்யப் பட்டவனது உறவினர்களுக்கு நூறு பசுக்களைக் கொடுப் பானுனல் மன்னிக்கப்படுவான்.

யுத்தக் காலங்களில் அம்பு, ஈட்டி, கோடரி முதலிய ஆயுதங்கள் உபயோகிக்சப்பட்டன. தேர்களில் வீரர்கள் செல்வார்கள். நூல் நூற்றல், தோல் பதனிடுதல், உலோகங்களைப் புடமிடுதல் முதலிய தொழில்கள் இருக்கு வேத காலத்தினருக்கு நன்ருகத் தெரியும். தங்கத்தால் செய்த ஆபரணங்களை மக்கள் அணிந்துகொண்டார்கள். யாகத்தில் ஆடுகளும் எருதுகளும் பலியிடப்பட்டன. ஆரியர்கள் மாமிசத்தை முக்கிய உணவாகக் கொள்ளவில்லை. ஆனல், சிற்சில சமயங்களில் அவர்கள் அதனைப் புசித்து வந்தார்கள் என்பது தெரிகிறது. பால் அவர்களது முக்கிய ஆகாரங்களில் ஒன்ருய் இருந்தது. இருக்கு வேத ஆரியர்கள் நடனம், சங்கீதம், சூதாட்டம், தேர்ப்பந்தயம் முதலியவற்றைப் பெரிதும் விரும்பித் தங்கள் ஓய்வு நேரத்தை விநோதமாகக் கழித்து வந்தார்கள். சோமபானம், சுரா பானம் முதலிய மதுபானங்களை மக்கள் குடித்துவந்தார்கள்.

# 4. இதிகாசங்களும், அவை உண்டான காலத்து நாகரிகமும்

## இதிகாசங்கள்

பஞ்சாப் ஆரியர்களின் குடும்பங்கள் பெருகிப் போன பொழுது அவர்கள் கிழக்கு முகமாய்ச் சென்று கங்காநதி பாயும் நாட்டில் குடியேறினர்கள். அவர்கள் கங்காநதி தீரத்தில் குடியேறிப் பரவிய காலம் கி. மு. 1500-க்கும் கி. மு. 1000-க்கும் இடைப்பட்ட 500 வருஷங்கள் ஆகும். இக்காலந்தான் இதிகாச காலம் என வழங்கப்படுவது. எனவே வேத காலத்தின் இறுதியிலிருந்து இதிகாச காலம் தொடங்குகிறது; இராமாயணம், மகா பாரதம் என்னும் உயர்ந்த இதிகாசங்கள் அப்போது உண்டானதால், அக்காலத்துக்கு இதிகாச காலம் எனப் பெயர் வந்தது. கங்கா நதியை அடுத்த நாட்டில் ஏற்கெனவே இருந்த பழங்குடிகளில் சிலர் ஆரியர்கள் ஆணையிலடங்கியும், அவர்களோடு நட்புப் பாராட்டிக் கலந்து உறவாடியும் போயினர். மற்றுஞ்சிலர் சண்டையில் தோற்று நாட்டைவிட்டு ஓடிச் சென்றனர். தாங்கள் வென்றுகொண்ட இந்துஸ்தானத்தில் ஆரியர்கள் அநேக ராஜ்யங்களை உண்டாக்கி ஆட்சி செலுத்தி வந்தனர். அப்போது வட நாட்டில் உண்டான ராஜ்யங்களுள் குரு, பாஞ்சாலம், கோசலம், விதேகம் என்ற ராஜ்யங்கள் மிகச் சிறந்து விளங்கின.

## ஆரிய ராஜ்யங்கள்

குரு வமிசத்தினரின் ராஜ்யம் கங்கா நதியின் மேற்குக் கரையிலிருந்தது. அதன் தலைநகரம் ஹஸ்தினபுரம் என்பது. அந்நாட்டரசர்கள் சந்திர குலத்தினர் என வழங்கப்பட்டார்கள். குரு நாட்டின் கிழக்கில் பாஞ்சால ராஜ்யம் இருந்தது. காம்பில்யா என்பது அதன் தலைநகரம். கோசல ராஜ்யம் என்பது பாஞ்சாலரது நாட்டின் கிழக்கில் இருந்தது. அதன் முக்கியப் பட்டணம் அயோத்தி. கோசல மன்னர்கள் சூரிய குலத்தினர் என மதிக்கப்பட்டனர். கோசலத்திற்குக் கிழக்கில் இருந்தது விதேக ராஜ்யம். மிதிலை விதேக ராஜ்யத்தின் தலைநகரம். அந்நாட்டரசரான ஜனகர் சிறந்த கல்வியாளர். இவற்றையன்றி இந்துஸ்தானத்தில் இன்னும் பல ஆரிய ராஜ்யங்கள் இருந்தன.

இவை முதன்மையைக் கருதித் தமக்குள் அடிக்கடி சண்டைகள் செய்து வந்தன.

ஆரியர்கள் கடவுள் ஒருவர் என்பதையும், அவருக்கு முதலும் இல்லை முடிவும் இல்லை என்பதையும், அவரே ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களையும் செய்து வருகின்றார் என்றும் தெரிந்து கொண்டிருந்தனர். அக்கடவுள் ஆக்கல் தொழிலைச் செய்யும்போது பிரமன் என்றும், அளித்தல் தொழிலைச் செய்யும்போது மகாவிஷ்ணு என்றும், அழித்தல் தொழிலைச் செய்யும்போது பரமசிவன் என்றும் பெயர்கள் வழங்கப் பெற்றார்.

இக்காலத்தில் இதிகாசங்களான இராமாயணமும், மகா பாரதமும் விவரிக்கும் விஷயங்களை நீங்கள் நன்றாக அறிவீர்கள். சூரியகுலத்து அரசர்களில் சிறந்த இராமர் கதையைக் கூறுவது இராமாயணம். சந்திரகுலத்தரசரான திருதராஷ்டிரர், பாண்டு என்னும் சகோதரரின் மைந்தர்கள் குருநாட்டைக் குறித்துச் சண்டை செய்த விவரத்தைக் கூறுவது மகாபாரதம். இவ்விரண்டு இதிகாசங்களும் நீதிக்கதைகள் நிரம்பிய பொக்கிஷமாகும். இவற்றினின்றும் நாம் அக்காலத்திய ஆரியரின் நடை, உடை, ஒழுக்கம், நாகரிகம் முதலிய பல விவரங்களை அறியலாம்.

## 5. இதிகாச கால நாகரிகம்

வேத காலத்தை விட்டு இதிகாச காலத்தை நோக்குவோமாயின், நாம் பெரிய மாறுதல்களைக் கவனிக்கலாம். மதமும், சமூக நிலைமையும் பெரிதும் மாறுதலடைந்துள்ளன. மஹா பாரதத்திற் சில இடங்களில் பண்டைக்கால வழக்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

வட இந்தியாவில் பல சிறு ராஜ்யங்கள் தோன்றலாயின. பொதுக் காரியங்களைக் கவனிக்க அரசன் வரி வசூலித்தான். அவன் தன் புய வன்மையால் மட்டும் குடிகளை அரசாளவில்லை. அரசனையும் அவன் குடிகளையும் அன்பே ஒன்றாகப் பிணைத்தது. கொடுங்கோல் மன்னன் அரச பதவியிலிருந்து நீக்கப்படலாம். குடிகளது நன்மையை விரும்பாமல் இன்னலே விளைவிக்கும் அரசன், வெறிபிடித்த நாயைப்போலக் கொல்லப்படுவான் என்பது இதிகாச காலக் கொள்கை. வரி சொற்பமாக இருக்கவேண்டும் என்பது அக்காலக் கொள்கை. குடிகள் வரிக்குத் தானியங்

களையும் செலுத்தினுர்கள். வியாபாரத்திற்கும் இடையூருகச் சட்டங்கள் ஏற்படுத்த அரசனுக்கு உரிமையில்லே. சேனைக்கு அரசனே தலேவன். ஏழை ஆரியர்களும், ஆரியரல்லாத பிறரும், பிரபுக்களும் சைனியத்தில் இருந்தார்கள். குடிப்பது, சூதாடுவது, வேட்டையாடுவது, சிற்றின்பத்தில் ஈடுபடுவது ஆகிய இவைகளே போர் வீரருடைய பாவச் செயல்கள். அரசனது பரிவாரத்துடன் நடனப் பெண்களும் செல்வதுண்டு. மாமிசம் உண்பது, மதுபானம் செய்வதுபோல், சாதாரண வழக்கமாய் இருந்தது. வீரன் போரில் இறப்பது சிறப்பாகக் கருதப்பட்டது. அவன் தன் கீர்த்திக்காகவும், தன் தலேவனுக்காகவும், தன்னுல் இயன்றவரை போர் செய்வான். இதிகாச கால அரசன் சுயேச்சாதிகாரி அல்லன். மந்திரிகளின் ஆலோசனேயைக் கேட்டு அவற்றைக் கடைப்பிடித்தே அரசன் முக்கியமான காரியங்களேச் செய்வான் என இதிகாசங்கள் கூறுகின்றன. இது உண்மையெனினும், அரசன் தன் விருப்பின்படி தீய காரியங்களேச் செய்து வந்தான் என்பதையும் அறிகின்ருேம்.

இதிகாச காலத்தில் விளங்கிய ஆரியர்களின் ராஜ்யங்கள் எவை என்பதைக் குறிப்பிடுவோம்: அவை ஒன்பதெனக் கூறலாம். காந்தார தேசம் சிந்து நதிக்கு இரு புறத்திலும் பரவியிருந்தது. இராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிற தக்ஷசீலம், புஷ்கலாவதி என்ற இரு நகரங்கள் காந்தார தேசத்தில் முக்கியமானவை. தத்துவ ஞானத்தின் கரைகண்ட ஆருணியும் அவரது புத்திரரும் தக்ஷசீலத்திலேதான் தத்துவ சாஸ்திரத்தைக் கற்றனர். கேகய தேசமென மற்ருெரு ராஜ்யம் இருந்தது. வேதாந்தத்தை நன்குணர்ந்த அசுவபதி என்பவன் இந்நாட்டரசர்களுள் ஒருவன். மத்திரா ராஜ்யத்தில் புகழ் பெற்ற பதஞ்சல காப்யா என்ற உபந்யாசகர் தோன்றி அந்நாட்டைச் சிறப்புறச் செய்தார். மத்ஸ்ய தேசம் கல்விக்கு இருப்பிடமாய் இருந்தது. மேலும் குரு பாஞ்சால தேசங்களுமிருந்தன. காசி ராஜ்யத்தில் வேதாந்தத்தை அறிந்த அஜாதசத்ரு விளங்கினுர். கோசல தேசமும் இவ்வித ஆரிய ராஜ்யங்களில் ஒன்று. மகத ராஜ்யத்திலும் அங்க ராஜ்யத்திலும் ஆரியர்களது நாகரிகம் முற்றிலும் பரவவில்லே. அக்காலத்துத் தக்காணத்தில் வசித்து வந்த ஆந்திரர், புலிந்தர், புண்டரர், சபரர் முதலியோர் ஆரியரல்லாத வகுப்பைச் சேர்ந்தவர்.

சுமார் கி. மு. 7-ஆம் நூற்ருண்டில் எழுதப்பட்ட பாணினீயத்தில், அக்காலத்தில் இருபத்திரண்டு ராஜ்யங்கள் இருந்தன

என்பது சொல்லப்படுகிறது. அந்த ராஜ்யங்களில் சிந்து, கட்சு, காம்போஜம், அவந்தி, கலிங்கம் முதலியவை புதிய ராஜ்யங்கள் என்பது தெரிகிறது. இவ்விதமாக ஆரியர் குடியேறின நாடுகள் வரவரப் பெருகிக்கொண்டே வந்தன.

### பயிற்சிகள்

1. மொகஞ்சோதாரோவில் கிடைத்த பொருள்களிலிருந்து நாம் அறியக்கூடியவை யாவை?
2. ஆரிய நாகரிகத்தைப் பற்றி நாம் அறிவதற்குரிய நூல்கள் யாவை?
3. ஆரிய ராஜ்யத்தின் நிர்வாக முறை யாது?
4. ஆரியர் பழக்க வழக்கங்கள், உடை, உணவு முதலியவற்றைப் பற்றிக் கூறுக.
5. வேதகாலத்தினின்றும் இதிகாசகால நாகரிகம் முற்றிலும் மாறுபட்டது என்பதை ஆராய்க.
6. இதிகாசகாலப் போர்வீரர் செய்த பாபச் செயல்கள் யாவை?
7. இதிகாச காலத்தில் தக்காணத்தில் இருந்த ஆரியரல்லாத மக்கள் யாவர்?

# IX. புகழ்பெற்ற மன்னர்களும், சக்கரவர்த்திகளும்

## 1. சந்திர குப்தர் (கி. மு. 322—298)

சந்திரகுப்தர், கடைசி நந்த அரசரை வென்று, மகத தேசத்திற்கு அதிபதியானார். இவர் கிரேக்கரின் அதிகாரத்திற்கு விரோதமாகப் பெருங் கிளர்ச்சியை உண்டாக்கினார். கிரேக்க சேனைகள் தங்குமிடங்கள் தாக்கப்பட்டு முறியடிக்கப்பட்டன. அவர்களது ஆளுகைக்குட்பட்ட பஞ்சாப், சிந்து முதலியவை கைப்பற்றப்பட்டன. இங்ஙனம் சந்திரகுப்தர் கிரேக்கரைத் தம் நாட்டினின்றும் ஓட்டினார். இவர் நாளடைவில் நருமதை நதிக்கு வடக்கேயுள்ள வடஇந்திய பிரதேசம் முழுமையும் தம் அதிகாரத்திற்குட்படுத்தினார். அலெக்ஸாந்தரின் தளகர்த்தர்களில், ஒருவரும் மேற்கு ஆசிய மாகாணங்களுக்கு அதிபதியு

மான **ஸெலுயூகஸ்** என்பவர், கிரேக்கர் இந்தியாவில் இழந்த ஆதிக்கத்தை மறுபடி நிலைநிறுத்தும்பொருட்டுப் படையெடுத்தார். ஆனால் சந்திரகுப்தர் அவரை முற்றிலும் தோற்கடித்து அவருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். இவ்வுடன்படிக்கையினால் சந்திரகுப்தருக்குக் காபூல், ஹீரட்டு, காண்டகார் முதலிய நாடுகள் கிடைத்தன. இந்துகுஷ் மலைகளே ஸெலியூகஸின் மாகாணங்களான **பாக்டிரியா** முதலியவற்றிற்கும் சந்திரகுப்தரின் பிரதேசங்களான காபூல், ஹீரட்டு முதலியவற்றிற்கும் எல்லையாயிருந்தன. சரித்திர காலத்தில் இந்தியாவிற்கு முதல் சக்கரவர்த்தியாரான சந்திரகுப்தர், இந்த இயற்கையான எல்லையை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே தம் சாம்ராஜ்யத்தின் எல்லையாக்கிக் கொண்டார்.

அரசரது தலைநகரான பாடலிபுத்ரம், அக்காலத்தில் விளங்கிய மிகப் பெரிய நகரங்களில் ஒன்று. அதைச் சுற்றிலும் ஒரு வன்மையான சுவர் கட்டப்பட்டிருந்தது. அறுபத்திரண்டு நகர வாயில்கள் இருந்தன. அரசரது அரண்மனையைப் போல உலகத்திலேயே அழகிய கட்டடம் இல்லை எனலாம். அரண்மனையில் பணம் ஏராளமாகச் செலவழிக்கப்பட்டது. அரசர் வேட்டையாடுவதிலும், மிருகச் சண்டைகளைப் பார்ப்பதிலும் மிக்க மகிழ்ச்சி கொள்வர். அரண்மனையில் அரசரின் சௌகரியங்களை நடனப் பெண்கள் கவனித்தார்கள். அரசரது விருப்பத்தைத் தடுக்க ஒருவருக்கும் ஆற்றல் இல்லாமலிருந்தது. ஆகையால், அரசர் தம் விருப்பப்படி எல்லாம் செய்துவந்தார். ஆனால் புரட்சிகளும் கொலைகளும் அரசர் அதிகக் கொடுமைகள் செய்யாமல் தடுத்துவந்தன. சந்திரகுப்தர் தம் உயிருக்கு ஆபத்து நேரலாம் என நம்பியவராதலால் பகலில் தூங்குவதே இல்லை; இரவிலும் ஒரு நாள் படுத்த அறையில் மறுநாள் படுப்பதில்லை.

**சந்திரகுப்தரின் ராஜ்ய பரிபாலனமுறை:** சந்திரகுப்தரின் அரசாங்க முறைகள் மிகச் சிறந்தவை. ராஜ்யத்தின் தலைவர் சக்கரவர்த்தியாரே; இராணுவத் தலைவரும் அவரே. அவர் நியாயத்தை வழங்குபவரும், அரசாங்க முறைகளை நடத்துபவருமாக இருந்தார். அவர் நியாயம் வழங்குவதில் சமர்த்தர். அவருக்கு ராஜ்ய பரிபாலனத்தில் உதவி செய்யச் சில முக்கிய மந்திரிகளும், மந்திரி **பரிஷத்து** என வழங்கும் மந்திராலோசனைச் சபையும் உண்டு. ராஜாங்க நிர்வாக இலாகாவிலும், நியாய இலாகாவிலும் உயர்ந்த பதவிகளைப் பெற்ற சில அமைச்சர்கள் அரசருக்கு

அத்துறையில் உதவிபுரிந்து வந்தார்கள். மௌரிய ராஜ்யத்தின் பிரிவுகள் பலவற்றிலும் அத்தியக்ஷர் எனப்படும் உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டனர். நதிகள், பொதுச்சாலைகள், சந்தைகள் ஆகிய இவைகள் சம்பந்தமான விஷயங்களையும், யுத்த வீரர்களைப்பற்றிய விஷயங்களையும், இவ்வத்தியக்ஷர் கவனித்து வந்தனர். மௌரிய சாம்ராஜ்யம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. எல்லைப்புற மாகாணங்கள் இளவரசர்களாலும், ராஜ குடும்பத்தினராலும் பரிபாலிக்கப்பட்டன. மற்றவைகளைச் சந்திரகுப்தர் தம் நேர்ப் பார்வையில் பரிபாலனம் செய்தார். சில மாகாணங்கள் சுயேச்சையை அனுபவித்து வந்தன. அவைகளில் ஒன்று வடமேற்கு எல்லைப்புறத்திலிருக்கும் காம்போஜம் என்னும் நாடு என்று தெரிகிறது. கிராம பரிபாலனம் கிராமிகர் என்னும் உத்தியோகஸ்தரால் கவனிக்கப்பட்டது. ஐந்து அல்லது பத்துக் கிராமங்கள், கோபர் என்னும் உத்தியோகஸ்தர் மேற்பார்வையிலிருந்தன. ஒரு ஜில்லாவின் நான்கில் ஒரு பாகத்தை ஸ்தானிகர் என்னும் உத்தியோகஸ்தர் கவனித்து வந்தார். ஸ்தானிகர்களின் அதிகாரி சமாஹர்த்ரி என்னும் உத்தியோகஸ்தர். நாடெங்கும் ஒற்றர் தம் வேலையைச் செய்தனர்.

சந்திரகுப்தரின் ஆட்சி மிகவும் வன்மையானது. அரசாங்கத்தை நடத்த இராணுவ இலாகாவைப் போன்ற பல இலாகாக்கள் இருந்தன. சந்திரகுப்தரிடம் 600,000 காலாட்களும், 9,000 யானைகளும், 30,000 குதிரைகளும், பல தேர்களும் அடங்கிய மிகப்பெரிய படையிருந்தது. ஸெலியூகஸை முறியடித்ததற்கும், வட இந்தியாவை வென்றதற்கும் காரணம், சந்திரகுப்தரின் வன்மை வாய்ந்த சேனைப் பெருக்கே. சந்திரகுப்தர் கப்பற்படையும் வைத்திருந்தார். இராணுவ விஷயங்களைக் கவனிக்க முப்பது அங்கத்தினரையுடைய சபையொன்றிருந்தது. இச்சபை ஆறு பஞ்சாயத்துக்களாக வகுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஐந்து அங்கத்தினர் இருந்தனர். ஒரு பஞ்சாயத்து போர்க்கப்பல் சம்பந்தமான விஷயத்தைக் கவனித்து வந்தது. மற்றொன்று சேனையை ஏற்றிச் செல்லல், போர் நடக்கும் காலத்தில் சைனியங்களுக்கு உணவு கொடுத்தல் முதலியவற்றைக் கவனித்து வந்தது. இங்ஙனம், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் கடமைகள் ஏற்பட்டிருந்தன. சந்திரகுப்தர் காலத்தில் குற்றவாளிகளுக்குக் கடுந்தண்டனைகள் விதிக்கப்பட்டன. குற்றங்களை ஒப்புக்கொள்ளும்வரை அவர்கள் சித்திரவதை செய்யப்படுவதுண்டு. மரணதண்டனை மிகச் சாதாரண

(S·U(S) N44



மாயிருந்தது. தலைநகரின் பரிபாலனத்திற்காக ஆறு பஞ்சாயத்துக்கள் இருந்தன. தொழில்களின் முன்னேற்றம், வெளி நாட்டினரைப் பாதுகாத்தல், பிறப்பு இறப்புக்களைக் கணக்கிடுதல் முதலிய விஷயங்களை மேற்கூறிய பஞ்சாயத்துக்கள் சரிவரக் கவனித்து வந்தன. சந்திரகுப்தரது அரசியல் ஸ்தாபனங்களின் அமைப்பு யாவராலும் ஆச்சரியப்படத் தக்கது.

சந்திரகுப்தரின் ஆட்சியின் இறுதியில் வட இந்தியாவில் ஒரு கடும் பஞ்சம் நேர்ந்தது. அதனால் பன்னீராயிரம் ஜைனர் தெற்கே மைசூரைச் சேர்ந்த சிரவண வெண்குளம் என்னும் இடத்தில் குடியேறினர். சந்திரகுப்த சக்கரவர்த்தியாரும் இவர்களுடன் சிரவண வெண்குளத்திற்கு வந்ததாகவும், அவ்விடத்திலேயே அவர் முடிவில் பட்டினி கிடந்து உயிர் நீத்ததாகவும் கன்ன பரம்பரைச் செய்தி ஒன்று வழங்குகிறது.

அம்மன்னர் அரசாண்டபோது, மெகஸ்தனிஸ் என்ற கிரேக்கர் ஸெலியூகஸ் மன்னரிடமிருந்து அவரது சபைக்குத் தூது வந்தார். இவர் நம் தேசம் வந்தது நமது நற்பயனே; ஏனெனில், இவர் சந்திரகுப்தரின் பரிபாலன முறையைப் பற்றிப் பல முக்கிய விஷயங்களை எழுதி வைத்திருக்கிறார். சந்திரகுப்தர் மகத தேசத்தைக் கைப்பற்றியதற்கு உதவிபுரிந்த பிராமணர் ஒருவர் சாணக்கியர் அல்லது கௌடில்யர் என்பவர். இவர் ராஜதந்திரத்தில் நிபுணர்; சிறந்த அறிஞர். இவர் சந்திரகுப்தரின் மந்திரியார். சந்திரகுப்தரது ஆட்சி முறைமையைப் பற்றி அர்த்த சாஸ்திரம் என்னும் சிறந்த நூலை வடமொழியில் இவர் இயற்றியிருக்கிறார்.

86545

## 2. அசோகர் 'புத்த மதத்தை வளர்த்த சுத்த மனத்தர்' (கி. மு. 273—232)

சந்திரகுப்தர் காலத்திற்குப் பின்னர், பிந்துசாரர் மகத சாம்ராஜ்யத்தை ஆண்டார். இவர் சுமார் இருபத்தைந்து வருஷம் தம் ராஜ்யத்தைக் கீர்த்தியுடன் அரசு புரிந்தார். பின்னர், இவருடைய குமாரர் அசோகர் என்பவர் சிங்காதனமேறினர். இவருடைய பிரகடனங்கள் பாறைகளிலும் தூண்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன. அம்மாதிரிப் பல பிரகடனங்கள் இந்தியாவில் பல பாகங்களிலும் காணப்படுகின்றன. இவைகளிலிருந்து

அசோகரைப் பற்றியும், அவரது காலத்தைப் பற்றியும் நாம் விவரமாக அறிகிறோம்.

அசோகரது சாம்ராஜ்யம் இந்துகுஷ் மலைப்பிரதேசம் வரையில் பரவியிருந்தது. **ஆப்கானிஸ்தானம், பலுசிஸ்தானம் மக்ரான், சிந்து,** கட்சு முதலியவைகளும் அவரது சாம்ராஜ்யத்திற்கு உட்பட்டவைகளே. வட இந்தியா முழுமையும் தென் இந்தியாவின் பெரும்பாகமும் அவரது சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவை. சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்கள் சுயேச்சையாய் இருந்தன. ஆனால் இப்பெரிய சாம்ராஜ்யத்தில் அசோகர் கலிங்கத்தைத் தவிர மற்றொரு நாட்டையும் சேர்க்கவில்லை. அவரது சாம்ராஜ்யம் சந்திரகுப்தராலும், பிந்துசாரராலும் ஜயிக்கப்பட்டு அவருக்கு அளிக்கப்பட்டது. அசோகர் கலிங்கத்தின்மீது கி. மு. 261-ஆம் ஆண்டில் படையெடுத்தார். இப்படையெடுப்பில் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிர் துறந்தார்கள்; பல்லாயிர மக்கள் காயமடைந்தார்கள். அசோகர் போரின் கொடுமையை அப்பொழுது உணர்ந்தார். அவரது மனம் பரிதவித்தது. 'இனி யுத்தமே செய்வதில்லை' என அவர் உறுதி கொண்டார். அசோகரது வாழ்நாளிலும், உலக சரித்திரத்திலும் கலிங்க யுத்தம் ஒரு முக்கியமான சம்பவமாகும். அஹிம்சையாலும், அன்பினாலும் மனிதரை வெல்வது சிறந்தது என அசோகர் உறுதிகொண்டார். இக்கொள்கைகளையுடைய புத்த மதத்தை இவர் தழுவினார்.

**அசோகர் புத்த மதத்தைப் பரவச் செய்தல்:** புத்த மதத்தைப் பரவச் செய்வதற்காக அசோகர் பெருமுயற்சிகளைச் செய்தார். அசோகர் **காஷ்மீரம், காந்தாரம், நேபாளம், திபெத்து, பர்மா, தென் இந்தியா, மாஸிடோனியா, கைரீனிகா, இலங்கை** முதலிய இடங்களுக்குப் பிரசாரகர்களை அனுப்பினார். ஜனங்களுக்குப் புத்தமதக் கொள்கைகளைப் போதனை செய்ய அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அசோகரின் பிரகடனங்கள் பெரியோர்களுக்கும் பெற்றோர்களுக்கும் கீழ்ப்படிதல் கடமை என்பதை வற்புறுத்துகின்றன; ஞானிகளையும் பக்தர்களையும் மரியாதையாக நடத்தும்படியும் கட்டளையிடுகின்றன. அசோகர் ஜைனர்களுக்கும் பிராமணர்களுக்கும் அளவற்ற சன்மானங்கள் செய்தார். நாட்டில் தருமம் பரவவும், அது வேரூன்றி நிற்கவும் விரும்பிய அசோகர், தம்மால் இயன்றவரை குடிகளின் நன்மைக்காகப் பாடுபட்டார்.

கல்வெட்டுப் பிரகடனங்களிலிருந்து அசோகர் **எகிப்து,**



அசோகர் நிலைநாட்டிய தூண்—லௌரிய நந்தன்கார்
(*Copyright—Archaeological Survey of India*)

சிரியா, மாஸிடோனியா முதலிய நாட்டரசர்களுடன் நட்புக் கொண்டிருந்தார் என்பது தெரிகிறது. அரச குடும்பத்தைச் சேர்ந்த ராஜப் பிரதிநிதிகள் வெவ்வேறு மாகாணங்களைப் பரிபாலித்து வந்தார்கள். தக்ஷசீலம், உஜ்ஜயினி, சுவர்ணகிரி முதலிய இடங்களில் அசோகருடைய பிரதிநிதிகள் இருந்தார்கள். ராஜப்பிரதிநிதிக்கு அடுத்தபடி தர்ம மகாமாத்திரர் இருந்தனர். அவர்களுக்கு அடுத்தபடி மக்களின் செளகரியங்களைக் கவனித்து வர ராஜுகர்கள் நியமிக்கப்பட்டார்கள். மகாமாத்திரப் பிரதேசிகர் என்பவர் ஜில்லாக்களின் தலைவராயிருந்து வரிவசூலித்தல், திருடர்களைக் கண்டுபிடித்தல் முதலிய கடமைகளை வகித்திருந்தனர். மேலும், விவசாயம் மிக்க ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பட்டதென்பது கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது; கால் நடைகள் பெரிதும் போற்றிக் காப்பாற்றப்பட்டன என்பதையும் உணர்கின்றோம். புத்தர் பெருமான் அவதரித்த உலும்பினி என்னும் கிராமத்திலிருந்து வசூலிக்கப்பட்ட மத வரிகள் நிறுத்தப்பட்டன. அங்குள்ளவர்களிடமிருந்து நிலவரிகூட வசூலிக்கப்படவில்லை.

**அசோகரது தருமக் கொள்கைகள்:** நன்மை, கருணை, பெருந்தன்மை, உண்மை, பரிசுத்தம் ஆகிய இவைகளே உத்தம குணங்களென்றும், இவ்வுயரிய குணங்கள் ஒவ்வொருவராலும் கைக்கொள்ளப்பட வேண்டுமென்றும் அசோகர் போதித்தார். மேலும் அவர் ஜீவஜந்துக்களைத் துன்புறுத்தக் கூடாதென்றும், தாய்தந்தையர்களையும், உபாத்தியாயர்களையும், பெரியோர்களையும், நண்பர்களையும், பிராமணத் துறவிகளையும் மரியாதையாக உபசரிக்க வேண்டுமென்றும், பகட்டான வாழ்க்கை கூடாதென்றும் மக்களுக்குப் போதித்தார். மேலும் சினம், கொடுமை, செருக்கு முதலியவை மனிதரது இழிவை நிலைநாட்டுமென்றும், மக்கள் மனோசக்தியைக் கட்டுப்படுத்தி, சன்மார்க்கத்தில் திரும்ப வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினர்.

அசோகர், அரசர்களுக்குரிய இன்ப யாத்திரை செய்வதை விடுத்து, தருமத்தை உலகில் பல இடங்களிலும் பரவச் செய்யத் தரும யாத்திரை செய்யலானர். தருமம் எங்கும் பரவவேண்டும் என்ற நல்ல நோக்கத்தால் அசோகர் தாமே தம் குடிகளுக்குப் பல இடங்களில் போதனை செய்தார். அவர் தம்மிடம் உயர்ந்த உத்தியோகங்கள் வகித்தவர்களை அவ்வப்பொழுது பல இடங்களுக்குச் சென்று தருமம் நிலைபெறுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளும்படி கட்டளையிட்டார். குளம் வெட்டுதல், மரம்


காபூல்
காந்தாரம்
ஸ்ரீநகரம்
பெஷாவர்
கஜினி
காஷ்மீரம்
கம்போஜியர்-திபேத்து
அரகோஷியா
அம்பாலா
பிரம்மபுத்திரா நதி
சிந்து நதி
இந்திரப்பிரஸ்தம்
மதுரா
கங்கை நதி
பாடலிபுத்ரம்
காசி
பிரயாகை
சம்பா
ராஜகிரஹம்
சோணநதி
கயா
பார்கட்
பில்சா
சாஞ்சி
ரூப்நாத்
சௌராஷ்டிரம்
பாருகச்சம்
நாமதைநதி
தாம்ரலிப்தி
புலிந்தர்
போஜா
கிர்நார்
மஹாநதி
சூரத்து
தபதிநதி
தௌலி
சோப்பாரா
நாசிக்
பூரி
பைத்தான்
கோதாவரி
ஜெகதா
அரபிக்கடல்
கலிங்கம்
வெங்கி
வங்காளக் குடாக்கடல்
மஸ்கி
கிருஷ்ணை
சித்தபுரம்
குடகு
சத்தியபுத்திரம்
கேரளபுத்திரம்
சோழ ராஜ்யம்
தஞ்சாவூர்
கொடுங்கோளூர்
பாண்டிய ராஜ்யம்
கோடிக்கரை
கொற்கை
கன்னியாகுமரி
இலங்கை
மைல்கள்
0 100 200 300

அசோக சாம்ராஜ்யம்



அசோகரின் சிம்ம ஸ்தம்பம்—சாரநாத்
(*Copyright—Archaeological Survey of India*)

நடுதல், சத்திரங்கள் கட்டுதல் முதலிய பல வேலைகளையும் அவர்கள் நடத்திவந்தார்கள். அசோகர் மிருகங்களுக்கும், மனிதர்களுக்கும் வைத்திய சாலைகள் ஏற்படுத்தினர்.

**அசோகரும் கலைவளர்ச்சியும் :** அசோகரது ஆட்சியின் கீழ், சிற்பமும் இலக்கியமும் சிறந்து ஓங்கின. புராதன இந்தியாவில் மிகவும் சிறப்பு வாய்ந்த சாரநாத் என்னுமிடத்தில் காணப்படும் வேலைப்பாடமைந்த சிற்பங்கள், அவர் காலத்தில் செய்யப்பட்டனவே.

**சரித்திரத்தில் அசோகர் வகிக்கும் ஸ்தானம் :** இந்தியாவின் ஒரு பகுதியில் தள்ளாடிக்கொண்டிருந்த புத்த மதமானது, அசோகரது பெருமுயற்சியால் உலக மதங்களுள் ஒன்றாய்த் திகழ்ந்தது. அசோகர், மனிதர்களின் சௌகரியத்தையும், ஜீவ ஜந்துக்களின் சௌகரியத்தையும் கவனித்து வந்தார். அவர் உலகத்திலுள்ள மக்கள் மனக்களிப்படைய வேண்டிய அவசியத்தை உணர்ந்து, தருமக் கொள்கைகளை அவர்களுக்கு உபதேசிப்பதே தம் கடமையெனக் கருதினர். உலக சரித்திரத்தில் அசோகரைப் போன்ற உயரிய கொள்கைகள் உடைய அரசர் மிகச்சிலரே. மக்களது சௌகரியத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்ட அசோகர், சரித்திர வானத்தில் ஒரு தனித் தாரகை போல என்றும் விளங்குகிருர். அவரது பெரும்புகழ் சீனு, ஜப்பான், திபெத்து முதலிய நாடுகளிலும் பரவியுள்ளது.

அசோகருக்குப் புத்திரர்கள் இருந்தார்கள் ; எனினும், அவருக்குப்பின் அவரது பேரப் பிள்ளைகளான தசரதர், ஸம்ப்ராதி என்னும் இருவர் முறையே கிழக்கு மாகாணங்களிலும் மேற்கு மாகாணங்களிலும் அதிபதிகளானர்கள். மௌரிய வமிசத்தின் கடைசி அரசரான பிரஹத்ரதர், அவருடைய தளகர்த்தரான புஷ்யமித்ர சுங்கரால் கி. மு. 185-ஆம் ஆண்டில் கொல்லப்பட்டார். அசோக சாம்ராஜ்யம் க்ஷீணதசை அடைந்தது.

## 3. கனிஷ்கர் (கி. பி. 120—162)

கனிஷ்கர் குஷாண வமிசத்தைச் சேர்ந்தவர் ; காந்தார நாட்டின் தலைவர். புருஷபுரம் இந்நாட்டின் தலைநகர். கனிஷ்கர் காஷ்மீரத்தையும் தம் நாட்டுடன் சேர்த்துக்கொண்டார் ; கங்கை சிந்து சமவெளிகளில் தம் ஆட்சியைப் பலப்படுத்தினர். இவர் பார்த்தியர்களுடன் போர் புரிந்தார். இவர் இரண்டாம் காட்

பிஸெஸ் என்னும் சீன அரசரிடம் அடைந்த தோல்வியை நினைத்துப் பழிக்குப் பழிவாங்க முற்பட்டுச் சீனத் துருக்கிஸ்தானத்தை வென்றார். இவர் கோட்டான், யார்க்கண்டு, காஷ்கர் பிரதேசங்களின் அதிபதிகளை அடக்கினார். கனிஷ்கர் புத்த மதத்தினரை ஆதரித்ததால், இவரைச் சிலர் இரண்டாம் அசோகர் என்று கூறுவர். மஹாயானம் என வழங்கும் புத்த மதத்தின் ஒரு பிரிவு இவர் காலத்தில் வளரலாயிற்று. இவ் வளர்ச்சிக்குப் பௌத்தப் பேராசிரியராகிய நாகார்ஜுனர் அரும்பாடுபட்டார். அசோகர், கனிஷ்கர் இவ்விரு சக்கரவர்த்திகளில் அசோகரே மேலானவர். பௌத்தத்திற்குக் கனிஷ்கரைக் காட்டிலும் அசோகரே உழைத்துள்ளார். அசோகரைப் போலவே கனிஷ்கரும் ஒரு பௌத்த சபை கூட்டினார்; கட்டடங்கள் கட்டினார்; மஹான்களை ஆதரித்தார். ஆனால் அசோகரைப் போலப் புத்த மதத்தில் கனிஷ்கருக்கு ஆழ்ந்த ஆர்வம் இல்லை. கனிஷ்கர் இந்துக்களின் தெய்வங்களையும், பாரசீக தெய்வங்களையும் புத்தரையும் வணங்கி வந்ததாகத் தெரிகிறது. இவர் வித்துவான்களை ஆதரித்தார். அசுவ கோஷர், வசுமித்திரர், சாரகர் முதலிய புகழ்பெற்ற அறிஞர்கள் இவ்வரசர் காலத்தில் பெருமை அடைந்தவர்களே. பெஷாவரில் காணப்படும் பெரிய கோபுரமும், வடமதுரை நகரில் கனிஷ்கரால் கட்டப்பட்ட அழகிய கட்டடங்களும் இவர் காலத்தின் சிற்பக் கலையின் பெருமைக்குத் தக்க சான்றுகளாகும். கனிஷ்கபுரம் என்றதொரு நகரமும் காஷ்மீரத்தில் கனிஷ்கரால் கட்டப்பட்டது. அக்காலத்திய காந்தார நகரத்தின் சிற்ப வேலைப்பாடுகள் மிகச் சிறந்தவை.

## 4. மகா குப்தர்களும் இந்துமத மறுமலர்ச்சியும் (கி. பி. 320—647)

மகா குப்தரின் வமிசத்தை மகதராஜ்யத்தில் ஸ்தாபித்தவர் முதலாம் சந்திரகுப்தர் (கி. பி. 320—330) எனப்படுவர். புத்தர் காலத்தில் வைசாலி நாட்டில் லிச்சவி வகுப்பினர் இருந்ததாகக் கூறியுள்ளோம். இவர்கள் பாடலிபுரத்தில் குஷாணருக்கு உட்பட்டு ஆட்சி புரிந்து வந்தார்கள். நான்காம் நூற்றாண்டின் முதல் பகுதியில் லிச்சவி ராஜபுத்திரியாகிய குமாரதேவியை மகத தேசத்தில் சந்திரகுப்தர் எனும் ராஜகுமாரர் ஒருவர் மணம் புரிந்தார். இவர் இவ்விவாகத்தால் மிக்க செல்வாக்கடைந்தார்.

இவர் அயோத்தி, மகதம் முதலிய நாடுகளைத் தம் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார். இவருடைய ராஜ்யம், கங்கை நதிக் கரையில் அலஹாபாத்து வரையில் பரவியிருந்தது. கி. பி. 320-ஆம் ஆண்டிலிருந்து கணக்கிடப்படும் அப்தம் இவர் நிறுவியதேயாகும்.

சமுத்திர குப்தர் (கி. பி. 330—380): மிக்க பெருமை வாய்ந்த இந்திய அரசர்களுள் சமுத்திர குப்தர் ஒருவர். ஏகாதி பத்தியம் ஒன்றை ஸ்தாபிக்கும் பெருமுயற்சியில் ஈடுபட்ட சமுத்திர குப்தர் அக்கருமத்தில் வெற்றி பெற்றுர். அவர் கங்கைச் சமவெளியில் தம் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளாத அரசரை வென்றுர்; அதன் பின்னர், காடுகளில் வசித்த வகுப் பினர்களைத் தம் அதிகாரத்திற்கு உட்படுத்தினுர். கடைசியாகத் தக்காணத்தின்மீது படையெடுத்து, தெற்கே காஞ்சீபுரம் வரை வந்து, பல்லவ அரசராகிய விஷ்ணுகோபரை முறியடித்துப் பின்னர், பாலக்காடு முதலிய இடங்களுக்குச் சென்று, காந்தேஷ் வழியாகத் தம்நாடு அடைந்தார். சமுத்திர குப்தர் நருமதைக்குத் தெற்கில் தாம் வென்ற ராஜ்யங்களை நிரந்தர மாகத் தம் ஆட்சிக்குட்படுத்தவில்லை. அவர் தம் ராஜதானிக் குத் திரும்பும்பொழுது ஒரு பெரிய பொற்குவியலைக் கொண்டு போனுர்; பின்னர் அசுவமேத யாகஞ் செய்தார். அவர் ஏகாதி பத்தியம் அடைந்ததற்கு இது ஒரு சான்றுகும். அசோகர் காலத்திற்குப் பின்னர்ச் சமுத்திர குப்தரின் சாம்ராஜ்யமே பெரிது எனக் கூறலாம்.

சமுத்திர குப்தரின் சாம்ராஜ்யம், வடக்கே காஷ்மீரம் தவிர இமயமலை வரையிலும், கிழக்கே பிரம்மபுத்திரா நதிவரையிலும், தெற்கே நருமதை நதிவரையிலும் பரவியிருந்தது. யமுனை, சம்பல் நதிகள் அவரது ராஜ்யத்தின் மேற்கெல்லையாயிருந்தன. எனினும், பஞ்சாப், மாளவம் முதலிய நாடுகளிலிருந்த யௌதேயர், மாளவர் முதலிய வகுப்பினர் குப்தரின் பாது காப்பின் கீழ்ச் சுயாட்சி பெற்று இருந்தனர். நேபாளம், கிழக்கு வங்காளம், அஸ்ஸாம், பிரம்மபுத்திரா நதியின் முகத் துவாரம் முதலிய நாட்டு அரசர், சமுத்திர குப்தருக்குக் கப்பம் கட்டினர். பிறநாட்டு அரசர் சமுத்திர குப்தரிடம் நேசம் பாராட்டினர். வடமேற்கில் அதிகாரம் செலுத்தி வந்த குஷாண அரசர் சமுத்திர குப்தரிடம் அன்பும் மரியாதையும் கொண் டிருந்தனர். இலங்கைத் தீவின் அரசரான மேகவர்மர் சமுத்திர குப்தருடன் நட்புப் பாராட்டி, பல வெகுமதிகளையும் கொடுத்


காபூல்
காந்தாரம்
காஷ்மீரம்
ஸ்ரீநகரம்
புருஷபுரம்
தக்ஷசீலம்
ஜீலம் நதி
ராவி
மதுரகா
லாஹூர்
ஸட்லஜ் நதி
யௌதேயர்
பகவல்புரம்
சிந்து நதி
பிருமமபுத்திரா நதி
இந்திரப்பிரஸ்தம்
ஸ்ராவஸ்தி
பிகானிர்
மதுரா
கோசலம்
நேபாளம்
ஆக்ரா
அயோத்தி
காமரூபம்
க்வாலியர்
பாடலிபுத்ரம்
வைசாலி
நாகநாடு
பிரயாகை
காசி
சம்பா
கயா
குஜராத
மாளவம்
இரான்
வில்சா
உஜ்ஜயினி
சௌராஷ்டிரம்
தார
நாமமதை நதி
வங்கம்
தாமரலிப்தி
கிர்நார்
வலபி
சூரத்து
தப்தி நதி
மஹாகோசலம்
சம்பல்பூர்
நாசிக்
தேவகிரி
சோணபுரி
மஹாநதி
சோப்பாரா
பைத்தான்
பூரி
தேவராஷ்டிரம்
மகேந்திரகிரி
கோதாவரி
வெங்கி புரம்
கொள்ளேறு ஏரி
கிருஷ்ணா
கோவா
வங்காளக் குடாக்கடல்
நெல்லூர்
மங்களூர்
மதரூஸ்
காஞ்சீபுரம்
பல்லவர்கள்
காவேரி
பாலக்காடு
தஞ்சாவூர்
கோடிக்கரை
மதுரை
பாண்டிய
கொற்கை
காயல்
மைல்கள்
கன்னியாகுமரி
சிம்மளம்
0 100 200 300

குப்த சாம்ராஜ்யம்

தனுப்பி, கயையில் ஒரு பௌத்த மடம் கட்டுவதற்கு அவரது அனுமதியைப் பெற்ருர் என்பது தெரிகிறது.

**சமுத்திர குப்தரின் குணச் சிறப்புக்கள் :** சமுத்திர குப்தர் சங்கீதப் பிரியர். அவர் காலத்து நாணயங்களில் அவர் வீணை வாசிப்பதைப்போல முத்திரையிட்டு இருப்பதைக் காணலாம். கவி இயற்றுவதிலும் அவர் இணையற்றவர்; வித்துவான்களின் கூட்டுறவை மிகவும் விரும்பியவர்; ஒரு சிறந்த விஷ்ணு பக்தர்; வசுபந்து என்னும் புகழ்பெற்ற பௌத்த ஆசிரியரை மிகவும் அன்போடு ஆதரித்தார்.

**இரண்டாம் சந்திர குப்த விக்கிரமாதித்தர் (கி. பி. 380—413):** சமுத்திர குப்தருக்குப் பின் இரண்டாம் சந்திர குப்தர் சிங்காதனமேறினர். தம் வாழ்க்கையின் பிற்காலத்தில், இவர் விக்கிரமாதித்தர் என்ற பட்டப் பெயர் சூட்டிக்கொண்டார். இவரும் ஒரு பெரிய வெற்றி வீரரே. சாக சத்ரபதிகள் பல நூற்ருண்டுகளாக அரசாண்டு வந்த மாளவம், குஜரத்து, சௌராஷ்டிரம் முதலிய நாடுகளை இவர் வென்ருர். இவர் தம் ஆதரவைப் பெற்றுவந்த மாளவர் முதலியவர்களையும் தம் ஆட்சிக்கு உட்படுத்தினர்.

மேற்கூறிய சத்ரபதிகளைப்பற்றிச் சிறிது கூறுவோம். இவர்கள் மஹாராஷ்டிர மகா சத்ரபதிகள் என்றும், உஜ்ஜயினி மகா சத்ரபதிகள் என்றும் இரு பிரிவினர்கள். மஹாராஷ்டிர சத்ரபதிகள் மேற்குத் தொடர்ச்சி மலைப் பிரதேசத்தில் மஹாராஷ்டிரத்தில் அரசாண்டார்கள். அவர்களது தலைநகரம் நாஸிக் அல்லது அதன் அருகிலிருந்த ஒரு நகரம். இவ்வமிசத்து அரசர்களுள் பூமகன், நாகபாணன் என்ற இரு அரசர்களைப் பற்றி நாம் அறிகிறேம். கனிஷ்கர் சிங்காதனமேறுவதற்குச் சிறிது முன்னர், கௌதமிபுத்திர சாதகர்ணி என்னும் ஆந்திர அரசர் நாகபாண வமிசத்தை முடிவுறச் செய்து அவ்வமிசத்தவருடைய நாட்டைத் தம் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார்.

உஜ்ஜயினி சத்ரபதி வமிசத்தினரில் **சஷ்டானு** என்பவர் குறிப்பிடத்தக்கவர். அவர் மாளவத்திற்கு அதிபதியானர். அவர் தலைநகரம் உஜ்ஜயினி. அவர் இரண்டாம் காட்பிஸெஸினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டவர். அவர் சில வருடங்களே அரசாண்டார். சஷ்டானுவின் பேரரான ருத்திரதாமர் சுமார் கி. பி. 128-ஆம் ஆண்டில் கனிஷ்கருக்குட்பட்டு உஜ்ஜயினி சத்ரபதியானர். சஷ்டானுவின் வமிசத்தினர் கனிஷ்கருடைய குமாரராகிய ஹுவிஷ்கருக்குக் கப்பம் கட்டி வந்தனர்.

குஷாணரின் ராஜ்யம் சிதறுண்ட காலத்தில், உஜ்ஜயினி சத்ர பதிகள் சுயேச்சை அடைந்தார்கள். அவர்களில் இருபத் தோராம் சத்ரபதி இரண்டாம் சந்திரகுப்தரால் நான்காம் நூற் ருண்டின் இறுதியில் கொல்லப்பட்டார். சத்ரபதிகளின் நாடு குப்த ராஜ்யத்தின் பகுதியாயிற்று.

குப்த சாம்ராஜ்யம் நான்காம் நூற்ருண்டின் ஆரம்பத்தி லேயே மிக்க செல்வம் படைத்ததாய் இருந்தது. அதனுடன் சேர்க்கப்பட்ட சத்ரபதிகளின் நாடுகள் மிக்க செல்வமும், செழிப் பும் பெற்ற மாகாணங்கள் கொண்டவையாதலின், குப்த ராஜ் யத்தின் அதிகாரமும் செழுமையும் பதின்மடங்கு அதிகரித்தன. மேற்குக் கரையிலுள்ள துறைமுகங்கள் பல குப்த ராஜ்யத்தின் அதிகாரத்திற்குட்பட்டதால், அவைகளில் விதிக்கப்பட்ட சுங்க வரிகளினின்றும் அரசாங்கம் அடைந்த வருமானம் அளவற்ற தாய் இருந்திருக்கவேண்டும். பண்டைக் காலத்திலேயே பிரோச்சு, சோபாரா, காம்பே முதலிய துறைமுகங்கள் பல மேல்நாடுகளுடன் வியாபாரம் நடத்திவந்தன. நாட்டினுள் இருந்த வியாபார வழிகள் எல்லாம் பிரசித்தி பெற்ற உஜ்ஜயினி யில் வந்து கூடின.

**பாஹியான் என்னும் சீன தேச யாத்திரிகர்:** சந்திர குப்த விக்கிரமாதித்தர் காலத்தில் **பாஹியான்** என்ற சீன தேசத்து யாத்திரிகர் பௌத்த மடங்களின் ஒழுங்கு முறை சம்பந்தமான நூல்களைப் பெறும் பொருட்டு வட இந்தியாவிற்கு விஜயம் செய்தார். நம் நாட்டில் அவர் ஆறு ஆண்டுகள் தங்கி இருந்தார். அவர் இந்தியாவைப் பற்றி விவரமாகத் தாம் தெரிந்துகொண்ட உண்மைகளை எழுதியிருக்கிருர்.

பாஹியான் வட இந்தியாவில் தாம் கண்டதை எழுதியிருப் பதிலிருந்து வட இந்திய சமூகத்தின் அக்கால நிலைமையை நாம் விவரமாக அறிகிருேம். மக்கள் செல்வச் செழுமை உள்ளவர் கள்; சுகமாக வாழ்ந்தார்கள். தருமசாலைகளும் வழிப்போக்கர் தங்கத் தக்க இடங்களும் இருந்தன. தலைநகரான பாடலிபுத்ரம் மிகவும் உயர் நிலையில் இருந்தது. பெரிய புத்த மடங்களும் மக்களின் சௌகரியத்திற்காகப் பெரியதொரு தரும வைத்திய சாலையும் பாடலிபுத்ரத்தில் இருந்தன. பெரு நகரங்கள் பல மகத ராஜ்யத்தில் இருந்தன. புத்தமதம் உயர்ந்த நிலையில் இருந்தது. அரசரது அரண்மனையின் அழகு பாஹியானை வியப் புறச் செய்தது.

**அரசாங்கம்:** சந்திரகுப்தரின் அரசாங்கம் கடுமையற்றது.

மக்கள் தாங்கள் விரும்பும் இடங்களுக்குத் தாராளமாகச் செல்வதை எவரும் தடுக்கவில்லை. சிறு குற்றங்களுக்குக் கொடுந் தண்டனை விதிக்கப்படவில்லை. பெருங் கொள்ளையே தமது தொழிலாகக் கொண்டவர் தமது வலக் கைகளை இழக்க நேரும். நிலவரியிலிருந்தே அரசாங்கம் தனது வருமானத்தைப் பெற்றது. அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குச் சரிவரச் சம்பளம் கொடுக்கப்பட்டது. புத்த தருமமே எங்கும் நிலவி இருந்தது. அஹிம்சையின் பெருமையை உணர்ந்த மக்கள், அவ்வறத்தைப் பின்பற்றிப் பழக்கத்தில் கொண்டு வந்தார்கள். இந்து மதமும் சிறப்புடன் விளங்கியது. சந்திர குப்தரின் அரசாங்கம் மக்கள் விரும்பத்தக்க முறையில் இருந்தது. தக்க காரணமில்லாமல் மக்களின் செய்கையில் அரசாங்கம் தலையிடுவதில்லை. மக்கள் தங்கள் மனப்போக்கிற்கேற்ற மதத்தைக் கைக் கொள்ள அரசாங்கம் சம்மதித்தது. கொடிய முறைகள் எவையும் அரசாங்கத்தாரால் கையாளப்படவில்லை.

குப்தர் ஆட்சிக்காலம் இந்திய சரித்திரத்தில் பொற்காலம் எனக் கூறுதல் மிகையாகாது. இக்காலத்துக்குச் சமமாகச் சொல்லக்கூடியது புராதன கிரேக்க தேசத்தின்கண் பிரசித்தி பெற்ற பெரிக்கிளிஸின் ஆட்சிக்காலமே. இரண்டாம் சந்திர குப்த விக்கிரமாதித்தர் காலத்தில் கல்வியும், கவியும், காவியமும் அதுவரையில் இந்தியா கண்டிராத அவ்வளவு உயர் நிலையை அடைந்திருந்தன. இவரது சபையில் நவரத்தினங்கள் என்று புகழப்படும் ஒப்பற்ற ஒன்பது வித்துவத் சிகாமணிகள் இருந் தார்கள். அவர்களில் மிகவும் புகழ் பெற்றவர் காளிதாசர் என்னும் பெருங்கவிஞர். வரருசி என்னும் இலக்கண நூலாசிரியரும், தன்வந்தரி என்னும் வைத்திய சாஸ்திர நிபுணரும், சம்ஸ்கிருத நிகண்டுவைத் தொகுத்த அமரசிம்மர் என்னும் பெரியாரும், வேதாளப்பட்டி, சங்கு, கடகற்பர், க்ஷபணகர், வராஹமிஹிரர் முதலியவர்களும் விக்கிரமாதித்தர் சபையைச் சிறப்பித்தவர்கள். வெளிநாட்டு அரசர் படையெடுப்பாலும், உள்நாட்டில் நிரந்தரமாக இருந்துவந்த குழப்பத்தாலும், குடிகள் தத்தளித்த காலத்தில் குப்த அரசர்கள் நாட்டில் அமைதியை நிலவச்செய்து குடிகள் கவலையின்றி வாழச் செய்தனர். அவர்கள் ஆட்சியின்கீழ் நாடு பல துறைகளிலும் அபிவிருத்தியடைந்தது. இந்து மதம் மேலோங்கி வளர்ந்தது. உயர்ந்த உண்மைகளும், இலக்கியச் சுவையில் ஆர்வமும் மக்களிடையே பெருகின.

சந்திரகுப்த விக்கிரமாதித்தருக்குப் பின் மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஹூணர்களின் படையெடுப்புக்களால் குப்த ராஜ்யம் நாளடைவில் சின்னபின்னம் ஆனது.

**குப்தர்களின் கீழ் இந்தியா அடைந்த உயர்நிலை:** புராதன இந்திய சரித்திரத்தில் நம் தேசம் குப்தர்களின் கீழ் அடைந்த உயர்நிலையை மற்ற எக்காலத்திலும் அடையவில்லை. இந்து நாகரிக மறுமலர்ச்சி குப்தர் காலத்தில் தோன்றியது. மக்களால் அன்புடன் பாராட்டப்பட்ட ஒரு ஸ்தாபனமாகக் குப்தர் அரசாங்கம் இருந்தது. மௌரியர்கள் ஒற்றர்களை



அஜந்தா குகைக் கோயில்கள்

நியமிப்பது வழக்கம். குப்தர்கள் இம்முறையை ஒழித்து விட்டார்கள். குப்த அரசர்கள், விஷ்ணு பக்தர்கள் எனினும், அவர்கள் காலத்தில் எம்மதத்தின் வளர்ச்சியும் தடை செய்யப் படவில்லை. பௌத்தரும் ஜைனரும் சுயேச்சை பெற்றிருந்தனர். சம்ஸ்கிருத பாஷை பலராலும் பயிலப்பட்டது. வடமொழியில் நிகரற்ற காவிய நாடகங்கள் தோன்றின. மேற்கூறியபடி, உலகிற் சிறந்த வித்துவான்களில் ஒருவரான காளிதாஸர், நாடக நூல்கள் இயற்றிய காலம் இதுவே. இப்புலவர் எழுதிய ரகுவம்சம், சாகுந்தலம், மேகதூதம் முதலியவை மிக உயர்ந்த நூல்கள். அக்காலத்திய விசாகதத்தரின்

முத்திரா ராக்ஷஸமும், சூத்திரகரின் மிருச்சகடிகையும் இன்றும் பலராலும் போற்றப்படுகின்றன. கி. பி. நான்காம் நூற்றுண்டின் முற்பகுதியிலேதான், வாயுபுராணம் இக்காலத்தில் காணும் வடிவில் தொகுக்கப்பட்டது. வசுபந்து என்னும் பௌத்தப் பெரியாரான நூலாசிரியரும் இக்காலத்தவரே. கணித சாஸ்திரமும், வான சாஸ்திரமும் சிறப்புற்று விளங்கின. ஆரியபட்டர், வராஹமிஹிரர், பிரும்ம குப்தர் முதலான புகழ் பெற்ற வான சாஸ்திரிகள் இக்காலத்தில் விளங்கியவர்கள். பல சங்கீத வித்வான்களைக் குப்த சக்கரவர்த்திகள் ஆதரித்தார்கள்.

சிற்பம், ஓவியம் முதலிய கலைகள் சிறப்புற்றிருந்தன. காபூர் ஜில்லாவில் பீடர்கேயான், தேவகார் என்னுமிடங்களிலும், சாரநாத் என்னுமிடத்திலும் காணப்படும் வேலைப்பாடமைந்த குப்தர் காலத்துக் கோவில்களின் அழகு கண்ணைக் கவரக்கூடியது. டில்லியில் காணப்படும் இரும்பு ஸ்தூபம், உலோக வேலை அடைந்த மேம்பாட்டை விளக்குகிறது. அஜந்தா குகைகளில் இரண்டு, குப்தர் காலத்தில் வெட்டப்பட்டவைகளே. அவற்றின் வேலைப்பாடுகள் நிகரற்றவை. இந்திய சிற்பக்கலை தன் உச்ச ஸ்தானத்தை குப்தர்களின் காலத்தில் அடைந்தது என மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

## 5. ஹர்ஷ சக்கரவர்த்தியார் (கி. பி. 606—647)

தானேசுவரத்தை ஆண்ட சிற்றரசர்கள் ஏழாம் நூற்றுண்டின் முற்பகுதியில் மேன்மை பெறத் தொடங்கினுர்கள். இவர்கள் வமிசத்தைச் சேர்ந்த ஆதித்ய வர்த்தனர், மகத ராஜகுமாரி மஹாசேன குப்தாவை மணம் செய்துகொண்டு சிறப்படைந்தார். இவர் மைந்தர் பிரபாகர வர்த்தனர், சக்கரவர்த்தி என்னும் பட்டப் பெயர் சூட்டிக்கொண்டு, வட இந்தியாவின் பெரும் பாகத்தைத் தம் ஆட்சிக்குக் கொண்டுவந்தார். பிரபாகரருக்கு இரு மைந்தரும், ஒரு மகளும் பிறந்தனர்; பிரபாகரரின் பெண் ராஜ்யஸ்ரீ என்பவளாவாள். கன்னேசி அரசரும் மௌகரி வமிசத்தினருமான அவந்தி வர்மர் குமாரரான கிருஹ வர்மருக்கு இவள் மணம் செய்து கொடுக்கப்பெற்ருள்.

ஏழாம் நூற்றுண்டின் தொடக்கத்தில், பிரபாகரர் ஹூணர்களைத் துரத்துவதற்காக ஒரு பெரும் படையை வடக்கே அனுப்பினுர். இந்தப் படை பிரபாகரரின் மூத்த குமாரர் ராஜ்யவர்த்

தனரின் தலைமையிற் சென்றது. இச் சைனியத்தின் பின்னுல், பிரபாகரரின் இளைய குமாரரான ஹர்ஷவர்த்தனரின் தலைமையின் கீழ் மற்றொரு சைனியமும் உதவிக்காகச் சென்றது. இளவரசர் ஹூணர்களைத் துரத்தும் வேலையில் ஈடுபட்டிருந்த போது, பிரபாகரர் உடல்நலம் இழந்தார். உடனே ஹர்ஷர் தலைநகரம் திரும்பிவர நேர்ந்தது. பிரபாகரர் உயிர் துறந்தார். ஹூணர்களைத் துரத்தியடித்த ராஜ்யவர்த்தனர் தலைநகருக்குத் திரும்பிவந்து, சக்கரவர்த்தி பதவியை வகித்தார். பிரபாகரர் இறந்ததும், அதுகாறும் அவருக்குக் கப்பங்கட்டி வந்த சிற்றரசர் பலர் தத்தம் சுயேச்சையை விளம்பரப்படுத்தலாயினர். அவர்களில் ஒருவரான மாளவ அரசர் தேவகுப்தர், வங்காள அதிபதி சசாங்கருடன் நட்புக்கொண்டு, பிரபாகரரின் மருமகனை கிருஹவர்மனை யுத்தத்தில் கொன்று, கன்னேசி நகரைப் பிடித்து ராஜ்யஸ்ரீயைச் சிறை செய்தார். தம் சகோதரிக்கு நேர்ந்த விபத்தைக் கண்டு வெகுண்டு, ராஜ்யவர்த்தனர் தேவகுப்தரைப் போரில் தோல்வியுறச் செய்தார். பின்னர், சசாங்கருடன் நடந்த யுத்தத்தில், ராஜ்யவர்த்தனர் கொலையுண்டார்.

ஹர்ஷர் உடனே சக்கரவர்த்தி பதவியை ஏற்றுர்; தேவகுப்தரின் கீழ் இருந்த ஓர் உத்தியோகஸ்தரால் விடுவிக்கப்பட்ட ராஜ்யஸ்ரீ, விந்திய மலைப் பகுதியை அடைந்து, சகோதரரால் காப்பாற்றப் படுவோம் என்ற எண்ணத்தைத் தவிர்த்து, நெருப்பை மூட்டித் தன் உயிரை மாய்த்துக்கொள்ள முற்படும் போது, அவளைப் பல இடங்களிலும் தேடிக்கொண்டிருந்த ஹர்ஷர் தக்க சமயத்தில் அவளை நெருப்பில் விழாமல் காப்பாற்றினுர். பிறகு கன்னேசியையே தம் தலைநகராக்கிக்கொண்டு, தம் ராஜ்யத்தைச் சிறப்புடன் ஆண்டார் ஹர்ஷர்.

ஹர்ஷவர்த்தனர் மிகவும் கீர்த்தி வாய்ந்த அரசர். பட்டமேற்றபின் சுமார் ஐந்தரை வருடங்களைப் போரிலேயே கழித்தார். கி. பி. 612-க்குள் வட இந்தியாவில் பீஹார், வங்காளத்தின் பெரும் பாகம் அடங்கிய நாடுகளை ஹர்ஷர் வென்றுர். பஞ்சாப் அவருடைய நாட்டு எல்லைக்கு வெளியே இருந்தது. வடநாடு முழுவதும் தம் வயம் நிலைபெற ஆண்ட ஹர்ஷ சக்கரவர்த்தியார் நருமதைக்குத் தெற்கிலுள்ள நாடுகளைக் கைப்பற்ற முயன்றுர். நருமதை ஆற்றின் கரையில் மேலைச் சாளுக்கிய அரசரான இரண்டாம் புலகேசி என்பவரின் படைஞரும் ஹர்ஷரின் படைஞரும் ஒருவரையொருவர் கி. பி. 620-ஆம் ஆண்டில் எதிர்த்துப் பெரும் போர் இயற்றினர். அப்போரில்




ஹர்ஷரின் சாம்ராஜ்யம்

புலகேசியின் படை வெற்றி பெற்றது. ஹர்ஷர் அப்போரில் தோல்வி அடைந்ததால், நருமதையைத் தம் நாட்டின் தெற்கு எல்லேயாக ஒப்புக்கொள்ள நேர்ந்தது.

ஹர்ஷர் கஞ்சத்தின்மீது 643-ஆம் ஆண்டில் கடைசியாகப் படையெடுத்தாரெனக் கூறுவர். வல்லபி அரசர் ஹர்ஷரது அதிகாரத்தை ஒப்புக்கொண்டார். அஸ்ஸாம் அரசரும் அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்.

சாம்ராஜ்யத்தின் பல பாகங்கள் ஹர்ஷர் கட்டளைக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர் பலரால் ஆளப்பட்டன. ஹர்ஷரது அரசாங்கம் சீரானது. இவர் காலத்தில் இந்தியாவிற்கு வந்த யுவான்சுவாங் என்ற சீன யாத்திரிகர், இவரது ஆட்சியைப் பற்றிச் சிலாக்கியமாக எழுதியிருக்கிருர். ஹர்ஷர் சீன தேசத்துச் சக்கரவர்த்தியின் கொலுவுக்குத் தமது தூதரை யனுப்பி அந்நாட்டுடன் வாணிபம், கலை முதலிய பல துறை களில் தொடர்பு கொண்டிருந்தார்.

தமது ரரஜ்யத்தின் பல பாகங்களுக்கும் ஹர்ஷர் தாமே சென்று குடிகளின் நன்மையைக் கவனித்துவந்தார். ஹர்ஷரின் அரசாங்கம் குப்தர் காலத்தைவிடக் கடுமையற்றதாய் விளங்கிற்று. எனினும், குற்றம் செய்தவர்கள் சிறை செய்யப்படுவார்கள். அவர்கள் உயிருடன் இருந்தாலும் உயிரை இழந்தாலும் கவனிப்பவர் இல்லை. சந்திரகுப்த விக்கிரமாதித்தர் காலத்தைப் போல ரஸ்தாக்கள் பாதுகாப்புள்ளவைகளாய் இல்லை. கல்வி நாடெங்கும் பரவியிருந்தது. மகதத்தில் நாலந்தா என்னுமிடத்திலும் வேறு பல இடங்களிலும் காணப்பட்ட பௌத்த மடங்கள், கல்விக்கும் கலைக்கும் இருப்பிடமாயின. ஹர்ஷர் காலத்தில் இலக்கியம் வளர்ச்சி யடைந்தது. ஹர்ஷரே சிறந்த கல்விமான். இரத்திஞவளி, நாகானந்தம் முதலிய புகழ்பெற்ற நாடகங்கள் அவர் இயற்றியவை. பாணபட்டர், காதம்பரி என்னும் உயர்ந்த காவியத்தையும், ஹர்ஷ சரித்திரத்தையும் இயற்றியுள்ளார். இவை இரண்டும் சம்ஸ்கிருத காவிய உலகில் மிகச் சிறந்தவை. தசகுமார சரிதம் எழுதிய தண்டியும் பாணபட்டர் காலத்தவரே. வாசவதத்தை எழுதிய சுபந்துவும் அக்காலத்தில் விளங்கியவரே.

ஹர்ஷர் பக்தி மிகுந்தவர். சிவபெருமான், சூரிய பகவான், புத்தர் முதலிய தெய்வங்களை அவர் வழிபட்டு வந்தார். நாளடைவில் பௌத்தமதக் கொள்கைகள் பல ஹர்ஷரால் பின்பற்றப்பட்டன. மிருகங்களை வதைசெய்வது தடுக்கப்பட்டது.

யுவான்சுவாங் நம் நாட்டிற்கு வந்ததைக் கொண்டாட ஹர்ஷர் கன்னேசி நகரில் ஒரு பெரிய மஹாசபையைக் கூட்டினர். இருபது சிற்றரசர் இம்மஹாசபைக்கு வந்திருந்தனர். கன்னேசி மஹாசபை முடிந்ததும் பிரயாகையில் நடந்த மற்றொரு மஹாசபைக்கு யுவான்சுவாங் அழைத்துச் செல்லப்பட்டார். இந்தக் கூட்டங்களுக்கு மக்கள் பல்லாயிரக் கணக்கில் வந்திருந்தார்கள். அரசரது பொக்கிஷம் வித்வான்களுக்கும், பிராமண, பௌத்த, ஜைனப் பெரியோர்களுக்கும் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டது. முதல் நாள், புத்த பகவான் விக்கிரகம் பூஜை செய்து கொண்டாடப்பட்டது. இரண்டாவது மூன்ருவது நாட்களில் சிவனும் சூரியனும் வழிபடப்பெற்றனர். ஹர்ஷர் ஒரு தருமசீலர். ஐந்து வருஷங்களுக்கு ஒருமுறை அவரிடம் சேர்ந்த செல்வம் இம்மாதிரி மஹாசபைகளில் மக்களுக்கு வழங்கப்பட்டது. கி. பி. 647-ஆம் ஆண்டில் ஹர்ஷர் இறந்தார். நாளடைவில் பௌத்த மதம் தன் வலிமையை இழந்தது.

## 6. பல்லவர் (கி. பி. 225—890)

கி. பி. முதல் மூன்று நூற்ருண்டுகளில், தமிழகம் இருந்த நிலைமையைப்பற்றி முன்னமே கூறியுள்ளோம். இனித் தமிழகத்தில், மிக்க கீர்த்தியுடனும் பராக்கிரமத்துடனும் அரசாண்ட பல்லவர், பாண்டியர், சோழர் முதலிய வமிசத்தினரின் அருமைச் செயல்களை வரைவோம்.

**பல்லவர் தோற்றம்** : பல்லவர் தோற்றத்தைப் பற்றி அநேகக் கூற்றுக்கள் உள. ஒரு சாரார் இவர்கள் வெளி நாட்டிலிருந்து வந்ததாகவும், பாரசீகத்திலுள்ள பார்த்தியருடன் சம்பந்தப்பட்டவராகவும் கூறுவர்.

பல்லவர் தமிழ் நாட்டு அரசர் என்று மற்ருெரு சாரார் கருதுகின்றனர். இவர்களது கூற்றுப் பின்வருமாறு :—மணிபல்லவத்தை ஆண்ட நாக அரசரின் புதல்வி பீலிவளை சோழ அரசரான கிள்ளியை மணந்தாள். இவர்களுக்குப் பிறந்த மைந்தனே தொண்டைமான் இளந்திரையன் என்பான். இவன் பல்லவ வமிசத்தின் முதல் அரசன். மணிபல்லவத்திலிருந்து வந்ததால், இவ்வமிசத்தினர் பல்லவரென அழைக்கப்பட்டனர். இக்காரணம் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. காஞ்சியில் அரசு புரிந்த பல்லவர்க்கும் தொண்டைமான் இளந்திரையனுக்கும்

எவ்விதத் தொடர்பும் இல்லை. தவிர, பழைய பல்லவர்க்கும் தமிழ் அரசர்க்கும் தீராப்பகை இருந்து வந்தது. தமிழ்ப் பாஷையை ஆதரித்தவர்கள் பிற்காலப் பல்லவர்களே. முற்காலப் பல்லவர் வடமொழியையே ஆதரித்தனர். பல்லவர்கள் புராதன ஆந்திர வமிசத்தைச் சேர்ந்தவர் என்று கூறும் டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்காருடைய அபிப்பிராயம் கவனிக்கத் தக்கது.

சிம்ம விஷ்ணு என்னும் பல்லவ அரசர் சோழ பாண்டிய ராகிய தென்னாட்டு அரசரைத் தோற்கடித்துத் தம் ராஜ்யத்தைக் காவேரி நதிக்கரை வரையில் பெருக்கினார். இவருக்குப் பின் பட்டம் கட்டிக் கொண்டவர் மகேந்திர வர்மர் (கி. பி. 600—630) என்பவர். இவர் சிம்ம விஷ்ணுவின் குமாரர். இவர் நீர்ப் பாசன வசதிகளுக்காகப் பல ஏரிகள் வெட்டினார். மாமண்டூர், மகேந்திரவாடி முதலிய இடங்களில் இவர் தடாகங்களை வெட்டி னார். முதலில் ஜைன மதத்தவராய் இருந்த இவர் சைவ மதத் தினரைத் துன்புறுத்தினார். பின்னர், அப்பர் சுவாமிகளின் அருளால் இவர் சைவ சமயத்தைத் தழுவினார். இவர் காலத் துச் சிற்பத்தின் அழகைப் புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள சிற்றன்ன வாசல் என்னும் இடத்திற் காணலாம். இவர் மத்தவிலாசப் பிரஹஸனம் என்னும் நூலை எழுதியிருக்கிறார். இவர் மேலைச் சாளுக்கிய மன்னராகிய இரண்டாம் புலகேசி யுடன் போர் புரிந்து தோல்வி அடைந்தார். அதன் பயனாக இவர் வேங்கியை இழக்க நேர்ந்தது. இவர் காலத்தில் பல்லவ ருக்கும், சாளுக்கியருக்கும் தொடங்கிய போர் ஒன்றரை நூற் றாண்டுவரை இடைவிடாது நடந்தது.

இவருக்குப் பின்னர் முதலாம் நரசிங்கவர்ம மகா மல்லர் என்பவர் பட்டத்துக்கு வந்தார். இவர் அரசாண்ட காலம் (கி. பி. 630—655) பல துறைகளிலும் சிறந்தது. மாமல்லபுரம் (மஹாபலிபுரம்) என்னும் இடத்தில் காணப்படும் ஒப்பற்ற கல் தேர்கள் இவர் காலத்தில் செதுக்கப்பட்டவைகளே. இரண்டாம் புலகேசியைத் தோற்கடித்து அவர் தலைநகரான வாதாபியை இவரது தளகர்த்தரும் சிவனடியாரும் ஆகிய சிறுத்தொண்டர் கைப்பற்றினார். அதனால் நரசிங்கவர்மர், வாதாபி கொண்ட நரசிங்க வர்மர் என்னும் சிறப்புப் பெயரை அடைந்தார். நாளுக்கு நாள் நரசிங்கவர்மர் கீர்த்தி எங்கும் பரவியது. இலங்கைத் தீவிலிருந்து அடைக்கலம் புகுந்த மானவம்மா என் னும் ராஜகுமாரனை அத்தீவுக்கதிபதியாகச் செய்தவர் இவரே.

யுவான் சுவாங் என்னும் சீன யாத்திரிகர் நரசிங்கவர்மர் காலத்திலேதான் காஞ்சீபுரத்திற்கு வந்து சேர்ந்தார். யுவான் சுவாங் காஞ்சியின் பெருமையையும், மக்களின் நிலைமையையும், நாட்டின் வளத்தையும் தம் யாத்திரைக் குறிப்பில் விவரித்திருக்கிருர்.

## 7. பல்லவ ஆட்சியின் பயன்கள்

இலக்கியம்: பல்லவ அரசர்களின் ஆதரவில் இலக்கியம் ஒப்பற்ற முறையில் வளர்ச்சியுற்றது. பல்லவர்கள் வடமொழியை ஆதரித்தார்கள். கிராதார்ஜுனீயம் முதலிய புகழ் பெற்ற வடமொழி நூல்களை எழுதிய பாரவி சிம்ம விஷ்ணுவின் சபையை அலங்கரித்தார். காவ்யாதர்சம், அவந்தி சுந்தரி கதை முதலிய நூல்களை எழுதிய தண்டி என்ற புலவர், இரண்டாம் நரசிங்க வர்மர் காலத்தில் விளங்கியவர்.

மதம்: வைணவ, சைவ சமயங்களில் புகழ்பெற்ற ஆழ்வார்களும், நாயன்மார்களும் பல்லவ அரசர்கள் காலத்தில் தோன்றி, அவர்கள் மதிப்பைப் பெற்று மதச் சீர்திருத்தம் செய்தார்கள். அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்னும் சைவ சமயக் குரவர் மூவரும் இக்காலத்தில் வசித்தவரே. நரசிங்கவர்மரின் தளகர்த்தரான சிறுத்தொண்ட நாயனரும், திருஞான சம்பந்தரும் ஒருகாலத்தவரே. தேவாரமும், நாலாயிர திவ்வியப் பிரபந்தமும் பல்லவர் காலத்தில் இயற்றப்பட்டவை. பாரதம் பாடிய பெருந் தேவனர் பல்லவர் காலத்தவரே. முதல் பல்லவர்கள் ஜைன, பௌத்த மதத்தினர். நாட்டிலும் மக்களில் பலர் அக்காலத்தில் அம்மதங்களைத் தழுவினவர்களாக இருந்திருக்க வேண்டும். வைதிக மதம் சீர்திருத்தக்காரரின் முயற்சியால் புத்துயிர் பெற்றபொழுது, பல்லவ அரசரும் மக்களும் வைதிக மதத்தில் பற்று வைத்து மேன்மேலும் ஈடுபடலானர்கள். பிற்காலப் பல்லவ அரசருட் சிலர் சைவ மதத்தினர்; சிலர் வைணவர். பல்லவ மன்னர்கள் கடுமையான மத வைராக்கியம் பாராட்டவில்லை.

தென்னிந்தியாவிலும் தக்காணத்திலும் சிற்பக் கலை: புகழ்பெற்ற பல்லவர்கள் காலத்தில் சிற்பம் மிகச் சிறப்புற்றிருந்தது என்பது யாவரும் அறிந்த உண்மை. மகாபலிபுரம், மஹேந்திரவாடி, பல்லாவரம், திரிசிராப்பள்ளி முதலிய இடங்களில் பல்லவர் வெட்டுவித்த பாறைக் கட்டடங்கள் ஒப்புயர்வற்றன. முதலாம் மஹேந்திரவர்மர் தாமே எழுதிய சங்கீத நூல் ஒன்றைக் குடிமியா மலையில் ஒரு பக்கம் முழுவதும்

செதுக்கச் செய்துள்ளார். பல்லவர் கட்டிய நூற்றுக்கணக்கான கோவில்கள், அக்காலத்தில் சிற்பக்கலை அடைந்திருந்த




கைலாசநாதர் கோயில்—காஞ்சீபுரம்
(*Copyright—Archaeological Survey of India*)

உயர்வுக்கு அழியாச் சான்றுகளாகும். மஹாபலிபுரத்தில் காணப்படும் சப்த ரதங்கள் சிற்பிகளின் அறிவிற்கும், உயரிய கற்பனைக்கும் சான்றுகளாகும்.

பல்லவர் காலத்துச் சிற்பக்கலையை எட்டாம் நூற்றுண்டில் தக்காணத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த ராஷ்டிரக்கூடர் களுடைய சிற்பக்கலையோடு ஒப்பிடலாம். ராஷ்டிரக் கூட மன்னர்களுள் சீரும் சிறப்பும் வாய்ந்தவர் முதலாவது கிருஷ்ணு என்பவர். இவர் காலத்தில் எல்லோரா என்னுமிடத் தில் மலைகளைக் குடைந்து குகைகளில் கோயில்களைச் சிற்பத் திறமையினுல் செதுக்கி இருக்கின்றனர். அவற்றில் முக்கிய மானது கைலாசநாதர் கோயில் என்பது. இதுபோலவே அஜந்தா என்னுமிடத்திலும் குகைக் கோயில்கள் இருக்கின்றன. இவை இக்காலத்தில் ஹைதராபாத்து ராஜ்யத்தில் அடங்கியுள்ளன.

**பரிபாலன முறை:** அரசாங்கத்தின் சர்வாதிகாரி அரசரே.

முதற் பல்லவர் காலத்திலேயே ராஜ்யமானது பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஆங்காங்கு உத்தியோகஸ்தர் பலர் நியமனம் பெற்றனர். ராஜப்பிரதிநிதிகளும், உயர்ந்த உத்தியோகஸ்தர் களும் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களே. மந்திரிகளும், ரகஸ்யாதிகர்களும் ராஜீய விஷயங்களில் அரசரால் கலந்து ஆலோசித்தற் குரியவர்களாயிருந்தார்கள். தீர்த்திகர்கள்



கல் ரதங்கள்—மகாபலிபுரம்
(*Copyright—Archaeological Survey of India*)

என்னும் உத்தியோகஸ்தர்கள், ஸ்நானம் செய்யத் தகுந்த குளங்கள், ஏரிகள் முதலியவைகளில் நீராட வருகிறவர்களுடைய பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்பட்டிருந்தார்கள். காடுகளைக் கவனிக்கக் குமிகர் என்ற உத்தியோகஸ்தர் இருந்தனர். சேனாதிபதிகளின் கீழ் நாயக்கர் என்பவர்கள் நியமிக்கப் பட்டார்கள்.

உயர்ந்த ஏற்பாட்டைக் கொண்ட ஓர் அரசாங்கம் சிறந்த முறையில் பல்லவர்களால் நடத்தப்பட்டது என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெற்றென விளங்கும். நிலவரியே அரசாங் கத்தின் முக்கிய வருமானம். மக்கள் அரசனுக்கு வெகுமதிகள் கொடுப்பது என்ற முறையில் அளவற்ற வருமானம் வந்தது. உப்பைச் சேகரிப்பதற்கும், வேறு பல தொழில்களுக்கும் வரி விதிக்கப்படவில்லை. அரசர் கிராமங்களிலிருந்து பதினெட்டு வழிகளில் வருமானத்தை எதிர்பார்த்தனர். பிற்காலப் பல்லவர் ஆட்சியில் வாணியர், சேணியர், பாத்திரம் செய்பவர், நகை செய்பவர் முதலியோர் சிறிது வரிப் பணத்தைச் செலுத்தினர்

என்று அறிகிறோம். திருவொற்றியூர், திருக்கோவலூர், உத்திர மேரூர் முதலிய கிராமங்கள் கிராம சபைகளால் நன்கு பரிபாலிக்கப்பட்டன. குளம் முதலியவைகளைக் கிராம சபைகள் தங்களது செலவில் பழுது பார்த்துக்கொண்டன. 9-ஆம் நூற்றாண்டில் பல கிராம சபைகள் கிராம பரிபாலன வேலைகளைக் கவனித்து



எல்லோராக் குகைக் கோயில்—சிற்ப வேலைப்பாடுகள்

வந்தன. இச்சபைகள் தேவஸ்தான காரியங்களைக் கவனித்து, கோவில் முதலியவற்றின் பரிபாலனத்தைத் திறமையுடன் நடத்தி வந்தன. இச்சபைகளின் காரியங்களைக் கவனிக்கத் தனித்தனி சிறு சபைகளும் நியமிக்கப்பட்டன. கிராமங்களின் கணக்குகளும், நிலங்களின் அளவுகளும், மக்களின் சொத்துக்களும் தவறின்றிக் கவனிப்புடன் குறிக்கப்பட்டன. கோவில்களுக்கென்று விடப்பட்ட மானியங்கள் சரிவரக் காப்பாற்றப்பட்டன.

# 8. பிற்காலச் சோழ அரசர்கள்

**விஜயாலயர்** (கி. பி. 850—871) : இச் சோழ அரசர் பல்லவர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றி, அதைத் தம் தலைநகராக்கிக்கொண்டார். விஜயாலயரின் மைந்தர் ஆதித்தர் (கி. பி. 871—907) அபராஜித பல்லவரைத் தோற்கடித்துத் தொண்டை மண்டலத்தைத் தம் வசப்படுத்திக்கொண்டார்.

ஆதித்தரின் மைந்தர் **பராந்தகர்** (கி. பி. 907—953) சிறப்பு வாய்ந்த அரசர். அவர் பாண்டிய அரசன் ராஜசிங்கனை வென்று மதுரையைக் கைப்பற்றினார். அவர் இலங்கையை வென்றார். அவர் அரசுபுரிந்த நாற்பது ஆண்டுகளில், தமிழகத்தின் பெரும்பாகத்தின் அதிபதியாய் விளங்கினார். சைவ சமயத்தில் பக்திமிகுந்த அவர், சிதம்பரத்தின் பொற்சபையின் மேல் பாகத்தைத் தங்கத் தகட்டால் வேய்ந்தார். அவர் காலத்தில் நாடெங்கும் அமைதி நிலவியதால், அரசியல் சீர்திருத்தங்களில் தம் நேரத்தைப் பயன்பெறச் செலவிட்டார்.

**மகா ராஜ ராஜ சோழர்** (கி. பி. 985—1014) : ராஜ ராஜர் இரண்டாம் பராந்தக சுந்தரச் சோழரின் புதல்வர் ; ஒரு சிறந்த போர் வீரர். தமிழ் நாட்டைத் தென்னிந்திய சாம்ராஜ்யமாகச் செய்த பெருமை இவரையே சேரும். பாண்டிய, சேர, பல்லவ அரசர்களை வென்றதுமல்லாமல், இக்காலத்திய பெல்லாரி, குடகு, வேங்கி முதலியவற்றையும் கைப்பற்றினார். இலங்கை இவரால் வெல்லப்பட்டது. சத்தியாசிரயர் இவரால் தோற்கடிக்கப்பட்டார். ராஜ ராஜரின் கப்பற்படை வலிமையுள்ளது. திறமை வாய்ந்த சோழ அரசனது கப்பற்படை இவரால் சிதைக்கப்பட்டது. லக்ஷத்தீவுகள், மால்டிவ் தீவுகள் முதலியவைகளும் இவரால் வெல்லப்பட்டன.

வெற்றி வீரர் என்கிற புகழ் அடைந்த ராஜ ராஜர் அரசாங்க நிர்வாகத்திலும் ஒரு பெரிய நிபுணர் ; நீர்ப்பாசன வசதிகள் பலவற்றைப் பெருக்கினார். இவர் காலத்தில் நாடெங்கும் நிலங்கள் மிக நுட்பமாக அளக்கப்பட்டு வரி விதிக்கப்பட்டன. அரசாங்க நிர்வாகம் சிறந்த முறையில் நடத்தப்பட்டது. ராஜ ராஜர் காலத்தில் நாகரிகம் மகோன்னத ஸ்திதியில் இருந்தது. அரசாங்க விஷயங்களை மேற்பார்வை செய்ய அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். கிராம சபைகள் கிராமங்களைச் செம்மையாகப் பரிபாலித்து வந்தன.

ராஜ ராஜர் சைவத்தில் அதிகப்பற்றுள்ளவர்; சமயாசாரியர்கள், நாயன்மார்கள் முதலியவர்கள் சிலைகளைக் கோவில்களில் வழிபாடு செய்யப் பிரதிஷ்டை செய்தவர்; தஞ்சை ராஜ ராஜேசுவரத்தில் நாயன்மார்களின் பொன்மொழிகளை நாள் தோறும் பாராயணம் செய்ய ஏற்பாடு செய்தார். தருமம் செய்வதில் ராஜ ராஜர் நிகரற்றவர்.

ராஜ ராஜர் சங்கீதத்திலும், நாடகத்திலும் அதிகப் பற்றுள்ளவர். இவர் தஞ்சையிலேயே பல நடன மாதர்களையும், சங்கீத வித்வான்களையும் வருவித்து அவர்கட்குத் தக்க உதவிகளைச் செய்து ஆதரித்தார். இவர் நாட்டியக் கலையை மக்கள் பயிலத்தக்க முறைகளில் அமைக்கச் செய்தார். கல்லூரிகள் பல கட்டப்பட்டன. அவைகளிலும், கோயில்களிலும் வேதமும் காவியமும் சாஸ்திரமும் மாணவர்கட்குக் கற்றுக் கொடுக்கப்பட்டன. இம்மாதிரியாக ராஜ ராஜர் சோழ நாட்டைச் "சோழ வள நாடு சோறுடைத்து" எனப் பெயர் பெறும்படி செய்தபின், 1014-ஆம் ஆண்டில் உயிர் நீத்தார்.

ராஜேந்திர சோழர் (கி. பி. 1012—1044): தமது தந்தையாரைக் காட்டிலும் ராஜேந்திர சோழர் புகழ் வாய்ந்தவர்; வங்காளக்குடாக்கடலில் ஒரு கப்பற்படையை அனுப்பி, அந்தமான், நிகோபார் முதலிய தீவுகளைக் கைப்பற்றச் செய்தார்; பாண்டிய கேரள அரசர்களைத் தோல்வியடையச் செய்து, அவர்களது நாடுகளைத் தம் ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டார். மேலைச் சாளுக்கியரும் அவரால் தோற்கடிக்கப்பட்டனர். வட இந்தியாவின்மேல், அவர் படையெடுத்துச் சென்று கலிங்கம், வங்காளம், கோசலம், கன்னோசி முதலிய நாடுகளை வென்று திரும்பினர். வங்காளம், பீஹார் முதலியவற்றை ஆண்ட பால அரசனை மகிபாலன் அவரால் தோற்கடிக்கப்பட்டான். இவ்வாறு வெற்றி முரசுடன் திரும்பிய ராஜேந்திரர் "கங்கைகொண்ட சோழர்" என்ற பட்டப்பெயர் சூட்டிக்கொண்டார். தமது வெற்றிகளைப் பாராட்ட ராஜேந்திரர் திருச்சி ஜில்லாவில் 'கங்கைகொண்ட சோழபுரம், என்றவொரு பெருநகரைக் கட்டி, அதில் அழகிய அரண்மனையையும் பெரியதொரு கோவிலையும் எழுப்பினர். சீன தேசத்திற்கு ராஜேந்திரர் ஒரு தூதுகோஷ்டியை அனுப்பினரென்பதை நாம் அறிவோம். சுமத்ராவிலுள்ள பாலபாங் ராஜ்யமாகிய ஶ்ரீவிஜயாவை ஆண்ட சங்கிராம விஜயோத்துங்க வர்மர், சோழ சக்கரவர்த்திக்குக் கப்பம் கட்டச் சம்மதித்திருக்கலாம். இவர் காலத்தில் சோழ ராஜ்யம் உயர்நிலையை அடைந்

திருந்தது. கிழக்கு ஆர்ச்பிலாகோவின் பெரும் பாகங்களை ஆண்டுவந்த ஸ்ரீவிஜயா என்னும் சாம்ராஜ்யத்தின்மீது, தமது கப்பற்படை வலிமையினால் ராஜேந்திர சோழர் இருமுறை படையெடுத்தார்.

ராஜேந்திர சோழருக்குப் பிறகு அவருடைய மைந்தர் ராஜாதி ராஜரும், அதிராஜேந்திரர் என்பவரும் முறையே அரசு புரிந்தார்கள். அதிராஜேந்திரர் 1074-ஆம் ஆண்டில் கொலை செய்யப்படவே முதலாம் குலோத்துங்கர் என்பவர் அரசரானார். இவர் தகப்பனார் கீழைச் சாளுக்கிய மன்னர் ராஜராஜ நரேந்திரர். இவரது தாய் வழிப் பாட்டனார் கங்கை கொண்ட சோழர். ஆகவே இவரும் இவரது சந்ததியாரும் சாளுக்கிய சோழர்கள் எனப்பட்டனர். இவர் 49 வருஷ காலம் அரசாண்டார். இவரது அரசாட்சி வெகு திறமையாக நடந்தது. சாம்ராஜ்யத்தைச் சீர்படுத்தவும், அமைதியான அரசாட்சியை நிலைநிறுத்தவும் இவர் முயன்றார். மகா ராஜ ராஜருக்குப் பின் வந்த சோழ அரசர் கங்கைகொண்ட சோழபுரத்தைத் தம் தலை நகராக்கிக் கொண்டார். குலோத்துங்கரின் தளகர்த்தரான வண்டலூர்க் கருணாகரத் தொண்டமான் கலிங்க நாட்டின்மீது படையெடுத்து, 1112-ஆம் ஆண்டில் கலிங்க சோட கங்கன் என்னும் அனந்தவர்மனைத் தோற்கடித்தார். கவிச்சக்கரவர்த்தியாரான ஜயங்கொண்டார் எழுதின கலிங்கத்துப் பரணியில் குலோத்துங்கரின் கலிங்க வெற்றியைப் பற்றிய விவரத்தைப் பரக்கக் காணலாம். குலோத்துங்கரது அரசாட்சியில் (கி. பி. 1086) நிலம் முழுவதும் சரிவர அளக்கப்பட்டது. அதே வருஷத்தில் இங்கிலாந்தில் இம்மாதிரியான கணக்குகள் எடுக்கப்பட்டு டூம்ஸ்டே புத்தகம் தொகுக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும். சுங்க வரிகளை ஒழித்த குலோத்துங்கர், 'சுங்கம் தவிர்த்த சோழர்' என்று இன்றும் புகழப்படுகிறார்.

இலக்கியத்தை வளம்பெற வளர்த்துத் தமிழ் உலகத்தில் பிரசித்தி பெற்ற சேக்கிழார் இவர் காலத்தவரே. முதலாம் குலோத்துங்கர் சைவத்தில் மிக்க பற்றுடையவர். குலோத்துங்கரது மதாபிமானம் பிற மதத்தினரிடம் பொறுமையை இழக்கச் செய்தது. ஸ்ரீரங்கத்தில் விசிஷ்டாத்வைதத்தைச் சீர்திருத்தம் செய்து அம்மத சித்தாந்தங்களைச் சிக்கற விளக்கி வந்த இராமானுசர் அரசர் தம்மைத் துன்புறுத்தினதால் சோழ நாட்டைவிட்டு விஷ்ணுவர்த்தனர் என்னும் ஹொய்சல அரசர் ஆண்ட மைசூர் சென்று, சுமார் முப்பது வருஷங்கள் அங்கு வசித்து, குலோத்

துங்கர் இறந்த பின்னரே சோழ நாட்டிற்குத் திரும்பி வந்தார். இராமானுசர் நூற்றிருபது ஆண்டுகள் இவ்வுலகில் விளங்கினர் என்று கூறுவர். குலோத்துங்கருக்குப் பின் சோழர் ஆட்சியின் அழிவுக்குரிய அறிகுறிகள் தோன்றலாயின.

**சோழர்களின் ராஜ்ய நிர்வாகம் :** சோழர்களின் அரசாங்க முறை, பண்டைக் காலத்திலேயே செப்பஞ் செய்யப்பட்டு, மிகவும் சீரான நிலைமையை அடைந்திருந்தது. மகா சோழர்கள் காலத்துக் கல்வெட்டுக்கள் அவர்களது ராஜ்ய பரிபாலன முறைகளை அறிவிக்கின்றன. முக்கியமாக, முதலாம் பராந்தகரின் சிலாசாசனங்களினின்று, கிராம சபைகள் பத்தாவது நூற்றுண்டின் முதல் பகுதியில் எவ்வாறு நிர்வகிக்கப்பட்டன என்பதை விவரமாக அறிகிருேம். ராஜ்ய நிர்வாகத்தின் அடிப்படை, கிராமங்களும், அவைகளின் தொகுதிகளுமேயாம். ஒரு தனிப்பட்ட கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு பரிபாலிப்பதைவிட, கிராமங்கள் சில சேர்ந்த தொகுதியை நிர்வாகத்திற்குரிய அளவாகக் கொள்வது எளிதாயிருந்தது. இக்கிராமத் தொகுதி கூற்றம் என்று வழங்கப்பட்டது. ஒவ்வொரு கூற்றத்தின் விவகாரங்களும் அதன் மகாசபையால் நிர்வகிக்கப்பட்டன. இம்மகாசபைகள் மிக்க அதிகாரம் செலுத்தி வந்தன. அரசரின் உத்தியோகஸ்தர்களாகிய அதிகாரிகள் இம்மகா சபைகளை மேற்பார்வை செலுத்தி வந்தனர். இம்மகாசபை அங்கத்தினர் குடிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் ஒரு வருடமே பதவி வகித்தனர். கிராமத் தொகுதிகள் தங்களது பொக்கிஷத்தைத் தாங்களே நிர்வகித்துக் கொண்டன. கிராம நிலங்கள் முழுவதிலும் அவைகட்கு அதிகாரம் உண்டு. நெருக்கடி ஏற்பட்ட சிற்சில சமயங்களில் நிலங்களை விற்கவும் அவைகளுக்குச் சுவாதீனம் உண்டு. குளங்கள், பொதுத் தோட்டங்கள், நியாய பரிபாலனம் முதலியவற்றைக் கவனித்துக்கொள்ளத் தனித்தனிச் சபைகள் ஏற்படுத்தப்பட்டன.

சில கூற்றங்கள் சேர்ந்து ஒரு நாடு என வழங்கப்பட்டது. இத்தகைய நாடுகளின் தொகுதி, கோட்டம் எனப்பட்டது. பல கோட்டங்கள் சேர்ந்தது ஒரு மாகாணம் ஆகும். சோழ ராஜ்யம் ஆறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. நில வருமானத்தில் ஆறில் ஒரு பங்கை அரசாங்கம் அடைந்ததென்று கூறப்பட்டாலும் பலவிதமான சிறு வரிகளையும் அரசாங்கம் வசூலித்தது. நீர்ப்பாசன வசதிகள் அளவற்ற பொருட் செலவில் செய்யப்

பட்டன. உதாரணமாக, கங்கைகொண்ட சோழபுரத்தில் செயற்கையாகக் கட்டிய ஏரி பதினாறு மைல்களுக்கு மேல் நீளமுள்ளது. அணைக்கட்டுகள் கட்டும் முறைகள் நன்கு அறியப்பட்டிருந்தன. சாலைகள் அடிக்கடி பழுது பார்க்கப்பட்டு, நல்ல நிலையில் இருந்தன. அரசருக்கு நிர்வாகக் காரியங்களில் உதவி புரிய அமைச்சரும், பிற உத்தியோகஸ்தரும் இருந்தனர். முக்கிய காரியதரிசி ஓலைநாயகம் எனப்பட்டார்.

**சிற்பம்:** சோழர்களின் கீழ் சிற்பக்கலை மேம்பாடடைந்திருந்ததென்பதற்கு அக்காலங்களில் கட்டப்பட்ட எண்ணிறந்த கோவில்களில் உள்ள சித்திர வேலைப்பாடுகளே சான்றுகளாம். சோழ நாட்டுச் சிற்பக்கலை அயல்நாட்டு முறைகளைச் சிறிதும் தழுவாமல் தானே தன் உயர்வால் மேன்மை அடைந்தது. தென்னாற்காடு ஜில்லாவில் உள்ள தாதாபுரம் கோவிலும், தஞ்சைக் கோவில்களும், ஜயங்கொண்ட சோழபுரக் கோயில்களும், சோழர்களின்கீழ் சிற்பமும் சித்திரமும் அமைந்த மேன்மையை நிதானமாகவே விளக்குகின்றன.

**மதம்:** சோழ அரசர்களுள் பெரும்பாலோர் சைவ மதத்தினர்; என்றாலும், பிற மதங்களின் வளர்ச்சிக்கு அவர்களில் பலர் எத்தகைய இடையூறும் செய்யவில்லை. தமிழ் மொழியின் வளர்ச்சிக்குச் சோழ அரசர்கள் பாடுபட்டார்கள்.

## 9. கிருஷ்ணதேவராயர்

விஜயநகர சாம்ராஜ்யம் துங்கபத்திரா நதிக்கரையில் சங்கம வமிசத்தரசரால் ஸ்தாபிக்கப்பட்டதென்பது உண்மையாயினும், இந்த ஸ்தாபனத்தில் தென் இந்தியா முழுவதுமே பங்கெடுத்துக் கொண்டது எனக் கூறுவது மிகையாகாது. ஒரு பிரதேசத்தினரோ, வர்க்கத்தினரோ, பாஷையினரோ விஜய நகர சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தனர் என்று கூறுவது தவறாகும்.

தக்காணத்திலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றுவதற்காகத் தோன்றிய தேசீயப் புரட்சியே விஜய நகர சாம்ராஜ்யத் தோற்றத்திற்குக் காரணமாகும். 1327-ஆம் ஆண்டில் காகதீயர்களின் வீழ்ச்சியும், டில்லி சாம்ராஜ்யத்தின் பலக் குறைவும், விஜய நகர ராஜ்யம் தோன்றி மிக்க உயர் நிலைமைக்கு வந்து முஸ்லிம் சுல்தான்களை எதிர்க்கக்கூடிய வன்மை பெறக் காரணமாயின.

விஜய நகர சாம்ராஜ்யத்தை ஆண்ட வமிசங்களில் சங்கம

வமிசமே முதன்மையானது. இந்த வமிசத்தைச் சேர்ந்த அரசர்கள் கி. பி. 1336 முதல் கி. பி. 1487 வரை அரசு புரிந்தனர். அதன் பிறகு சாளுவ வமிசத்தைச் சேர்ந்த மன்னர்கள் ஆட்சி செய்து வந்தனர். இவர்கள் கி. பி. 1487 முதல் கி. பி. 1505 வரையில் ஆதிபத்தியம் செலுத்தினர்கள். அதன் பின்னர் வந்த வமிசம் துளுவ வமிசம்.

**துளுவ வமிசமும், கிருஷ்ண தேவராயரும் (1509—1530) :** துளுவ வமிசத்து அரசர்களில் புகழ் பெற்ற அரசர் கிருஷ்ண தேவராயர். கிருஷ்ணதேவராயரின்கீழ் விஜயநகரம் அதன் சரித்திரத்திலேயே அதுவரையில் அடையாத நற்பெயரையும், புகழையும் வலிமையையும் அடைந்தது. விஜய நகர அரசர்களிலேயே இவர்தான் முதன்மையானவர்; சுல்தான்களுடன் சமத்துவமாகப் போராடினவர். கிருஷ்ணதேவராயர் வன்மையும் அழகும் பொருந்திய மன்னர். அவரைப் பார்த்த வெளிநாட்டினர் எல்லோரும் அவருடைய திறமைகளைப் பலவாறு மெச்சிப் புகழ்ந்திருக்கின்றனர். திறமையில் கிருஷ்ணதேவராயருக்கு ஒப்பான அரசர் தக்காணத்தில் இல்லை. அவர் வைணவ மதத்தவர் என்ருலும், எல்லா மதங்களிலும் உண்மையுண்டு என்பதை உணர்ந்து, சர்வமத சமரசத்தை நிலைநாட்டிய பெரியார். அவர் சிறந்த படிப்பாளர்; வித்துவான்களை ஆதரித்தார்; ஆந்திர போஜர் என்னும் பெரும் பெயருடன் விளங்கி வந்தார். தம் குடிகளின் நன்மையையே என்றும் நாடினர். அவரது எண்ணிலடங்காச் செல்வம் தகுந்தவர்களுக்கும், கோவில்களுக்கும் நற்காரியங்களுக்கும் தாராளமாய் வழங்கப்பட்டது. ஆதலால் தேசத்தினுள்ளும் வெளியிலும் தர்மவான் என்ற பெயரை அவர் அடைந்தார்; சொந்த வாழ்க்கையில் நன்னெறி தவருதவர்; பெருந்தன்மை உடையவர். கிருஷ்ணதேவராயர் யுத்தத்தில் சமர்த்தர். பகைவரைத் தண்டிப்பதில் இவர் சில சமயம் வரம்பைத் தாண்டியதுமுண்டு.

**கிருஷ்ணதேவராயரின் வெற்றிகள் :** இவர் மைசூரில் உம்மத்தூர் அதிபதியான கங்கராயரை ஜெயித்து, சிவசமுத்திரம், ஸ்ரீரங்கராயர் பட்டணம் இவைகளைப் பிடித்தார். ஒரிஸ்ஸா அரசருடைய கொண்டவீடு, உதயகிரி முதலிய கோட்டைகளைப் பிடித்தார். கிருஷ்ணதேவராயர் பீஜப்பூர் சுல்தானை அடில் ஷாவை ரெய்ச்சூர் (1520) யுத்தத்தில் தோற்கடித்தார். இந்த ரெய்ச்சூர் யுத்தம் தென்னிந்திய சரித்திரத்தில் சில மாறுதல்களை விளைவித்தது. பீஜப்பூர் சுல்தானும், தக்காணத்தின் ஏனைய

முஸ்லிம் அரசர்களும் தங்கள் நிலைமையை நினைத்துப் பார்க்கலானார்கள். அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து விஜயநகரை எதிர்க்காவிடில், தாம் அழிவது நிச்சயம் என உணர்ந்தனர். இறுதியில் அவர்கள் ஒற்றுமையுடன் படையெடுத்து, விஜயநகர ராஜ்யத்தை அழித்தார்கள். ரெய்ச்சூர் யுத்தத்தில் இந்துக்கள் வெற்றி அடைந்ததால், அவர்கள் கர்வமும் அகங்காரமும்



கிருஷ்ணதேவராயரும், அவர் தர்ம பத்தினிகளும்—திருப்பதி
(*Copyright—Archaeological Survey of India*)

அடைந்தார்கள். இந்துக்களின் இம்மனப்பான்மை நெருப்பில் நெய் வார்த்ததுபோல சுல்தான்களின் கோபத்தை வளர்த்தது. கிருஷ்ணதேவராயருடைய வெற்றிகள் அவரது ராஜ்யத்தை மிகப் பெரியதாக்கின. அக்காலத்தில் சென்னை மாகாணமும், மைசூர் முதலிய சுதேச ராஜ்யங்களும், அவரது ஆதிக்கத்தின்

கீழ் இருந்தன. கிழக்கே கட்டாக்கையும், மேற்கே சால்செட்டையும் அவரது ராஜ்யம் எட்டியது. தெற்கிலோ, தீபகற்பத்தின் முடிவுவரை அவரது ராஜ்யம் பரவி இருந்தது.

**கிருஷ்ண தேவராயரும் போர்ச்சுகீசியரும் :** போர்ச்சுகீசிய வியாபாரிகள் கிருஷ்ணதேவராயருடன் நட்புக் கொண்டார்கள். கிருஷ்ணதேவராயர் போர்ச்சுகீசியரிடமிருந்து குதிரைகள் பல வாங்கி, தம் குதிரைப் படையை அதிகப்படுத்தினர்.

**கிருஷ்ணதேவராயர் கட்டடங்களும், கல்விவளர்ச்சிக்குச் செய்த தொண்டும் :** கிருஷ்ணதேவராயர் கட்டடம் கட்டுவதில் மிக்க விருப்பமுள்ளவர் ; ஹம்பி கோவிலில் ஓர் அருமையான கோபுரத்தைக் கட்டினர். கிருஷ்ணஸ்வாமி கோவில் இவரால் கட்டப்பட்டது. ஹஸார ராமஸ்வாமி கோவிலும் தம் அரண்மனையில் இவர் கட்டியதே. இவர் நாகலாபுரம் என்னும் நகரத்தை நிர்மாணித்தார். விட்டல் ஸ்வாமியின் மிக அழகான கோவிலை இவர் கட்டத் தொடங்கினர். விஜயநகரத்தில் மிக்க ஆச்சரியமான நரஸிம்ம மூர்த்தியின் சிலையை நிறுவினர். புன்செய் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தினர் ; பல வாய்க்கால்களை வெட்டினர். கிருஷ்ணதேவராயர் அறிவுள்ளவர் ; கல்வி கேள்விகளில் சிறந்தவர். இவரது சபையில் பல வித்துவான்கள் விளங்கினர்கள் என்பதற்கும், சம்ஸ்கிருதம், தெலுங்கு பாஷைகளும், இலக்கியங்களும் வளர அரும்பாடு பட்டார் என்பதற்கும் கல்வெட்டுக்களிலிருந்து ஆதாரம் கிடைத்திருக்கிறது. இவரது சபையில் அஷ்டதிக்கஜங்கள் என்ற புகழ்வாய்ந்த அல்லஸானி பெத்தண்ணு, நந்தி திம்மண்ணு, ஜயலராஸு ராமபத்ரா, தூர்ஜடி, மல்லண்ணு, பிங்கலி சூரண்ணு, ராமராஜபூஷணு, தெனுலி ராமகிருஷ்ணு என்னும் எட்டு வித்துவான்கள் இருந்தார்கள்.

## 10. இந்தியாவில் முஸ்லிம் செல்வாக்கு

இஸ்லாம் தோன்றிய பின்னர் இந்தியாவுக்கு வெளியிலிருந்து இந்நாட்டின்மீது தனது நோக்கத்தைச் செலுத்தியவர் முஹம்மது பின் காஸிம் என்பவர். இவர் கி. பி. 714-இல் சிந்து நாட்டின்மீது படையெடுத்து வந்தார். ஆனுல் இந்தப் படை எடுப்பினுல் முஸ்லிம் ஆதிக்கம் இந்நாட்டில் ஏற்பட

வில்லை. பத்தாம் நூற்றுண்டில் கஜினி மாமூது படை எடுத்த காலத்திலேதான் முஸ்லிம்களின் செல்வாக்கும் ஆதிக்கமும் தொடங்கிற்றென்று சொல்லவேண்டும். இவர் சுல்தான் ஸபக்டிஜினுடைய குமாரர். இந்தியாவின்மீது பதினேழு தடவைகள் படையெடுத்து வந்து ஜயபாலர், ஆனந்த பாலர், ராஜ்யபாலர் போன்ற மன்னர்களைத் தோற்கடித்து, மூல்டான், சோமநாதபுரம் போன்ற ஊர்களையும், அங்குள்ள கோயில்களையும் கொள்ளையடித்து, ஏராளமாகத் தங்கம், வெள்ளி, விலைமதிப்பிட முடியாத நவரத்தினங்கள், அளவற்ற மற்றைய பொருள்கள் ஆகியவற்றைக் கொள்ளையடித்துக் கொண்டுபோனுர்.

**மாமூதின் வெற்றிக்குக் காரணங்கள் :** இந்துக்களிடையே ஒற்றுமையின்மையும், இந்து அரசர் ஒருவர்மீது ஒருவர் கொண்ட பொருமையும், பகைமையும், இந்தியாவின் சீதோஷ்ண நிலை முதலியனவும் இந்து அரசருடைய தோல்விக்குக் காரணங்களாகும். படையெடுத்து வந்தவர் தொகையைக் காட்டிலும் இந்துக்கள் எண்ணிக்கையில் மிகுந்திருந்தாலும், எல்லோரும் ஒற்றுமையுடன் தம்முள்ளிருந்த சச்சரவுகளை மறந்து பகைவரை எதிர்க்க இயலாது போனமையே அவர்களது வீழ்ச்சிக்கு அடிப்படையான காரணமாய் இருந்தது. இந்தியர்களிடையே தேசப்பற்று அக்காலத்தில் சிறிதும் இல்லை. ஒவ்வோர் அரசரும் தத்தம் சுயநலத்திற்கே போர் புரிந்தனர். அரசர்கள் ஒற்றுமையுடன் மாமூதை எதிர்த்தபோது, தங்களுள் சச்சரவிட்டுக் கொண்டு ஒழுங்கற்றிருந்தமையால், அவர்கள் எதிர்ப்பு பயன் படவில்லை. இந்தியப்படை வீரரிடையே கண்டிப்பும் ஒழுங்கும் சிறிதும் இல்லை கீழ்ப்படிதல் இன்மையால், போரில் தலைவர்கள் செய்யும் ஏற்பாடுகள் பயனற்றுப் போயின. நாட்டின் நலம் மறக்கப்பட்டுத் தத்தம் நலனே அவரவர்களுக்குப் பெரிதாகத் தோன்றிற்று.

**முஸ்லிம்களிடையே ஒற்றுமை :** இந்தியாவின்மீது படையெடுத்த முஸ்லிம்கள், பலம் பொருந்திய குதிரை வீரர்களாவர். மத வைராக்கியம், பலம், தைரியம் இவைகளெல்லாம் அவர்களது இந்தியப் படையெடுப்புக்களின் வெற்றிக்குக் காரணம். நம் நாட்டின் அளவற்ற செல்வம் அவர்கள் பேராசையை வளர்த்தது. ஒவ்வொரு படையெடுப்பும் அவர்களது பலத்தை ஓங்கச் செய்தது. அவர்களது செல்வம் அதிகரித்தது. மாமூது இந்தியாவில் சாம்ராஜ்யம் ஒன்றை ஸ்தாபிக்க விரும்பவில்லை. செல்வத்தைத் தம் நாட்டிற்குக் கொண்டுபோவதே அவரது விருப்பம்.

அவரது மன உறுதியும், நெருக்கடியிலும் தைரியமிழவாமையும் அவரது வெற்றிக்குச் சிறந்த காரணங்களாகும்.

## முகம்மது கோரி

முகம்மது கோரி 1175-ஆம் ஆண்டில் மூல்தானைக் கைப் பற்றிக் கொண்டார். அவர் மூன்று வருஷங்களுக்குப் பின் வளம் மிகுந்த குஜரத்தைக் கைப்பற்ற எண்ணி அன்ஹில்வாரா மீது படையெடுத்தபோது, அதன் அரசர் மூலராஜா, முகம்மதை யுத்தத்தில் முறியடித்துப் பெரு நஷ்டத்துடன் ஓடச் செய்தார். இதன் பிறகு, தம்மால் இயன்றவளவு சீக்கிரம் ஒரு பெரும் படையைத் தயார் செய்துகொண்டு, 1190-இல் முகம்மது கோரி இந்தியாவின்மீது படையெடுத்தார். ஒற்றுமையின்மையால் விளையக்கூடிய ஆபத்தையறிந்த இந்த அரசர் பலரும் ஒன்று சேர்ந்து டில்லியையும், ஆஜ்மீரையும் ஆண்ட சௌஹான் அரசரான பிருதிவிராஜரின் தலைமையில் தராயின் என்னுமிடத்தில் முகம்மதை எதிர்த்தனர்.

1191-இல் நடந்த முதல் தராயின் யுத்தத்தில் முகம்மது கோரி பெருந் தோல்வி அடைந்தார். போரைத் தொடர்ந்து நடத்தி முஸ்லிம்களைத் துரத்த இந்துக்கள் முயலவில்லை. கோரி நகருக்குத் திரும்பிச் சென்ற முகம்மது அடுத்த வருஷத்தில் 1192-ஆம் ஆண்டில் பெருஞ் சைனியத்துடன் படையெடுத்து வந்து, அதே தராயின் யுத்தகளத்திலேயே இந்துக்களை முற்றிலும் முறியடித்தார். பிருதிவிராஜர் யுத்தத்தில் கொல்லப்பட்டார். பிருதிவி ராஜருடன் ஒத்துழைக்காத கன்னோசி அரசர், ராஜா ஜெயசந்திரர் மற்றொரு யுத்தத்தில் வீழ்ந்தார். இரண்டாவது தராயின் யுத்தம் இந்து அரசர்களின் வீழ்ச்சியையும், முஸ்லிம் ஆதிக்கத்தின் ஸ்தாபனத்தையும் நிகழ்த்திய பெருஞ் சம்பவமாகும்.

இந்து அரசர்களின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் பல. புராதன யுத்தமுறைகளைக் கையாண்டு, சாஸ்திரங்களில் யுத்தம் நிகழ்த்த விவரிக்கப்பட்டுள்ள முறைகளையே இந்து அரசர்கள் அனுஷ்டித்தார்கள். இவர்களுள் ஒருவருடன் ஒருவர் செய்த யுத்தங்களில் இம்முறைகள் வெற்றிகரமாய் இருந்திருக்கலாம். ஆனால், வெளி நாடுகளிலிருந்து வந்த குதிரை வீரர்களின் போர்த் திறத்தை இந்துக்கள் வெற்றியுடன் எதிர்க்க இயலவில்லை. ஒழுங்கு காணப்படாத இந்து சைனியங்களின் எண்ணிக்கை எவ்வளவுதான் அதிகமாய் இருப்பினும், ஆப்கானியக் குதிரை

வீரர்களின் சிறு படை வெற்றி அடைந்தது. ராஜபுத்திரர் தைரியத்திலும், போர்க்களத்தில் உயிரைத் திரணமாக மதிப்பதிலும் ஆப்கானியர்களைவிட எவ்வகையிலும் குறைவுபட்டவர் அல்லர். எனினும், இந்துக்களுக்கு யுத்த முறைகளில் அனுபவம் இல்லாமையால், அவர்கள் தோல்வியடைய நேர்ந்தது.

தராயின் யுத்தம் முடிவடைந்தபின் இந்திய விவகாரங்களைக் கவனிக்கவும், யுத்தங்களை நடத்தவும் குத்புதீன் என்பவரை நியமித்துவிட்டு, முகம்மது கோரி குராஸான் சென்றுர். குத்புதீன் கோரியின் அடிமை ; தமது சாமர்த்தியத்தால் அவரது முக்கிய தளகர்த்தர் ஆனவர். குத்புதீன் தம் எஜமானரின் வேலையைப் பூர்த்தி செய்யலானுர். அவர் டில்லியைத் தம் வசப்படுத்திக்கொண்டு, கன்னேசி, குவாலியர் முதலியவைகளையும் கைப்பற்றிக்கொண்டார் ; குஜரத்தில் உள்ள அன்ஹில்வாராவைப் பிடித்தார்.

## அடிமை வமிசம் (1206—1290)

**சுல்தான் குத்புதீன் :** முகம்மது கோரி உயிர் துறக்கவே, இந்துஸ்தானத்தில் அவர் பிரதிநிதியாய் இருந்த குத்புதீன், கோரியின் இந்திய சாம்ராஜ்யத்திற்கே அதிபதியானுர். இவர் சுல்தானுக ஆண்டது நான்கு வருஷங்களே.

## இல்டுட்மிஷ் (கி. பி. 1211—1236)

இல்டுட்மிஷ் காலத்தில் மங்கோலியர் படையெடுத்தனர் ; எனினும், தீமை ஒன்றும் புரியவில்லை. வங்காளத்தில் தோன்றிய ஒரு கலகத்தை இல்டுட்மிஷ் திறமையுடன் அடக்கினுர். மாளவத்திற்கு அவர் அனுப்பிய சேனை விந்திய மலைகளுக்கு வடக்கே உள்ள நாடுகள் எல்லாவற்றிற்கும் அவரையே தலைவராகச் செய்தது. முஸ்லிம் உலகத்திற்கு மதத் தலைவராக பாக்டாட் நகரிலிருந்து காலிப் இல்டுட்மிஷ் இந்திய சக்கரவர்த்தி என்பதை ஒப்புக்கொண்டு, அதற்குரிய மரியாதைகளைத் தமது ஆட்கள்மூலம் கொடுத்தனுப்பினுர். அடிமை வமிசத்தை உண்மையில் ஸ்தாபித்தவர் இல்டுட்மிஷே. படித்தவர்கட்கும், பக்திமான்கட்கும் அவர் அளவற்ற உதவி செய்தார். கட்டடம் கட்டுவதில் அவருக்கு மிகுந்த விருப்பமிருந்தது. இவ்வழியில் அவர் பெருமைக்கு 242 அடி உயரமுள்ள குத்புமினுர் என்னும் ஸ்தூபி ஒன்றே தக்க சான்ருகும்.

சுல்தானு ரஸியா (1236—40): தம் மைந்தர் அரசியல் நிர்வாகத்திற்கு யோக்கியதையற்றவர் என்றுணர்ந்த சுல்தான் இல்டுட்மிஷ், தம் குமாரி ரஸியா தமக்குப் பின் அரியணை ஏறவேண்டும் என்று நியமித்திருந்தார். அவள் ஸ்திரீயாதலின், அவளுக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டன. தனக்கெதிராய்க் கலகம் செய்த பிரபு ஒருவரை மணந்து வியவகாரங்களை ஒழுங்குபடுத்த ரஸியா முயன்றுள். ஆனுல், அவளும் அவள் புருஷரும் சீக்கிரமே கொலை செய்யப்பட்டனர்.

ரஸியாவிற்குப் பின் இல்டுட்மிஷின் மைந்தர் ஒருவரும், அவருக்குப்பின் பேரர் ஒருவரும் அரியணை யேறினர். இருவரும் சீக்கிரம் தத்தம் பதவியை இழந்தனர். பின்னர் இல்டுட்மிஷின் மற்ருெரு குமாரரான நாஸருத்தீன் (1246—66) சிங்காதனம் ஏறினர். அவர் இஸ்லாம் மதத்தில் பற்றுள்ளவர். அரசியல் வியவகாரங்கள் அனைத்தும் அவர் மாமனுரும் மந்திரியுமான பால்பன் என்பவரால் கவனித்து வரப்பட்டன. நாஸருத்தீன் காலத்தில் மங்கோலியர் இடைவிடாது டில்லி ராஜ்யத்திற்கு இடையூறு செய்தனர். அவர்களை பால்பன் தோற்கடித்தார்.

1266-ஆம் ஆண்டில் நாஸருத்தீன் இறக்கவே, பால்பன் (1266—86) சுல்தானுனர். டில்லியையும், அதன் சுற்றுப்புறங்களையும் கொள்ளையடித்துவந்த கூட்டத்தாரை அவர் அடக்கினர். காடுகள் அழிக்கப்பட்டுப் பயிரிடத்தகுந்த நிலங்களாகச் செய்யப்பட்டன. சாலைகளில் திருடர் பயம் நீக்கப்பட்டது. துருக்கியப் பிரபுக்களின் பலம் குறைவுபட பால்பன் மிக்க முயற்சி செய்தார். மங்கோலியர் பயம் நீங்கவில்லையாதலின், தம் சேனையை முதல்தர நிலையில் வைக்கவேண்டியதவசியமாயிற்று. பயிற்சி பெற்ற படைவீரர் பலரை அவர் வைத்திருந்தார். அவர் வங்காளக் கவர்னரான துக்ரில் என்பவர் செய்த கலகத்தை அடக்கினர். இந்துக்களுக்கு ராஜ்யத்தில் பதவி கொடுக்கவில்லை. குடிகள் அவரைக் கண்டு அஞ்சினர். ஒற்றர்கள் மூலம் அவர் மாகாணங்களின் விஷயங்களைத் தெரிந்துகொண்டு தம் ராஜ்யத்தை ஆண்டார்.

## கில்ஜி வமிசம் (கி. பி. 1296—1315)

பின்னர் கில்ஜி வமிசத்தினர் பட்டம் வகித்தனர். இம்வமிசத்தில் சிறந்தவர் அல்லாவுத்தீன்.

மங்கோலியர், அல்லாவுத்தீன் காலத்தில் ஐந்தாறு முறை

படையெடுத்தனர். அவர் ஒரு முறை அளவற்ற பணம் கொடுத்து அவர்களது படையெடுப்பைத் தடுத்தார். மற்ருெரு முறை டில்லிக்கு அருகில் வாழ்ந்துவந்த மங்கோலியர்களில் பெரும் பாலோரைப் படுகொலை செய்தார்; கலகம் வளர்வதற்கும், துரோகம் ஓங்குவதற்கும் மூலகாரணமான செல்வத்தைக் குடிகளிடமிருந்து கைப்பற்றச் சட்டங்களைச் செய்தார். அல்லாவுத்தீன் காலத்தில் பல அருமையான கட்டடங்கள் கட்டப்பட்டன. வித்துவான்கள் பலர் அவரது சபையை அலங்கரித்தனர். அமீர் குஸ்ரூ என்னும் பிரபல கவிஞர் அவர் சபையில் இருந்தவரே.

**மாலிக்காபூரின் தக்காணப் படையெடுப்புக்கள் (1302-11):** அல்லாவுத்தீனுடைய தக்காணப் படையெடுப்புக்கள் தளகர்த்தர் மாலிக்காபூரின் தலைமையின்கீழ் நடந்தன. குஜரத்து அரசர் கரன்ராய் என்பவரைத் தம் பாதுகாப்பில் வைத்துக்கொண்ட தற்காகத் தேவகிரிஅரசர் இராமதேவர் மாலிக்காபூரால் தோற்கடிக்கப்பட்டார். மாலிக்காபூர் தேவகிரியைச் சிதைத்த பின்னர், தெலிங்காணுவில் உள்ள ஓரங்கலின் காகதீய அரசர் பிரதாப ருத்திர தேவரையும், மைசூரில் ஹொய்சல மன்னரான மூன்ரும் வீர பல்லாளரையும் தோற்கடித்துத் தெற்கு நோக்கி வந்தார். பாண்டிய ராஜ்யத்தில் சகோதரர்களான சுந்தர பாண்டியருக்கும் வீர பாண்டியருக்கும் விரோதம் ஏற்பட, வீரபாண்டியர் சுல்தான் உதவியை வேண்டினுர். அதன்மேல், மாலிக்காபூர் படையெடுத்து இராமேசுவரம் வரையில் சென்று அங்குள்ள பழைய கோவிலை அழித்ததுடன் விக்கிரகத்தையும் உடைத்துத் திரும்பிச் சென்ருர். இராமதேவரின் குமாரர் சங்கரதேவர் கப்பம் கட்டாததால், காபூர் மகாராஷ்டிர நாட்டைச் சிதைத்துச் சங்கரரையும் தலை வாங்கினுர்.

**இந்துக்கள் நடத்தப்பட்ட விதம்:** இந்துக்கள் மிகக் கொடுமையாக நடத்தப்பட்டார்கள். நில வருமானத்தில் சரி பாதியை அவர்கள் வரியாகச் செலுத்த நேர்ந்தது. இந்துக்கள் குதிரைச் சவாரி செய்யவோ, நல்லாடை உடுத்தவோ, வாழ்க்கை இன்பங்களுள் எதையும் அனுபவிக்கவோ கூடாது. ஆதலின், அவர்கள் இழிந்த நிலைமையில் வைக்கப்பெற்ருர்கள்.

**சைனியத்தில் சீர்திருத்தமும், அதற்கேற்ற பொருளாதார சோதனைகளும்:** அல்லாவுத்தீனது சைனியம் பயிற்சியும் வன்மையும் வாய்ந்தது. சுல்தான் பொருள்களின் விலையைத் திட்டப்படுத்தி, வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களைக்

குறைந்த விலைக்கு வாங்கக் கூடியவாறு அப்பொருள்களின் விலையை வலுவில் குறைத்தார். சாமான்களை இந்த விலைக்குத் தான் விற்கவேண்டுமென்று சட்டங்கள் ஏற்படுத்தினர். வியா பார நிலைமையை ஒற்றர்கள் அவ்வப்பொழுது சுல்தானுக்குத் தெரிவித்து வந்தனர். இந்தச் சட்டங்களை மீறினவர் கடுமை யாகத் தண்டிக்கப்பட்டனர். இம்முயற்சி வியக்கும்படி வெற்றி யடைந்தது.

இச் சீர்திருத்தங்களால் சைனியம், பலமும் ஒழுங்கும் பொருந்திய உயர் நிலையை அடைந்தது. மங்கோலியர் படை யெடுப்புக்கள் சுலபமாகத் தடுக்கப்பட்டன. ராஜத் துரோகம் இருந்த இடமே தெரியவில்லை. சாமான்கள் மலிவான விலைக்குக் கிடைத்தன. வாழ்க்கையின் வசதிகள் வளர்ந்தன. மாகாண கவர்னர்கள் அரசருக்குக் கீழ்படிந்தவர்களானர்கள்.

அல்லாவுத்தீனுக்குப் பிறகு மூபாரக்கு என்பவர் பட்டத் துக்கு வந்தார். பின்னர், குஸ்ரூகான் அவரைக் கொன்று பட்டம் பெற்றார்.

## துக்ளக்கு வமிசம்

பின்பு கயாசுத்தீன் துக்ளக் ஷா என்னும் பிரபு பட்டத்தை வகித்தார். அவருக்குப் பின் அவர் குமாரர் ஜுனா, முகம்மது பின் துக்ளக்கு என்னும் பட்டப்பெயருடன் சுல்தானனார்.

**முகம்மது பின் துக்ளக்கு : (1325–51) :** முகம்மது பின் துக்ளக்கு இந்து மதக் கொள்கைகளை மதித்தார்; அவற்றின் பொருட்டு இந்துக்களைத் துன்புறுத்தவில்லை. அவர் இந்துக்களை அரசாங்கத்தில் உயர்ந்த வேலைகளில் நியமித்தார்; இந்துக்களிட மிருந்த உடன்கட்டை ஏறும் கொடிய பழக்கத்தை நிறுத்த முயன்றார்.

**வரியை அதிகப்படுத்தல் :** கங்கைக்கும் யமுனைக்கும் இடையேயுள்ள நாட்டில் முகம்மது துக்ளக்கு வரியை அதிகப் படுத்தினர். பஞ்சக்காலத்திலும் அரச உத்தியோகஸ்தர் இரக்க மின்றி வரி வசூலித்தனர். மக்கள் மிக்க துன்பங்களை அனுப வித்த பின்னர், சுல்தான் குடிகள் பயிரிடுவதற்கு வேண்டிய பணத்தைக் கடனாக உதவினர்.

**தேவகிரியைத் தலைநகராக்க முயலுதல்:** டில்லி சாம் ராஜ்யம் மிகவும் பெரியதாய் வளர்ந்துவிட்டதால் தேவகிரியைத் தலைநகராக்குவது தகுதி என்று முகம்மதுவுக்குத் தோன்றி,

டில்லி நகரவாசிகள் எல்லோரையும் தேவகிரிக்குச் செல்லுமாறு கட்டளையிட்டார். தேவகிரி சென்ற பலர் வழியில் உயிர் துறந்தனர். இம்முயற்சி வீணானதைக் கண்ட சுல்தான், குடிகளை மறுபடியும் டில்லிக்குத் திரும்ப உத்தரவிட்டார்.

**நாணய முறையில் மாறுதல்கள் :** சுல்தான் முகம்மது துக்ளக்கு, நாணயத்தில் சில சீர்திருத்தங்களைச் செய்தார். அவர் வெள்ளி நாணயங்களுக்குப் பதிலாகச் செப்பு நாணயங்களே வழக்கிலிருக்க வேண்டுமென்று சட்டம் செய்தார். குடிகளில் பலர் தாங்களும் நாணயங்கள் போடலாயினர். அரசரது முயற்சி வீணாயிற்று. இதைக் கண்ட முகம்மது முன் இருந்த வழக்கத்தையே திரும்பக் கொண்டு வந்தார்.

சுல்தான் துக்ளக்கு, சீன தேசத்தின்மீது படையெடுத்தாரெனச் சொல்லப்படுகிறது. இது தவறு. உண்மையில் இவர் அதிகாரத்தை ஒப்புக்கொள்ளாத இமயமலை அடிவாரத்தில் இருந்த மலைத் தலைவனையே துக்ளக்கின் சேனைகள் தாக்கின. பலர் உயிர் துறந்தனர். எனினும், சுல்தானுடைய முயற்சி பயனுற்றது. அம்மலை நாட்டுத் தலைவர் டில்லி சுல்தானுக்குக் கப்பங் கட்ட ஒப்புக்கொண்டார்.

**நாட்டில் குழப்பம் :** 1335-ஆம் வருஷத்திலிருந்து அவரது ராஜ்யத்தில் குழப்பங்கள் தோன்றலாயின. சுல்தான் தம் புதிய முறைகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கொண்டு வந்தார். மக்கள் அம்மாறுதல்களைக் கண்டு வெறுப்பு அடைந்து கலகம் செய்யலானார்கள். அங்ஙனம் செய்தவர்களை இரக்கமின்றிச் சுல்தான் தண்டனைக்குள்ளாக்கினார். ஆதலின் குழப்பங்கள் பெருகலாயின.

**முகம்மது துக்ளக்கின் குணச் சிறப்புக்கள் :** சரித்திரத்தின் இடைக்காலத்தில் மிகவும் உயர்ந்த ஸ்தானம் பெற்ற உரிமை பெற்றவர் முகம்மது துக்ளக்கு. அவர் பெரிய படிப்பாளி; எல்லாக் கலைகளிலும் நிறைந்த அறிவு பெற்றவர்; பரந்த நோக்கமும், பிறருக்கு இல்லாத அரிய ஞாபக சக்தியும், உயர் கலைகளில் அன்பும் உடையவர். அவரே ஓர் உயர்ந்த கவிஞர். தர்க்கம், வான நூல், கணிதம் முதலிய சாஸ்திரம் எல்லாவற்றிலும் அவருக்கு நல்ல ஞானம் உண்டு. அவர் தாராள சிந்தையுடையவர். ஒழுக்கம் தவறாதவர். சிறந்த மதப்பற்றுடையவராயினும், பிறமத வெறுப்பு அவரிடம் இல்லை. அவர் தகுந்தவர்களுக்கு வெகுமதி யளியாதிரார். அவர் நியாயம் வழங்குவதில் மக்களுக்குள் வித்தியாசம் பாராட்டாதவர். அவர் பகைவரிடம்

அன்பு காட்டும் இயல்பினர். அரசாங்கத்தை முன்னேற்ற மடையச் செய்வதில் எப்பொழுதும் அவர் கண்ணுங் கருத்துமா யிருந்தார்.

துக்ளக்கு குற்றம் செய்தவரைத் தண்டிக்கும்போது கொடுமையாகத் தண்டித்தார். மக்கள் அவர் நோக்கத்தை அறியாமலும், கீழ்ப்படியாமலும் இருந்தமையால், அவர் தம் கோபவெறியில் கொடுமையாக நடந்தார். துக்ளக்கு மனித வேட்டையில் இன்புற்றவர் என்று சொல்வது முற்றிலும் தவறு கும். முகம்மது துக்ளக்குக்குப் பின்னர் டில்லி சுல்தான்களின் ஆட்சி அழியத் தொடங்கிற்று.

## பாமினி ராஜ்யம் (கி. பி. 1347—1526)

முகம்மது துக்ளக்கின் காலத்தில் டில்லி சாம்ராஜ்யம் சிதைவுற்றதனுல், சிறு ராஜ்யங்கள் தோன்றின. சுல்தானுடைய அதிகாரிகளில் ஒருவரான ஹாஸன் என்பவர், தக்காணத்தில் தௌலதாபாத்தைக் கைப்பற்றி, 1347-இல் சுயேச்சை அடைந் தார். சரித்திரத்தில் அல்லாவுத்தீன் என்று புகழ் பெற்றவரும், பாமினி ராஜ்யத்தை ஸ்தாபித்தவரும் இவரே.

அல்லாவுத்தீனுக்குப் பிறகு, அரசரான முகம்மதுஷா (1358-1373) விஜய நகரம், தெலிங்கான இவற்றின் அரசர்களுடன் போர் புரிந்தார். இந்தப் போர்களில் பெருங் கொடுமைகள் புரியப்பட்டன. ஐந்து லட்சம் இந்துக்களை முகம்மதுஷா அழித்தார். முகம்மதுஷாவுக்குப் பின்வந்த சுல்தான்கள் காலத் தில் நாட்டில் கலவரமே மிகுந்தது.

பாமினி வமிசத்து எட்டாம் அரசரான பிரோஸ்ஷா (1397-1423) காலத்தில் ஒரு கொடிய பஞ்சம் உண்டாகி மக்கள் மிக வருந்தினுர்கள். பிரோஸ்ஷா மிகவும் மத வைராக்கியமுள்ளவர்; தம் நாட்களெல்லாவற்றையும் இந்து அரசர்களுடன் போர் புரிவதிலும், அவர்களை அடக்குவதிலும் கழித்தார். விஜயநகரின் மீது ஆண்டுதோறும் பிரோஸ்ஷா படையெடுத்தார்.

பிரோஸ்ஷாவின் சகோதரராகிய சுல்தான் ஆமத்ஷா (1422—35) விஜய நகர ராஜ்யத்தை எதிர்த்தார். விஜய நகர ராஜ்யம் அவரால் முடிந்த அளவு அழிக்கப்பட்டது. குழந்தை களும் மகளிரும் வதை செய்யப்பட்டார்கள். கடைசியில் 1424-ஆம் ஆண்டில், விஜய நகர ராஜ்யத்துடன் ஆமத்ஷா சமாதானம் செய்துகொண்டார்.

பிரோஸ்ஷாவுக்குப்பின் வந்த அரசருட் சிறந்தவர் மூன்றும் முகம்மது ஷா (1463—82). முகம்மது கவான் என்பவர் இவரிடம் திறமையுடன் மந்திரியாகவும் தளகர்த்தராகவும் சேவை செய்தார். கவான் பெல்காம் கோட்டையையும், கோவா நகரையும் பிடித்தார். முகம்மதுஷா 1481-ஆம் ஆண்டில் காஞ்சீபுரத்தின்மீது படையெடுத்து, அளவற்ற செல்வத்துடன் தம் நாடு திரும்பினர். குடியிலேயே மூழ்கிஇருந்த முகம்மதுஷா, உண்மைச் சேவகம் செய்த முகம்மது கவானை அவர் பகைவர் சொற்களைக் கேட்டுக் கொல்லுமாறு உத்தரவிட்டார். பிறகு தமது தவற்றை உணர்ந்த முகம்மது ஷா அதே வருஷம் உயிர் துறந்தார். முகம்மது கவான் அரச சேவகத்திலேயே தமது வாழ்க்கையைக் கழித்தவர். அவர் பல போர்கள் புரிந்து நாடுகளை வென்று பாமினி ராஜ்யத்தைப் பெருக்கினர். அவர் கொங்கணப் பிரதேசத்தில் இந்து அரசர்கள் பலருடன் போர் புரிந்து, பல கோட்டைகளைப் பிடித்தார். ஒரிஸ்ஸா அரசன் அவரால் தோற்கடிக்கப்பட்டுக் கப்பம் கட்ட நேர்ந்தது. விஜய நகர அரசரான நரசிங்க ராயர் அவரால் முறியடிக்கப்பட்டார். அரசியலிலும் கவான் மிகச் சிறந்தவர். அவர் நாட்டில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். பிரபுக்களின் செருக்கை அடக்கினர்; நியாய பரிபாலன முறையையும் ராணுவத்தையும் சீர்திருத்தினர். கல்வியின் அபிவிருத்திக்காகக் கவான் பாடுபட்டார்; பீடாரில் ஒரு கல்லூரி ஏற்படுத்தினர். நாட்டின் வருமானம் கவானல் ஒழுங்குபடுத்தப் பட்டது. லஞ்சம் வாங்கிய உத்தியோகஸ்தர் கடுமையாகத் தண்டிக்கப் பட்டனர். குடிகள் நாணயத்திலாவது தானியத்திலாவது வரி செலுத்த அனுமதிக்கப்பட்டார்கள். முகம்மது கவான், பெரிய ராஜ தந்திர நிபுணர்; தம் சொந்த சௌகரியத்தையும் மறந்து நாட்டின் பெருமைக்காக உழைத்தவர்; ஏழைகளுக்கும் தம்மால் இயன்ற நன்மைகளைச் செய்தவர். இவருக்குப் பின் பாமினி ராஜ்யம் அழிவு அடையலாயிற்று.

## 11. பாபர் (கி. பி. 1526—1530)

லோடி வம்சத்தின் கடைசி அரசரான இப்ராஹீம் மிகக் கொடியவர். அவர் ஆப்கானியப் பிரபுக்களைத் தம் முன்னிலையில் கைகட்டி வாய்புதைத்து நிற்கும்படி செய்தும், தம் குடிகளை மிகக் கொடுமையாக நடத்தியும் வந்தார். அவருக்கு, ராஜ்

யத்தை ஆளும் திறமை சிறிதும் இல்லை. அவருடைய ஆட்சியில் நாடெங்கும் கலகங்கள் உண்டாயின. அப்பொழுது, இப்ராஹீமுக்குச் சிறிய தந்தையான அல்லாவுத்தீனும், பஞ்சாப் கவர்னரான தௌலத்கான் லோடியும் இப்ராஹீமைத் தண்டிக்கக் கருதி, காபூல் அரசரான பாபரைத் தங்களுக்குத் துணைசெய்யும்படி வேண்டினர். இந்தியாவின் மீது படையெடுத்து வந்து இந்நாட்டில் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென எண்ணி அதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்த பாபருக்கு இது 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டது போல' ஆயிற்று. ஆதலின், பாபர் அவ்வேண்டுகோளுக்கிணங்கி, பெருஞ் சேனையைத் திரட்டிக் கொண்டு இந்தியாவின்மீது படையெடுத்தார்.

கி. பி. 1526-இல் பாபர் பானிப்பட்டு என்னுமிடத்தில் இப்ராஹீமை யெதிர்த்தார். இப்போரில்தான் நம் நாட்டில் முதன் முதல் பீரங்கிகள் உபயோகிக்கப்பட்டன. அதன் பயனாக எதிரியின் சேனையில் ஆயிரக்கணக்கான வீரர்கள் போரில் கொலையுண்டனர். முடிவில் இப்ராஹீமும் இறந்தார். பின்னர், போரில் வெற்றி பெற்ற பாபர் ஆப்கானியரது டில்லி ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டு, அந்நாட்டில் முடிசூட்டிக்கொண்டார். பிறகு பாபர் இரண்டு படைகளை அனுப்பி, டில்லியையும் ஆக்ராவையும் தம் வசமாக்கிக்கொண்டார்; அங்குக் கிடைத்த அளவற்ற பொருளைத் தம் போர்வீரர்களுக்கும், காபூல் நாட்டுக் குடிகளுக்கும் வழங்கினார்.

பாபருடைய போர்வீரர்கள் தங்களுக்குக் கிடைத்த பொருள்களுடன் காபூலுக்குத் திரும்பிச் செல்ல விரும்பினர். ஆனால், பாபர் அவர்களுக்கு நன்மதி கூறி, அவர்கள் கருத்தை மாற்றிவிட்டார்; பின்னர், தம் திறமையினால் ஆப்கானியப் பிரபுக்களைத் தமக்குச் சிறந்த துணைவர்களாக்கிக் கொண்டார்.

இனி, இந்திய நாட்டில் முகலாய ராஜ்யத்தை ஸ்தாபித்த பாபரது இளமைப் பருவத்தைக் குறித்துச் சிறிது கூறுவோம்.

பாபருடைய தந்தை துருக்கிய ஜாதியையும், தாய் மங்கோலிய ஜாதியையும் சேர்ந்தவர்கள். ஆதலின் அவரிடம் மங்கோலியருடைய ஊக்கமும், துருக்கியருடைய மன உறுதியும் காணப்பட்டன. தைமூர் இறந்தவுடன் அவருடைய பெரிய ராஜ்யம் சிதைவுண்டு, பல சிறிய ராஜ்யங்களாகப் பிரிந்து போயிற்று. பாபர் தந்தைக்கு அவற்றுள் ஒரு சிறிய பாகந்தான் கிடைத்தது. 1494-இல் அவர் காலமானார். பாபர் பர்க்கானா

என்னும் மாகாணத்துக்கு மன்னரானார். அப்பொழுது அவருக்கு வயது பதினொன்று. அவர், தைமூரைப்போல் தாமும் ஒரு பெரிய ராஜ்யத்தை ஆளவேண்டுமென ஆசைகொண்டார். பத்து வருஷகாலம் விடாமுயற்சியுடன் போராடி இருமுறை ஸாமர்க்கண்ட் நாட்டை வென்று அதற்கு வேந்தரானார்; ஆனால் அங்கிருந்து துரத்தப்பட்டு, கிழக்கில் உள்ள காபூல் நாட்டை அடைந்தார். அங்கே தைமூர் வம்சத்தினர் ஆண்டு வந்த ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டு அதற்கு அரசரானார். காபூலில் ஆட்சிபெற்ற பின்னரும், பாபருக்கு ஸாமர்க்கண்டை மீண்டும் வெல்லவேண்டு மென்னும் விருப்பம் விட்டபாடில்லை. கி. பி. 1512-இல் அவர் அங்குப் படையெடுத்துச் சென்றார்; ஆனால் பின்னர் நிகழ்ந்த போரில் தோல்வியுற்றார்; ஆதலின் இனி ஸாமர்க்கண்டை வெல்ல இயலாது என அறிந்தார்; பெரிய ராஜ்யத்தை ஸ்தாபித்து ஆள்வதற்குரிய நாடு இந்துஸ்தானமே என உணர்ந்தார்; அதற்கிணங்க, சித்ரால் என்னும் நாட்டிற் கருகிலுள்ள எல்லைப்புற மாகாணத்தின்மீது படையெடுத்தார். அதற்குப்பிறகு பல ஆண்டுகள் கழித்து நிகழ்ந்தது, முன்னர்க் கூறிய பானிப்பட்டுப் போர்.

அப்பொழுது ராஜபுதனத்தில் ஆண்டுவந்த ராஜபுத்திரச் சிற்றரசர் பலர், மேவார் மன்னரான ராணா சங்கிராமசிங் என்பவர் தலைமையின் கீழ் பாபருடன் போர் புரிய ஆயத்தமாயினர். பாபர் ஸிக்ரி என்னுமிடத்தில் தங்கி, யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவந்தார்.

ராஜபுத்திரர்களுடைய ஆண்மையையும், வீரத்தையும் பற்றிக் கேள்வியுற்ற முகலாய வீரர்கள் மிக்க மனக் கலக்கமுற்றனர். அச்சமயத்தில் சோதிடன் ஒருவன் 'ஹிந்துக்களே வெற்றி பெறுவார்கள்' என்று சொன்னான். இனி பாபருடைய சேனையின் நிலைமையைப் பகரவும் வேண்டுமோ? நடுநடுங்கி விட்டது. அதனை யறிந்த பாபர், இனி மதுபானம் செய்வதில்லையெனச் சபதம் செய்துகொண்டார். கையிலிருந்த மதுவையெல்லாங் கீழே கொட்டிவிடும்படி யுத்த வீரர்களுக்குக் கட்டளையிட்டார்; அவர்களுக்கும் புத்தி புகட்டக் கருதி, யுத்த வீரர்களுடைய கடமைகளையெல்லாம் எடுத்துரைத்தார். அவற்றைச் செவியுற்ற அப்போர் வீரர்களுக்கு அச்சமும் மனக்கலக்கமும் அகன்றன. உடனே கான்வாஹா என்னுமிடத்தில் நிகழ்ந்த போரில், ராஜபுத்திரர்கள் தோற்றுப் புறங்காட்டி ஓடினர். பின்னர், பாபர் 'சாண்டெரி' என்னுங் கோட்டையை முற்றுகை

செய்து, மாளவத்தையும் தமதாக்கிக் கொண்டார். அதன் பிறகு ராஜபுத்திரர்கள் பாபரை எதிர்க்கவில்லை.

கி. பி. 1528-இல் பாபர் பீஹாரிலும் வங்காளத்திலும் கலகஞ் செய்த ஆப்கானியரை, கோக்ரா என்னுமிடத்தில் முறியடித்து, அவ்விரு மாகாணங்களையும் சேர்த்துக்கொண்டார். இவ் வண்ணம், பாபர் மூன்று போர் புரிந்து வடஇந்தியா முழுவதையும் வென்று விட்டார்; ஆனால், அந்நாடுகளைத் தம் ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டு அத்தலைவர்களைத் தலையெடுக்க வொட்டாமல் தொலைத்து விடவில்லை. அம்மன்னர்கள், பாபருடைய வீரத்திற்கும், பராக்கிரமத்திற்கும் அஞ்சி, அவருக்கு ஒருவாறு கீழ்ப்பட்டிருந்தனர். ஆதலால் பாபர் ஸ்தாபித்த மொகலாய ராஜ்யம் வேரூன்றி நிலைபெற்றுவிட்டது என்றாவது, அதற்குப் பகைவர்களினால் ஏற்படக்கூடிய அபாயம் எதுவுமில்லை என்றாவது கொள்வதற்கில்லை.

யுத்தங்கள் முடிந்து நாட்டிலமைதி யுண்டானதும், பாபர் தாம் வென்ற ராஜ்யத்தை ஒழுங்குபடுத்துவதில் கருத்தைச் செலுத்தினார்; ஆனால், அதன் பின்னர், ஒரே ஒரு வருஷ காலந்தான் ஜீவித்திருந்தார். அவர் ராஜ்ய பரிபாலனத்தில் தமக்கு உதவி செய்ய, ரங்கில்தாஸ் என்னும் ஒரு ஹிந்துவைத் துணைவனாக்கிக் கொண்டார்.

பசுவைப் பலியிட வேண்டாம் என்றும், பிறமதக் கோயில் களை யழிக்கவேண்டாம் என்றும் பாபர் தம் புதல்வனுக்குப் புத்தி கூறினார். அவர் இந்நாட்டு ஜனங்களை விரும்பவில்லை யெனினும் அவர்களை நியாயமாகவும், மதப் பகையின்றியும் ஆண்டுவந்தார்; ஆக்ராவைத் தலை நகராக்கி, அதைப் பெரிதும் அழகுபடுத்தினார்.

கி. பி. 1530-ஆம் வருஷம் டிஸம்பர் மாதத்தில், நாற்பத் தொன்பதாம் வயதில் பாபர் ஆக்ரா நகரில் உயிர் நீத்தார்; காபூலில் அடக்கஞ் செய்யப்பட்டார். அவர் தம் மைந்தன் நோயை ஏற்றுக் கொண்டு, அவனைப் பிழைப்பித்து, தம் உயிர்நீத்த செய்தியை நீங்கள் அறிவீர்கள்.

பாபரிடத்தில் ஆண்மை, வீரம் முதலிய சிறந்த குணங்கள் குடிகொண்டு விளங்கின. குதிரைச் சவாரி செய்வதிலும், நீந்துவதிலும் அவர் மிக்க சமர்த்தர். தயை, அன்பு, விடாமுயற்சி முதலிய நற்குணங்கள் பாபரை உறைவிட மாகக் கொண்டிருந்தன. அவர் ஒரு சிறந்த பாரஸிகக்

கவி. அவருக்குத் துருக்கி பாஷையிலும் மிகுந்த தேர்ச்சி யுண்டு. அவர் அம்மொழியில் தம் சுயசரிதத்தை எழுதி யுள்ளார்; அதில் எதையும் ஒளிக்காமல், தம் குணங்களையும் குற்றங்களையும் உள்ளது உள்ளவாறே குறித்துள்ளார்.

## 12. அக்பர் மகா சக்கரவர்த்தி

### (கி. பி. 1556–1605)

கி. பி. 1556-ஆம் வருஷம் பெப்ரவரி மாதம் 14-ஆம் தேதி அக்பர் பஞ்சாபில் குருதாஸ்பூர் என்னும் பிரிவில் உள்ள கலனூர் என்னும் பட்டணத்தில் முடிசூட்டப் பெற்றார். அப்பொழுது அவருக்கு வயது பதின்மூன்று. அதனால், அவரது அத்தையின் கணவரான பைராம்கான் என்பவர் ராஜ்ய காரியங்கள் அனைத்தையுங் கவனித்து வந்தார். அக்பர் பட்டத்துக்கு வந்தபொழுது, அவருக்குப் பஞ்சாபின் ஒரு சிறிய பாகந்தான் சொந்தமாக இருந்தது. அவருடைய போர்ப் படைகளும் மிகக் குறைவாக இருந்தன. அவர் ஹிந்துக் களையேயன்றி, முஸ்லிம் தலைவர்களையும் வெல்லவேண்டி யிருந்தது. பைராம்கான் உதவியினால் தமக்கு ஏற்பட்டிருந்த கஷ்டங்களினின்றும் தம்மை விடுவித்துக்கொண்டு, கடைசியில் இந்துஸ்தானம் முழுவதையும், தக்ஷிணத்தின் ஒரு பாகத்தை யும் தமதாக்கிக் கொண்டார். ஆனால், அவர் இம்முயற்சியில் சுமார் 20 வருஷ காலத்தைச் செலவிட்டார்.

ஹுமாயூன் இறந்தவுடன், ஆதிலிஷாவின் மந்திரியான ஹெமு என்பவன் பெருஞ்சேனையைத் திரட்டிக்கொண்டு, ஆக்ராவை எளிதிற் கைப்பற்றினான்; டில்லியை நோக்கிப் படையெடுத்தான்; பின்பு டில்லியின் பாதுகாப்புக்காகப் பைராம்கான் நியமித்திருந்த டார்டிபெக் என்பவனைத் துரத்தி விட்டு, ராஜா விக்கிரமஜித் என்னும் விருதுப் பெயர் பூண்டு, தன்னை டில்லிச் சக்கரவர்த்தியெனச் சொல்லிக் கொண்டான். அதே சமயத்தில், காபூலிலும் கலகங்கள் உண்டாயின. ஆயினும், பைராம்கான் சிறிதும் மனந்தளரவில்லை.

ஹெமு பெரும் படையுடன் பானிப்பட்டை நோக்கி வந்தான். 1556-ஆம் வருஷம் நவம்பர் மாதம் 5-ஆம் தேதி அவனுக்கும் அக்பருக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. அதில் ஹெமு கொலையுண்டான். உடனே டில்லியும், ஆக்ராவும்

அக்பருக்குச் சொந்தமாயின. ஸிகண்டரும் ஆதிலிஷாவும் மற்றவர்களும் அக்பருக்குக் கீழ்ப்படிந்தனர். பிறகு ஆதிலிஷா கொலையுண்டான். பின்னர், 'மத்திய இந்தியாவின் திறவு கோல்' எனப்படும் குவாலியரும் ராஜபுதனத்தில் முக்கிய ஸ்தலமான ஆஜ்மீரும் அக்பர் வசமாயின.



அக்பர் மகா சக்கரவர்த்தி
(*Copyright - Archaeological Survey of India*)

இவ்வெற்றிகளை யெல்லாம் முன்னின்று பெறுவித்த பைராம்கான் கர்வங்கொண்டு, கடுமையாக நடந்துகொண்டதனால், அக்பர் அவரை அதிகாரத்திலிருந்து விலக்கிவிட்டு ராஜ்யபாரத்தைத் தாமே ஏற்றுக் கொண்டார். அப்பொழுது அவருக்கு வயது பதினெட்டு. துஷ்டர்களது துர்போதனையினால் கலகம் செய்த பைராம்கானை அக்பர் மன்னித்து, மெக்காவுக்கேகும்படி அனுப்பிவிட்டார். ஆனால் போகும் வழியில் பகைவன் ஒருவனால் அவர் கொலையுண்டார்.

போர் செய்யாமல் தமது ராஜ்யத்தை ஒன்றுபடுத்தி ஆளவேண்டுமென்பது அக்பர் விருப்பம். ஆனால், அவ்வெண்ணம் நிறைவேறாது என்பதை அவர் உணர்ந்தார்; முதலில் மாளவ நாட்டையும், பின்னர் பீஹாரையும் வென்றுகொண்டார். அவர் மத்திய இந்தியாவிலுள்ள 'காண்டவனம்' என்னும் நாட்டின்மீது படையெடுத்துச் சென்றபொழுது, அந்நாட்டரசியான துர்க்காவதி மிக்க பராக்கிரமத்துடன் போர் செய்தாள். எனினும், அக்பர் அவளை வென்று அந்நாட்டைத் தமதாக்கிக் கொண்டார். அபுல்பஜல் என்னும் ஆசிரியர் துர்க்காவதியின் ஆட்சியையும், பராக்கிரமத்தையும் மிகவும் புகழ்ந்து எழுதியிருக்கிறார்.

கி. பி. 1561-இல் அக்பர் ஜயபுர அரசர் மகளைத் தாம் மணந்து கொண்டும், ஜோதிபுர அரசர் பேர்த்தியைத் தம் மைந்தன் ஸலீமுக்கு மணஞ் செய்வித்தும் ராஜபுத்திரர்களைச் சினேகம் செய்துகொண்டார். ராஜபுத்திர அரசர்களுள் பலர் அக்பரைத் தங்களுக்குத் தலைவராக ஒப்புக்கொண்டு, அவருடன் சமாதானமாக இருந்துவிட்டார்கள். மீவார் அரசர் மட்டும் அக்பரை மதிக்கவில்லை. அதனால் கி. பி. 1567-இல் அக்பர் சித்தூரை முற்றுகையிட்டார். ராணு பிரதாபஸிங் பலமுறை போரிட்டுக் கடைசியில் அரவல்லி மலைக்குச் சென்று, அங்கே உதயபுரம் என்னுமிடத்தில் தமது அதிகாரத்தை ஸ்தாபித்துச் சுகமாக வாழ்ந்து வந்தார். கி. பி. 1572-இல், அக்பர் குஜராத்தின்மீது படையெடுத்துச் சென்று அந்நாட்டையும் வென்றுர்.

அப்பொழுது அக்பருக்குப் பெரும்பொருள் கிடைத்ததனுல், அவருடைய பொக்கிஷ மந்திரியான ராஜா தோடர்மல் பொருளாதார சம்பந்தமான சீர்திருத்தங்களைச் செய்ய அனுகூலம் உண்டாயிற்று. போர்ச்சுகீசிரியருக்கு அரசருடன் நட்பு உண்டாகவும், கிறிஸ்தவப் பாதிரிகள் மதப் பிரசாரம் செய்து பலரைக் கிறிஸ்தவர்களாக்கினுர்கள்.

கி. பி. 1574–75-இல் அக்பர் வங்காளத்தில் கலகஞ் செய்து வந்த தாவுத்கானை வென்று வங்காளத்தையும் தமது ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். உதயபுரத்தில் தமது அதிகாரத்தை நிலைநாட்டி அரசு செய்துவந்த மீவார் அரசர் மறுபடியும் கலகம் செய்தார். அவரை வென்று வரும்படி அக்பர் தம் சேனைத்தலைவரான ராஜா மான்சிங் என்னும் ராஜபுத்திரரை யனுப்பினுர். கி. பி. 1576-ஆம் வருஷம், ஜூன் மாதம் ஹல்டிகாட் என்னுமிடத்தில் மான்ஸிங் மீவார் அரசரை அடியோடு தோற்கடித்து விட்டார்.

கி. பி. 1579-இல் அக்பருக்குச் சகோதரரான ஹகிம் மிர்ஜா என்பவர் காபூலில் கலகஞ் செய்து பஞ்சாபின்மீது படையெடுத்து லாகூரை எதிர்த்தார். அவரை எதிர்த்துச் செய்த போரில் மான்ஸிங் தோல்வியடையவும், அக்பர் தாமே நேரிற் சென்று அவரை வென்றுர். ஹகிம் அக்பருடைய அதிகாரத்தை ஒப்புக்கொண்டதனுல், முகலாய அரசர் அவரையே காபூலுக்குத் தம் பிரதிநிதியாக நியமித்தார்.

மாளவ நாட்டரசர் அக்பருக்கு விரோதமாக மும்முறை கலகஞ் செய்த போதிலும், அக்பர் அவரை மும்முறையும்

மன்னித்து, அவரையே மாளவத்தின் கவர்னராக்கினர். இவ்வாருக, அவர் பகைவர்க்கும் அருள்செய்து அன்பைச் சம்பாதித்துக் கொண்டார். கி. பி. 1586-இல் ஹகிம் இறந்து போனதால், காபூல் நாட்டிற்கு அக்பர் ராஜா மான்ஸிங்கைக் கவர்னராக்கினர். அப்பொழுது அவர் லாகூரைத் தமது ராஜ்யத்தின் தலைநகரமாக்கிக்கொண்டு, அங்கிருந்து சுமார் 14 வருஷங்கள் வரையில் ராஜ்யபாரம் நடத்தினர். கி. பி. 1587-இல் காஷ்மீரம் அக்பர் வசப்பட்டு விட்டது. பிறகு மூன்று வருஷங்களுக்குள் கத்தியவாரும் ஸிந்து நாடும் அவருக்குச் சொந்தமாயின. காண்டஹாரும் அவருடைய வசமாய் விட்டது. இவ்வாருக அக்பருடைய ராஜ்யம் வடக்கில் காபூலிலிருந்து தெற்கில் விந்திய பருவதம் வரையிலும், மேற்கில் ஸிந்து நாட்டிலிருந்து கிழக்கில் வங்காளம் வரையிலும் பரவிவிட்டது. பிறகு அக்பர் தக்ஷிணத்தை வெல்வதில் முயன்று வரலானர்.

கி. பி. 1595-இல் அஹமது நகரத்தை ஆண்டுவந்த அரசருக்கு விரோதமாக அவருடைய பிரபுக்கள் கலகஞ் செய்தனர். அப்பொழுது பீஜப்பூர் அரசர் அஹமது நகரத்தரசருக்குத் துணை செய்ததுமன்றி, அக்பர் மைந்தரான மூராட் என்பவரையும் சகாயத்துக்கு வேண்டினர். அதுவே தக்க சமயமெனக் கருதி மூராட் அஹமது நகரத்தின்மீது படையெடுத்துச் சென்ருர். அப்பொழுது கான்தேஷ் நாட்டரசர் முகலாய அரசர் அதிகாரத்தை ஒப்புக்கொண்டு, மூராட் பக்கம் சேர்ந்து கொண்டார். மூராட் அஹமது நகரத்திற்கு வந்தபொழுது, அவரை வரவழைத்த பீஜப்பூர் மன்னர் தம்மூரை நோக்கிச் சென்றுவிட்டதனல், சந்த்பீபீ என்னும் ஸ்திரீ ரத்தினம் கோட்டையைக் காத்துச் சத்துருக்கள் நுழைய விடாமல் தடுத்தாள்.

சந்த் பீபீ அஹமது நகரத்துச் சுல்தான் குடும்பத்திற் பிறந்தவள். இவள் பீஜப்பூர் சுல்தானை அலி அதில்ஷா என்பவரை மணந்து கொண்டாள்; கணவன் இறந்ததும் சிலகாலம் பீஜப்பூரை ஆட்சி செய்து வந்தாள். அஹமது நகரத்து சுல்தான் ஒருவர் பிள்ளையில்லாமல் இறந்தபொழுது பட்டத்தைக் குறித்து நால்வர் சண்டையிட்டார்கள். அந்நால்வருள் காலஞ்சென்ற சுல்தானுக்குச் சகோதரன் மகனே பட்டத்துக்கு உரியவன். அவன் சிறு குழந்தை. சந்த் பீபீ அக்குழந்தைக்கு

அத்தையாவாள். அக்குழந்தைக்குப் பட்டங் கட்டுவிக்கக் கருதி சந்த் பீபீ தனது தாய்நாடான அஹமது நகரத்துக்கு வந்தாள்.

மூராட், சந்த்பீபீயை வெல்ல முடியாதென்று அறிந்து அவளுடன் சமாதானஞ் செய்துகொண்டு திரும்பிவிட்டான். ஆனால் அஹமது நகரத்தில் மறுபடியும் கலகம் உண்டாயிற்று. அக்பர் தாமே நேரில் போருக்குப் புறப்பட்டார். சந்த்பீபீ முன்போலவே வெகு தைரியமாகக் கோட்டையைப் பாதுகாத்து வந்தாள். ஆனால், அவளுடைய போர்வீரர்கள், சந்த் பீபீ வஞ்சகமாக அக்பருக்குக் கோட்டையை விட்டுவிட எண்ணியிருக்கிறாளென்று அவள்மீது தப்பு அபிப்பிராயங்கொண்டு, அவளுக்கு விரோதமாகக் கிளம்பி அவளைக் கொன்றுவிட்டார்கள். அஹமது நகரம் அக்பர் வசமாயிற்று.

அக்பர் தக்ஷிணத்திலிருந்தபொழுது, அவருடைய மூத்த மைந்தரான ஸலீம் என்பவர் அவருக்கு விரோதமாகக் கிளம்பி, அல்லஹாபாத்திலிருந்த பொக்கிஷத்தைக் கைப்பற்றிக்கொண்டு, தாமே முகல் மன்னர் என்று தெரிவித்தார்; அன்றியும், அக்பருக்குச் சிறந்த நண்பரும் ஆலோசனைகள் உரைப்பவருமான அபுல்பஜல் என்பவரைக் கொல்லுவதற்கும் ஏற்பாடு செய்தார். எனினும், அக்பர் ஸலீமை மன்னித்து அவரிடம் முன்போலவே அன்புபாராட்டி வந்தார்.

கி. பி. 1605-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 17-ஆம் தேதி வியாழக்கிழமை காலையில் அக்பர் தேக வியோகமானார். அவர் இறப்பதற்கு முன்பு, தம் பிரபுக்களை வரவழைத்து அவர்களுக்கு ஹிதோபதேசங்கள் செய்து, தாம் அவர்களுக்கு யாதேனும் அபராதஞ் செய்திருந்தால் அதனை மன்னிக்கும்படி வேண்டிக் கடவுளைத் தியானித்தவண்ணம் உயிர் துறந்தார். அப்பொழுது இவருக்கு வயது அறுபத்து மூன்று.

## அக்பருடைய ராஜ்ய பரிபாலனம்

அசோகருக்குப் பின்பு, இந்தியாவை உலகம் புகழும் கீர்த்தியுடன் ஆட்சி செய்தவர் அக்பர் மகா சக்கரவர்த்தியே யாவர். இன்றைக்குச் சுமார் நானூறு வருஷங்களுக்கு முன்னமேயே, அக்பர் இப்பொழுதுள்ள சில சிறந்த அரசியல் அமைப்புக்களை வகுத்து மிக்க விமரிசையாக ராஜ்யத்தை ஆண்டு வந்தார். சமீபகாலம் வரையில் இந்தியாவில் ஆண்ட ஆங்கிலேயரும் அக்பருடைய சட்டதிட்டங்களைப் பாராட்டி, அவற்றுள் சிலவற்றை அனுஷ்டித்து வந்தனர்.

அக்பர் தாம் கடவுளின் பிரதிநிதி யென எண்ணி, அதற்குத் தக நடந்து வந்தார். அவர் சிறு வயது முதல் ஜாதிமத வேற்றுமைகளைப் பாராட்டாது, தம் குடிகள் எல்லோரையும் ஒன்று சேர்த்து ஒருமனப்படுத்தி, சுயநலங்களைப் பாராட்டாமல் பொது நன்மைக்கான காரியங்களையே கவனிக்குமாறு பயிற்றுவித்து, அமைதியும், செல்வமும், சந்தோஷமும் பெற்று வாழுமாறு ராஜ்ய பரிபாலனம் செய்ய வேண்டுமென்னும் நோக்கமுடையவராக இருந்தார்.

அக்பர் ஹிந்துக்களின் கூட்டுறவைப் பெற்றே தம் ராஜ்யத்தை நிலைபெறச் செய்யக்கூடுமென்பதை நன்குணர்ந்தார்; அவர்கள் செலுத்தி வந்த ஜிஸியா என்னும் தலைவரியையும், தீர்த்த யாத்திரிகர்கள் செலுத்தி வந்த வரியையும் அடியோடு நீக்கினர்; இந்துக்களை சிநேகஞ் செய்து கொள்ளுவதற்காகவே ராஜபுத்திரப் பெண்களை மணந்து கொண்டார். அன்றியும், அவர் இந்துக்களைச் சிறிதும் வேற்றுமை பாராட்டாது பெரிய பெரிய உத்தியோகங்களுக்கு நியமித்துக் கொண்டார். அக்பர் ராஜா மான்ஸிங்கை வங்காளத்திலும் காபூலிலும் கவர்னராக நியமித்தார் என்றும், ராணு பிரதாப்ஸிங் என்னும் ராஜபுத்திர அரசரை வெல்லுவதற்கு மான்ஸிங் என்னும் ராஜபுத்திரரையே அனுப்பி வைத்தார் என்றும், முன்னமேயே சொல்லப்பட்டுள்ளது. ராஜா பிர்பால் என்னும் அந்தணர் அக்பருக்கு நெருங்கிய நண்பர். அவருடைய பொக்கிஷ மந்திரியும் ராஜா தோடர்மல் என்ற ராஜபுத்திரரே.

ராஜா தோடர்மல் பொருளாதார சம்பந்தமான சில சிறந்த ஏற்பாடுகளைச் செய்தார் என்று ஏற்கெனவே சொன்னேம். அவர் நிலங்களை யளந்தும், தரம் பிரித்தும், அதற்கேற்றபடி வரிகள் விதித்தும், நிலவரி சம்பந்தமான ஏற்பாடுகளை வெகு விமரிசையாக அமைத்து வைத்தார். கரம்பு நிலங்களுக்கும், அதிக மழையினலாவது மழையின்மையினலாவது விளைவு குறைவுபட்டுப்போன விளை நிலங்களுக்கும் வரிகள் மட்டுப் படுத்தப்பட்டன. குடிகள் மூன்றிலொரு பங்கை வரியாகச் செலுத்தி வந்தார்கள். பத்தொன்பது வருஷத்தானிய விலைகளின் சராசரியை ஆதாரமாகக்கொண்டு குடிகள் சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய நிலவரியின் அளவு நிர்ணயிக்கப்பட்டது. எனினும், அவ்விலைமதிப்பை ஒப்புக்கொள்ளாத ஒருவன் வரிப் பணத்திற் கீடாகப் பயிரிட்ட தானியத்தையே கொடுக்கலாம். அன்றியும் ஏழைக் குடியானவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து

முன்பணம் கொடுத்து, அதைக் கொஞ்சம் கொஞ்சமாக வசூலிக்கும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

வரிவசூல் செய்யும் உத்தியோகஸ்தர்கள் குடிகளைத் துன்புறுத்தாதபடி, பல நிபந்தனைகள் உண்டாக்கப்பட்டன. ஒவ்வொருவருக்கும் சொந்தமான நிலம் எவ்வளவு என்பதையும், அவரவர்கள் சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய பாக்கி எவ்வளவு என்பதையும் தெரிவிக்கக் கணக்குகள் இருந்தன. வரிகள் மதபேத மில்லாமல் விதிக்கப்பட்டன.

அக்பர் தமது பெரிய ராஜ்யத்தைப் பதினெட்டு சுபாக்களாக வகுத்து, ஒவ்வொன்றிற்கும் ஒரு கவர்னரை (சுபாதார்) நியமித்தார். நியாய பரிபாலனத்தில் அவர்களுக்கு உதவுவதற்குக் காஜிகளும், சாதர்களும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய தீர்ப்புக்களை ஒப்புக்கொள்ளாதவர்கள் அப்பீல் செய்து கொள்வதற்குத் தலைநகரில் உயர்தர நியாயஸ்தலம் ஒன்று இருந்தது. பொருளாதார விஷயங்களில் மாகாண சுபாதார்களுக்கு ஆலோசனைகள் சொல்லத் திவான்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களேயல்லாமல் ஒவ்வொரு சுபாதாருக்கடங்கி ஜில்லாக்கள் தோறும் பவுஜ்தார்கள் இருந்தார்கள். அவர்கள் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுகளாவர். வரி வசூல் செய்வதில் அவர்களுக்கு உதவியாக அமில்தார்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆங்காங்குக் கொத்தவால் என்னும் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் இருந்தனர். அவர்கள் எவ்வாறு தங்கள் கடமைகளைச் செய்துவரவேண்டுமென்பதைக் குறித்து, அரசர் தெளிவான ஏற்பாடுகளையமைத்து, அவற்றின்படி நடந்துவரவேண்டுமென்று திட்டஞ் செய்தார். அக்பரது அதிகாரத்திற்கடங்கி 33 வகைப்பட்ட உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். இவர்களுடைய அந்தஸ்தில் தராதம்மியங்களிருந்தன. பத்து முதல் பதினாயிரம் வரை குதிரைப் படையை வைத்துள்ள மன்ஸப்தார்கள் யுத்தகாலத்தில் அரசருக்குத் துணைபுரிய வேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அந்தஸ்திற்குத் தக்கவாறு குதிரைப் படைகளை வைத்திருக்கிறார்களா என அரசர் அவ்வப்பொழுது பார்வையிடுவார். அன்றியும், அவர் தாமே நேரில் போர்வீரர்களைத் தேர்ந்தெடுத்தார்; போர்ப்படைகளின் பயிற்சிக்காகச் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பீரங்கிப் படையும், பீரங்கிகள் செய்வதற்கான தொழிற்சாலைகளும் இருந்தன.

அக்பருக்கு எழுதப்படிக்கத் தெரியாது. ஆனால், அவர்

## 1605-இல் இந்தியா




அக்பருடைய சுபாக்கள்

(1) காபூல் (2) லாகூர் (3) மூல்டான் (4) டில்லி (5) ஆக்ரா (6) அயோத்தி (7) அலகாபாத் (8) அஜ்மீர் (9) குஜராத் (10) மாளவம் (11) பீகார் (12) வங்காளம் (13) கான்தேஷ் (14) பேரார் (15) ஆமத்நகர் (16) ஒரிஸ்ஸா (17) காஷ்மீரம் (18) ஸிந்து.

சிறந்த புத்திமான் என்பதையும், எவரும் மறுக்க இயலாது. அவர் பல்லாயிரம் புத்தகங்களைச் சேகரித்து வைத்துக்கொண்டு, அவற்றைப் பிறர் படிக்கக் கேட்டு வருவார். அவருக்கு ஆச்சரிய மான ஞாபக சக்தி யிருந்தது. அவருடைய புத்தகசாலையில் சுமார் 24,000 புத்தகங்கள் இருந்தன. அவர் பகவத்கீதையை யும், மஹாபாரதத்தின் சில பாகங்களையும் பாரஸிக பாஷையில் மொழிபெயர்த்து வைத்தார். அக்பருக்குச் சங்கீதத்திலும், சித்திரம் எழுதுவதிலும் விருப்பம் அதிகம். அவர் ஆக்ரா நகரில் பல அழகிய கட்டடங்களைச் சித்திர வேலைப்பாடுகள் பொருந்தக் கட்டியிருக்கிறார்.

அக்பருக்கு மதப்பகை என்பது கிடையாது. அவர் பிரா மணர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர், பாரஸிகர், பௌத்தர், சீக்கியர் முதலான நானாமதத்தினரையும் தமது சபைக்கு வரவழைத்து, அவர்களை மதவாதம் புரியச் செய்து களிப்புடன் கேட்பார். அவர் மதப் பிரசங்கம் செய்வதற்கென ஸிக்ரியில் ஓர் அழகிய மண்டபத்தை அமைத்து வைத்தார். அக்பருக்கு மத விஷயத் தில் உண்டான சமரச புத்திக்கு, அபுல்பஜல் என்ற நண்பரே சிறந்த காரணமாவர். அவர் அக்பருடைய ஜீவிய சரித்திரமும், அவருடைய ராஜ்ய பரிபாலன முறைகளும் அடங்கிய ஆயினி அக்பரீ என்னும் நூலை எழுதியிருக்கிறார். அவருடைய நற் போதனைகளுக்கிணங்க, எல்லா மதங்களிலும் உண்மை உண்டு; அவை யாவும் சன்மார்க்கத்தையே உபதேசிக்கின்றன என்று அக்பர் கண்டறிந்தார்; அதனால் தம் குடிகளின் மதானுஷ்டானங் களில் தலையிட்டுக்கொள்ளாமல், ஒவ்வொருவரும் அவரவர் இஷ்டப்படி மதத்தை அனுஷ்டிக்கலாம் என்று உத்தரவிட்டார். அரசரது அரண்மனையிலேயே விக்ரஹ பூஜையும், சூரியனையும், அக்னியையும் வணங்குவதும், கிறிஸ்துவைக் கொண்டாடித் தொழுவதும் நடைபெற்றன. ஹிந்துக்களைச் சந்தோஷிப்பிக்கக் கருதி அக்பர் நெற்றியில் திலகமணிந்தார்; மாட்டிறைச்சி யுண்பதை விட்டொழித்தார்.

மிக்க இளம் பருவத்தில் கன்னிகைகளுக்கு மணம் செய் விக்கக் கூடாதென்றும், சதிகளைத் தங்கள் பதிகளுடன் சக கமனம் செய்யவேண்டும் என்று வற்புறுத்தக் கூடாதென்றும் அக்பர் ஆணையிட்டார். அந்த வழக்கங்கள் கொஞ்சங் கொஞ்ச மாகக் குறையத் தலைப்பட்டன.

அக்பர் ஆட்சியின் கடைசிக் காலத்தில் பற்பல மதங்களிலும் சிறந்தவை எனக் கண்ட கொள்கைகளைத் திரட்டி எல்லா மதத்

தினர்களுக்கும் பொதுவான ஒரு மதத்தை உண்டாக்கி, அதற்குத் தெய்வ மதம் (தின் இலாஹி) எனப் பெயரிட்டு, அதை எல்லா ஜனங்களும் கொண்டொழுக வேண்டுமென விரும்பினர். ஆனல், அம் மதம் தழைத்தோங்கவில்லை.

அவர் மரியாதையும், தயையும் உள்ளவர்; அதிகமாகப் பேச மாட்டார்; தம் உத்தியோகஸ்தர்களை மிக்க புத்தி நுட்பத்துடனும் திறமையாகவும் தேர்ந்தெடுத்து, அவர்கள் தம்மிடம் அன்பாக நடந்துகொள்ளுமாறு செய்துகொண்டார்; சேனைகளை அணிவகுத்து நிறுத்திப் போர் செய்வதில் வெகு கெட்டிக்காரரர்; மனிதர்களுடைய குணங்களைக் கண்டறிவதில் சமர்த்தர். அவர் முகல் சமஸ்தானத்தை உலக அரசியல் அமைப்புக்கள் அனைத்திலும் சிறப்புற்று விளங்குமாறு அமைத்து வைத்தார்.

## 13. ஔரங்கஜீப் (கி. பி. 1658—1707)

ஔரங்கஜீப் கி. பி. 1658 முதல் 1707 வரை அரசாண்டார். அவருடைய நீண்ட ஆட்சிக் காலத்தை இரண்டாகப் பிரிக்கலாம். முதற்பாதியின் முற்பகுதியில் அவர் இந்துஸ்தானத்தின் சம்பந்தமான காரியங்களிலேயே ஈடுபட்டு உழைத்து வந்தார். அதன் பிற்பகுதியில் மதப்பற்று மேலிட்டு, சமரசக் கொள்கையை நீத்துப் பல சத்துருக்களையும் துன்பங்களையும் சம்பாதித்துக் கொண்டார்; பிற்பாதியில் தக்ஷிண சுல்தான்களுடனும், மஹாராஷ்டிரருடனும் யுத்தங்கள் செய்து, வலிமையிழந்து, தமக்கும் ராஜ்யத்துக்கும் கேட்டை விளைவித்துக்கொண்டார்.

ஔரங்கஜீப் சிம்மாசனமேறிய இரண்டு வருஷங்களுக்குள் அவருடன் அரசுக்குப் போட்டி யிட்டவர்கள் தொலைந்தனர். கி. பி. 1666-இல் ஷாஜஹானும் இறந்தபொழுது அவருக்கிருந்த சிறிது கவலையும் நீங்கிற்று. ஔரங்கஜீப்பினிடம் பல சிறந்த நற்குணங்களும், சில துர்க்குணங்களும் ஒருங்கே அமைந்திருந்தன. அவர் மிகுந்த பராக்கிரம முடையவர்; ராஜ்ய பரிபாலனத்தில் கைதேர்ந்தவர்; நியாயம் நடத்துவதில் பக்ஷபாத மில்லாதவர்; கடமைகளை ஊக்கத்துடன் செய்யுமியல்பினர்; சிற்றின்பத்தை முற்றிலும் வெறுத்தவர்; மது மாமிசங்களைக் கனவிலும் விரும்பாதவர்; குடிகளின் நலத்தையே நாடி உழைத்தவர்; தம் பொருட்டுப் பொக்கிஷத்திலிருந்து பணத்தைச் சிறிதும் செலவு செய்யாமல் தொழில் செய்து பணம்

சம்பாதித்துச் செலவு செய்தவர்; கொலு வீற்றிருக்கையிலன்றி மற்றைய சமயங்களில் விலையுயர்ந்த ஆடையாபரணங்களை யணிவதில் மனமில்லாதவர்; கல்வி கேள்விகளிற் சிறந்தவர்; அஞ்சாத நெஞ்சம் படைத்தவர்; ராஜதந்திரங்களில் வல்லவர்; மிகுந்த மத வைராக்கிய முள்ளவர்; அவருக்குக் குர்ஆன் மனப்பாடம். அவர் அதனை இருமுறை யெழுதி அப்பிரதிகளை மக்காவுக்கும், மதினாவுக்கும் அனுப்பினார்.



ஔரங்கஜீப்
*(Copyright - Archaeological Survey of India)*

பல நற்குணங்களையுடைய ஔரங்கஜீப் ஒருவரையும் நம்புவதில்லை. அவர் இஸ்லாம் மத மொழிந்த மற்றவை யாவும் பொய் யெனத் தீர்மானித்து, இதர மதத்தினரைத் துன்புறுத்தினார். முஸ்லிம்களுள் தம் இனத்திற் சேராத மற்றவர்களிடத்தும் அவருக்குப் பகை இருந்தது. அவர் நெடு நாட்களாக ராஜாங்க உத்தியோகங்களில் இருந்துவந்த ஹிந்துக்களை வேலைகளிலிருந்து நீக்கிவிட்டார்; பள்ளிக்கூடங்களில் இந்து மதபோதனை செய்வதைத் தடுத்தார்; இந்துக்கள் பல்லக்குக்களிலாவது, யானைகள்மீதாவது ஏறிச் செல்லலாகாது என்றும், போர்க் கருவிகளை வைத்துக்கொள்ளக் கூடாது என்றும் அவர் கட்டுப்பாடு செய்தார்; சுமார் நூறு வருஷங்களாக எடுபட்டிருந்த ஜிஸியா என்னும் தலைவரியை மீண்டும் விதித்தும், இந்து வர்த்தகர்கள் செலுத்திவந்த வியாபார வரிகளை உயர்த்தியும், அவர்களுடைய பகைமையைச் சம்பாதித்துக் கொண்டார்; இஸ்லாம் மதத்திற் சேர்ந்தவர்களுக்கு வெகுமதிகள் அளித்தார். அவர், தாம் இவ்வாறு செய்தனவெல்லாம் தம் சிறந்த கடமைகள் எனக்கருதி அவற்றைச் செய்ததனால், அவற்றால் விளையுந் தீமைகளைப் பாராட்டவில்லை.

## 1700-இல் இந்தியா




ஔரங்கஜீப்பின் சாம்ராஜ்யம்

அவர் கொண்டொழுகின கொள்கைகள் காரணமாகப் பல கலகங்கள் உண்டாயின. வடமதுரைக் கருகிலிருந்த ஜாட் ஜாதியைச் சேர்ந்த குடியானவர்கள் கலகஞ் செய்தனர். மிகுந்த மத

வைராக்கியங்கொண்ட சாத்னாமிகள் என்னும் இந்துக்கள் கலகஞ் செய்து நாட்டின் அமைதியைக் கெடுத்தனர். அவர்களை யடக்குவது பெருங்கஷ்டமாயிற்று. ஆயினும் ஔரங்கஜீபின் கொள்கைகளில் மிக்க வெறுப்புக்கொண்டு அவரை யெதிர்த்தவர்களுள் பஞ்சாபிலுள்ள சீக்கியர்களும், மஹாராஷ்டிரர்களும் முக்கியமானவர்கள்.

சீக்கியரின் ஒன்பதாம் குருவான தேக்பஹதூர் ஔரங்கஜீபின் ஆணையை மீறியதனால், முகலாய அரசர் அவரைச் சிறையிலிட்டு, வதைத்துக் கொன்றார். அதனால் சீக்கியர்களுக்கு முஸ்லிம்களிடம் அதிகப் பகை மூண்டது. பத்தாம் குருவான கோவிந்தர் சீக்கியர்களுக்குள் ஜாதி வேற்றுமையைப் போக்கினார்; அவர்கள் ஒரே வகையான உடையை அணியுமாறு செய்தார்; அவர்களைச் சிறந்த போர் வீரர்களாக்கினார்; முஸ்லிம்களை எதிர்ப்பது தங்கள் கடமை என்று உபதேசித்தார். அவர்களை ஆண்மையும் பராக்கிரமும் உடைய ஜாதியாராக்கினார். இவ்வாறு மேம்பாட்டை யடைந்துவந்த சீக்கியர்கள், ஔரங்கஜீபுக்குப் பெரும் பகைவர்களாகி, அவருடன் போர்கள் செய்து அவருடைய வன்மையைக் குலைத்தனர்.

ஔரங்கஜீப் சீக்கியர்களைப் பகைத்துக் கொண்டதுபோல், ராஜபுத்திரரையும் விரோதிகளாக்கிக் கொண்டார். ஜோதிபுரத்து அரசரான ராஜா ஜஸ்வந்த ஸிங் இறந்த பின்னர், ஔரங்கஜீப் அவர்களுடைய பிள்ளைகளைப் பிடித்து முஸ்லிம்களாக்க முயன்றார். அதனால், அவருக்கும் ராஜ புத்திரர்களுக்கும் பெரும் பகையுண்டாயிற்று. அவர் ராஜபுத்திரர்களுடன் போர் செய்து வருகையில், அவர் மைந்தரான அக்பர் தந்தைக்கு விரோதமாகக் கலகஞ்செய்து பகைவர் பக்கம் சேர்ந்துகொண்டார். அப்பொழுது ஔரங்கஜீப் தம் மைந்தன் உண்மையில் தமக்கு விரோதமாகக் கலகஞ் செய்யவில்லையென்றும், அவர்களை ஏமாற்றக் கருதி அங்ஙனம் செய்தான் என்றும் சொல்லி ராஜபுத்திரரை வஞ்சகமாகக் கலைத்தார். அதை நம்பி ராஜபுத்திரர்கள் அரசகுமாரரைக் கைவிட்டனர். அவர் தப்பியோடி மஹாராஷ்டிரரிடம் தஞ்சம் புகுந்தார்.

## தக்ஷிணப் படையெடுப்புக்கள்

ஔரங்கஜீப் தக்காணத்தில் வைஸிராயாக இருந்த காலத்திலிருந்தே, அங்குள்ள இந்து, முஸ்லிம் ராஜ்யங்களை வென்று தமது சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென

ஆசை கொண்டிருந்தார். அவர் தமது ஆட்சியின் பிற்பகுதியை அம்முயற்சியில் செலவிட்டார்; கி. பி. 1681-ஆம் வருஷத்தின் தொடக்கத்தில் அஜ்மீர் நகரை விட்டுப் புறப்பட்டு, பூர்ஹான் பூருக்குச் சென்று, அதைத் தமது முக்கிய ஸ்தானமாகச் செய்து கொண்டார். அதுமுதல் இறுதிக் காலம் வரை சுமார் 25 வருஷங்கள் அவர் தென்னாட்டிலேயே தங்கியிருந்தார். மஹாராஷ்டிரருடைய வளர்ச்சியைத் தடுக்க அவர் செய்த முயற்சிகள் யாவும் பயனற்றுப் போயின. எனினும் அதற்கீடாக அவர் பீஜப்பூர், கோல்கொண்டா என்னும் முஸ்லிம் ராஜ்யங்களை வென்று, தமது ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார்.

சிவாஜியைத் தலையெடுக்க வொட்டாமல் நசுக்கிவிட வேண்டுமென்று எண்ணி, ஔரங்கஜீப், பீஜப்பூர் சுல்தானைத் தமக்குத் துணைபுரிய வேண்டினர். அதற்கு அவர் இணங்கவில்லை. முகலாய அரசர் அந்நாட்டை நாலா பக்கங்களிலிருந்தும் எதிர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். பீஜப்பூர்ச் சேனைகள் வெகு நாட்கள் வரை முகலாயர்கள் அந்நகரைக் கைப்பற்ற வண்ணம் தடுத்து வந்தன. ஆனால் உணவுப் பொருள்கள் தீர்ந்துவிட்டதனால், 1686-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் அப்படைகள் முகலாயரைச் சரணமடைந்தன. பீஜப்பூர் ராஜ்யம் ஔரங்கஜீப் வசமாயிற்று. ஔரங்கஜீப் அதைத் தமது ராஜ்யத்தின் மாகாணங்களுள் ஒன்ருக்கிக் கொண்டார்.

பீஜப்பூரை வென்றுதனல் கோல்கொண்டாவைக் கைப்பற்றுவது, முகலாயருக்கு எளிதாக முடிந்தது. கோல்கொண்டா நாட்டுப் பிரபுக்கள் தங்களுக்குள் கலகமிட்டனர். அந்நாட்டுப் படைகள் போதுமான யுத்தப் பயிற்சி பெருது ஒழுங்கற்ற கூட்டமாக இருந்தன. ஆதலால், முகலாயர் அப்போர் வீரர்களுக்கு லஞ்சம் கொடுத்து சுல்தானைக் கைவிட்டுவிடும்படி செய்துவிட்டனர். கோல்கொண்டா நகரின் முற்றுகை 1687-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் தொடங்கி ஸெப்டம்பர் மாதம் வரையில் நடைபெற்றது. அவ்வளவு காலம் மனந்தளராமல் முகலாயரை எதிர்த்து நின்றதற்கு அப்துர் ரஸாக் என்னும் அமீரின் முயற்சியே காரணம். அவர் சுல்தானுக்குத் துரோகம் செய்ய இணங்காமல், கடைசிவரை போரிட்டார். உடல் முழுதும் புண்பட்டுக் கீழே விழுந்தார். பின்னரே கோல்கொண்டா சுல்தான் சிறைபிடிக்கப் பட்டார். கோல்கொண்டா ஔரங்கஜீபுக்குச் சொந்தமாயிற்று. அவருக்குச் சுமார் ஏழு கோடி ரூபாயும் கிடைத்தது.

மைசூர், தஞ்சாவூர், மதுரை ராஜ்யங்கள் தங்களுக்கு அடங்கியவை என்று பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள் கூறினர். முகலாயர் அவ்விரண்டு ராஜ்யங்களையும் வென்று தங்கள் ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டனர். ஆதலால் முகலாய அதிகாரம் இந்தியா முழுதும் பரவிவிட்டது. என்னலாம்.

முகல் சாம்ராஜ்யம் க்ஷீணித்ததற்கான காரணங்களுள், ஔரங்கஜீப் தக்ஷிண சுல்தான்களின் நாடுகளை வென்று அதனோடு சேர்த்துக்கொண்டது முக்கியமானதாகும். அவர் அவ்விரண்டு நாடுகளையும் ஒழித்ததனால் முகலாயருடைய பகைவர் மிக வலிமையுற்றனர். முகலாயர்கள் முன்பே ஆப்கானிஸ்தானத்தை இழந்துவிட்டதனால், அவர்களுக்கு வட மேற்கில் ஆபத்திற்கிடமுண்டாயிற்று. வடமேற்கில் ஆப்கானியரும் பாரஸிகரும் தெற்கில் மஹாராஷ்டிரர்களும் பெரும் பகைவர்களானார்கள்.

சிவாஜிக்குப் பின்பு ஸாம்பாஜி மகாராஷ்டிர அரசரானார். அவர் ஔரங்கஜீப்பினால் சிறைபிடிக்கப்பட்டார். ஸாம்பாஜி முஸ்லிமாகும் பக்ஷத்தில், தாம் அவரை மன்னித்து விடுதலை செய்வதாக ஔரங்கஜீப் சொன்னார். அவர் மகளைத் தமக்கு மணஞ் செய்வித்தால், முஸ்லிமாவதாக ஸாம்பாஜி பதிலுரைத்தார். இதைக் கேட்டு வெகுண்ட முகலாய அரசர் ஸாம்பாஜியைச் சித்திரவதை செய்வித்துக் கொல்வித்தார். அதனால் மஹாராஷ்டிரருக்கு முகலாய அரசர்மீது முன்னிலுமதிகமான கோபம் உண்டாயிற்று.

ஸாம்பாஜிக்குப் பிறகு அவருடைய மைந்தரான ஸாஹூ மகாராஷ்டிர அரசரானார். அவர் மிகுந்த இளம் பிராயத்தினரானதால், ராஜாராம் என்னும் அவருடைய சிறிய தந்தை ராஜ்ய பாரத்தை நடத்தி வந்தார். ஆனால் சிறிது காலத்திற்குள் ஸாஹூவும் அவருடைய தாயும் முகலாயரால் சிறை பிடிக்கப்பட்டனர். பின்னர் முகலாயர் கொஞ்சங் கொஞ்சமாக மகாராஷ்டிர ராஜ்யத்தின் சிறந்த இடங்களைக் கைப்பற்றிக் கொண்டபொழுது, மஹாராஷ்டிரர்கள் சிறிதும் மனத்தளர்ச்சியடையாமல், கர்னாடகத்திற்குச் சென்று செஞ்சிக் கோட்டையில் அடைக்கலம் புகுந்தார்கள். ராஜாராம் மாறுவேஷம் பூண்டு செஞ்சிக்குத் தப்பிச்சென்று, அதைத் தமது முக்கிய ஸ்தானமாக்கிக் கொண்டார்.

அப்பொழுது ஔரங்கஜீப் ராஜாராமை வெல்லவும், முகல்

ராஜ்யத்தைக் கன்னியாகுமரி வரையிற் பரப்பவும் கருதி ஜல்பிகார்கான் என்னும் பிரதான தளகர்த்தரை அனுப்பினர். அவர் மைசூர் அரசரான சிக்கதேவ உடையாரையும், தஞ்சாவூரை ஆண்டுவந்த வங்காஜியையும், மதுரையின் அரசியான ராணி மங்கம்மாளையும் முகலாயருக்குக் கப்பங் கட்டும்படி செய்தார். அவ்வாறாக முகலதிகாரம் வெகு தூரம்வரை பரவியது. ஆனால், தென்னாடுகள் பெயருக்கு மாத்திரமே முகல் ஆணைக் கடங்கியிருந்தனவாம். கி. பி. 1691-இல் ஜல்பிகார்கான் செஞ்சிக் கோட்டையை முற்றுகை செய்தார். அம்முற்றுகை ஆறு வருஷகாலம் நடைபெற்றது. கடைசியில், ராஜாராம் அங்கிருந்தும் தப்பியோடி மீண்டும் மஹாராஷ்டிரத்தை அடைந்தார். அப்பொழுது முகலாயர்கள் செஞ்சிக்கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டார்கள். மஹாராஷ்டிரஞ் சென்ற ராஜாராம், ஸதாராவைத் தமது தலைநகரமாக்கிக்கொண்டு, முகலாயரை எதிர்த்துப் போரிடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வந்தார்; ஆனால் சிறிது காலத்திற்குள் இறந்துவிட்டார். ஔரங்கஜீப் திடீரென்று ஸதாராவைத் தாக்கி அதைப் பிடித்துக் கொண்டார்.

ராஜாராம் இறந்து போனது மஹாராஷ்டிரருக்குப் பெரும் துரதிர்ஷ்டமாயிற்று. எனினும், அவர்கள் அவர் மனைவியான தாராபாயைப் பிரதிநிதியாக்கிக்கொண்டு, ராஜாராம் செய்ய எண்ணியிருந்த ஏற்பாட்டின்படி, முகலாயரை எதிர்த்துப் போர் செய்து, சூரத், மாளவம், பேரார், கான்தேஷ், குஜராத் முதலிய பிரதேசங்களைக் கொள்ளையடித்து முகலாயரது அதிகாரம் கர்னாடகத்திற் செல்ல வொட்டாதபடி செய்து விட்டார்கள். அதனால், ஔரங்கஜீப் யாதொன்றையும் செய்யவியலாது, தமது பெருஞ் சேனையைத் திரும்பி வந்துவிடும்படி ஆக்ஞாபித்தார். மூப்பும், களைப்பும், தோல்வியும் ஒருங்கே அவரை வருத்த, அவர் அஹமது நகரத்தில் இறந்தார்.

## 14. சிவாஜியும், ஸ்வராஜ்யத் தோற்றமும்

மஹாராஷ்டிரர்கள் இந்துக்களுள் ஒரு வகுப்பினர். அவர்கள் விந்தியா, சாத்பூரா மலைகளுக்குத் தெற்கில், அரபிக் கடல் முதல் கோதாவரியாற்றின் உபநதியான பேன்கங்கா வரையிலுள்ள நாட்டில் வசித்து வந்தனர். அந்நாட்டிற்கு மஹாராஷ்டிரம் என்று பெயர். அது மிகவும் கரடுமுரடான

மலைப்பிரதேசம்; எண்ணிறந்த குன்றுகளையும் பள்ளத்தாக்குகளையுமுடையது. குன்றுகளைப் பகைவர் எளிதில் தாக்க முடியாதவாறு பல கோட்டைகள் கட்டப்பட்டிருந்தன.

அந்நாட்டு மக்கள், உடல் வருந்த உழைத்து வேலை செய்து உயிர் வாழவேண்டியிருந்ததினால், தேகவலிமையும், விடா முயற்சியும் உள்ளவர்களாயிருந்தனர். அவர்கள் குடியிருந்த இடம் மலைகளாலும், கானாறுகளாலும் சூழப்பட்டிருந்தது. ஆதலால், அவர்கள் பகைவர்க் கஞ்சாமல் சுகமாக வாழ்ந்து வந்தனர். சிலர் போர்வீரர்களாக அமர்ந்து ஊதியம் பெற்று ஜீவனம் செய்து வந்தனரேயாயினும், பெரும்பாலோர் பயிர்த் தொழிலையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர். அவர்களுக்குள் ஒற்றுமை அதிகம்.


சிவாஜி

மஹாராஷ்டிரக் குடும்பங்களுள் ஒன்றான பான்ஸ்லே வம்சத்தில் ஷாஜி என்ற ஒருவர் இருந்தார். அவர் பீஜப்பூர் சுல்தானிடம் சேனாதிபதியாக வேலைபார்த்து வந்தார். அவர் மனைவியின் பெயர் ஜிஜிபாய். கி. பி. 1627-இல் அவர்களுக்கு ஒரு குமாரர் பிறந்தார். அவரே உலகம் புகழும் சிவாஜி.

ஷாஜி, சிவாஜியை, தமது ஜாகீரை மேற்பார்த்து வந்த தாதாஜி கொனதேவர் என்பவருடைய பார்வையில் விட்டிருந்தார். அவரும், ஜிஜிபாயும் வளர்த்து வந்ததன் பயனாக, சிவாஜி, ஊக்கம், அறிவு, மதாபிமானம், நல்லொழுக்கம் முதலியவை வாய்க்கப் பெற்றார். அவருக்கு இராமாயண மஹாபாரதக் கதைகளைக் கேட்பதில் பிரியம் அதிகம். அவருக்குத் துக்காராம், ராமதாஸர் என்னும் பெரியார்களின் நட்பு ஏற்பட்டது. அக்கூட்டுறவால், அவர் தெய்வபக்தி, தேசாபிமானம், நடுவுநிலைமை முதலிய நற்குணங்களைப் பெற்று, தம்மை ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கினார்; சிறுவயது முதற்கொண்டே வில், வேல்,

வாள் முதலிய பல ஆயுதப் பயிற்சி பெற்றுச் சிறந்த யுத்த வீர ரானுர்; ராமதாஸரைத் தம் குருவாகக் கொண்டு, அவருடைய ஆணையின்படி ராஜ்யத்தை வெகு விமரிசையாக ஆட்சி செய்தார்.

சிவாஜி சிறிதும் தன்னலம் கருதுவதில்லை; மஹாராஷ்டிர முன்னேற்றத்தில் ஈடுபட்டுத் தம்முடன் ஒத்துழைக்கக் கூடியவர் யாவரையும் வேற்றுமையின்றித் தம்முடன் சேர்த்துக்கொள் வார்; தம் எண்ணத்துக்கு மாருக நடப்பவர் தம்மினத்தினராயி னும் அவர்களை ஓங்கவொட்டாமல் தடுத்துவிடுவார். அன்றியும், அவர் தமது சாமர்த்தியத்தினுலும், பராக்கிரமத்தினுலும், ஒப் பற்ற வசீகர சக்தியினுலும் தம்மைச் சேர்ந்தவர்கள் அனைவரும் பொது நலத்தை நாடியுழைக்கவும், போரிலும் ராஜ்ய பரிபால னத்திலும் தலைவனுக்கடங்கி நடக்கவும் பழகுவித்தார். அவ ரிடம் வந்தடைந்தவர்கள் ஒருபொழுதும் அவரை விட்டகல்வ தில்லை. கீழ்மக்களும் அவருடைய சேர்க்கையினுல் உத்தம ராயினர்.

தாதாஜி கொனதேவர் சிவாஜியை யொத்த சிறுவர் பலரை யும், அவ்வாறே ராஜ்ய பரிபாலன முறைகளிலும் போர் முறை களிலும் நன்கு பயிற்றுவித்தார். அவர்கள் சிவாஜிக்கு உற்ற துணைவர்களானுர்கள். பல பெரிய மஹாராஷ்டிரக் குடும்பங் களைச் சேர்ந்த சிறுவர்களும் சிவாஜியைத் தங்களுக்குத் தலைவ ராகக் கொண்டு, அவரைப் பின்பற்றினர். பீஜப்பூர், கோல் கொண்டா ராஜ்யங்களின் பட்டாளங்கள் கலைக்கப்பட்ட பொழுது, அவற்றிலிருந்து வந்த அநேக முஸ்லிம் போர்வீரர் களும் சிவாஜியுடன் சேர்ந்தார்கள். இவ்வாறு சிவாஜி பெரிய சேனைத் தலைவரானுர்.

சிவாஜி தம் சேனைகளைக் கொண்டு, அயல் நாடுகளுடன் போரிட்டு, ஸ்வராஜ்யத்தை ஸ்தாபிக்க ஆவல்கொண்டார். கி. பி. 1646-இல் அவர் டோர்ன என்னுங் கோட்டையைக் கைப் பற்றினுர்; ரைகார் கோட்டையைப் பலப்படுத்தி அதைத் தமது பிரதான இடமாகச் செய்து கொண்டார். நாளடைவில் இன்னும் பல கோட்டைகளை வென்று தமக்குச் சுவாதீனஞ் செய்து கொண்டார். அவற்றுள் பீஜப்பூர் சுல்தானுக்குச் சொந்த மானவை சில.

சாகன், சின்ஹகாட், புரந்தர் முதலான கோட்டைகளை சிவாஜி பிடித்துக்கொண்டபொழுது, பீஜப்பூர் சுல்தான், தம் ஜாகீரின் பாதுகாப்பின்பொருட்டே பிடித்துக்கொண்டாரென

எண்ணினர். ஆனல் கி. பி. 1652-இல் கல்யாண் கோட்டை சிவாஜியின் வசமானபொழுதுதான் அவர் விழித்துக்கொண்டார். அவர் உடனே ஷாஜியைச் சிறைப்படுத்தவும், சிவாஜி சும்மா இருக்க நேர்ந்தது. ஆனல், சிவாஜி தாம் ஷாஜஹானுடைய உத்தியோகத்தில் அமர்வதாகச் சொல்லி, அவர் தயவைச் சம்பாதித்துக் கொண்டார். அதனல், பீஜப்பூர் சுல்தான் பயந்து, கி. பி. 1657-இல் ஷாஜியை விடுதலை செய்தார். பின்னர் சிவாஜி முன்போல் தமது காரியத்தில் முயன்று வரலானர்.

கி. பி. 1659-இல் பீஜப்பூர் சுல்தான் சிவாஜியைத் தண்டித்து வரும்படி அப்ஸல்கானை யனுப்பினர். அவன் வஞ்சனையினல் தம்மைக் கொல்ல வருவதை யறிந்த சிவாஜி அவனைக் கொன்று விட்டார். உடனே சிவாஜியின் சேனை பீஜப்பூர் சேனையை எதிர்த்து அடியோடு நாசஞ் செய்தது. அதனல் சிவாஜியின் புகழ் பரவலாயிற்று.

பீஜப்பூர் சுல்தான் அதன் பின்னரும், சிவாஜியுடன் மும்முறை போர் செய்து மும்முறையும் தோற்றுர். சிவாஜியின் கப்பற் படைகள் கொங்கிணி நாட்டின் துறைமுகப் பட்டினங்களைப் பிடித்துக்கொண்டன. அவர் கடைசியில் கி. பி. 1662-இல் சிவாஜியுடன் சமாதானஞ் செய்துகொண்டு அவருக்குக் கொங்கிணி நாட்டைக் கொடுத்துவிட்டார். பீஜப்பூர் சுல்தானேடு போரிடுவதற்கு முன் சிவாஜியின் நாடு சாகன்கோட்டை முதல் நீரா நதி வரையில் பரவியிருந்தது. அவ்வெல்லைக்குள் சிவாஜியின் பழைய ஜாகீரும், புரந்தர் முதல் கல்யாண் வரையிலுள்ள கோட்டைகளும் அடங்கும். பின்னர், மேற்கில் கல்யாண் முதல் கோவா வரையில் உள்ள கொங்கிணி நாடும், கிழக்கில் பீமா நதி முதல் வர்தா நதி வரையில் உள்ள நாடும் சிவாஜிக்குச் சொந்தமாயின. எனவே, அவருடைய நாடு தெற்கு வடக்கில் 160 மைல் தூரமும், கிழக்கு மேற்கில் 100 மைல் தூரமும் பரவிவிட்டது.

சிவாஜியின் அதிகார வளர்ச்சியைக் கண்ட ஔரங்கஜீப் அவரை அடக்கும் பொருட்டு கி. பி. 1663-இல் தம் மாமன் ஸாயிஷ்டகானை அனுப்பினர். சிவாஜி அவரைத் திடீரென்று எதிர்த்துத் துரத்திவிட்டார். கி. பி. 1664, 1665-ஆம் வருஷங்களில் சிவாஜி தம் கப்பற் படைகளைக் கொண்டு சூரத் பட்டினத்தை யெதிர்த்து மக்கா யாத்திரிகர்களைச் சிறைபிடித்து, செல்வம் மிக்க வேறு ஒரு துறைமுகப் பட்டினத்தையுங் கைப்

பற்றிக்கொண்டார்; தமது அதிகாரத்தை வட கன்னடத்திலும் பரவச் செய்தார். அப்பொழுது ஔரங்கஜீப், சிவாஜியை வென்று வரும்படி, ஜயஸிங்கை யனுப்பினர். யாது காரணம் பற்றியோ சிவாஜி அவருடன் சமாதானஞ் செய்துகொண்டார்.

பின்னர், சிவாஜி தம் மைந்தன் ஸாம்பாஜியுடன் டில்லிக்குச் சென்றபொழுது, முகலாய அரசர் அவர்களை அவமதித்துச் சிறையிலடைத்தார். சிறையிலிருந்து இருவரும் தந்திரமாகத் தப்பித் தம் நாட்டை யடைந்தனர். அதுமுதல் சிவாஜிக்கு ஔரங்கஜீப்பின்மீது அடங்காக் கோபம் உண்டாயிற்று.

சிவாஜி டில்லிக்குச் சென்று திரும்பி வரும்வரை அவருடைய பிரதானி, மந்திரி முதலான உத்தியோகஸ்தர் தத்தம் கடமைகளினின்றும் சிறிதும் பிறழாமல், ராஜ்யத்தைச் செவ்வனே பரிபாலித்து வந்தனர். அவர் திரும்பி வந்ததும், மஹாராஷ்டிரர்கள் தாங்கள் முகலாய மன்னருடன் செய்துகொண்ட உடன்படிக்கையினுல் இழந்துவிட்ட கோட்டைகளை ஒவ்வொன்ருகப் பிடித்துக்கொண்டனர். அதனுல் ஔரங்கஜீப் சிவாஜியுடன் சமாதானஞ் செய்துகொண்டு, அவரை அரசரெனவும் ஒப்புக்கொண்டார்.

ஆனுல், கி. பி. 1669-இல் இருதிறத்தாருக்கும் போர் மூண்டது. அது நடைபெற்ற நான்கு வருஷங்களுக்குள் சிவாஜி, முன்னரே தமக்குச் சொந்தமாக இருந்த நாடுகளை முற்றிலும் வென்று கொண்டார். ராஜ்யத்தை இன்னும் அதிகமாகப் பரப்பினர்; கி. பி. 1674-இல் ரைகார் கோட்டையில், பெரும் பொருள் செலவிட்டு மஹாராஷ்டிர மன்னரென மகுடாபிஷேகஞ் செய்து கொண்டார்.

சிவாஜியின் ராஜ்யம் வடக்கில் சூரத் வரையிலும், தெற்கில் ஹுப்ளி வரையிலும், கிழக்கில் பீஜப்பூர், கோல்கொண்டா வரையிலும் பரவியது. தபதி நதியின் தெற்கிலுள்ள முகலாயக் கீழதிகாரிகள் மஹாராஷ்டிரருக்குச் சவுத், ஸர் தேஷ்முகி என்னும் வரிகள் செலுத்தி வந்தார்கள்.

கி. பி. 1676-இல் சிவாஜி தம் தந்தைக்குச் சொந்தமாக இருந்ததும், அப்பொழுது தம் தம்பியான வெங்காஜி ஆண்டு வந்ததுமான தஞ்சாவூர் ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொள்ள எண்ணித் தெற்கே படையெடுத்துச் சென்ருர்; வழியில் கோல்கொண்டா அரசரைச் சிநேகஞ் செய்து கொண்டார்; பின்பு வேலூரையும், செஞ்சியையும் பிடித்துக்கொண்டு, வெங்காஜி தமக்குக் கப்பம் கட்டும்படி செய்தார். அவர் திரும்பி வரும்

வழியில் பெல்லாரி ஜில்லாவை வென்று கொண்டார். பிறகு சிவாஜி பீஜப்பூர் சுல்தானுடன் சமாதானஞ் செய்துகொண்டு, அவர் தமது கர்னுடக வெற்றியை அங்கீகரிக்குமாறு செய்தார். அப்பொழுது முகலாயர்கள் வட மேற்கில் ஆப்கானியருடன் போரிட்டு வந்ததனுல், சிவாஜிக்கு அவர்களால் யாதொரு தீங்கு முண்டாகவில்லை. சிவாஜி தாம் மிக முயன்று வென்ற ராஜ்யத்தை மிக்க விமரிசையாக ஆட்சி செய்து, கி. பி. 1680-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 15-ஆம் தேதி மண்ணுலகை நீத்தார்.

சிவாஜி எட்டுப் பிரதானிகளடங்கிய மந்திராலோசனை சபையின் உதவியைக்கொண்டு ஆட்சி செய்தார்; உத்தியோகஸ்தர்கள் அதிகாரத்தைக் கவர்ந்துகொண்டு, தம்மை மீறி நடவாமல் தடுக்கக் கருதி, உயர்ந்த உத்தியோகங்களைப் பரம்பரையாகக் கொடுப்பதில்லை; அவர்களுக்கு ஜாகீர்களை அளிக்காது சம்பளம் கொடுத்து வந்தார்; ஜமீன்தார்களை நீத்து நேரில் வரி வசூல் செய்தார்; உத்தியோகஸ்தர்கள் கொண்டொழுகுவதற்கான சட்ட திட்டங்களை வரையறுத்தார்; பல ஜாதியினரையும் உத்தியோகங்களிலமர்த்திக் கொண்டார்.

அவர் கல்வியின் பொருட்டும், கோயில், குளங்களின் பொருட்டும் ஏராளமான பொருளைச் செலவிட்டார். அவர் காலத்தில் கல்வியும், மதத்தரிப்பும் பெருகி உண்மையான இந்து மதம் பரவியது. அப்பொழுது, பல ஜாதிகளிலும் தோன்றின சங்கதேவர், முக்தாபாய், வேணுபாய், நாமதேவர், சோக்கா மேளர் முதலான பெரியோர்களே அதற்குச் சிறந்த சான்ருவர்.

சிவாஜி முஸ்லிம்களைப் பழித்ததில்லை; குர் ஆனைக் கௌரவித்து வந்தார்; மசூதிகளுக்கு யாதொரு தீமையும் செய்தது கிடையாது; போரில் சிறைப்பட்ட ஸ்திரீகளையும் குழந்தைகளையும் அன்புடனும் மரியாதையுடனும் நடத்தி வந்தார்; பிற மாதரை அன்னைகளாகவும் சகோதரிகளாகவும் கருதினுர். முஸ்லிம் சரித்திராசிரியர்களும் சிவாஜியைப் புகழ்ந்து எழுதியுள்ளார்கள்.

### பயிற்சிகள்

1. சந்திரகுப்த மௌரியர் எவ்வாறு ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தார்?
2. சந்திரகுப்தரின் ராஜ்ய விஸ்தீரணத்தைக் குறிப்பிடுக.
3. சந்திரகுப்தரின் அரசியல் முறையை விவரிக்க.

4. மெகஸ்தனிஸ் யார்? அவர் இந்தியாவைப் பற்றிக் கூறியது யாது?

5. கலிங்க யுத்தத்தால் அசோகர் வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்கள் யாவை?

6. அசோகரின் கல்வெட்டுக்களிலிருந்து நாம் அறிவது யாது?

7. அசோகர் எவ்வாறு புத்த மதத்தைப் பரவச் செய்தார்?

8. அசோகருடைய தருமக் கொள்கைகள் யாவை?

9. அசோகரது சாம்ராஜ்யம் அழிவடையக் காரணங்கள் யாவை?

10. கனிஷ்கர் சிறந்த அரசர் எனக் கருதப்படுவதேன்?

11. குப்த வமிசத்தை ஸ்தாபித்தவர் யார்?

12. சந்திரகுப்தர் அடைந்த வெற்றிகளைக் கூறுக.

13. 'குப்தரது ஆட்சிகாலம் இந்திய சரித்திரத்தில் பொன் யுகம்' என்பதை ஆராய்க.

14. பாஹியான் இந்து தேச சரித்திரத்திற்குச் செய்த தொண்டு யாது?

15. ஹர்ஷர் காலத்தில் கல்வி எவ்வாறு அபிவிருத்தி அடைந்தது?

16. கஜினி மாமூதின் வெற்றிக்குக் காரணங்கள் யாவை?

17. முகம்மது கோரிக்கும் கஜினி மாமூதுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் குறிக்க.

18. பால்பனுடைய சீர்திருத்தங்களைக் கூறுக.

19. அல்லாவுத்தீன் எவ்வாறு மங்கோலியரை அடக்கினர்?

20. மாலிக் காபூரின் முக்கியமான வெற்றிகளைக் குறிப்பிடுக.

21. முகம்மது பின் துக்ளக் என்பவர் பைத்தியக்காரர் என்பதை ஆராய்க.

22. துக்ளக்கு வமிசத்தினர் காலத்தில் டில்லி ராஜ்யம் க்ஷீணதசை அடையக் காரணம் யாது?

23. விஜயநகர ராஜ்யம் எப்பொழுது, யாரால் ஸ்தாபிக்கப்பட்டது?

24. கிருஷ்ணதேவராயர் ஏன் ஒரு சிறந்த அரசராகக் கருதப்படுகிருர்?

25. விஜயநகர ராஜ்யம் அழிவடையக் காரணம் யாது?

26. பாமினி ராஜ்யத்தை ஸ்தாபித்தவர் யார்?

27. பாபர் முகலாய சாம்ராஜ்யத்தை இந்தியாவில் உண்டாக்கியது எங்ஙனம்?

28. ராஜபுத்திரரது ஆண்மையையும் வீரத்தையும் குறித்துக் கேள்வி

யுற்று, முகலாயப் போர்ப்படைகள் அடைந்த மனக் கலக்கத்தைப் பாபர் எவ்வாறு போக்கினர்?

29. பாபர் தம் சுய சரித்திரத்தில் இந்துஸ்தானத்தைக் குறித்துக் கூறியுள்ளது என்ன?

30. பானிப்பட்டு எவ்வாறு பெயர் பெற்றதாகும்?

31. அக்பர் இந்துக்களை வென்று கொண்டது எவ்வாறு?

32. அஹமது நகரம் அக்பர் வசமானது எங்ஙனம்?

33. நிலவரி சம்பந்தமாக அக்பர் செய்வித்த ஏற்பாடுகள் யாவை?

34. அக்பரின் ராஜ்ய பரிபாலன அமைப்புக்களை விவரித்துக் கூறுக.

35. பல நற்குணங்கள் பொருந்தியிருந்த ஒளரங்கஜீப்பைக் குடிகள் வெறுப்பானேன்? அவர் இந்துக்களின் பகையைத் தேடிக் கொண்டது எவ்வாறு?

36. சீக்கியர் யார்? அவர்கள் முற்போக்கை அடைந்தது எவ்வாறு? யாரால்?

37. மஹாராஷ்டிரம் அந்நாட்டுக் குடிகளின் முன்னேற்றத்தில் எவ்வாறு உதவியது?

38. சிவாஜியின் நல்லொழுக்கத்திற்கும், நற்குண நற்செய்கைகளுக்கும் காரணமாக அமைந்தவை யாவை?

39. ஒளரங்கஜீப் பீஜப்பூர், கோல்கொண்டா நாடுகளை வென்று கொண்டது எங்ஙனம்? அதனாலாய பயன் என்ன?

40. இந்தியாப் படத்தில் ஒளரங்கஜீபின் சாம்ராஜ்யத்தைக் குறித்துக் காட்டுக.

41. அவருடைய கடைசிக் காலத்தில், ஒளரங்கஜீபின் மனம் எவ்வாறு சஞ்சலத்தை யடைந்திருந்தது என்பதை விவரித்தெழுதுக.

42. முகலாய ரா்ஜ்யம் க்ஷீணிக்கக் காரணம் என்ன?

# X. மாபெரும் மதங்கள்

இந்தியா ஒரு பெரிய களஞ்சியம் போன்றது. இங்கே சர்வ சமயங்களைச் சேர்ந்தவர்களும் இருந்துவருகின்றனர். உலகத்தின்கண் தோன்றிய பெரிய மதங்கள் யாவும் இந்நாட்டில் இடம் பெற்றிருக்கின்றன. அவைகளில் பல இந்நாட்டில் தோன்றியவை. சில வெளி நாடுகளிலிருந்து இங்கே மக்களால் கொண்டு வரப்பட்டு மக்களிடையே பரவியவை. இங்கே தோன்றியவை ஆலமரத்தின் வேர்களைப்போல் இந்நாட்டின் செழித்த பூமியில் ஊன்றி ஊடுருவிச் சென்றிருக்கின்றன. ஏனைய நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டவை ஆலம்விழுதுகளைப் போல் நிலத்தில் ஊன்றி இந்திய சமூகமென்னும் விசாலமான ஆலமரம் அசையாது பரந்து நிற்கவும், அறிவையும், அருளையும் நாடிவரும் மக்களுக்கு ஆறுதலையும், ஆனந்தத்தையும் கொடுத்து உதவவும் துணைபுரிகின்றன. இந்தியா என்றுமே தெய்வீக ஞானத்தைப் பரவச் செய்து வந்த நாடு. அது உலகத்திற்கே ஞான தீபமாக விளங்குகிறது. எத்தனை மதங்கள் வந்தாலும் அவைகளின் சாரத்தைக் கிரகித்து, பக்குவப்படுத்தி உலகத்திற்கு ஊட்டக்கூடிய ஆற்றல் இந்தியா ஒரு நாட்டிற்கே உண்டு. மற்ற நாடுகள் தத்தம் மதமென ஒவ்வொன்றைக் கொண்டிருக்கலாம். சூரியன் ஒளியைப் போல் மெய்யறிவு எங்கும் பிரகாசிக்கக் கூடியது என்பதை உணர்ந்தவர் இந்தியர். இங்கே இந்துமதம் என உருவெடுத்த, பண்டைக்காலப் பெரியார்கள் தோற்றுவித்த மார்க்கம் பெரும்பாலோரால் பின்பற்றப்படுகிறது. இந்து மதத்தில் மத்திய காலத்தில் தோன்றிய தீப்பழக்கங்கள் சிலவற்றின் பால் வெறுப்புக்கொண்ட மகாவீரர், புத்தர் போன்ற உத்தமர்கள் தோற்றுவித்த ஜைனமதமும் புத்தமதமும் இந்நாட்டில் பிறந்தவை. சைனு, ஜப்பான் முதலிய தேசங்களில் புத்தமதம் பரவிற்று. ஏசுநாதர் தோன்றி ஒப்புயர்வற்ற தூய தியாகத்தைச் செய்து தன்னுயிரையே மக்களின் மீட்சிக்காகப் பணயம் வைத்து உயிர் துறந்தபின் அவர் சீடர்களில் ஒருவராகிய செயிண்ட் தோமா என்பவர் சுமார் 1900 ஆண்டுகளுக்கு முன்பே இங்கே வந்து அம்மதத்தின் உயரிய கொள்கைகளைப் பரவச் செய்தார். வாளேந்தி வந்த இஸ்லாம் இங்கே நிலவும் சமரசத்தினிடையே தானும் ஒன்ருக நின்றுவிட்டது. என்னே நமது நாட்டின் பெருமை! சர்வ சமயங்களும் இங்கே தோன்றி, மக்களைச் சீர்படுத்திய வரலாற்றைச் சிறிது கவனிப்போம்.

## ஆரியரின் வைதிகமதம்

ஆரியர் இந்தியாவுக்கு வந்த பிறகு அவர்கள் பின்பற்றிவந்த தெய்விக வழிபாடுகளை எல்லாம் வேதம் எனப்படும் நூலில் விளக்கிக் கூறியிருக்கின்றனர். கடவுள் ஒருவரே என்பது ஆரியரின் மூலக்கொள்கை. ஆனால் இவர்கள் வேள்விகளை நடத்தி அர்யமான், அக்னி, வருணன் முதலிய தேவதைகளை வழிபட்டு வந்தார்கள். மறுபிறப்பு உண்டென்பதும், ஆத்மா நித்தியமானதென்பதும் இவர்களுடைய முக்கியமான கொள்கை. ஆரியமதம் சடங்குகள் நிறைந்திருந்தது. மானிட வாழ்க்கைக் காலத்தை நான்கு ஆச்ரமங்களாகப் பிரித்து இருந்தனர். அவை பிரம்மசரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், ஸந்யாசம் என்பனவாம். சாதிப் பிரிவினைகள் சமூகத்தில் ஏற்பட்ட கோளாறுகளேயன்றி ஆரியரின் மதசம்பந்தமானவையல்ல. வேதங்களில் திவ்யஞான போதம் உபநிஷத்துக்கள் எனப்படும் தத்துவப் பகுதியில் அடங்கி இருக்கின்றது. இந்த ஆரிய மதம்தான் நாளடைவில் இந்து மதமாகத் தோற்றமளித்தது.

ஆரிய மதத்தில் வேள்விகள் முக்கியமான வழக்கம் என்று கூறியுள்ளோம். வேள்விகளில் உயிர்ப்பலி கொடுத்து வந்தார்கள். இதை விரும்பாத பலர் புதிய மதங்களை ஸ்தாபித்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் ஜைனமதத்தை ஸ்தாபித்த மகாவீரரும், புத்தமதத்தை ஸ்தாபித்த கௌதம சித்தார்த்தரும் ஆவர். இங்கே அவர்களுடைய வாழ்க்கையையும், அவர்கள் தோற்றுவித்த மதங்களின் கொள்கைகளையும் தெரிந்து கொள்வோம்.

## மகாவீரர் (கி. மு. 540—468)

ஜைன மதத்தை ஸ்தாபித்தவர் வர்த்தமான மகாவீரர். வர்த்தமானர் சுமார் கி. மு. 540-இல் விதேக ராஜ்யத்தின் தலைநகரமான வைசாலிக்கு அருகிலிருந்த குண்டக்கிராமம் என்னுமிடத்திற் பிறந்தார். சித்தார்த்தர் என்னும் ஒரு க்ஷத்திரியச் சிற்றரசரின் மனைவியாகிய திருசலை என்ற மாதின் வயிற்றிற் பிறந்த இரண்டாம் பிள்ளையே வர்த்தமானர். திருசலை தேவி மகத ராஜ குடும்பத்தினருக்கு நெருங்கிய உறவினள். வர்த்தமானர், தமது முப்பதாவது வயதில் உலகத்தைத் துறந்தார். இவர் ஓர் அசோக மரத்தடியில் தம் பல்லக்கைவிட்டு இறங்கித் தம் ஆபரணங்களையெல்லாம் கழற்றி எறிந்துவிட்டுக் காவி உடை அணிந்து, சந்நியாசி ஆனார். இவர் சில நாட்கள் தண்ணீர்கூடப் பருகாமற் பட்டினி கிடந்தார்.

இவ்வாறு உலகத்தை வெறுத்த வர்த்தமானர், சுமார் பன்னிரண்டு வருஷ காலம் பலவிடங்களிலும் திரிந்தார். இவர் பிச்சை வாங்கிக்கொள்ள ஒரு பாத்திரத்தைக்கூடத் தம்மிடம் வைத்துக் கொள்ளாமல், பிறர் இட்ட அன்னத்தைத் தம் கைகளிலேயே ஏற்று உண்டார். நாற்பத்திரண்டாம் வயதில் இப்பெரியார் ஞானோதயம் பெற்றார். இவர் ஞானோதயம் அடைந்த பின்னர், ஊரூராகச் சென்று தம் கொள்கைகளை வெளியிட்டார். இவர் நகரினுள் புகாமல் நகருக்கு வெளியே தங்குவார். நகரவாசிகள், பணக்காரர், ஏழைகள், உயர்ந்தோர், தாழ்ந்தோர் யாவரும் வித்தியாசமின்றி வந்து இவரைத் தரிசித்து இவரது உபதேசங்களைக் கேட்டுச் செல்வார்கள்.

இனி ஜைன மதக் கொள்கைகளை ஆராய்வோம்: ஜைன மதம், வேதாந்தக் கொள்கையை நிராகரிக்கிறது. மனிதர், பறவை, மிருகங்களுக்கு மட்டுமின்றி, மரம், உலோகம், காற்று, நெருப்பு முதலியவைகளுக்கும் ஜீவன் உண்டு என்று ஜைனர் நம்புகின்றனர். கல்லுக்கும் தண்ணீருக்குங்கூட மனிதர் தீங்கு செய்யலாகாது என்பது அவர்கள் கருத்து. உலகத்தைச் சிருஷ்டி செய்த முழுமுதற் கடவுள் நம்பிக்கையை அவர்கள் மறுக்கின்றார்கள். ஜைன மதத்தின் முதல் கோட்பாடு அஹிம்சையே; உயிருள்ள ஜீவன் எவ்வளவு இழிந்ததாய் இருப்பினும், அதைச் சிறிதேனும் துன்புறுத்தலாகாது என்று ஜைனமதம் வற்புறுத்துகிறது. உயிரற்றவை என்று பிறர் கருதும் வஸ்துக்களுக்கும் ஜீவன் இருக்கிறது என்று ஜைனர் கொண்டதால், பிராமண பௌத்த மதத்தினரின் கொள்கைகளைக் காட்டிலும், இவர்களது அஹிம்சை சம்பந்தமான நோக்கங்கள் மிகச் சிறந்தன என்பதை உணரலாம். ஜைன மதத்தினர் தமது ஆசைகளை அடக்க வேண்டும். ஜாதிபேதங்களை ஜைனமதம் அங்கீகரிக்கவில்லையாலும், ஜைன மதத்தினரிடமும் இந்துக்களிடம் காணப்படுவனபோன்ற ஜாதிபேதங்கள் காணப்படுகின்றன.

இக்கொள்கைகளையுடைய ஜைன மதம் நாளடைவில் இந்தியாவில் பரவிற்று. மகத அரசனான அஜாதசத்ரு ஒரு ஜைனர். நந்த அரசர்கள் ஜைனர்கள். சந்திரகுப்த மௌரியரும் ஜைன மதத்தைத் தழுவினர் என்று ஒரு வரலாறு கூறுகின்றது. இம் மதம் மேற்கு இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் பரவியது.

ஜைன சமயத்தினால் விளைந்த நன்மைகள் பல; சிற்ப சாஸ்திரமும் கல் தச்சு வேலையும் சிறப்புற்றன. ஆபு மலையிலுள்ள ஜைனக் கோவிலும், மைசூர் ராஜ்யத்தில் கோமதகிரியில்

செதுக்கப்பட்டிருக்கும் கோமதீசுவரர் என்னும் துறவியின் சிலையும் மேற்கூறிய கலைகட்குச் சான்ருகும். ஜைனர்களால் எழுதப்பட்ட பண்டைத் தமிழ் நூல்கள் பல.

பாமர மக்களின் உதவியும், ஜைன சங்கத்தின் முறைகளும் பல நூற்ருண்டுகள் ஜைன மதம் அழிவடையாதிருந்ததற்குக் காரணங்களாம். புராதனக் கொள்கைகளேயும், ஸ்தாபனங்களையும், பழக்கங்களையும் ஜைன மதம் இடைவிடாது கையாண்டு வருவதால், அது இன்றும் அழிவடையாதிருக்கிறது.

## கௌதம புத்தர்—'அஞ்ஞான இருள் அகற்றவந்த மெய்ஞ்ஞான ஜோதி' (கி. மு. 563—483)

கௌதம புத்தர் கி. மு. 563-இல் கபிலவஸ்து என்னுமிடத்தில் பிறந்தார். இவர் காசிக்கு வடக்கே இமயமலைக்கு அருகிலுள்ள ஒரு சிறு ராஜ்யத்தை ஆண்ட சுத்தோதனர் என்பவரின் மைந்தர். இவர் தம் தந்தையாரின் மாளிகையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தார். நாளடைவில் பிணி, மூப்பு, சாக்காடுகளால் உயிர்கள் வருந்துவதைக் கண்ட இவரது உள்ளம் துடித்தது. இவரது முப்பதாமாண்டில் இவர் மனைவி ஒரு குமாரனைப் பெற்றெடுத்தாள். இல்லறத்தில் பற்று அதிகரிப்பதைக் கண்ட கௌதமர், இல்லறத்தைத் துறப்பதே சரியெனத் தீர்மானித்துத் தம் மனைவியையும் மைந்தனையும் ராஜ்யத்தையும் துறந்து, காட்டில் வசிக்க முடிவு செய்தார். இவர் கயாவிற்கு அருகில் உள்ள காடுகளில் ஆறு வருஷ காலம் தவம் செய்தார். உடம்பைச் சிறிதும் கவனியாது தவம் செய்த கௌதமர், மெலிந்து, பலமிழந்து தளர்ச்சியுற்று, உடலை வருத்திச் செய்யும் தவத்தால் யாதொரு பயனுமில்லை என்பதை உணர்ந்து தவத்தை விட்டார்.

பின்னர், இவர் ஓர் அரச மரத்தினடியில் அமைதியுடன் அமர்ந்திருந்து, துன்பங்களுக்குக் காரணத்தைப் பற்றியும், துன்பம் நீங்குதற்குரிய மார்க்கத்தைப் பற்றியும் ஊண் உறக்கமின்றி ஆராய்ந்தார். இறுதியில், இப்பெரியார்க்கு ஞானோதயம் உண்டாயிற்று. உடனே, இவர் தாம் அறிந்த உண்மைகளை உலகினருக்கும் போதிக்கத் தீர்மானித்தார். அன்று முதல் கௌதமர், 'புத்தர்' என்று வழங்கப்பட்டார். புத்தர் என்பதற்கு 'ஞானோதயம் பெற்றவர்' என்பது பொருள்.

புத்தர் முதன் முதல் காசிமா நகரத்துக்கு அருகிலுள்ள சார

நாதம் என்னுமிடத்தில் தாம் உணர்ந்த உண்மைகளை எடுத்துரைத்தார். இவர் சீடர்களில் பெண்டிரும் இருந்தனர். இவர் பல இடங்களுக்கும் சென்று, தாம் அறிந்த உண்மையைப் போதித்து, பல அரச குடும்பங்களையும் கோடிக் கணக்கான மக்களையும் தம் வழிக்குத் திருப்பினர். இவர் உலகில் பல இடங்களிலும் நிலைத்து நிற்கும் ஒரு பெரிய மதத்தை ஸ்தாபித்துவிட்டுத் தம் எண்பதாவது ஆண்டில் நிர்வாணமடைந்தார்.



கௌதம புத்தர்
(*Copyright—Archaeological Survey of India*)

**புத்தமதக் கொள்கைகள் :** கௌதம புத்தர், கர்மம், மறு பிறப்பு முதலிய இந்து மதக் கொள்கைகளைத் தமது சித்தாந்தங்களில் உபயோகித்தார். பழம் பிறப்பில் ஓர் ஆன்மா செய்த புண்ணிய பாவங்களே இம்மையில் அதன் வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன என்பதே கர்ம சித்தாந்தம். பிறவியே பாவம் என்றும், மறு பிறப்பினின்றும் விடுதலையடைவதே போற்றத்தக்கதென்றும், புண்ணிய கருமமே பயனுறச் செய்யக்கூடியதென்றும், பயனைப் பெறப் புனிதமான நல்வாழ்க்கையைக் கைப்பற்ற வேண்டுமென்றும், மனோ வாக்குக் காயங்களில் தூய்மை இருக்க வேண்டுமென்றும் புத்தர் வற்புறுத்தினர். 'கொலை, களவு, விபசாரம் முதலியவைகளைத் தவிர்க்கவேண்டும்; பொய் சொல்லலாகாது; பிறர் பழியைப் பரவச் செய்யலாகாது; குற்றம் கண்டுபிடிப்பதில் ஈடுபடலாகாது; பொருளாசையும் பகைமையும் தகா; அஞ்ஞானத்தை ஒழிக்கவேண்டும்' என்பன புத்தரின் கட்டளைகளாகும். உண்மை பேசுவதின் உயர்வும், பெரியோர்களை மதிப்பதும் ஜீவன்களிடம் அன்பு பாராட்டுவதும் மேலான செய்கைகள் என்று புத்தர் வற்புறுத்தினர். மனிதர் நன்னம்

பிக்கை, நல்விருப்பம், நல்வாக்கு, நன்னடத்தை, நல் வாழ்க்கை, நன்முயற்சி, நன்மனப்பான்மை, நல்யோகம் எனப் பட்ட உயரிய எண்வகை மார்க்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று புத்தர் கூறுகிருர். குடும்பங்களிலிருக்கும் ஆடவரும் பெண்டிரும் இப்பரிசுத்த மார்க்கங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்; எனினும், பௌத்த சங்கத்தைச் சேருபவர்களே முழுத் திருப்தியடைவார்கள் என்று கருதப்பட்டது. மகளிர் துறவிகளாகக் கூடும்; எனினும் இவர்கள் பௌத்த சங்கத்தில் முக்கியமான பதவிகளை வகித்ததே இல்லை.

புத்த மதம் பல மாறுதல்களை அடைந்து, வலிமைபெற்று இந்திய நாட்டையும் தாண்டிப் பல தேயத்தாருக்கும் நாகரிகத்தையும் ஒழுக்கத்தையும் நல்ல நடத்தையையும் அளித்தது.

## செய்ண்ட் தோமா

தோமா முனிவர் ஏசுநாதரின் சீடர்களில் ஒருவர். அவர் தமது குருநாதரோடு கூடவே வாழ்ந்துவந்தபடியால் புதிதாக ஏற்பட்ட கிறிஸ்துவ மதத்தின் அடிப்படையான கொள்கைகளை அனுபவ பூர்வமாக உணர்ந்தவர். ஏசுநாதரின் சீடர்கள் பற்பல திசைகளுக்கும் சென்று தமது குருநாதரின் ஆணையைக் காப்பாற்றி மக்களை நல்வழியாம் புதுவழியில் செலுத்த முயற்சித்தனர். தோமா முனிவர் கிழக்குப் பிரதேசத்திலுள்ள நாடுகளில் பிரசாரம் செய்து வந்தார். கி. பி. முதல் நூற்றுண்டில் இவர் மலையாளக்கரை நாடுகளில் உபந்நியாசங்கள் புரிந்து தமது குருநாதருடைய போதனைகளைத் தெளிவாக எடுத்துரைத்தார். இங்கே ஆதியில் அம்மதத்தைத் தழுவியவர்களின் சந்ததியார் தாம் இன்றும் அங்கே இருந்து வருகின்றனர். அன்று முதல் இந்நாட்டில் கிறிஸ்துவ மதம் பரவத் தொடங்கிற்று. அவர் மேற்குக் கரையில் தமது வேலையைச் செய்த பின்னர், சென்னை மயிலாப்பூரிலும் அதற்குச் சமீபத்திலுள்ள ஆலந்தூரிலும் இருந்துகொண்டு மதப்பிரசாரம் செய்து வந்தார். அன்று அவர் தொடங்கிய பிரசாரம் இன்று தேசமெங்கும் தழைத்து இருக்கிறது. கிறிஸ்துவ மதப்பிரசாரகர்கள் மக்களுக்கு ஊழியம் செய்வதையே தமது லட்சியமாகக் கொண்டு எத்தனையோ கலாசாலைகளையும், கல்லூரிகளையும், ஆஸ்பத்திரிகளையும், அனாதை ஆச்ரமங்களையும் நடத்தி வருகிருர்கள்.

## திருவள்ளுவ நாயனர்

‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு’ என்று பாரதியார் புகழ்ந்த வள்ளுவனர் நம்மவர் என்பதை நாம் நினைக்கும் போதெல்லாம் நமக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது. வள்ளுவனர் தெய்வப் புலமை வாய்ந்தவர். அவர் இயற்றிய ‘குறள்’ உலகத்திலேயே ஒப்பு உயர்வு அற்ற நீதி நூல்.

வள்ளுவனர் கி. பி. முதல் நூற்றுண்டில் தோன்றியவரென்று சிலரும், கி. மு. முதல் நூற்றுண்டிலேயே இங்கே வாழ்ந்து வந்தார் என்று சிலரும் கூறுகின்றனர். மானிட வாழ்க்கையில் ஒருவன் சம்பந்தப்படக்கூடிய எல்லாத் துறைகளிலும் தெளிவாகக் கற்று, உணர்ந்து அனுசரிக்க வேண்டிய நீதி முறைகளை இக்காவியத்தில் நன்கு விளக்கி இருக்கிருர். இந்த நூலில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகள் இருக்கின்றன. நமது சிறுவர் திருக்குறளைப் படித்து அதன்படி ஒழுகுவார்களானல், நாட்டின் குறைகள் யாவும் ஆதித்தன் கிரணங்கள் தொட்ட பனி போல் பறந்துபோம்.

## சங்கரர்

ஸ்ரீமத் சங்கரர் இப்போதைக்குச் சுமார் 1150 வருஷங்களுக்கு முன்பு இருந்தார். அவர் மலையாளம் ஜில்லாவில் காலடி என்னும் கிராமத்தில் அவதரித்தார். அவர் ஒரு நம்பூத்ரிப் பிராமணர். மிகச் சிறுவயதிலேயே அவருடைய தந்தை இறந்து போனர். ஆயினும், பதினறு வயதிற்குள் அவர் சகல கலைகளையும் செவ்வனே கற்றறிந்தார்.

அவர் துறவியாகிக் காசி, காஷ்மீரம் முதலிய இடங்களுக்குச் சென்று அங்கிருந்த பேரறிவாளர்களிடமிருந்து பல அரிய விஷயங்களைத் தெரிந்துகொண்டார். அவர் பரமாத்துமாவுக்கும் ஜீவாத்துமாவுக்கும் (அதாவது கடவுளுக்கும் உலகத்து உயிர்களுக்கும்) பேதம் இல்லை என்றும், அவை இரண்டும் ஒன்றே என்றும் உபதேசித்தார். அவர் ஜீவாத்துமா மறு பிறப்பெடுக்காமல் பரமாத்துமாவுடன் ஐக்கியப்படுவதே முக்தி என்றும், அதையடைய ஒவ்வொருவரும் தினந்தோறும் கடவுளைக் குறித்துத் தியானித்துப் பூஜைகள் செய்ய வேண்டும் எனவும் உபதேசித்தார். அவர் உபதேசித்த மதத்துக்கு அத்வைதம் எனப்

பெயர் வந்தது. அத்வைதம் என்ருல் இரண்டு அல்லாதது என்பது பொருள்.

அவர் நம் நாடு முழுவதும் சஞ்சாரம் செய்து இந்து மதத்தின் பெருமையை ஜனங்களுக்கு எடுத்து உரைத்தார். அவர்



ஸ்ரீமத் சங்கரர்

ஆங்காங்கு மடங்களை உண்டாக்கினர். அவர் காஞ்சீபுரத்தில் மாணவர்கள் கல்வி கற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அவர் வேதவியாசருடைய பிரம்ம சூத்திரத்திற்கும், உபநிஷத்துக்களுக்கும் உரைகள் எழுதியிருக்கிருர். அவைகளுக்குச் சங்கரபாஷ்யம் என்பது பெயர். அவர் முக்கியமாகப் பரமசிவனையே தொழுதார். அவர் தமது 32-ஆம் வயதில் காலகதியை அடைந்தார்.

## ராமானுஜர்

ஸ்ரீமத் ராமானுஜர் கி. பி. 1017-இல் செங்கற்பட்டு ஜில்லா விலுள்ள ஸ்ரீபெரும்பூதூர் என்ற கிராமத்தில் அவதரித்தார். அவர் சிறு வயதிலேயே காஞ்சீபுரம் சென்று யாதவப்பிரகாசர் என்ற பேரறிவாளரிடம் கல்வி கற்றுச் சிறந்த கல்விமான் ஆனுர். சிறிது காலம் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார். பிறகு இல்லறத்தில் வெறுப்புற்றுத் துறவியானுர். அவர் துறவிகளிலெல்லாம் சிறந்து விளங்கினுர். இவருடைய சீடர்கள் இவரை யதிராஜர் எனக் கொண்டாடினுர்கள். இவரை உடையவர், எம்பெருமானுர், பாஷ்யகாரரர் எனவும் கூறுவர். இவரும் வேத வியாசருடைய பிரம்ம சூத்திரத்திற்கும், உபநிஷத்துக்களுக்கும் உரை நூல்கள் எழுதியுள்ளார்.



ஸ்ரீமத் ராமானுஜர்

ராமானுஜர் மோக்ஷத்தையடைய பக்தி தான் சிறந்த சாதனம் என உபதேசித்தார். "ஜீவாத்துமா பிறவித் துன்பத்தினின்று விடுபட்டுப் பிறகு (மறுபிறப்பெடுக்காமல்) பரமாத்துமாவை அடைய முயல்வதே ஜீவாத்துமாவின் நோக்கமாதல் வேண்டும். பரமாத்துமாவிற்குத் தொண்டு புரிவதற்காகவே ஜீவாத்துமா உண்டாகியது. ஆகையால் பரமாத்துமாவின் பக்கத்திலிருந்து தொண்டு புரிவதே முக்தி" என்ருர் ராமானுஜர். பரமாத்துமாவும், ஜீவாத்துமாவும் ஒன்றென அறிவதுதான் முக்தி என்ருர் ஸ்ரீமத் சங்கரர். ஆதலினுல், ராமானுஜர் உபதேசித்த மதம் விசிஷ்டாத்வைதம் எனப் பெயர்பெற்றது.

ஸ்ரீரங்கத்தில் ஆளவந்தார் என்ற குரு சிரேஷ்டர் முக்தியடைந்ததும், ராமானுஜர் ஸ்ரீரங்கம் சென்ருர். அப்பொழுது சோழ நாட்டை ஆண்டு வந்த குலோத்துங்கர் சைவமதப் பற்றுடையவராதலால், தமக்குத் தீங்கிழைக்கக் கூடுமெனக் கருதி ராமானுஜர், மைசூருக்குச் சென்ருர். அக்காலத்தில் மைசூரை

ஆண்டுவந்த மன்னரைச் சமண மதத்தினின்று வைஷ்ணவ மதத்தில் சேர்த்தார். அவர் வைஷ்ணவ மதத்தைப் பரப்பி நானா ஜாதியினரையும் வைஷ்ணவராக்கினார்; அநேக மடங்களையும் ஏற்படுத்தினார். அவர் எல்லா ஜாதியினரும் கடவுளை வழிபட்டு முக்தியையடையலாம் எனக் கூறினார். அவர் ஞானத்தினாலன்றி, பக்தியினாலும் மோக்ஷத்தை அடையக்கூடும் என உபதேசித்தார். தமது 120-ஆம் வயதில் ராமானுஜர் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## மத்துவர்

கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தென் கன்னடம் ஜில்லாவிலுள்ள உடுப்பி என்ற ஊரில் ஸ்ரீமத் மத்துவாசாரியார் அவதரித்தார். இவருக்கு ஆனந்த தீர்த்தர் எனவும் பெயர் உண்டு. இவரும் சிறக்கக் கற்றவர்.

ஸ்ரீமத் மத்துவாசாரியாரும் ஊர் ஊராகச் சென்று தமது மதத்தை உபதேசித்து அநேக மடங்களை அமைத்தார். இவர் ஜீவாத்துமாவும் பரமாத்துமாவும் வேறானவை. பரமாத்துமா தலைவர், ஜீவாத்துமா தொண்டன். ஜீவாத்துமா, பரமாத்துமாவை அடைந்து அதற்கு எப்போதும் தொண்டு புரிவதுதான் முக்தி எனப் போதித்தார். அதனாலேதான் இவருடைய மதம் த்வைதம் எனப்பட்டது. த்வைதம் என்றால் இரண்டானது என்று பொருள். பரமாத்துமாவும், ஜீவாத்துமாவும் ஒன்றுபடுவதோ, அன்றிச் சமஉரிமையைப் பெறுவதோ இல்லை என்பது மத்துவாசாரியாருடைய கொள்கை. அவை தெளிவாக இரண்டு என உபதேசித்தார் இப்பெரியார். தமது 79-ஆம் வயதில் இவர் காலகதி யடைந்தார்.



ஸ்ரீமத் மத்துவாசாரியார்

இவரும் வேதவியாசருடைய பிரம்ம சூத்திரத்திற்கு உரை நூல் எழுதியிருக்கிறார். இவரைப் பின்பற்றியவர்கள் மாத்துவர்கள் எனப்படுவார்கள். இவர்கள் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் பேரன்பு கொண்டு அவரைத் தொழுகிறார்கள்.

## ஸ்ரீ சைதன்யர்

ஸ்ரீ சைதன்ய மஹாப்பிரபு என்பவர் வங்காளத்தில் நாதியா என்று வழங்கப்படும் நவத்வீபம் என்னுமிடத்தில் அவதரித்த ஒரு மஹான். நவத்வீபம் புராதன நகரம். அங்கே, சிறந்த புகழ்பெற்ற கல்விச்சாலைகள் பல உண்டு. நாட்டின் பற்பல பாகங்களிலிருந்தும் கல்வி கற்பதற்காகவே இங்கே நூற்றுக் கணக்கான இளைஞர் வருவதுண்டு. இந்துக் கலை, ஆசாரம், ஒழுக்கம் இவைகளுக்கு நவத்வீபம் ஒரு நிலையாக விளங்கிற்று.

நவத்வீபத்தில் ஓர் உயர் குலத்தில் சைதன்யர் தோன்றினர். இவரை கௌரங்கப் பிரபு என்றும் அழைப்பதுண்டு. இவர் சிறு வயதிலேயே தமது கூர்மையான புத்தியின் திறமையை வெளியிட்டார். பதினறு வயது வருமுன்னரே எல்லா வேதங்களையும், சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தார். ஆனல் இவருக்குச் சடங்குகளிலேயும், வெளிவேஷங்களிலேயும் நம்பிக்கை கிடையாது. ஜாதி வேற்றுமைகளை வெறுத்தார்.

பக்தி மார்க்கம் ஒன்றே முக்தியளிக்கும் என்பது இவருடைய நம்பிக்கை, சித்தாந்தம். ஆகையால் இவர் கிருஷ்ண பக்தியை நிலைநாட்டித் தன்னைக் கடவுளின் திருவடிகளில் லயப்படுத்தி மெய்மறந்து பஜனை செய்வதே உத்தமமான வழி என்று புகன்றார். அதுமுதல் இவரை ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் என்று அழைக்கலானார்கள்.

இவர் எல்லோரையும் சேர்த்துக்கொண்டு பக்தி வழியைப் பரவச் செய்தது வைதிக இந்துக்களுக்குப் பிடிக்கவில்லை. சைதன்யருக்கு ஜாதிமாத்திரமேயல்லாது மதபேதமும் கிடையாது. பல முஸ்லிம்களையும் இவர் தமது கூட்டத்தில் சேர்த்துக் கொண்டார். இவருடைய சீடர்களான யவன்ஹரிதாஸ், ரூப், சந்தான் என்பவர்கள் பல முஸ்லிம்களை வைஷ்ணவ மதத்தில் சேர்த்துக்கொண்டார்கள். இதற்காக வைதிகர்கள் அவர்களை ஜாதி கடத்தினர். எனினும், சைதன்யர் தம் சீடர்கள் செய்ததை ஒப்புக்கொண்டு அவர்களுக்குத் தமது ஆதரவைக் கொடுத்தார்.

சைதன்யப் பிரபு தொடங்கிய இயக்கம் இன்றும் மக்களிடையே பரவிவருகிறது. அன்பு, பக்தி இவை இரண்டுமே அவருடைய போதனைகளின் அடிப்படையான கொள்கைகள். அவருடைய போதனைகளை கௌடீய மடம் என்னும் ஸ்தாபனம் பரவச்செய்து வருகிறது. இவ்வியக்கம் வங்க நாட்டில்

தோன்றிற்றெனினும் இக்காலத்தில் இந்தியாவின் பல பாகங்களிலும், வெளிநாடுகளிலும்கூடப் பரவியிருக்கிறது.

## பக்தி இயக்கங்கள்

பதினேராம் நூற்றுண்டில் இஸ்லாம் இந்தியாவில் பரவத் தொடங்கியதன் பலனுகப் பல புது இயக்கங்கள் தேசத்தின் நாலா பக்கங்களிலும் தோன்ற ஆரம்பித்தன. இஸ்லாம் போதித்து வந்த தத்துவங்களை இந்தியர் ஊன்றிக் கவனித்துத் தமது மதங்களைப் புதுக்கொள்கைகளுக்கு ஏற்றவாறு திருத்தி அனுசரிக்கலானுர்கள்.

## இஸ்லாம் மதம் தோன்றிப் பரவுதல்

இந்தியாவின் ஜனத்தொகையில், பெரும்பான்மையோர் இந்துக்கள்; ஆறில் ஒரு பங்கினர் முஸ்லிம்கள். முஸ்லிம்களின் மதமான இஸ்லாம் தோன்றிப் பரவிய வரலாற்றைச் சிறிது தெரிந்து கொள்வோம்.

இந்தியாவுக்கு வடமேற்கே அரேபியா என்ற நாடு இருக்கிறது. பண்டைக்காலத்தில் அந்நாட்டுக் குடிகள் பல தெய்வங்களை வணங்கி வந்தார்கள். அவர்களுக்கு ஆடுமாடுகளை மேய்த்தல் முக்கியத் தொழில்.

அரேபியா நாட்டின் தலைநகரம் மெக்கா என்பது. அதில் கி. பி. 570-இல் ஒரு மகான் அவதரித்தார். அவர்தாம் முகம்மது. அவர் உலகம் புகழும் பெருமை வாய்ந்தவரானுர். அவருடைய தாயின் பெயர் ஆமீனு. அப்துல்லா என்ற பெரியார் அவருடைய தந்தை. முகம்மது இளமையிலேயே தமது பெற்றோரை இழந்தார். தமது 25-ஆம் வயதில், கடிஜா என்ற ஒரு சீமாட்டியாரிடம் வேலைக்கு அமர்ந்தார். சில காலத்திற்குப்பின் அவ்வம்மையாரை அவர் மணந்து கொண்டார்.

அக்காலத்து அராபியர்கள் முரட்டு சுபாவ முடையவர்கள். ஆகையால் நாளடைவில் முகம்மதுவுக்கு அராபியருடைய பழக்க வழக்கங்களிலும், தெய்வ வணக்கத்திலும் வெறுப்பு உண்டாயிற்று. அவருக்கு அவர்களைச் சீர்திருத்தி உண்மை அறிவுடையவர்கள் ஆக்க வேண்டுமென்ற ஆசை பிறந்தது. அவர் ''கடவுள் ஒருவரே; அவரையே நாம் வணங்க வேண்டும்; விக்கிரக ஆராதனை செய்யக் கூடாது; தீய பழக்கங்களை ஒழிக்க வேண்டும்'' என்று உபதேசித்தார். உயர்வு, தாழ்வு என்ற வேற்றுமைகள் பொய் என்றும், ஒவ்வொருவரிடமும் அன்பும்

தயையும் நிரம்பி இருத்தல் வேண்டும் என்றும் போதித்தார். இச்சிறந்த உண்மைகள் அடங்கிய மதம்தான் இஸ்லாம் எனப்படும். முகம்மதுவினுடைய சிஷ்யர்கள் அவரை முகம்மது நபி என்று வழங்கலானார்கள். அதுமுதல் அவருக்கு நபிநாயகம் எனப் பெயர் ஏற்பட்டது.

முகம்மதுவின் உபதேசத்தை அராபியர் பெரிதும் வெறுத்தனர். அவருடைய கொள்கைகள் அவர்கள் கையாண்டு வந்த பழைய பழக்கங்களுக்கும், ஒழுக்கங்களுக்கும் முரணாக இருந்தன. முகம்மது தங்களை முழுவதும் மாற்றிவிட முயல்வதாக எண்ணிய அராபியர் அவரைப் பகைத்தனர்; அவருக்குத் தீங்கிழைக்கவும் முற்பட்டனர். அதனால் கி. பி. 622-இல் முகம்மது மெக்காவிலிருந்து மெதீனாவுக்குத் தப்பியோடிச் சென்றார். அவர் மெக்காவைவிட்டுச் சென்ற நாளை முதலாகக் கொண்டு முகம்மதியர்கள் தங்கள் வருடங்களைக் கணக்கிட்டு வருகிறார்கள். அதுவே முகம்மதிய சகாப்தமாகும். அதற்கு ஹிஜிரா என்று பெயர்.

மெக்கா குடிகளைப்போலல்லாமல், மெதினாவிலுள்ளவர்கள் முகம்மதுவைப் பின்பற்றினார்கள். அவரைத் தமக்குத் தலைவராக்கிக் கொண்டனர். அவருடைய நற்போதனைகளைக் கேட்டு அவற்றின்படி நடக்கத் தொடங்கினர். பின்னர் கி. பி. 630-இல் முகம்மது ஒரு பெரும் படையுடன் மெக்காவின்மீது படையெடுத்துச் சென்று அதை வென்றார். மெக்கா ஜனங்கள் அவருக்கு அடங்கிப் போனதேயன்றி அவருடைய மதத்தையும் பின்பற்றினார்கள். இரண்டு வருஷங்களுக்குள் அரேபியா முழுவதும் முகம்மதுவின் ஆட்சியில் அடங்கி இஸ்லாமை மேற்கொண்டது. கி. பி. 622-இல் அப்பெரியார் தமது 62-வது வயதில் விண்ணுலகடைந்தார். அவர் ஸ்தாபித்த இஸ்லாம் மதம் கொஞ்சம் கொஞ்சமாக நாளடைவில் ஸ்பெயின், வட ஆப்பிரிக்கா, பாரசீகம், மத்திய ஆசியா முதலிய நாடுகளில் பரவிவிட்டது. முஸ்லிம்களின் வேத புத்தகமாகிய குர் ஆன் என்ற நூலில் முகம்மது நபியின் கொள்கைகள் கூறப்பட்டுள்ளன.

## பக்த கபீர்

பதினான்காம் நூற்றாண்டில் முகம்மது பின் துக்ளக் ஆட்சியின் பிறகு நாட்டில் குழப்பம் மேலிட்டிருந்தது. தைமூர் தன்னுடைய படையெடுப்பினால் குழப்பத்தைப் பெருக்கி, அமைதி

யைக் குலைத்து மக்களின் மனத்தில் பயமும் பாதுகாப்பில்லாத நிலையும் ஏற்படுத்திவிட்டார். இந்துக்கள் பலவிதங்களில் துன்புறுத்தப்பட்டு வந்தனர். இஸ்லாத்தின் மேலான கொள்கைகளை இந்துக்கள் உணரக்கூடாமல் இருந்தது. இந்தியாவுக்கு அதுகாறும் வந்த முஸ்லிம்கள் படையெடுத்து வந்தனர். வாள் வீசி வாழ்க்கையைக் குலைத்து வந்தார்கள். கொள்ளையடிப்பதனால் மக்களுக்குப் பொருள் சேதம் ஏற்பட்டது.

இதனால் இந்துக்கள் இஸ்லாத்தைப் பற்றி அக்காலத்தில் என்ன நினைத்திருக்கக்கூடும்? மேலும் டில்லி சுல்தான்கள் ஆட்சியில் இந்துக்கள் துன்புறுத்தப்பட்டனர்; உரிமைகளற்று வாழ்ந்தனர். இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டன அல்லது சூறையாடப்பட்டன. இந்துக்கள் காபீர்கள் என்றழைக்கப்பட்டு அவர்கள் மீது ஜிஸியா வரி விதிக்கப்பட்டது.

இவைகளினால் எல்லாம் இந்துக்கள் தமது மதப்பற்றை விட்டு விட்டார்களில்லை. அந்த நிலைமைக்கு நேர்மாறாக இந்துக்களிடையே புத்துயிர் தோன்றிற்று. பக்தி இயக்கங்கள் நாட்டின் பல பாகங்களிலும் தோன்றின. ராம, கிருஷ்ண, ஹரி என்னும் பெயர்களால் பாடல்கள் மல்கின. பஜனைகள் பெருகின. பல கவிஞர்கள் தோன்றி இந்தியில் பாட ஆரம்பித்தார்கள். ஸம்ஸ்கிருதம் அரசாங்க ஆதரவற்றுக் கிடந்தது. எனவே மக்களின் மொழிகளிலே அவர்கள் மனத்தை உருக்கும் பாடல்கள் பெருகின.

கபீர் இங்ஙனம் புத்துயிர் அளித்தவர்களில் ஒருவர். இவர் காசியில் அல்லது அதற்குச் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தார் என்றும், ஓர் ஏழைப் பிராமணக் குடும்பத்தில் பிறந்தார் என்றும், ஒரு முஸ்லிம் நெசவாளரால் வளர்க்கப்பட்டாரென்றும் கூறப்படுகிறது. இவரை வளர்த்த தந்தை நூல் அலி என்பவர். அஷ்டானந்தர் என்னும் பெயர் கொண்ட இந்து சந்நியாசி யொருவர் கபீருக்குக் கல்வி கற்பித்து, நற்போதனைகள் செய்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது. கபீர் தனது இளமைப் பருவத்திலிருந்தே மத உணர்ச்சி பெற்று இருந்தார். அவர் எக்காலத்திலும் ராம நாமத்தையும், ஹரி நாமத்தையும் ஜபித்துக் கொண்டே இருப்பாராம். வைதிக முஸ்லிம்கள் அவரை 'காபிர்' என்று அழைத்த பொழுது "யார் ஒருவன் பிறர்மீது பலாத்காரத்தைக் காட்டுகின்றானோ, எவன் மதுபானம் செய்கிறானோ, எவன் பிறரை ஆண்டுவர ஆசைப்படுகிறானோ,

எவன் பிறர் சொத்துக்களைப் பறிக்கிருனே அவனே காபிர் ஆவான்,'' என்று பதில் கூறினராம்.

இந்து வைதிகர்கள் அவர் பூணூல் தரிப்பதையும், விஷ்ணு, நாராயண, ராம, கிருஷ்ண, ஹரி என்றெல்லாம் கூறுவதையும் ஆட்சேபித்தனர். அவர்களுக்கு அவர், 'எனது நாவில் விஷ்ணு, கண்களில் நாராயணன், இருதயத்தில் கோவிந்தன் குடி கொண்டிருக்கிருன்,' என்று பதிலளித்தார்.

இவர் காலத்தில் காசியில் ராமாநந்தர் என்னும் பெயருடைய ஞானி ஒருவர் பக்தி மார்க்கத்தைப் பரவச் செய்து வந்தார். கபீர் அவருடைய சீடராஞர். தமது காலத்தை எல்லாம் பஜனையிலேயே கழித்து வந்தார். இவர் மதத் துரோகியென அக்காலத்தில் டில்லி சுல்தானுயிருந்த சிகந்தர் லோடி முன்பு குற்றஞ் சாட்டப்பட்டு நிறுத்தப்பட்டார். இவர் ராம நாமத்திஞல் முஸ்லிம்களின் காதுகளில் நாராசம் புகுத்துவதாகக் கூக்குரலிட்டார்கள். இந்து வைதிகர்கள் இவர் நாமமும் பூணூலும் தரிப்பது தவறு என்றனர். ஆஞல் கபீர் இவைகளுக்கு அசைவற்று இருந்து விட்டார். இவர் பலவிதத் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டார். ஆயினும் இவர் தம் பொறுமையால் அனைத்தையும் வென்றுர்.

கபீர் இரு மதத்தினரையும் சண்டை இடும் வழியினின்றும் மீட்டுச் சமரசமாய் வாழ்வதற்கு வழிகோலினர். இவரைப் பின் பற்றி வருகிறவர்களுக்குக் கபீர் பந்தி என்பது பெயர்.

## குரு நானக்

கபீர் காலத்திலேயே வாழ்ந்து அவருடன் சமரச மார்க்கத்தை நிலைநாட்ட முயன்றவர் குரு நானக் என்பவர். இவர் பஞ்சாபில் தோன்றி இளமையில் நல்வழியில் தன் வாழ்நாளைச் செலுத்தத் தீர்மானித்துக் கொண்டார். காசியில் வந்து கபீர் அவர்களுடன் சிறிது காலம் இருந்து வந்தார். கபீர் தேக வியோக மடையும் காலத்தில் அவருடைய சீடர் தங்களுடைய துயரத்தைத் தெரிவித்தபோது அவர்களைத் தேற்றித் தமக்குப் பின்னர், நானக், தாம் செய்து வந்த வேலையைச் செய்வார் என்று அவர்களுக்கு எடுத்துக் கூறினராம். நானக் அவர்கள் கபீரைப் போலவே விக்கிரஹ ஆராதனை, ஜாதி வித்தியாசம், ஜாதித் துவேஷம் முதலியவற்றை வெறுத்தார். மனிதன் முக்தியடைவதற்குத் தீர்த்தயாத்திரை, உபவாசம், விரதம், மாலை,

திலகம் இவை எதுவும் வேண்டியதில்லை என்றும், மனமும் குணமும்தான் முக்கியமானவை என்றும் நானக் உபதேசித்துவந்தார். இவர் பக்தி பரவசத்தினல் பாடி வந்த பாடல்கள் 'ஜப்ஜி' என்னும் தோத்திரத்தொகுப்பில் அடங்கியுள்ளன. இவைகளோடு அவர் கபீர் பாடியுள்ள தோஹா எனப்படும் ஈரடி விருத்தங்களையும் பாடி வந்தார். அவரைப் பின்பற்றியவர்கள் தாம் இன்று சீக்கியர் என்னும் பெயரினல் விளங்குகின்றனர். இவர்கள் முதலில் சமரசத்தை நாடிய வகுப்பினராய் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இருந்து வந்த வேற்றுமைகளைப் போக்கி இருவகுப்பினரையும் ஒற்றுமைப்படுத்த உழைத்து வந்தனர். ஆனல் ஔரங்கஜீப் நடத்தையினல் இவர்கள் சிறந்த போர் வீரர்களடங்கிய இனத்தாராகவும், முகலாய ஆட்சியின் சத்துருக்களாகவும், திரும்பி விட்டார்கள். இவர்கள் பஞ்சாபிலே வெகுவாகப் பரவியிருக்கின்றனர்.



குரு நானக்

## அமீர் குஸ்ரூ

இவர் 13-ஆம் நூற்றுண்டில் தோன்றிய மகான். இவர் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவராயினும் சமரசத்திற்காகப் பாடுபட்டவர்; ஸம்ஸ்கிருத பாஷையில் ஆர்வம் கொண்டவர். இவர் எழுதிய கவிதைகள் ஹிந்தியில் இருக்கின்றன. அவைகளில் ஸம்ஸ்கிருதச் சொற்கள் மல்கிக் கிடக்கின்றன. இவர் இந்துக்களோடு நெருங்கிப் பழகி வந்து அவர்களுடைய ஆசாரங்களையும் அநுசரித்து வந்தார்; ஆயினும் தம்மதக் கோட்பாடுகளையும் பின்பற்றினர். ஒன்றுக்கொன்று முரண்படவில்லை என்பது இவருடைய நம்பிக்கை. இவர் இந்துக்களோடு தாராளமாகப் பழகி வருவதைக் கண்ட வைதிக முஸ்லிம்கள் இவரை வெறுத்தார்கள். இவரை விக்கிரஹபூஜை செய்கிறவர் என்று தூஷித்து வந்தனர். அவர் அவர்களுக்கு ஆணித்தரமான பதில் கொடுத்தார். 'நான் அன்பின் வடிவமாகப் பிறந்துள்ளேன். எனக்கு இஸ்லாம் வேண்டியதில்லை. என்னுடைய நரம்புகளே எனக்குப் பூணூலாகும். வேறே எந்த நூலும் எனக்கு வேண்டாம். நான்

விக்கிரஹ பூஜை செய்வதாக மக்கள் என்னை இழிவாகப் பேசுகிருர்கள். ஆம். நான் அவ்வாறு செய்கிறேன். எனக்கு உலக மக்களின் உதவி வேண்டாம்', என்று அவர் எழுதி இருக்கிருர்.

## வடலூர் இராமலிங்க ஸ்வாமிகள்

வட இந்தியாவில் தோன்றிய மகான்களைப் பற்றிப் படித்து வந்தோம். தென்னுட்டிலும் சமரசத்தை நிலைநாட்டி மக்களிடையே அன்பும், ஆனந்தமும் நிலைக்கும் வழியைத் தேடிய மகான்கள் பலர் இருந்தனர். அவர்களுள் சிறந்தவராய், பிரசித்தி பெற்று விளங்குபவர் வடலூர் இராமலிங்க ஸ்வாமிகள். இவர் தென் ஆற்காடு ஜில்லாவில் தோன்றியவர். கல்வித் தேர்ச்சி பெற்றிருந்தார். இவருடைய மூத்த சகோதரர் இவரைக் காப்பாற்றி, நல்ல செல்வாக்குடைய உத்தியோகத்தில் இவரை அமர்த்த எண்ணங் கொண்டார். ஆனல் இராமலிங்கரின் உள்ளம் உத்தியோகத்தில் பற்றுக் கொள்ளவில்லை. மக்களின் துயரத்தைப் போக்கி, அவர்களிடையே குடிகொண்டிருக்கும் இருளை அகற்றி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டுமென்று இவர் எண்ணம் கொண்டார். கிழக்கு இந்தியக் கம்பெனியில் செல்வாக்குடன் ஊழியம் செய்திருந்தால் அளவிலாச் செல்வம் சம்பாதித்திருக்கலாம். பேரானந்தம் வேண்டித் திரிந்த இராமலிங்கருக்குப் பணத்தின்மீது ஆசை ஏற்படவில்லை. சிற்றின்ப வாழ்க்கையை வெறுத்தார். இவர் மக்களிடையே காணப்படும் எல்லாவித வேற்றுமைகளையும் களைந்தெறிய வேண்டுமென்று தீர்மானித்தார். சண்டை சச்சரவு கேடு பயக்குமாதலால் சமரசமே உலகத்தை உய்விக்கக் கூடியது என்றும், துன்மார்க்கமாம் வேற்றுமைகளைவிட்டுச் சன்மார்க்கமாம் ஒற்றுமையை நாடவேண்டுமென்றும் உபதேசித்து வந்தார். இவருடைய நல்வழிக்குச் 'சமரச சுத்த சன்மார்க்கம்' என்பது பெயர். இவர் இயற்றிய அருள் நிறைந்த பாக்கள் மக்கள் மனத்தைக் கொள்ளை கொண்டு போகக் கூடியவை; கேட்போர் மனத்தை உருக்கும்; கல் நெஞ்சத்தையும் கரைத்துவிடும். இவரை 'அருட்பெருஞ்சோதி' என மக்கள் போற்றினுர்கள். ஜீவஹிம்சையை ஒழித்து ஜீவகாருண்யமே மக்களை மாக்களிலிருந்து வேறுபடுத்தி உயர்நிலையை அளிக்குமென்றும் இவர் சொல்லிவந்தார். இவர் போன்ற உத்தமர்களின் நன்மொழிகளைக் கேட்டு அவைகளைப் பின்பற்றுவோமானுல், நாம் எவ்வளவோ சீர்படுவோம்.

## இந்தியக் கலாசார ஐக்கியம்

இந்தியா புராதனமான நாகரிகத்தின் இல்லமென்றும், அந்த நாகரிகம் சிறந்ததென்றும் சரித்திர வாயிலாக நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் இந்தியர் அந்நியர் ஆட்சியில் அடிமைகளாகி விட்டதன் பலனாக, அவர்கள் வெளிநாடுகளுடன் வைத்துக் கொண்டிருந்த வியாபார, கலாசாரத் தொடர்புகள் அற்றுப் போய்விட்டன. இந்தியர்களுக்குள்ளேயே பல வேற்றுமைகளும், பிரிவினைகளும், மதமாச்சரியங்களும், குறுகிய நோக்கங்களும் தோன்றின. இவற்றைக் களைந்தெறிந்து, நாட்டின் மக்களைப் புத்துயிர் பெற்றெழச் செய்து, இந்தியா மறுபடியும் உலகத்தின் முன்னணி நாடுகளில் ஒன்றாக விளங்கும்படி செய்வதற்குப் பல சங்கங்களும் இயக்கங்களும் தோன்றின. நாம் இன்று ஒற்றுமையுடன் ஸ்வராஜ்யமடைந்து சுகவாழ்வுக்காகத் தந்நம்பிக்கையுடன் உழைக்கிறோம் என்றால், அது இவ்வியக்கங்களின் உழைப்பினால் கிடைத்த நற்பயனே ஆகும்.

## ஆரிய சமாஜம்

இந்துக்கள் பிளவுபட்டுப் போய் வேற்று மதங்களில் சேர்ந்து, தம் மதத்திற்கே தீங்கிழைக்க முற்படுவதைக் கண்ட ஸ்வாமி தயானந்த சரஸ்வதி என்னும் மகான் ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்தார். இந்துக்களுக்குச் சுத்தமான வேத தர்மத்தைப் போதித்து அவர்களை ஒற்றுமைப்படுத்தி, இந்துக் கலாசாரத்தைக் காப்பாற்றுவதே ஆரிய சமாஜத்தின் முக்கியமான நோக்கம். தயானந்தர் குஜராத்தில் தோன்றியவர். சிறு வயதிலேயே அவர் சிறந்த ஞானியானார். ஒரு நாள் சிவராத்திரியன்று அவருக்கு ஞானோதயம் உண்டாயிற்று. பிறகு அவர் நாடெங்கும் திரிந்து, தமது கொள்கைகளைப் பிரசாரம் செய்து, லாகூரில் தங்கிவிட்டார். சமீப காலம் வரையில் ஆரிய சமாஜ இயக்கத்திற்கு லாகூர் தலைமை ஸ்தானமாக இருந்து வந்தது. உண்மையான சீர்திருத்தங்களைச் செய்வதில் ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்கள் ஆர்வம் கொண்டவர்கள்; ஜாதி வேற்றுமையை அகற்ற முயல்கின்றார்கள். அவர்கள் பல கல்லூரிகளையும், குரு குலங்களையும், அநாதை ஆச்ரமங்களையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்த இயக்கம் நம் நாட்டிற்குச் சிறந்த ஊழியர்களையும் தியாகிகளையும் கொடுத்திருக்கிறது. ஸ்வாமி சிரத்தானந்தர், லாலா லஜபதி ராய், பண்டித குருதத்த வித்தியார்த்தி

முதலிய எத்தனையோ தேசபக்தர்கள் ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்களே.

## பிரம்ம சமாஜம்

பிரம்ம சமாஜம் வங்காளத்தில் தோன்றிய இயக்கம். இந்து தேச சரித்திரத்தில் ராஜாராம் மோஹன்ராய் என்பவரைப் பற்றி நாம் படித்திருக்கிறோம். அவர் பிராமணர். அவருடைய மூதாதையர் வங்காள நவாப்பின் கொலுவில் உயர்ந்த பதவியில் இருந்து வந்தனர். ராம் மோர்ஹன் வங்காளி, சம்ஸ்கிருதம், பாரஸீகம் ஆகிய மூன்று பாஷைகளையும் நன்கு கற்று உணர்ந்தார். அவருக்கு இந்துக்களிடையே இருந்துவந்த சில கொடிய பழக்க வழக்கங்கள் மன வருத்தத்தைக் கொடுத்து வந்தன. பெண் குழந்தைகளுக்கு இளமையிலேயே மணம் செய்விப்பது, அவர்கள் கைம்பெண்களாய் விடுவார்களானால் அவர்களுக்கு மறு மணம் கிடையாதென்று அவர்கள் வாழ்க்கையையே பாழ்படுத்துவது, விதவைகளை உடன் கட்டை ஏறும்படி கட்டாயப்படுத்துவது, விக்கிரஹங்களை வைத்துப் பூஜை செய்வது இவை போன்ற கொடிய வழக்கங்களை ஒழித்துவிடவேண்டுமென்று அவர் அரும்பாடுபட்டார். பிரம்ம சமாஜம் என்னும் சங்கத்தை ஸ்தாபித்தார். எல்லா மக்களுக்கும் பொதுவான கோயிலை ஸ்தாபித்தார். அவரைப் பின்பற்றி மகரிஷி தேவேந்திரநாத் தாகூர் என்பவர் இந்த சமாஜத்தின் தலைமையை ஏற்று ஊழியம் புரிந்தார். சமாஜம் தோன்றி ஐம்பது ஆண்டுகள் கழிந்த பிறகு கேசவ சந்திரசேன் என்பவர் அதனைப் புதுப்பித்து, தீவிர வேலைத் திட்டங்களைப் போட்டு அதற்குப் புத்துயிர் அளித்தார். இன்று நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் சீர்திருத்தங்களுக்குக் காரணமான பிரம்ம சமாஜத்தார் நமது நன்றிக்குப் பாத்திரமாவார்கள்.



ராஜா ராம் மோஹன் ராய்

## ஸ்ரீ ராமகிருஷ்ணர் இயக்கம்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றி இந்நாட்டிலும் சரி, வெளி நாடுகளிலும் சரி அறியாதார் ஒருவரும் இருக்கமாட்



ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்



சுவாமி விவேகாநந்தர்

டார்கள். இவர் வங்க நாட்டில் தோன்றிய உத்தமர். இவர் உலக வாழ்க்கையின் இன்பங்களை அற்பமாய் மதித்துத் தெய்வவாழ்வை நடத்தியவர். இவர் எக்காலத்திலும் கடவுளின் வடிவமாம் அன்னையின் தியானத்திலே ஆழ்ந்திருப்பார். கல்வித் தேர்ச்சி பெற்றவரென்று இவரைப்பற்றி நாம் கூறமுடியாது. ஆனால் பள்ளியில் சென்று படிக்காத இவருடைய ஞானத்தின் ஆழம் அளக்கமுடியாதது. கூர்மையான பகுத்தறிவும், நுட்பமான புத்தியும் படைத்த நரேந்திரன் என்னும் பெயருடன் சிறு வயதில் இருந்து, பிற்காலத்தில் ஸ்வாமி விவேகாநந்தா என்னும் புகழ்பெற்ற உத்தமரை ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஆன்ம சக்தி காந்தம்போல் இழுத்தது. விவேகாநந்தர் தமது குருநாதரின் பெயரால் ஒரு பிரசார சேவா இயக்கத்தைத் தொடங்கினர். அதன் பெயர் ராமகிருஷ்ண மிஷன் என்பது. இச்சங்கத்தார் செய்து வரும் ஊழியம் அனந்தம். சிறுவர் நமது கலாசாரங்களை மறவாமலிருப்பதற்காக நற்போதனைகளைக் கூட்டங்கள் வாயிலாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும், புத்தகங்கள் வாயிலாகவும் பரவச் செய்கின்றனர். மக்கள் எங்கே எவ்விதமான துன்பங்களுக்கு ஆளாயினும் சரி, அவர்கள் துன்பத்தை நீக்க ராமகிருஷ்ண மடத்தார் அங்கே ஊழியஞ்

செய்ய விரைந்தோடுகின்றனர். அவர்கள் நடத்தும் கல்லூரிகள், ஆஸ்பத்திரிகள், ஆசிரமங்கள் முதலியன எண்ணற்றவை.

## மகாத்மா காந்தியின் சேவை

மகாத்மா காந்தியின் ஊழியத்தைப்பற்றி அறியாதவர் எவரும் இருக்கமாட்டார். அவர் நமக்கென வாழ்ந்தார்; நமக்கென உயிர் துறந்தார். நாம் விடுதலையடைந்து முன்னேறுவதற்காகப் பல நற்போதனைகளை நமக்கு உபதேசித்தார். அவைகளைக் கேட்டு, அவைகளின்படி நாம் நடந்துகொண்டால் நமக்கு நல் வழியுண்டு. அவர் போதனைகளில் நாம் குறிப்பாகக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டியவை: இந்து முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமையை ஒழித்தல், அஹிம்சா தர்மத்தைக் கைக்கொள்ளுதல் என்பன. இவை ஒவ்வொன்றும் எவ்வளவு நேர்த்தியான போதனைகள் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். மதச் சண்டையினால் அல்லவா நம் நாடு சுதந்திரம் இழந்தது; இழந்த சுதந்திரத்தை மறுபடியும் பெறுவது கடினமான காரியமாயிற்று; பெற்றும் அதைப் பரிபூரணமாக அனுபவிக்க முடியாமலிருக்கிறது. தீண்டாமை இருப்பதனால் இந்துக்களுக்கும், நாட்டிற்கும் எவ்வளவு பலக் குறைவு என்பதை நீங்கள் உணர்ந்தால் தீண்டாமை என்பது பஞ்சுபோல் பறந்துபோகும்.



மகாத்துமா காந்தி

உலகம் இன்று ஆயுதங்களைப் பெருக்கிக்கொண்டு போர் புரிந்து வருவதால் அமைதியும் சமாதானமும் நிமிஷ நேரமாயினும் இருப்பதாக இல்லை. எங்கும் பயம், கோபம், குரோதம் முதலிய அவகுணங்கள் தாண்டவமாடுகின்றன. மகாத்துமா காந்தி காட்டிய வழியை நாம் பின்பற்றி நடந்துவந்தால் நம் நாடு உலகத்திற்கே ஒரு திலகமாக விளங்கும்.

### பயிற்சிகள்

1. மகாவீரரும் புத்தரும் புதிய மதங்களை ஏன் தோற்றுவித்தார்கள்?

2. செயிண்ட் தோமா என்பவர் யார்? அவர் எங்கு எவ்வித ஊழியம் செய்தார்?

3. திருவள்ளுவர் எழுதிய திருக்குறளின் மேன்மையை விவரிக்க.

4. சங்கரர், ராமானுஜர், மத்துவாசாரியார்—இவர்களின் தத்துவங்களினிடையே காணும் வேற்றுமைகள் யாவை?

5. சைதன்யர் பரவச் செய்த கொள்கை யாது?

6. குறிப்புக்கள் எழுதி மேன்மையை விளக்குக—கபீர், நானக், அமீர்குஸ்ரூ, இராமலிங்கர்.

7. இந்திய கலாசாரச் சீர்திருத்தத்திற்காக ஆரியசமாஜம், பிரம்ம சமாஜம், ராமகிருஷ்ண மடம்—இவை செய்துள்ள சேவையை விவரித்துக் கூறுக.

8. லாலா லஜபதிராய், ஸ்வாமி சிரத்தானந்தர்—இவர்களைப் பற்றி விவரமாக அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தைப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

9. மகாத்துமா காந்தியடிகள் நமக்குப் போதித்துவந்த தத்துவங்களின் உண்மையை எடுத்துரைக்க.

10. இந்தியாவில் சர்வமத சமரசம் ஏற்படவேண்டியதன் அவசியத்தை விளக்கி ஒரு வியாசம் எழுதுக.

# XI. ஐரோப்பியரின் வருகை

நீண்ட காலமாக இந்தியாவுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் வடமேற்குக் கணவாய்கள், ஆப்கானிஸ்தானம், பாரஸீகம் முதலிய நாடுகளின் வழியாகவும், பாரஸீக வளைகுடா, ஸிரியா, ஆசியாமைனர் ஆகிய இவற்றின் மார்க்கமாகவும், அரபிக்கடல், செங்கடல், எகிப்து ஆகிய இவற்றின் மூலமாகவும் வியாபாரம் நடந்து வந்துள்ளது என்பதை நாம் அறிவோம். வியாபார மார்க்கங்களின் இடையேயுள்ள எகிப்து, ஆசியா மைனர், பாரஸீகம் முதலிய நாடுகள் முஸ்லிம்களின் வசமானபொழுது, மேனாட்டுக் கிறிஸ்தவ வியாபாரிகள் அவற்றின் வழியாக இந்தியாவுக்கு வரமுடியவில்லை. ஆதலால் அவர்கள் நாலா பக்கங்களுக்கும் சென்று புதிய வழிகளைக் கண்டுபிடிக்க முயன்றனர்.

இவ்வாறு முயற்சி செய்து இந்தியாவுக்கு முதன் முதல் வந்தவர் போர்ச்சுகீசியரே யாவர். கி. பி. 1487-இல் பர்த்தாலோமியு டையாஸ் என்னும் போர்ச்சுகீசிய மாலுமி ஆப்பிரிக்காவின்

தென்கோடி முனையையும், இந்து மகா சமுத்திரத்திற்குச் செல்லும் வழியையுங் கண்டுபிடித்தார். பின்னர் மொன்யுவெல் என்னும் போர்ச்சுகீசிய அரசர் **வாஸ்கோட காமா** என்பவரை நான்கு கப்பல்களுடன் அனுப்பினார். அவர் கி. பி. 1497-இல் நன்னம்பிக்கை முனையையும், மறு வருஷம் **கள்ளிக்கோட்டை**யையும் வந்து அடைந்தார்.

அப்பொழுது கள்ளிக்கோட்டையரசர் (அவருக்கு ஜாமொரின் அல்லது சமுத்ரராஜன் என்றும் பெயருண்டு) அயல்நாட்டு வியாபாரத்தினின்றும் ஏராளமான இலாபம் சம்பாதித்து வந்தார். அவ்வியாபாரம் மாப்பிள்ளைகள் (மூர்ஜாதியினர்) என்னும் அரேபியர் வசத்திலிருந்தது. ஜாமொரின் போர்ச்சுகீசியரை வரவேற்று அங்கு வியாபாரஞ் செய்ய அனுமதி தந்தார். அதைக் கண்ட மூர் ஜாதியினர் கலகஞ் செய்யத் தலைப்பட்டனர். ஆனால் தந்திரமும் திறமையும் கொண்ட காமா கி. பி. 1499-ஆம் வருஷம் ஏராளமான மிளகையும், வாசனைத் திரவியங்களையும் கப்பல்களில் ஏற்றிக்கொண்டு, தம் நாடு திரும்பிச் சென்றார். அது முதல் போர்ச்சுகீசியர் இந்தியாவோடு வியாபாரஞ் செய்து வரலானார்கள்.

போர்ச்சுகீசியர்கள் முதலில் வியாபாரத்திலே கருத்தைச் செலுத்தினர். ஆனால், சீக்கிரத்தில் அவர்கள் போர்களில் வெற்றி பெற்று, தாங்கள் வென்ற இடங்களைப் பலப்படுத்தி வரலானார்கள். சில காலம் கழித்து இந்தியர்களைக் கிறிஸ்தவர்களாக்குவதில் மிக்க ஊக்கங் கொண்டனர்; கடைசியில் கி. பி. 1583 முதல் சுமார் நூறு வருஷங்களுக்குள் தங்களுடைய இந்திய வியாபாரத்தை அடியோடு இழந்துவிட்டார்கள்.

கி. பி. 1506-இல் போர்ச்சுகீசிய வியாபார ஸ்தலங்களுக்கு வைசிராயாக நியமித்தனுப்பப்பட்ட **பிரான்சிஸ்கோ டி ஆல்மெய்டா** கோவாவுக்கருகில் ஒரு பெரிய கோட்டையைக் கட்டிக்கொண்டார்; 1509-இல் முஸ்லிம் கப்பற் படைகளை வென்றார். கடலில் போர்ச்சுகீசியருடைய செல்வாக்கு அது முதல் அதிகரித்தது.

ஆல்மெய்டாவுக்குப் பின் வந்த **அல்பான்ஸோடி அல்புகர்க்** இந்தியாவில் ஒரு போர்ச்சுகீசிய ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று எண்ணிப் பாடுபட்டார்; கி. பி. 1510-இல் பீஜப்பூர் சுல்தானுக்குச் சொந்தமான கோவா நகரைப் பிடித்துக்கொண்டார். பின்னர் அது மேற்குக் கடற்கரையிலுள்ள நகரங்களனைத்திலுஞ் செல்வம் மிகுந்ததாயிற்று. போர்ச்சு

கீசியரது வன்மையைக் கண்ட விஜய நகர அரசரும், அஹமது நகரத்து சுல்தானும் அவர்களோடு சிநேகஞ்செய்து கொண்டார்கள். பின்னர் அல்புகர்க் மலாக்காவைப் பிடித்துக் கொண்டது வாசனைத் திரவிய வியாபாரம் போர்ச்சுகீசியர் வசமாயிற்று. அவர் பர்மா, சீனம், மலேயா தீபகற்பம், வாசனைத் தீவுகள் ஆகிய நாடுகளின் அரசர்களோடு சினேகஞ் செய்துகொண்டு, முஸ்லிம்களுடைய வியாபாரத்தை அடியோடு தொலைத்துவிட்டார். கி. பி. 1513-இல் அவர் ஆர்மஸைப் பிடித்துக் கொண்டார். இவ்வாறுகப் போர்ச்சுகீசியர் நன்னம்பிக்கை முனையிலிருந்து ஜப்பான் கடல்வரை செல்வாக்குடையவர்களானுர்கள்.

அல்புகர்க்குப் பின்பு வந்தவர்கள் காலத்தில், போர்ச்சுகீசியர் இலங்கையிலுள்ள கொழும்பு நகரத்தில் கி. பி. 1518-இல் ஒரு கோட்டை கட்டிக்கொண்டனர். கி. பி. 1527-இல் அவர்கள் பாஸ்ஸீன், சால்செட் என்னுமிடங்களை வென்றனர். பின்னர் அவர்கள் ஸான்தோமில் வந்து தங்கி, ஹூக்ளிவரை சென்றனர். கி. பி. 1535-இல் பஹதுர்ஷாவிடமிருந்து அவர்களுக்கு டையூ கிடைத்தது. அதற்குப் பின்னரே அவர்கள் இந்நாட்டினரைக் கிறிஸ்தவர்களாக்கிவரத் தொடங்கினர். அக்பர் அவர்களை அன்புடன் நடத்திஞர். அவர்கள் அவரையும் கிறிஸ்தவராக்க முயன்ருர்கள். கி. பி. 1558-இல் அவர்களுக்கு டாமன் கிடைத்தது. கி. பி. 1560-இல் அவர்கள் இந்தியாவில் டையூ முதல் சிட்டகாங் வரையிலுள்ள கடற்கரைக்கு அதிகாரிகளாய் விட்டனர். பற்றிடங்களையும், அவற்றைக் காக்கக் கோட்டைகளையும் கட்டிக்கொண்டு மிக்க சிறப்புடன் வியாபாரஞ் செய்து வந்த போர்ச்சுகீசியருடைய அதிகாரம் சீக்கிரத்தில் அழிவடைந்தது.

இந்த வியாபாரத்தில் போர்ச்சுகீசியருக்குக் கிடைத்துவந்த லாபத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட டச்சுக்காரர்கள் தாங்களும் அவ்வியாபாரத்தைச் செய்து ஊதியம் பெற விரும்பினர். அவர்கள் முதன் முதல் கி. பி. 1595-இல் இந்தியாவுக்கு வந்தனர்; கி. பி. 1602-இல் கீழ்நாடுகளோடும் வியாபாரம் செய்யும் உரிமையைப் பெற்று, ஒரு டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியை நிறுவினர். சில வருஷங்களுக்குள் டச்சுக்காரர்களுக்கு அரேபியாவின் கடற்கரையோரத்திலிருந்து ஜப்பான் வரை பற்றிடங்கள் ஏற்பட்டுவிட்டன.

டச்சுக்காரர்கள் கி. பி. 1609-இல் பழவேற்காட்டிலும், கி. பி. 1616-இல் சூரத்திலும் பற்றிடங்களைக் கட்டிக்கொண்டார்கள்.

கி. பி. 1641-இல் அவர்கள் போர்ச்சுகீசியரிடமிருந்து மலாக்காவைப் பிடுங்கிக் கொண்டனர்; அவர்களைத் தூத்துக்குடியிலிருந்தும் இலங்கையிலிருந்தும் துரத்திவிட்டார்கள். கி. பி. 1660-இல் அவர்களுக்கு நாகைப்பட்டினம் கிடைத்தது. அது முதல் அதுவே அவர்களுக்கு முக்கிய வியாபார ஸ்தலமாயிற்று. அவர்கள் கொஞ்சங் கொஞ்சமாகப் போர்ச்சுகீசியருடைய வியாபார ஸ்தலங்களைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இந்தியாவுக்கு வந்த எழுபது வருஷங்களுக்குள் அவர்கள் இந்நாட்டில் மசூலிப்பட்டணம், ஹூக்ளி, பாட்னு, டாக்கா, ஆமதாபாத், ஆக்ரா முதலிய இடங்களிலும், இந்தியாவின் கிழக்கில் மலாக்காவிலும், ஜாவாவிலும் பற்றிடங்களைக் கட்டிக்கொண்டு மிக்க மேம்பாட்டுடன் வியாபாரஞ் செய்து வந்தார்கள். ஆனால், அவர்கள் போர்ச்சுகீசியரைத் தொலைத்துவிட்டதைப் போல அவர்களை ஆங்கிலேயர்கள் இந்தியாவினின்றும் துரத்திவிட்டார்கள்.

பிரெஞ்சுக்காரரும் கி. பி. 1664-இல் ஒரு கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனியை ஸ்தாபித்தனர்; கி. பி. 1668-இல் சூரத்திலும், கோல்கொண்டாவிலும் பற்றிடங்கள் கட்டிக்கொண்டார்கள்; பின்னர் டச்சுக்காரர்களிடமிருந்து திரிகோண மலையையும், ஸான்தோமையும் பிடுங்கிக் கொண்டனர்; ஆனால் சீக்கிரத்திலேயே அவற்றை இழந்துவிட்டார்கள்.

கி. பி. 1674-இல் மார்டின் என்ற பிரெஞ்சுத் தலைவர் பீஜப்பூர் அரசருக்குட்பட்டிருந்த செஞ்சிக் கவர்னரிடமிருந்து கடலையடுத்த ஒரு ஸ்தலத்தை விலைக்கு வாங்கி, அதை ஒரு பிரெஞ்சு வியாபார ஸ்தலமாக்கினர். அதுவே பிரெஞ்சுக்காரருடைய இந்திய நாடுகளனைத்துக்கும் தலைநகரமான புதுச்சேரியாயிற்று. கி. பி. 1693-இல் டச்சுக்காரர்கள் அதைப் பிடித்துக்கொண்டார்கள்; ஆனால் ஐரோப்பாவில் அவர்களுக்குள் சமாதானம் ஏற்பட்டுவிட்டதனால், கி. பி. 1697-இல் திருப்பிக் கொடுத்துவிட்டனர்.

கி. பி. 1676-இல் பிரெஞ்சுக்காரர்கள் சந்திர நாகூரை ஔரங்கஜீபினிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள்; பின்னர், காரைக்காலிலும் மாஹியிலும் பற்றிடங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். மார்டின் இருந்தவரை பிரெஞ்சுக்காரருடைய பலம் பெருகிவந்தது. கி. பி. 1706-இல் அவர் இறந்துபோனதால் அவர்களுடைய அதிகாரம் குறைவுபடலாயிற்று. ஆனால் கி. பி. 1741-இல் பிரெஞ்சு கவர்னராக நியமிக்கப்பட்டு இந்தியாவுக்கு வந்த ஜோஸப் பிரான்ஸுவா டூப்ளே காலத்தில் அவர்கள்

மிகுந்த முன்னேற்றத்தை யடைந்தார்கள். டூப்ளே இந்தியாவில் பிரெஞ்சு ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டுமென மிக முயன்றார். இவர் புத்திக் கூர்மையும், அதிகாரத்திலாசையுமுடையவர். இந்தியாவில் பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் உண்டான போர்களுக்கு இவரே முதற் காரணராவர்.

## கிழக்கு இந்தியக் கம்பெனி

கி. பி. 1600-ஆம் வருஷம் லண்டன் நகரத்து வியாபாரிகள் சிலர் அந்நகரசபைத் தலைவரது தலைமையின்கீழ்க் கூடி, கிழக்கு இந்திய வர்த்தகக் கம்பெனியை நிறுவி எலிஜபெத் ராணியாரிடமிருந்து இந்தியாவோடு வியாபாரஞ் செய்யும் தனியுரிமையைப் பெற்றார்கள். இந்த ஆங்கிலேயக் கம்பெனியார் முதலில் டச்சுக்காருடன் போட்டியிட்டு வாசனைத் திரவியத் தீவுகளோடு வர்த்தகஞ் செய்துவந்தார்கள்.

பின்னர், அவர்கள் இந்தியாவில் ஒன்றன்பின் ஒன்றாகச் சில பற்றிடங்களையும், அவற்றின் பாதுகாப்புக்கான கோட்டைகளையும் அமைத்துக்கொண்டு அபிவிருத்தியடைந்து வந்தார்கள். ஜஹாங்கீரிடமிருந்து வியாபாரத்திற்கான சுதந்திரங்களைப் பெறும்பொருட்டு ஹாகின்ஸ் என்பவர் வந்திருந்தாரென முன்னரே கூறியுள்ளோம். கி. பி. 1612-இல் ஆங்கிலேயர்கள் முகலாய அரசர் அனுமதி பெற்று, சூரத்தில் ஒரு பற்றிடத்தை அமைத்துக்கொண்டனர். ஹாகின்ஸுக்குப் பிறகு இங்கு வந்த ஸர் தாமஸ் ரோ ஆங்கிலேயர்கள் இந்தியாவின் கிழக்கு மேற்குக் கடல்களையடுத்தும் முகலாய ராஜ்யத்தின் பற்பலவிடங்களிலும் வியாபார ஸ்தலங்களை அமைத்துக்கொள்ள முகலரசரிடமிருந்து அனுமதி பெற்றார். அதனால் கி. பி. 1611-இல் மசூலிப்பட்டினத்திலும், 1619-இல் பழவேற்காட்டிலும், 1628-இல் ஆர்மகான் என்னுமிடத்திலும் ஆங்கிலேயப் பற்றிடங்கள் உண்டாயின. இவை பெருகவும் ஆங்கிலேயருடைய வர்த்தகமும் அபிவிருத்தியடைந்து வந்தது. ஆயினும், மற்றைய ஐரோப்பியர்களின் போட்டியினால் வியாபாரத்திற்குத் தடைகள் உண்டாயின.

ஆங்கிலேயர்களுக்குக் கிழக்கிந்தியத் தீவுகளில் அம்பாய்னா என்னுமிடத்தில் ஒரு பற்றிடமிருந்தது. அங்கிருந்த ஆங்கில வியாபாரிகளுள் சிலரை டச்சுக்காரர்கள் கி. பி. 1623-இல் யாதொரு காரணமுமின்றிக் கொன்றுவிட்டதனால், ஆங்கிலேயர்கள் அத்தீவுகளை நீத்து, இந்தியாவுக்கே வந்து சேர்ந்தனர். கி. பி.

1639-இல் அவர்கள் விஜயநகர அரச வம்சத்தைச் சேர்ந்த ஸ்ரீரங்க ராயர் என்ற சந்திரகிரி யரசரிடமிருந்து சென்னைப்பட்டினத்தை விலைக்கு வாங்கிக்கொண்டார்கள்; அங்கே ஒரு பற்றிடத்தை யமைத்து, அதன் பாதுகாப்பின்பொருட்டு ஒரு கோட்டை யையுங் கட்டிக்கொண்டார்கள். அதுதான் ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டை. ஆங்கிலேய வியாபாரிகள் கோட்டைக்குள்ளும், அவர்களோடு வியாபாரஞ் செய்துவந்த இந்தியர் வெளியிலும் வசித்துவந்தனர்.

வட இந்தியாவில் பாட்னு, டாக்கா, காஸிம் பஜார் என்னு மிடங்களில் அவர்களுக்கு வர்த்தகசாலைகளிருந்தன. கி. பி. 1633-இல் அவர்களுக்கு வங்காளத்தில் பாலாஸோர் என்னுமிடம் கிடைத்தது. அதற்குச் சில வருஷங்களுக்குப் பின்பு ஷாஜஹான் சக்கரவர்த்தி ஆங்கிலேயர்களுக்கு வங்காளத்தில் வர்த்தகம் செய்யும் உரிமையை அளித்தார். கி. பி. 1651-இல் அவர் அவர்களுக்கு ஹுக்ளியைக் கொடுத்து, அங்கே ஒரு பற்றி டத்தைக் கட்டிக்கொள்ளவும் அனுமதி கொடுத்தார்.

கி. பி. 1690-இல் ஆங்கிலேயர் ஹுக்ளியை யடுத்துள்ள மூன்று கிராமங்களை விலைக்கு வாங்கி அங்கே ஒரு பற்றிடத்தை ஏற்படுத்திக் கொண்டனர். கி. பி. 1697-இல் அங்கே போர்ட் வில்லியம் என்னும் கோட்டையும் கட்டப்பட்டது. ஆங்கிலேயர் வாங்கிக்கொண்ட கிராமங்களுள் ஒன்றுக்குக் காளிகாட் என் பது பெயராதலின், அங்கே பிறகு உண்டான பட்டினத்துக்குக் கல்கத்தா என்ற பெயருண்டாயிற்று.

கி. பி. 1661-இல் இரண்டாம் சார்லஸ் என்னும் ஆங்கிலேய அரசர் போர்ச்சுகீசிய அரசகுமாரியை மணந்து கொண்ட பொழுது அவளுடைய தந்தை தமக்குச் சொந்தமாக இருந்த பம்பாயை மகளுக்கு ஸ்திரீதனமாகக் கொடுத்தார். கி. பி. 1668-இல் சார்லஸ் அரசர் அதை ஆங்கிலேய வர்த்தகக் கம்பெனி யாருக்கு மிகவும் குறைந்த வாடகைக்குக் கொடுத்துவிட்டார். நாளடைவில் சென்னைப்பட்டினம், கல்கத்தா, பம்பாய் ஆகிய மூன்றும் பெரிய நகரங்களாயின.

முதலில், கம்பெனியார் வியாபாரம் செய்வதையே தங்கள் தொழிலாகக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் தங்க ளுடைய பற்றிடங்களில் ஆங்கிலேய அரசர்களிடமிருந்து பெற்ற சாஸனங்களைக் கொண்டும் இந்திய மன்னர்களிடமிருந்து கிடைத்த உரிமைகளைக் கொண்டும் அந்நாடுகளை ஆண்டு வந்தனர்.

## க்ளைவ்

இந்தியாவில் ஆங்கிலேய சாம்ராஜ்யம் ஏற்பட்டதற்கு ஆதியில் ராபர்ட் க்ளைவ் என்பவர் அஸ்திவாரம் போட்டார் என்று சொல்ல வேண்டும். க்ளைவ் இளமையில் பள்ளிக்குச் சென்று கல்விகற்கவில்லை; எவருக்கும் அடங்காமல் திரிந்தார்; வீதிகளில் கண்டவர்களோடு சண்டை போட்டார். அவர் படுத்தியபாடு அவர் தந்தைக்குப் பொறுக்க முடியவில்லை. ஆதலால், அவர் க்ளைவைக் கிழக்கிந்தியக் கம்பெனியில் குமாஸ்தா வேலையில் அமர்த்தி இந்தியாவுக்கு அனுப்பிவிட்டார். க்ளைவ் குமாஸ்தா வேலையை வெறுத்து ராணுவத்தில் சேர்ந்துகொண்டார்; சீக்கிரத்தில் தளகர்த்தருமானார். இவர் முதலில் ஆற்காட் முற்றுகையில் கலந்துகொண்டார். பிறகு இவர் சந்தாசாஹிபின் சேனையைத் துரத்திச்சென்று ஆரணி, காவேரிப்பாக்கம் முதலிய இடங்களில் அதைத் தோற்கடித்தார்; அதன் பின்னர் திரிசிராப்பள்ளியை விடுவிக்கச் சென்றார்; இங்கேயும் வெற்றி பெற்றுப் புகழ்மாலையுடன் திரும்பினார்.

வங்காளத்தில் நவாப்பான ஸிராஜுத் தௌலாவுக்கும் ஆங்கிலேயருக்கும் சச்சரவு ஏற்படவும், நவாப்பு கல்கத்தாவை முற்றுகை செய்து ஆங்கிலேயருடைய கோட்டையைப் பிடித்துக் கொண்டார்.

## வங்காளத்தைச் சம்பாதித்தல்

மேலும் நவாப்பான (ஸிராஜுத் தௌலா முகல் மன்னரின் மேலதிகாரத்தை நிராகரித்தார். அவர் ஆங்கிலேய கவர்னரிடம் தஞ்சம் புகுந்த ஒரு வர்த்தகனைத் தம்மிடம் திருப்பியனுப்புமாறு வேண்டினார். கவர்னர் அனுப்பவில்லை. ஆங்கிலேயர்கள், அவர் உத்தரவை மீறி, தங்களுடைய கோட்டையை மராமத்துச் செய்தனர். இவற்றால் கோபங் கொண்ட வங்காள நவாப்பு கல்கத்தாவைத் திடீரென்று முற்றுகை செய்து, அவர்களுடைய கோட்டையைப் பிடித்துக்கொண்டார். அவரை எதிர்த்துப் போர் செய்யப் போதுமான படைகள் ஆங்கிலேயரிட மில்லாததனால், அவர்களுட் பலர் தங்களுடைய மனைவி மக்களுடன் படகுகளி லேறித் தப்பியோடினர். எஞ்சிய மிகச் சிலர் நவாப்புடன் போர் செய்து தோல்வியடைந்தனர்.) 122

இந்தச் செய்தி சென்னைக்கு எட்டினவுடன் க்ளைவும் வாட்ஸனும் பெரும் படையுடன் கல்கத்தாவுக்குச் சென்று, ஸிராஜுத்

தௌலாவைத் துரத்திவிட்டுக் கல்கத்தாவைக் கைப்பற்றிக் கொண்டார்கள். உடனே நவாப்பு ஆங்கிலேயருடன் சமாதானஞ் செய்து கொண்டார். ஆயினும், அவர் சீக்கிரத்தில் பிரெஞ்சுக் காரருடன் சேர்ந்துகொண்டு போரிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவந்தார். அதையறிந்த க்ளைவ் நவாப்பின் ராணுவத் தலைவரான மீர்ஜாபருடன் சதியாலோசனை செய்து, ஸிராஜுத் தௌலாவைத் தொலைத்துவிட முயன்றார். அந்தத் துரோகமான ஏற்பாட்டை முன்னின்று செய்வித்த அமீர்சந்துக்கு க்ளைவ் ஏராளமான பணம் கொடுப்பதாகச் சொல்லிப் பொய்ப் பத்திர மொன்று எழுதி, அதில் வாட்ஸன் கையொப்பத்தையும் தாமே இட்டார். போர் முடிந்த பின்னர் க்ளைவ் அமீர்சந்தை ஏமாற்றிவிட்டார்.

கி. பி. 1757-ஆம் வருஷம் ஜூன் மாதம் 13-ஆம் தேதி க்ளைவ் மீர்ஜாபருக்குச் செய்தியனுப்பிவிட்டு, 2,000 இந்தியச் சிப்பாய்களும், 9,000 ஆங்கிலேயப் போர் வீரர்களும், 8 பீரங்கி களுமடங்கிய ஒரு படையுடன் போருக்குப் புறப்பட்டார். ஜூன் மாதம் 22-ஆம் தேதியன்று பிளாஸித் தோப்பை அடைந் தார். மறுநாள் பொழுது புலர்ந்ததும் நவாப்பு ஆங்கிலேயரை யெதிர்த்துப் போர்தொடுத்தார். க்ளைவ் சேனையை மண்மேட்டி னால் சூழப்பட்டிருந்த ஒரு சோலையில் பத்திரமாக வைத்திருந்து இரவில் போர் செய்யத் தீர்மானித்திருந்தார். பகலில் மழை பெய்யவும் நவாப்பினுடைய வெடிமருந்து நனைந்து போய்ச் சுடுவதற்கு உதவாமற் போய்விட்டது. க்ளைவின் கதியும் அவ்வாறாகத்தான் இருக்கவேண்டுமென்றெண்ணிய நவாப்பின் சேனாதிபதி, குதிரைப்படையுடன் அந்தத் தோப்பை எதிர்த்துச் சென்று, ஆங்கிலேயருடைய பீரங்கிக்கு இரையானான். அப் பொழுது நவாப்பு போர் வீரர்களைத் தங்கள் மறைவிடத்தி லிருந்து வெளிவரச் செய்யவும் க்ளைவ் திடீரென்று அவர்கள்மீது பாய்ந்து தாக்கிச் சிதற அடித்தார். நவாப்பு வேகமாகச் செல்லும் ஓர் ஒட்டகத்தின் மீதேறி உயிர் தப்பினார். தூரத்தி லிருந்து மறைந்து பார்த்து வந்த மீர்ஜாபர், க்ளைவ் வெற்றி பெற்றதை அறிந்து அவருடன் சேர்ந்து கொண்டார். ஆங்கி லேயர்கள் பிளாஸியில் அடைந்த வெற்றியே அவர்களுடைய இந்திய சாம்ராஜ்யத்திற்கு அடிப்படையாயிற்று. போர் முனையிலிருந்து தப்பியோடிச் சென்ற நவாப்பை மீர்ஜாபர் மகன் கொன்றுவிட்டான். க்ளைவ் உடனே மீர்ஜாபரை வங்காள நவாப்பாக்கினார்.

ஆங்கிலேயர்கள் தமக்குச் செய்த உதவிக்கு ஈடாக மீர்ஜாபர் அவர்களுக்கு ஏராளமான பொருள் கொடுக்க வேண்டியதாயிற்று. அவர் கல்கத்தாவிலிருந்து ஆங்கிலேய, அர்மீனிய, இந்தியக் குடிகளுக்குச் சுமார் ஒரு கோடி ரூபாயும், நீர்ப்படை, நிலப்படைகளுக்குத் தனித்தனி 25 லட்ச ரூபாயும், க்ளைவுக்கும், டிரேக் என்பவருக்கும் தலைக்கு 28 லட்ச ரூபாயும், இவையன்றி க்ளைவுக்கு மட்டும் சொந்தமாக 18 லட்ச ரூபாயும், இதர ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களுக்குப் பொதுவில் சுமார் பத்து லட்சம் ரூபாயும் கொடுத்தார். இவ்வாறாக, அவர் இரண்டேகால் கோடி ரூபாய்க்கு அதிகமான பணத்தைச் செலவிட்டார்.

மீர்ஜாபர் மேலே கூறியவாறு ஏராளமான பொருளைக் கொடுத்ததுமல்லாமல், ஆங்கிலேயருக்குச் சுமார் 882 சதுர மைல் விஸ்தீரணமுள்ள 24 **பர்காணுக்கள்** என வழங்கும் பிரதேசத்தையும் கொடுத்தார். முதலில், அவற்றில் ஜமீன்தாருக்கு உரிய சுதந்திரமே அவர்களுக்கு இருந்தது. ஆனால் இரண்டு வருஷங்களுக்கெல்லாம் அவற்றை நவாப்பு க்ளைவுக்கு ஜாகீராக அளித்துவிட்டார். அதனால் கம்பெனியார் அதுவரையில் நவாப்புக்குச் செலுத்திவந்த வரிப்பணத்தை க்ளைவுக்குச் செலுத்திவரலானார். க்ளைவ் தம் கடைசிக் காலம் வரை அவ்வருமானத்தைப் பெற்று வந்தார். அவருக்குப் பின்பு அந்த 24 பர்காணுக்கள் கம்பெனியாருக்குச் சொந்தமாயின. க்ளைவ் காலத்திலேயே (கி. பி. 1765-இல்) அதனை முகலாய மன்னர் அங்கீகரித்தார். நீர்வளம், நிலவளம், குடிவளம் மூன்றும் ஒருங்கு சேரப்பெற்றதும், கப்பல் மார்க்கமாய் எளிதில் செல்லக் கூடியதும், நதிகளின் மூலம் உள்நாட்டில் நெடுந்தூரம் வரை போகக் கூடியதும் ஆன வங்காளத்தில் ஆங்கிலேயருக்கு முதன் முதல் நாடு கிடைத்தது அவர்களுடைய அதிர்ஷ்டமேயன்றோ!

ஆங்கிலேய சாம்ராஜ்யத்துக்கு உறுதியான அஸ்திவாரம் போட்டு, அவர்களது அதிகாரத்தை இந்நாட்டில் நிலைபெறச் செய்த க்ளைவ் சில சிறந்த சீர்திருத்தங்களையும் செய்தார். அவர் கம்பெனியின் உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்கக் கூடாதென்றும், அவர்கள் சொந்தத்தில் வியாபாரம் செய்யக்கூடாதென்றும் திட்டஞ் செய்து, அவர்களுடைய சம்பளங்களை உயர்த்தினர். க்ளைவ் போர்வீரர்கள் பெற்றுவந்த இரட்டைப் படியை நிறுத்திச் சேனையின் செலவைக் குறைத்தார்.

இவற்றையல்லாமல் க்ளைவ் வங்காள அரசாங்கத்தில் நியாய

விசாரணை செய்வதையும், வரி வசூலிப்பதையும் நவாப்பின் கடமையாக்கி, பணத்தைச் செலவிடுவதையும், சேனைகளை வைத்து நாட்டைக் காப்பதையும் கம்பெனியின் பொறுப்பில் வைத்தார். இதுவே இரட்டையாட்சி எனப்படும். இந்த ஏற்பாடு பின்னர்ப் பெருந் தீமையை விளைவித்தது. இவற்றையெல்லாம் செய்துவிட்டு க்ளைவ் கி. பி. 1765-இல் கடைசி முறையாகத் தமது நாடு சென்று, அங்கே கி. பி. 1774-ல் உயிர் நீத்தார்.

## வாரன் ஹேஸ்டிங்ஸ்

வாரன் ஹேஸ்டிங்ஸ் கி. பி. 1750-இல் கம்பெனியின் ஒரு சிறு குமாஸ்தாவாக வேலையிலமர்ந்து தமது திறமையினாலும் விடா முயற்சியினாலும் நாளடைவில் உயர்ந்த பதவிகளைப் பெற்றார். கடைசியில் கவர்னரின் மந்திராலோசனைச் சபையில் ஓர் அங்கத்தினராக இருந்தபொழுது கவர்னர் பதவியைப் பெற்றார்.

ஹேஸ்டிங்ஸ் அதிகாரத்திற்கு வந்ததும் க்ளைவின் இரட்டை ஆட்சியை யொழித்துக் கம்பெனியாரே தேசப்பாதுகாப்பை யன்றி, வரி வசூல் செய்வதையும், நியாய விசாரணை நடத்துவதையும், ஊர்க்காவல் செய்வதையும் கவனிக்கும்படி ஏற்பாடுகள் செய்தார். அவர் மாகாணத்தைப் பல ஜில்லாக்களாகப் பிரித்து, ஒவ்வொன்றினுக்கும் ஒரு கலெக்டரை அதிகாரியாக்கினார். அவர்களே வரி வசூலும் செய்யவேண்டும். ஜில்லா கலெக்டர்கள் யாவரும் கல்கத்தாவிலுள்ள 'போர்ட் அப் ரெவின்யூ' என்னும் சங்கத்துக்கு அடங்கினவர்களாவர்.

ஜில்லா கலெக்டர்கள் வரி வசூல் செய்வதுமன்றிச் சொத்துக்கள் சம்பந்தமான வழக்குக்களை விசாரித்துத் தீர்ப்பளிக்கவும் வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் கிரிமினல் வழக்குக்களை விசாரிப்பதற்கு நியாய ஸ்தலங்கள் அமைக்கப்பட்டு அவற்றிற்குக் காஜிகள் நியமிக்கப்பட்டனர். மாகாணத்தின் தலைநகரமான கல்கத்தாவில் சிவில் அப்பீல் கோர்ட்டும், கிரிமினல் அப்பீல் கோர்ட்டும் ஏற்படுத்தப்பட்டன. நீதிபதிகளுக்கு உதவி புரிய 'அஸெஸர்களை' நியமித்துக் கொள்ளவும், ஹிந்து முஸ்லிம் சட்டங்களை மொழிபெயர்த்து உதவுவதற்குப் பண்டிதர்களையும் மௌல்விகளையும் நியமித்துக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அப்பொழுது தான் சட்டங்கள் முதன் முதல் ஒழுங்காக வகுக்கப்பட்டு, யாவருமறிய எழுதி வைக்கப்பட்டன. நில வரி சம்பந்தமாகவும், வியாபார வரி சம்பந்தமாகவும் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

ஷாஆலம் என்னும் முகலாய சக்கரவர்த்தி ஆங்கிலேய ருடன் அல்லஹாபாத்தில் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறி மஹாராஷ்டிரர்களுடன் சேர்ந்துகொண்டதனுல், அவ ருக்குக் கம்பெனியார் கொடுத்து வந்த 26 லட்சம் ரூபாய் உப காரச் சம்பளத்தை ஹேஸ்டிங்ஸ் நிறுத்திவிட்டார். அன்றியும் முகலாய அரசர் மஹாராஷ்டிரருக்குக் கொடுத்த அல்லஹாபாத் தையும் கோராவையும் தாம் பெற்று, அவற்றை அயோத்தி நவாப்புக்கு 50 லட்சம் ரூபாய்க்கு விற்றுவிட்டார். ரோஹில் லர்கள், தங்கள் நாட்டின்மீது படையெடுத்து வரக் கருதிய மஹா ராஷ்டிரரை யெதிர்த்துப் போரிடுவதில் தங்களுக்குத் துணை வரும்படி அயோத்தி நவாப்பை வேண்டினர்; அதற்கீடாக நவாப்புக்கு 40 லட்சம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னுர்கள். ஆனுல், மஹாராஷ்டிரர்கள் போர் செய்யாமலே விலகிக் கொண் டார்கள். அவ்வாறிருந்தும் ரோஹில்லர்கள் தாங்கள் சொன்ன படி தமக்குப் பணத்தைத் தந்துவிடவேண்டுமென்று நவாப்பு வற்புறுத்தினர். ரோஹில்லர்கள் அதற்கிணங்காததனுல், நவாப்பு கோபங்கொண்டு அவர்களை அடியோடு தொலைத்துவிட வேண்டுமென்றெண்ணி, அதற்காக ஆங்கிலேயரைத் துணை செய்ய வேண்டினர். அதற்கீடாக நவாப்பு ஆங்கிலேயருக்கு 50 லட்சம் ரூபாய் கொடுக்க உடன்பட்டார். ஹேஸ்டிங்ஸ் பண ஆசையினுல் அதற்கிணங்கிச் சென்று, ரோஹில்லரைத் தோற் கடித்து ரோஹில்கண்டை அயோத்தியோடு சேர்த்துவிட்டார். இது ஒரு பெருந்தவறு எனவே கருதப்பட்டது. ரோஹில் கண்டின் ஒரு சிறு பகுதியைமட்டும் ரோஹில்லத் தலைவரொருவர் ஆட்சி செய்துவந்தார். தற்போதுள்ள ராம்பூர் நவாப்புக்கள் அவருடைய வம்சத்தினரே யாவர்.

கிழக்கு இந்தியக் கம்பெனியின் இந்திய நிர்வாகத்தைச் சீர் திருத்துவதற்காக 1773-இல் ஒழுங்குபடுத்தும் சட்டம் நிறைவேற் றப்பட்டது. இதையொட்டி ஏற்பட்ட கவர்னர் ஜெனரலின் மந்திராலோசனை சபையில் வாரன் ஹேஸ்டிங்ஸுக்கு விரோத மாக மூன்று அங்கத்தினர்கள் இருந்தனர். அதையறிந்து ராஜா நந்தகுமாரர் ஹேஸ்டிங்ஸ் லஞ்சம் வாங்கினதாக அவர்மீது குற்றஞ் சாட்டினுர். ஆனுல், அது விசாரணைக்கு வருவதற்கு முன்னமேயே, நந்தகுமாரர் பொய்க் கையெழுத்திட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். அச் சம்பவத்தில் ஹேஸ்டிங்ஸ் கலந்திருக்கக் கூடுமெனச் சிலர் எண்ணுகிறுர்கள். அதன் பிறகு ஹேஸ்டிங்ஸ்மீது எவரும்

குற்றஞ்சாட்ட முன்வரவில்லை. ஹேஸ்டிங்ஸ் காலத்தில் மைசூரோடும், மஹாராஷ்டிரரோடும் போர்கள் நிகழ்ந்தன. அவைகளைக் குறித்துச் சிறிது அறிந்துகொள்வோம்.

## (i) முதல் மஹாராஷ்டிர யுத்தம்

மூன்ருவது பானிப்பட்டுப் போருக்குப் பிறகு பாலாஜிபாஜிராவ் என்னும் மூன்ரும் பீஷ்வா இறந்துவிட்டார். அவருக்குப் பின்பு அவருடைய மைந்தரான முதலாம் மாதவராவ் பீஷ்வாவானர்.

மாதவராவ் இறந்ததும், கி. பி. 1772-இல் அவருடைய தம்பியான நாராயண ராவ் பீஷ்வா ஆனர். அவர் சிறுவரானதால் அவருடைய சிறிய தகப்பஞரான ரகுநாத ராவ் ராஜ்ய பரிபாலனஞ் செய்துவந்தார். அப்பொழுது நாட்டில் கலகம் உண்டாகவும், நாராயணராவ் கொலையுண்டார்; ரகுநாத ராவ் சிறைப்பட்டார். பின்னர், ரகுநாத ராவ் விடுதலையடைந்து பீஷ்வா ஆனர். நாராயணராவ் இறந்ததும், அவருடைய மனைவி ஓர் ஆண் மகவைப் பெற்ருள். அக் குழந்தையே இரண்டாம் மாதவ ராவ். அவனே நியாயமான பீஷ்வா எனச் சிலர் கலகம் செய்யத் தலைப்பட்டார்கள். அதனல் ரகுநாதராவ் கி.பி. 1775-இல் சூரத்தில் பம்பாய் கவர்னருக்குத் தாம் ஸால்ஸெட், பாஸீன் என்னும் பட்டணங்களைக் கொடுப்பதாகவும், அவர் தமக்குத் துணையாகவேண்டும் என்றும் உடன்படிக்கை செய்துகொண்டார். இரண்டாம் மாதவராவின் கட்சியின் தலைவராக இருந்த நாஞபட்ஞவிஸ் என்பவர் கி. பி. 1776-இல் புரந்தர் என்னுமிடத்தில், ஆங்கிலேயர்கள் மஹாராஷ்டிரருடைய விவகாரங்களில் தலையிட்டுக் கொள்ளாதிருந்தால் தாம் அவர்களுக்கு ஸால்ஸெட்டைக் கொடுப்பதாகக் கவர்னர் ஜெனரலோடு உடன்படிக்கை செய்துகொண்டார்.

ஆங்கிலேய மேலதிகாரிகள் சூரத் உடன்படிக்கையை ஆமோதித்ததனல் பம்பாய்க் கவர்னர் பூஞவை உடனே எதிர்க்கக் கருதி ஒரு சேனையை யனுப்பினர். அது பெருந் தோல்வியடைந்து திரும்பி வந்தது. ஆனல், கி. பி. 1780-இல் வங்காளத்திலிருந்து அனுப்பப்பட்ட பெரிய சேனை மஹாராஷ்டிரர்களைத் தோற்கடித்து அஹமதாபாத், கலியாண், பாஸீன், குவாலியர் என்னுமிடங்களைக் கைப்பற்றிக்கொண்டது. தமது நாட்டையிழந்துவிட்ட மாகாதஜிஸிந்தியா போரை நீத்து, ஆங்கிலேயருடன் சமாதானஞ் செய்து கொள்ள உடன்பட்டார்.

ஹேஸ்டிங்ஸ் ஒருபாயத்தினுல் பான்ஸ்லேவையும் வேறு பிரித்து விட்டார். அதனுல், நாஞபட்ஞவிஸ் வேறு வழியின்றி ஆங்கி லேயருடன் சமாதானஞ் செய்துகொள்ள நேர்ந்தது. ஹைதர் பிரெஞ்சுக்காரரைத் துணையாகக் கொண்டு தங்களுடன் திரும்ப வும் போருக்கு வந்ததனுல், ஆங்கிலேயரும் சமாதானத்தில் நாட்டமுள்ளவர்களாக இருந்தார்கள். மறு வருஷம் ஆங்கிலே யர்கள் அடைந்த பெருந் தோல்வியும் அவர்கள் சமாதானத்திற் கிணங்கி வந்ததற்குக் காரணமாகும்.

கி. பி. 1782-இல் ஸால்பை என்னுமிடத்தில் ஆங்கிலேயர்கள் மஹாராஷ்டிரரிடமிருந்து கைப்பற்றிக் கொண்ட இடங்களில் ஸால்ஸெட் ஒழிந்த மற்றையவற்றை அவர்களுக்கே திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றும், மஹாராஷ்டிரர் ஆங்கிலேயர்க ளல்லாத மற்றைய ஐரோப்பியர் எவருடனும் உறவாடக் கூடா தென்றும், மஹாராஷ்டிர நாடுகளில் போர்ச்சுகீசியரும் ஆங்கி லேயருமன்றி வேறு எவரும் வியாபாரம் செய்யக்கூடாதென்றும், பாடீஸிங் என்பவரைப் பரோடா அரசராக ஒப்புக்கொள்வதோடு அவர் கொடுக்கவேண்டிய கப்பத்தொகையை வசூலிக்கக் கூடா தென்றும், ரகுநாதராவுக்கு ஆண்டுதோறும் மூன்று லட்சம் ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும் ஒரு சமாதானத்தை, ஸிந்தியா முன்னின்று செய்து வைத்தார். ஸிந்தியா இவ்வுடன்படிக்கையைச் செய்து வைத்ததற்கும் போரில் சிறைபிடிக்கப்பட்ட ஆங்கிலேயர்களைப் பக்ஷமாய், நடத்திவந்ததற்கும் ஈடாக அவருக்கு ப்ரோச்சைக் கொடுத்துவிட வேண்டுமென்று ஆங்கிலேயர் தீர்மானித்தனர். அப்பொழுது மாதவராவ் பீஷ்வாவாஞர்; மஹாராஷ்டிர யுத்தம் முடி வடைந்தது.

## (ii) மைசூர் யுத்தங்கள்

பதினெட்டாம் நூற்ருண்டின் மத்தியில் மைசூரை ஆண்டு வந்த உடையார் வம்சத்து மன்னர்கள் பலங் குன்றியிருந்தனர். அப்பொழுது அவர்கள் சேனைக்கு ஹைதர் அலி என்பவர் தலைவ ராக இருந்தார். அவர் வஞ்சகமாக ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டு கி. பி. 1761-இல் மைசூர் சுல்தாஞனர்; தமது ராஜ்யத் தைப் பெருக்கிக் கொள்ளக் கருதி அயல் நாடுகளின்மீது படை யெடுக்கத் தலைப்பட்டார். அதைக் கண்ட ஆங்கிலேயர்கள் ஹைதராபாத்து நைஜாமுடனும், மஹாராஷ்டிரர்களுடனும் சேர்ந்துகொண்டு அவரை எதிர்த்துப் போர் செய்யத் தீர்மானித்




மைசூர் யுத்தங்களை விவரிக்கும் படம்

தனர். ஆனால் ஹைதர் பீஷ்வாவுக்குக் கப்பங் கட்டுவதாகச் சொல்லி மஹாராஷ்டிரரையும், நைஜாமுக்கு 20 லட்சம் ரூபாயைக் கொடுத்து ஆண்டுதோறும் ஆறு லட்சம் ரூபாய் கப்பங்கட்டுவதாகவும் சொல்லி அவரையும் ஆங்கிலேயர் கட்சியி லிருந்து பிரித்துவிட்டார். அதனால் அவர் ஆங்கிலேயரோடும், கர்னடக நவாப்போடுந்தான் போர் செய்ய வேண்டியிருந்தது.

ஹைதர் பெரும் படையுடன் தமது நாட்டின் எல்லையைக் கடந்து வரவும், ஸ்மித் என்னும் ஆங்கிலேய தளகர்த்தர் அவ ரைக் கி. பி. 1767-இல் சங்கமாவில் வென்றார்; ஆயினும், ஹைதர் கர்னடகத்தில் பிரவேசித்துவிட்டார்.

அப்பொழுது வங்காளத்திலிருந்து ஆங்கிலேயப் படை யொன்று தமது நாட்டின்மீது படையெடுத்து வருமெனப் பயந்த நைஜாம் ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்து கொண்டார். இதுவன்றி ஹைதருக்கு வேறொரு கஷ்டமும் உண்டாயிற்று. பம்பாயி லிருந்து ஒரு சேனை அவர் நாட்டின்மீது படையெடுத்து வந்தத னால், அவர் அதை யெதிர்க்கச் சென்றார். அதுவே தக்க சமய மெனக் கருதிய ஆங்கிலேயத் தளகர்த்தர்கள் அவருடைய நாட்டில் பாதியைக் கைப்பற்றிக்கொண்டு விட்டார்கள்.

ஆனால் ஹைதர் அவர்கள் வென்றுகொண்ட பாரா மஹாலை மீட்டுக்கொண்டு, தஞ்சாவூரை வென்று, சென்னையை எதிர்த்து வந்தார். இதைச் சிறிதும் எதிர்பாராத ஆங்கிலேயர்கள் திகி லடைந்தனர்; போர் செய்ய அஞ்சி ஹைதருடன் சமாதானஞ் செய்து கொண்டனர். அதன்படி இனி அவர்கள் செய்ய நேரிடும் போர்களில் ஒருவருக்கொருவர் உதவி புரிய வேண்டு மென ஒப்புக்கொண்டனர். இவ்வாறு முதல் மைசூர் யுத்தம் முடிந்தது.

சென்னை உடன்படிக்கை ஏற்பட்ட சிறிது காலத்திற்கெல் லாம் பீஷ்வா ஹைதரை எதிர்த்தார். அப்பொழுது ஹைதர் ஆங்கிலேயரைத் தமக்குத் துணைபுரியுமாறு கேட்டார். ஆனால் அவர்கள் உடன்படிக்கைப்படி செய்ய மறுத்தார்கள். அவர் ஆங்கிலேயர் செய்த துரோகத்தை மறக்கவில்லை.

அமெரிக்கச் சுதந்திரப் போர் நடைபெற்றபொழுது ஆங்கி லேயர் கி. பி. 1779-இல் மாஹியை எதிர்த்தார்கள். மாஹி ஆங்கி லேயர் வசப்பட்டுவிட்டால், ஹைதர் தமக்குத் தேவையான அயல் நாட்டுச் சரக்குக்களை அத்துறைமுகத்தின் வழியாகத் தருவித்துக் கொள்ள இயலாது. அதனால் அவர் ஆங்கிலேயருடன் போர் தொடுத்தார். அதுவே இரண்டாவது மைசூர் யுத்தம்.

ஹைதர் கர்நாடகத்தின்மீது படையெடுத்து வந்து, புதுச்சேரி வரையிலுள்ள நாடுகளைப் பாழாக்கி, பறங்கிப் பேட்டையைக் கொள்ளையடித்தார். குண்டூரிலிருந்து மன்ரோவுக்கு உதவி புரியக் கருதிக் காஞ்சீபுரத்தை நோக்கி வந்த பெய்லியைப் போளூரில் ஹைதர் தோற்கடித்தார். அதனால் மன்ரோ சென்னைக்குச் சென்றுவிட்டார். பின்னர் ஹைதர் வந்தவாசியை நோக்கி வந்தார். ஸர் ஐர் கூட் என்னும் ஆங்கிலேயத் தளகர்த்தர் ஆற்காட்டைப் பிடித்துக்கொண்டு, ஹைதரை வந்தவாசியிலிருந்து துரத்தியதும் அன்றி, அவரைப் பறங்கிப் பேட்டையிலும் போளூரிலும் வென்றார்.

ஹைதர் துணைவலியின்றிப் போர் செய்துவந்து கி. பி. 1782-இல் சித்தூருக்கருகில் இறந்தார். அவருடைய மைந்தரான திப்பு கி. பி. 1784-இல் மங்களூர் என்னுமிடத்தில் ஆங்கிலேயரோடு சமாதானஞ் செய்து கொண்டார். இருதிறத்தாரும் தங்கள் தங்கள் வசத்திலிருந்த கைதிகளையும், தாங்கள் கைப்பற்றிக்கொண்ட நாடுகளையும் அவரவர்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். இவ்வாறு இரண்டாவது மைசூர் யுத்தம் முடிவுற்றது.

மஹாராஷ்டிர, மைசூர் யுத்தங்களினால் பண வறட்சி யுண்டாகவும் ஹேஸ்டிங்ஸ் முறையற்ற வழிகளில் பொருள் திரட்டினார்; கம்பெனியின் அதிகாரத்திலடங்கி யிருந்த செயிட் ஸிங் என்னும் காசி யரசரிடமிருந்து இரு முறை ஐந்து லக்ஷம் ரூபாய் வீதம் பெற்றுக்கொண்டார். மூன்றாம் முறை அவரைப் பணங் கேட்டபொழுது, அவர் பணந் தரத் தவக்க முண்டானதைக் கண்ட கவர்னர்-ஜெனரல் வெகுண்டு, நேரிற் காசிக்குச் சென்று, அவ்வரசருக்கு 50 லட்சம் ரூபாய் அபராதம் விதித்தார். செயிட் ஸிங் அத்தொகையைக் கட்டாததனால் ஹேஸ்டிங்ஸ் அவரைச் சிறையிலிட்டு, வேறொருவரைக் காசிக்கு அரசராக்கி, ஏராளமான பணத்தைக் கவர்ந்து கொண்டார்.

பிறகு ஹேஸ்டிங்ஸ், அயோத்தி நவாப்பு கம்பெனிக்குக் கொடுக்கவேண்டிய பாக்கியைத் தரும்படி கேட்டபொழுது, அவர் தம்மிடம் பணமில்லை யென்று சொல்லித் தம் தாயினிடத்தும், பாட்டியினிடத்தும் இருந்த பொருளைக் கவர்ந்து கொள்ளும்படி தூண்டினார். கவர்னர்-ஜெனரலின் மந்திராலோசனைச் சபையார் பீகங்களின் சொந்தப் பணத்தை ஆங்கிலேய அரசாங்கத்தார் தீண்டுவதில்லை என வாக்களித்திருந்தும், ஹேஸ்டிங்ஸ் அக் கைம்பெண்கள் செயிட் ஸிங்குடன் சேர்ந்து கலகஞ் செய்தனர்

என்று அவர்கள்மீது பொய்க் குற்றம்சாட்டி, அவர்களுடைய அரண்மனையைக் கொள்ளையிட்டு 76 லட்சம் ரூபாயைக் கவர்ந்து சென்றார்.

ஹேஸ்டிங்ஸின் நெறியற்ற நடத்தை ஆங்கிலேய மேலதிகாரிகளுக்கு மிகுந்த வெறுப்பை யுண்டாக்கியது. பார்லிமென்ட் சபையார் கம்பெனியின் அதிகாரத்தைக் குறைக்கவும், ஒழுங்கு படுத்தும் சட்டத்தின் குறைகளைப் போக்கவும், கி. பி. 1784-இல் ஒரு சட்டத்தைப் பிறப்பித்தார்கள். அதுவே பிட்டின் இந்தியச் சட்டம் என்பது. அதையொட்டி ஆறு பெயர்களடங்கிய போர்ட் ஆப் கன்ட்ரோல் என்னும் சபை கம்பெனியாரின் எல்லா விவகாரங்களையும் மேற்பார்வையிட்டு அதிகாரம் செலுத்தும் உரிமையைப் பெற்றது. அச்சபையின் அனுமதி யின்றிக் கம்பெனியார் யாதொரு முக்கியமான காரியத்தையும் செய்யக் கூடாது. கவர்னர்-ஜெனரலுடைய மந்திராலோசனைச் சபையின் அங்கத்தினர் தொகை மூன்றாகக் குறைக்கப்பட்டது. அவர்களுள் சேனாதிபதியும் ஒருவராவர். கல்கத்தாவிலுள்ள உயர்தர நீதிமன்றத்திலிருந்து இங்கிலாந்திலுள்ள 'ப்ரிவி கௌன்ஸி'லுக்கு அப்பீல் செய்துகொள்ளும் உரிமையும் ஏற்பட்டது. சுதேச மன்னர்களின் வியவகாரங்களில் கம்பெனியார் தலையிட்டுக் கொள்ளாமலிருப்பதற்கான சில ஏற்பாடுகளும் அமைக்கப்பட்டன. 'டைரக்டர்'களுடைய உத்தரவின்றிக் கவர்னர்-ஜெனரலும், அவருடைய மந்திராலோசனைச் சபையும் போர் செய்யவாவது சமாதானஞ் செய்து கொள்ளவாவது கூடாது.

கி. பி. 1785-இல் ஹேஸ்டிங்ஸ் தமது வேலையை ராஜினாமா செய்துவிட்டுத் தம்மூருக்குத் திரும்பிச் சென்றார். அங்கே அவர் மீது குற்றங்கள் சாட்டப்பட்டு ஏழு வருஷ காலம் விசாரணை நடந்தது. கடைசியில், அவர் குற்றவாளி யல்லர் என்று தீர்மானித்தனர். கம்பெனியார் அவருக்கு வருஷம் ஒன்றுக்கு 40,000 ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தார்கள். அவர் அதைப் பெற்று அநேக வருஷ காலம் சுகமாக வாழ்ந்திருந்து, கி. பி. 1818-ஆம் வருஷம், 86-ஆம் வயதில் இறந்தார். பொதுவில் ஹேஸ்டிங்ஸின் பரிபாலனத்தில் குடிகள் இன்புற்று வாழ்ந்தனர் என்றெண்ணுவதற்கிடமில்லை.

## வெல்லெஸ்லி பிரபு (கி. பி. 1798—1805)

ஆங்கில ஆட்சியை இந்தியாவில் பரவச் செய்து அவர்களுடைய ஆதிக்கத்தைப் பலம்பெறச் செய்தவர் வெல்லெஸ்லி

பிரபு. இவர் கவர்னர் ஜெனரலாக நியமனம் பெற்று கி. பி. 1798-ஆம் வருஷம் மே மாதம் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு இந்தியாவைப் பற்றின விஷயங்கள் முன்பே நன்ருகத் தெரிந்திருந்ததனுல், அவர் தாம் செய்வதே சரி, தம்முடைய ஆலோசனையே சிறந்தது என எண்ணியிருந்தார்.

அவர் இந்தியாவுக்கு வந்தபொழுது பிரான்ஸில் ஒரு பெரும் புரட்சி எழுந்தது. நெப்போலியன் போனபார்ட் என்ற ஒப்புயர் வற்ற வீரர் தோன்றி ஐரோப்பிய நாடுகளையெல்லாம் நடுங்க வைத்தார்; ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் இருந்த ஆங்கி லேய அதிகாரத்தை அடியோடு தொலைத்துவிட்டு, இங்கிலாந்தை யும் வென்று பிரெஞ்சு ஆதிக்கத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்பது அவரது பேரவா.

நெப்போலியன் இந்தியாவில் மஹாராஷ்டிரரை ஆங்கிலேய ருக்கு விரோதமாகக் கலகம் செய்து போர் செய்யுமாறு ஏவினுர்; அன்றியும், இந்திய மன்னர்கள் பலருக்கும் பல்வேறு வகைகளில் உதவி புரிந்தும், உதவி புரிவதாக வாக்களித்தும் அவர்களை ஆங்கிலேயருடன் பகைமை பாராட்டும்படி செய்தார்.

திப்புவும், நைஜாமும், மஹாராஷ்டிரரும், அயோத்தி நவாப் பும் பிரெஞ்சுக்காரரைக் கொண்டு தங்களுடைய சேனைகளுக்கு யுத்தப் பயிற்சி செய்வித்து வந்தார்கள். இவர்கள் யாவரும் பிரெஞ்சுக்கரரரின் துணைவலியைப் பெற்று ஆங்கிலேயரை வென்று, தத்தம் அதிகாரங்களைப் பெருக்கிக்கொள்ள எண்ணி யிருந்தார்கள்.

இவற்றையெல்லாங் கண்ட வெல்லெஸ்லி பிரபு, பிரெஞ்சுக் காரர் தங்களோடு போட்டி யிடாதவாறு அவர்களது ஆதிக் கத்தை வேரறுத்துவிட்டு, ஆங்கிலேய மேலதிகாரத்தை நிலை நாட்டுவதற்கான ஏற்பாடுகளில் முயன்று வரலானுர்.

'இந்தியச் சிற்றரசர்கள் ஒவ்வொருவரும் ஆங்கிலேய அதிகாரத்திற்கும், பாதுகாப்புக்கும் உடன்பட்டு ஆங்கிலேய ரைத் தங்களுக்கு மேலதிகாரிகளென ஒப்புக்கொள்ளவேண்டும்; தங்களுடைய நாடுகளைப் பிறர் கவராதவாறு காப்பதற்கு ஈடாக நாட்டின் ஒரு பாகத்தை ஆங்கிலேயர்களுக்குக் கொடுக்க வேண்டும்; ஆங்கிலேயருடைய அனுமதியில்லாமல் அன்னியர் களோடும் தங்களுக்குள்ளும் போராவது சமாதானமாவது செய்துகொள்ளக் கூடாது; அன்னியர்களை உத்தியோகங்களில் நியமித்துக்கொள்ளலாகாது; தங்கள் நாடுகளில் தங்களுடைய

செலவில் ஓர் ஆங்கிலப் படையை வைத்து ரக்ஷிக்கவேண்டும்; ஆங்கிலேய ரெஸிடென்டை வைத்துக்கொள்ளவேண்டும்' என்று வெல்லெஸ்லி பிரபு ஏற்பாடு செய்தார். இதுவே **துணைப்படைத் திட்டம்** எனப்படும். இவ்வேற்பாட்டை ஒப்புக்கொண்ட இந்திய அரசர்களனைவரும் உண்மையில் தங்களுடைய சுதந்திரத்தை இழந்தவர்களேயாவர்.

துணைப்படைத் திட்டத்தை யொட்டி உடன்படிக்கையை முதன்முதல் செய்துகொண்டவர் ஹைதராபாத் நைஜாமே யாவர். நைஜாம் தமது நாட்டின் பாதுகாப்புக்கென்று வைக்கப் பட்ட சேனையின் போஷணைக்காகத் தமக்குக் கடைசி மைசூர் யுத்தத்தில் கிடைத்த கடப்பை, கர்னூல், அனந்தபுரம், பல்லாரி என்ற ஜில்லாக்களைக் கி. பி. 1801-இல் ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டார்.

பிரெஞ்சுக்காரர்களின் துணை வலியைக் கொண்டு ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து துரத்திவிட வேண்டுமெனத் திப்பு முயன்று வந்தார். இதையறிந்த வெல்லெஸ்லி அவரைத் துணைப் படைத்திட்ட உடன்படிக்கையைச் செய்து கொள்ளும்படி கேட்கவும் அவர் அதற்கு இணங்கவில்லை. அதனால் ஆங்கிலேயர்கள் திப்புவுடன் போர் செய்ய ஆயத்தமாயினர். அதுவே **கடைசி மைசூர் யுத்தம்**. அந்த யுத்தத்தில் நைஜாம் ஆங்கிலேயருக்கு உதவினர்.

பின்னர் டியூக் அப் வெல்லிங்டன் என்று புகழ்பெற்ற ஆர்த்தர் வெல்லெஸ்லி [இவர் கவர்னர் ஜெனரலின் சகோதரர்] திப்புவை மலவெல்லி என்னுமிடத்தில் வென்றார். பின்னர் ஹாரிஸ் என்பவர் வேலூரினின்றுஞ் சென்று ஸ்ரீரங்கப்பட்டணத்தை யெதிர்த்து வென்று கொண்டார். திப்பு மிகுந்த வீராவேசத்தோடு போரிட்ட போதிலும், கோட்டை வாயிலில் கொலையுண்டார். ஆங்கிலேயர்கள் அவர்கள் குடும்பத்தினருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து வேலூருக்கு அனுப்பி விட்டார்கள்.

மைசூர் ஆங்கிலேயர் வசமாயிற்று. அவர்கள் அதன் தென் பாகத்தையும், மேல் பாகத்தையும் எடுத்துக்கொண்டார்கள். அவையே கோயம்புத்தூர், கன்னடம், வைனாடு என்னும் ஜில்லாக்களாம்.

பீஷ்வா துணைப்படைத்திட்ட உடன்படிக்கையைச் செய்து கொண்டால், அவருக்கு மைசூர் ராஜ்யத்தின் ஒரு பாகத்தைக் கொடுப்பதாக வெல்லெஸ்லி கூறினர். பீஷ்வா அதனை ஒப்புக்

கொள்ள மறுத்தார். அதனால் வெல்லெஸ்லி தாம் அவருக்குக் கொடுக்க எண்ணியிருந்த பிரதேசத்தின் மூன்றிலிரண்டு பங்கை நைஜாமுக்கே கொடுத்துவிட்டார்.

இவர்கள் பங்கிட்டுக்கொண்டது போக எஞ்சி நின்ற சிறு நாட்டை ஆளுவதற்கு ஹைதருக்கு முன் மைசூரை ஆண்டு வந்த இந்து அரச வமிசத்தைச் சேர்ந்த கிருஷ்ணராஜ உடையாரை வெல்லெஸ்லி அரசராக்கினர்.

கி. பி. 1787-இல் அமரசிங்கும் சரபோஜியும் தஞ்சாவூர் ராஜ்யத்தைக் குறித்துப் போரிட்டார்கள். வெல்லெஸ்லி முதலில் அமரசிங்கை அரசராக்கினர். பின்னர், சரபோஜியே பட்டத்துக்குரியவர் என்பதை வெல்லெஸ்லி அறிந்தார். அதனால் அவர் சரபோஜியை அரசராக்கினர். ஆனால் சரபோஜி கம்பெனியாருக்குக் கொடுக்கவேண்டிய கடனைக் கொடுக்கமுடியாததினால் வெல்லெஸ்லி அவருக்கு உபகாரச் சம்பளங் கொடுத்து, தஞ்சாவூரை ஆங்கிலேய சாம்ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டுவிட்டார்.

கர்னாடக நவாப்பான முகம்மது அலி கி. பி. 1795-இல் இறந்தார். அவர் தமது நாட்டின் பெரும்பாகத்தை ஆங்கிலேய வர்த்தகக் கம்பெனி உத்தியோகஸ்தர்களிடம் அடமானம் வைத்துக் கடன் வாங்கி ஆடம்பரமாக வாழ்ந்து வந்தார். அதனால் அவர் கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய கப்பத் தொகையைக் கட்ட முடியவில்லை. முகம்மது அலிக்குப் பின்பு கர்னாடகத்தின் நிலைமை கேவலமாயிற்று. அப்பட்டத்திற்கு இருவர் போட்டியிட்டனர். வெல்லெஸ்லி, அவர்களுள் ஒருவரைப் பட்டத்துக் குரியவரென அங்கீகரித்து, அவருக்கு உபகாரச் சம்பளம் அளித்து, கர்னாடகத்தை ஆங்கிலேய சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டு விட்டார். கர்னாடகம் கிடைத்ததோடு, சென்னை மாகாணம் முழுவதும் ஆங்கிலேயர் வசமாய் விட்டது.

வெல்லெஸ்லி அயோத்தி நவாப்பு சாதத் அலியிடமிருந்த சேனை அந்நாட்டின் பாதுகாப்பிற்குப் போதாது என்று கூறி, ஆங்கிலப்படையை அதிகமாக்கிக்கொண்டு அதன் போஷணைக்காகக் கோரா, அலஹாபாத், ரோஹில்கண்ட் என்னும் பிரதேசங்களைப் பெற்றார்.

முதலாம் மாதவராவ் காலந் தொடங்கிப் பீஷ்வாவின் ராஜ்யத்தில் சிறப்புடன் விளங்கி வந்த நானாபட்னவிஸ்,

கி. பி. 1800-இல் இறந்தபொழுது, பீஷ்வாவின் ஆதிக்கம் குறைவு படலாயிற்று. அதனால், மஹாராஷ்டிரத் தலைவர் தங்களுக்குள் போரிடத் தலைப்பட்டனர். இரண்டாம் மாதவராவுக்குப் பிறகு, ரகுநாத ராவின் மைந்தனை இரண்டாம் பாஜிராவ் பீஷ்வா ஆனார். அவர் ஹோல்காரோடு போர் செய்யத் தொடங்கினார். ஹோல்கார் பாஜிராவையும், மகாதஜி ஸிந்தியாவின் மைந்தனை தௌலத்ராவ் ஸிந்தியாவையும், கி. பி. 1802-இல் பூனாவில் அடியோடு தோற்கடித்துவிட்டு அமிருதராவைப் பீஷ்வா ஆக்கினார். அப்பொழுது பாஜிராவ் பாஸீனுக்கு ஓடிப்போய் விட்டார்.

அதுவரை வெல்லெஸ்லியின் துணைப் படைத்திட்ட உடன் படிக்கையைச் செய்துகொள்ள மறுத்த பாஜிராவ் பாஸீனில் ஆங்கிலேயரோடு சமாதானஞ் செய்துகொண்டு, ஆங்கிலப் படையின் போஷணைக்காக 26 லட்சம் ரூபாய் கொடுத்தார். ஆங்கிலேயருடைய பகைவர்களைத் தம் உத்தியோகங்களில் வைத்துக்கொள்ளாதிருக்கவும், ஆங்கிலேயருடைய அனுமதியில்லாமல் எவருடனும் போர் அல்லது சமாதானம் செய்வதையொழிக்கவும், பீஷ்வாவுக்கு நைஜாமோடாவது கெய்க்வாரோடாவது சச்சரவு ஏற்பட்டால் அவர் ஆங்கிலேயருடைய மத்தியஸ்த ஏற்பாட்டை ஒப்புக்கொள்ளவும் சம்மதித்தார்.

பிறகு சீக்கிரத்திலேயே கெய்க்வாரும் துணைப்படை முறை உடன்படிக்கையைச் செய்துகொண்டு அமைதியுடன் இருந்து விட்டார்.

இவ்வாறு வெல்லெஸ்லி இந்திய அரசர்களின் சுதந்திரங்களைக் குறைத்து, அவர்களை ஆங்கிலேய அதிகாரத்திற்கு உட்படுத்தி வருவதைக் கண்ட ஸிந்தியாவும், பான்ஸ்லேயும் ஆங்கிலேயருடன் வெறுப்புக்கொண்டு போர் செய்யத் தயாராயினர். ஹோல்காருக்கும் ஆங்கிலேயரிடம் கோபம் ஏற்பட்டிருந்த போதிலும், அவர் அவ்விரண்டு மஹாராஷ்டிரத் தலைவர்களுடன் சேர்ந்துகொள்ள உடன்படவில்லை. டியூக் அப் வெல்லிங்டனும், ஜெனரல் லேக் என்பவரும் கி. பி. 1803-இல் அவ்விருவரையும் அஸ்ஸே என்னுமிடத்திலும், பான்ஸ்லேயை ஆர்காமிலும், ஸிந்தியாவை லாஸ்வாரி என்னுமிடத்திலும் முறியடித்து டில்லியையும் ஆக்ராவையுங் கைப்பற்றிக் கொண்டனர்.

அதனால் பான்ஸ்லே தேவகாம் என்னுமிடத்திலும், ஸிந்தியா சுர்ஜி அர்ஜுன்காம் என்னுமிடத்திலும் வெல்லெஸ்லியுடன் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். ஆங்கிலேயக்

காப்புப்படையின் போஷணைக்காகப் பான்ஸ்லே ஒரிஸ்ஸாவை யும் ஆக்ராவையும், ஸிந்தியா கங்கைக்கும் யமுனைக்கு மிடையிலுள்ள பிரதேசத்தையும், ராஜபுதனத்தில் அவருக்குச் சொந்தமாக இருந்த இடங்களையும், தக்ஷிணத்தையும், காண் தேஷையும் கொடுத்து விட்டார்கள்.

ஐந்து மாதங்களுக்குள் நான்கு மகாராஷ்டிரத் தலைவர்கள் தங்கள் சுதந்திரமிழந்து ஆங்கிலேயருடைய அதிகாரத்திற்கு அடங்கிவிட்டனர். பிரெஞ்சுக்காரரால் பயிற்றுவிக்கப்பட்டுப் போர் புரிந்துவந்த ஸிந்தியாவின் சேனை அழிந்து போனதைக் கண்ட வெல்லெஸ்லிக்கு மட்டற்ற மகிழ்ச்சி யுண்டாயிற்று. இவற்றையல்லாமல், ஜெனரல் லேக், ஜெயபுரம், ஜோதிபுரம், பரதபுரம், பூந்தி என்னும் நாடுகளின் அரசர்களோடும் துணைப் படைத்திட்ட உடன்படிக்கையைச் செய்துகொண்டார். இச் சம்பவங்களோடு இரண்டாவது மஹாராஷ்டிர யுத்தம் முடிவடைந்தது.

மஹாராஷ்டிரத் தலைவர்களுள் ஆங்கிலேயருடைய மேலதி காரத்தை இன்னும் ஒப்புக்கொள்ளாதிருந்தவர் யஸ்வந்த ராவ் ஹோல்கார் ஒருவரே. கி. பி. 1804-இல் அவரை யெதிர்த்துப் போரிடுவதற்கென அனுப்பப்பட்ட ஆங்கிலச் சேனையை அவர் முகுந்தராபாஸ் என்னுமிடத்தில் வென்றார். தோல்வியுற்ற ஆங்கிலச் சேனை ஆக்ராவை நோக்கி ஓடியது. அப்பொழுது ஹோல்கார் கங்கை-யமுனைப் பிரதேசத்திற் புகுந்து டில்லியை முற்றுகை செய்தார். அவரது வெற்றியைக் கண்ட ஸிந்தியாவும், பரதபுரத் தரசரும் அவருடன் சேர்ந்து கொண்டார்கள்.

ஆனால் அவருடைய வெற்றி நீடித்திருக்கவில்லை. முர்ரே என்னும் தளகர்த்தர் இந்தூரையே பிடித்துக் கொண்டுவிட்டார். அதையறிந்த ஹோல்கார் டில்லியை விட்டுவிட்டுத் தமது நாட்டை நோக்கி ஓடினார். ஆனால் அவரை மான்ஸன் என்பவர் டீக் என்னுமிடத்திலும், லேக் பருகாபாத் என்னுமிடத்திலும் முறியடித்தனர்.

அதன் பிறகு லேக், ஹோல்காருடன் சேர்ந்துகொண்ட பரத புரத்தரசரது கோட்டையை முற்றுகையிட்டார். அக் களிமண் கோட்டையைத் தகர்த்து உட்செல்ல இயலாது திகைத்த லேக் பரதபுரத்தரசரோடு சமாதானஞ் செய்துகொண்டு, ஹோல்கார் கட்சியினின்றும் விலகிக் கொள்ளுமாறு செய்தார்.

ஹோல்கார் யாவற்றையுமிழந்து பஞ்சாபுக்கு ஓடிப்போனார். அதனோடு மூன்றாவது மஹாராஷ்டிர யுத்தம் முடிந்தது.

வெல்லெஸ்லி செய்த போர், சமாதானங்களினுல் ஆங்கிலேயருடைய ஆதிக்கம் பெரிதும் பெருக்கியது. அன்றியும், அவர்களுடைய தென்னிந்திய வட இந்திய நாடுகள் ஒன்ருெடொன்று பிணைக்கப்பட்டன. ஆதலால் ஆங்கிலேய சாம்ராஜ்யம் கன்னியாகுமரி முதல் இமயமலை வரை பரவிவிட்டது. மஹாராஷ்டிரர் சிறப்பு முற்றுந் தொலைந்தது. ஏனினும், அப்பொழுது வட இந்தியாவில் பெரும் பஞ்சம் உண்டாயிற்று. அதனையும், வெல்லெஸ்லியினுலுண்டான அளவற்ற பொருட் செலவையுங் கண்ட மேலதிகாரிகள் அவர்மீது சினங்கொண்டு, அவரைத் திரும்பத் தம் நாட்டுக்கு அழைத்துக்கொண்டு, காரன் வாலிஸ் பிரபுவை மீண்டும் கவர்னர் ஜெனரலாக்கினர்.

## டல்ஹௌஸி பிரபு—வாரிசற்ற நாடுகள் ஆங்கிலேய சாம்ராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ளப்படுதல்

டல்ஹௌஸி 'ஸ்காட்' ஜாதியைச் சேர்ந்தவர். அவர் கவர்னர் ஜெனரலாக நியமனம் பெற்று இந்தியாவுக்கு வந்தபொழுது, அவருக்கு வயது 36. கிளாட்ஸ்டன் என்பவர் ஆங்கிலேய வர்த்தகக் கம்பெனியின் நிர்வாக சபைக்கு அக்கிராசனராக இருந்தபொழுது, டல்ஹௌஸி உபதலைவராக இருந்தார். கிளாட்ஸ்டனுக்குப் பிறகு அவரே அக்கிராசனருமானுர். அவருக்கு உடல் நலம் குறைந்திருந்தும், சோம்பலின்றிப் பாடுபட்டார். அவர் பரிபாலனத்தில் கைதேர்ந்தவர்; சாம்ராஜ்யக் கட்சியினர்; ஆங்கிலேய ஆட்சியே இந்தியாவுக்கு ஏற்றது என எண்ணினுர்.

துணைப்படைத் திட்ட ஏற்பாட்டில் இந்திய அரசருக்குப் பொறுப்பற்ற அதிகாரம் இருந்ததனுல், அவர்களுடைய ஆட்சி செவ்வனே நடைபெறவில்லையென டல்ஹௌஸி கருதினுர். அதனுல், அவர் இந்திய அரசர்களின் நாடுகளை ஆங்கிலேய சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக்கொள்வதில் நாட்டங்கொண்டார்; அதன் பொருட்டு ஒரு புதிய முறையை அனுஷ்டிக்கலானுர்.

மக்கட்பேறு இல்லாத இந்துக்கள், தம் காலத்துக்குப் பிறகு, தம் சொத்துக்களைப் பெற்று அனுபவிப்பதற்கு, தம் குலத்திற் பிறந்த பிள்ளைகளை ஸ்வீகாரம் செய்துகொள்ளுவது பரம்பரையான வழக்கம். இந்த வழக்கம் இந்துக்களின் சட்ட சம்மதமும் பெற்றதே. முஸ்லிம் அரசரின் ஆட்சியிற்கூட இந்த வழக்கத்துக்கு யாதொரு தடையும் ஏற்படவில்லை. ஆங்கிலேய

அரசாங்கத்தாரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டே ஸ்வீகாரம் செய்துகொள்ள வேண்டுமென்றும், உத்தரவின்றி ஸ்வீகாரம் செய்து கொள்ளப்பட்டவர்கள் ஆங்கிலேயர் சம்மதத்தைப் பெருது அரசுரிமையை வகிக்கக்கூடாதென்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கம்பெனியின் மேலதிகாரிகள் சுதேச மன்னர்கள் ஸ்வீகாரம் செய்து கொள்வதற்குப் பெரும்பாலும் இடம் கொடுப்பதில்லை. அல்லாமலும், அவர்கள் இந்திய அரசாங்கத்தாருக்கு நியாயமாகவும், கௌரவமாகவும் கிடைக்கக்கூடிய நாடுகளையாவது, வருமானத்தையாவது அவர்கள் எக்காரணத்தினுலும் விட்டுவிடக் கூடாதென்றும் ஆக்ஞாபித்தார்கள். அந்த ஆக்ஞையை முதன்முதல் மேற்கொண்டு நடந்தொழுகினவர் டல்ஹௌஸியே யாவர். இவர் வார்சற்ற சுதேச மன்னர்களின் ராஜ்யங்களை இந்திய சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்ட முறைக்கு அவகாசியிலிக் கொள்கை என்று பெயர்.

கி. பி. 1848-இல் சதாராவின் அரசரான அப்பாஸாஹிப் சந்ததியின்றி இறந்தார். டல்ஹௌஸி அந்நாட்டை ஆங்கிலேய சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டு விட்டார்.

அவ்வாறே, ஜான்ஸி அரசர் கி. பி. 1853-இல் இறந்த பொழுது, அந்நாட்டின் அரசியான ராணி லக்ஷ்மிபாய் செய்து கொண்ட ஸ்வீகாரத்தை அங்கீகரிக்க மறுத்து ஜான்ஸியையும் ஆங்கிலேய சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார்.

நாகப்பூர் நாடும் அவ்வண்ணமாகவே ஆங்கிலேய சாம்ராஜ்யத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. கி. பி. 1853-இல் ரகூஜிபான்ஸ்லே காலஞ் சென்றபொழுது, ஆங்கிலேயர்கள் அவருடைய ராஜ்யத்தைக் கைப்பற்றியதுமன்றி, அவருடைய குடும்பத்துக்குச் சொந்தமான சொத்துக்களையும் ஏலம்போட்டு எடுத்துக்கொண்டனர். ரகூஜியின் ராஜ்யம் இப்போதைய மத்தியப் பிரதேசத்தின் பெரும்பாகமாகும்.

வேறுவகையிலும் டல்ஹௌஸி நாடுகளைச் சேர்த்துக் கொண்டார். இரண்டாவது மஹாராஷ்டிர யுத்தத்தின் முடிவில், வெல்லெஸ்லி, பேரார் மாகாணத்தை நைஜாமுக்குக் கொடுத்து விட்டார் அல்லவா? நைஜாமின் துணைப்படையின் போஷணைக்காக அவர் தந்த பிரதேசத்தின் வருமானம் போதாததனுல், நைஜாம் தம் பொக்கிஷத்திலிருந்து பணம் தரவேண்டி வந்தது. அத்தொகை ஒழுங்காகக் கொடுபடாமல் துண்டு விழுந்ததனுல், டல்ஹௌஸி அவரிடமிருந்து பேராரைப் பிடுங்கிக்கொண்டு விட்டார்.




**1856-இல் இந்தியா**

அயோத்தியின் பரிபாலனம் செம்மையாக நடைபெருத தனுல், டல்ஹௌஸி, ஷுஜா உத்தௌலாவின் சந்ததியைச் சேர்ந்த நவாப்புக்கு 12 லட்சம் ரூபாய் உபகாரச் சம்பளம்

கொடுத்து, அந்நாட்டை ஆங்கிலேய சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டு விட்டார். டல்ஹௌஸி பஞ்சாபையும், வடபர்மாவையும் போர் செய்து சேர்த்துக்கொண்டார்.

ஆங்கிலேயரிருவரைப் பிடித்துக்கொண்ட ஸிக்கிம் அரசரைத் தண்டிப்பதற்காக டல்ஹௌஸி அவருடைய நாட்டை ஆங்கிலேய சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார்.

டல்ஹௌஸியின் பரிபாலனம், அவர் செய்த பல சீர்திருத்தங்களினால் என்றும் ஞாபகம் வைக்கத்தக்கதாகும். அவர் புதிய சாலைகளை அமைத்தார்; கால்வாய்கள் வெட்டப்பட்டன; இருப்புப் பாதைகள் போடப்பட்டன. தந்தியும், தபாலும் அவர் காலத்திலே தான் உண்டாயின. அவர்தான் முதன்முதல் அரையணுத் தலையை அச்சிட்டார். சாலைகள் அமைக்கவும், பாலங்கள் கட்டவும், கால்வாய்கள் வெட்டவும், ஏரி குளங்களைப் பழுது பார்க்கவும், ஆறுகளில் அணைகட்டி நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச உதவுமாறு செய்யவும், பொதுக் கட்டடங்களை அமைக்கவும் பொதுவேலை இலாகா என்னும் அமைப்பை அவர் உண்டாக்கினார். அவர் தேச பாஷையின் மூலமாகக் கல்வி கற்பிக்கும் ஏற்பாடுகளையும் செய்வித்தார். டல்ஹௌஸியின் முறையினால் இந்தியர்களுக்கு ஆங்கிலேயரிடம் அவநம்பிக்கையும் அறுவறுப்பும் ஏற்பட்டன. இதன் பலனாகவே அடுத்த ஆண்டு, 1857-இல் கானிங்பிரபு கவர்னர்ஜனரலாக இருந்த காலத்தில் சிப்பாய்க் கலகம் எனப்படும் சுதந்திரப்போர் நிகழ்ந்தது.

## பிரிட்டிஷ் ஆட்சியால் ஏற்பட்ட நன்மை தீமைகள்

நமது தேசம் சுமார் 200 ஆண்டுகள் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்துவந்திருக்கிறது. இதில் 90 ஆண்டுகள் பிரிட்டிஷ் முடியின் நேர் ஆதீனத்தில் இந்திய அரசாட்சி நடைபெற்று வந்திருக்கிறது. இந்த ஆட்சியில் பல நன்மைகளை நாம் அடைந்திருக்கிறோம். பல தீமைகள் நமக்கு இழைக்கப்பட்டுள்ளன. அவைகளை இங்கே சிறிது ஆராய்வோம்.

### நன்மைகள்

1. அமைதி: பிரிட்டிஷ் அரசாட்சி ஏற்படுவதற்குமுன் இந்தியாவில் ஒழுங்கான அரசாங்கமுறை அமுலில் இருந்த

தாகக் கூற முடியாது. பல அரசர்கள் ஒருவருக்கொருவர் சண்டை செய்து கொண்டு நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தி வந்தனர். மக்கள் பயமின்றி வாழ்வது கஷ்டமாயிருந்தது. திருடர்கள் பயம்; வழிப்பறிகளின் தொல்லை; அரசாங்க ஊழியர்களின் எதேச்சாதிகாரம்—இவை நாட்டில் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. ஆனால் ஆங்கில ஆட்சியின் பயனாக அமைதி ஏற்பட்டது. மக்கள் பயமின்றி வாழமுடிந்தது. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சட்டவரம்புக்குட்பட்டுத்தான் நடந்து கொள்ள வேண்டியதாயிற்று.

2. **நாடு ஒன்றாயிற்று:** ஆங்கில ஆட்சி ஏற்படுவதற்கு முன் பல அரசர்கள் இருந்தனர். தேசத்திற்கெல்லாம் பொதுவான ஓர் ஆட்சியோ, ஒரு சட்ட அமைப்போ கிடையாது. இடத்திற்கு இடம் நியாய விசாரணை முறையில் மாறுதல்கள் இருந்தன. நிலவரி ஓர் ஏற்பாட்டின்மீது விதிக்கப்படவில்லை. மக்களும் இந்தியா வென்னும் பரந்த நோக்கத்தை அரசியல், பொருளாதாரத் துறைகளில் கொள்ளவில்லை. மத விஷயங்களில் புண்ணிய க்ஷேத்திரங்கள், தீர்த்தங்கள் இவை யாவும் பாரத தேசமெங்கும் பரவி இருந்தபடியால் இது ஒரு நாடு என்னும் எண்ணம் இருந்தது. ஆனால் அதுபோன்ற அரசியல் ஒற்றுமை யுணர்ச்சி ஏற்பட்டிருக்க வில்லை. ஆனால் இந்தியா கவர்மெண்டு என்னும் பொதுத் துரைத்தனம் ஆங்கில ஆட்சியில் ஏற்பட்டதன் பயனாகத் தேசீய நோக்கம் வளர்ந்தது.

3. **சட்ட வரம்புக் குட்பட்ட ஆட்சி:** ஆட்சி முறையே சட்ட அமைப்புக்குள் கொண்டுவரப் பட்டது. அதற்குமுன் நவாப்புகள் இட்டதே சட்டம். அவர்கள் மனம்போன போக்கெல்லாம் ஆட்சிமுறைதான்.

4. **கல்வி வளர்ச்சியும் நவீனமும்:** கல்வி பொதுமக்களிடையே பரவவில்லையாயினும் கல்வியின் குணம் பெருகிற்று. அதாவது கல்வியின் பரப்பு அதிகமாகவில்லை; ஆனால் ஆழம் அதிகமாயிற்று. வைத்தியம், எஞ்சினீரிங், கலை முதலிய எல்லாக் கல்வித் துறைகளிலும் அபிவிருத்தி ஏற்பட்டது.

5. **போக்குவரவு சாதனங்களும், வியாபாரமும்:** ஆதி காலத்தில் இந்தியா ஐரோப்பிய நாடுகளோடு வாணிபம் செய்து வந்ததெனினும் மத்திய காலத்தில் இந்தியாவின் வெளிநாட்டு வியாபாரம் குன்றிப்போய் இருந்தது. ஆங்கில ஆட்சி ஏற்பட்ட பிறகு வர்த்தகம் பெருகிற்று. இருப்புப் பாதைகள், நல்ல சாலைகள் நம் நாட்டின் பற்பல பாகங்களிலும் அமைக்கப்

பட்டன. நவீன சௌகரியங்களைக் கொண்ட துறைமுகங்களும் ஏற்பட்டன.

6. **சுய ஆட்சிக்குப் பரபரப்பு:** ஆங்கிலேயர் நமக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கத் தயங்கினார்கள்; பல முட்டுக் கட்டைகளைப் போட்டார்கள்; நம்மில் பிளவுகளை உண்டாக்கினார்கள். ஆனால் அவர்களுடைய நாடு ஸ்வராஜ்யத்தை அனுபவிக்கிறது. நமக்கு ஆங்கிலக் கல்வியைக் கற்றுக் கொடுத்து விட்டார்கள். நாம் அவர்கள் சரித்திரத்தை நன்றாகப் படித்திருக்கிறோம். ஆகையால் நம்மில் அவர்களைப்போல் நாமும் ஸ்வராஜ்யம் பெற வேண்டும் என்னும் பரபரப்பு ஏற்பட்டது. அவர்கள் ஸ்வராஜ்யம் நமக்குக் கொடுக்க வேண்டி வரும் என்னும் உண்மையை அவர்களும் உணர்ந்திருந்தார்கள்.

மேலும் சுய ஆட்சி பெறுவதற்கு ஒற்றுமைதான் சுலபமான வழியாக இருந்தது. முஸ்லிம்களுடைய ஆதீனத்தில் இருந்த போது இந்துக்கள் தங்கள் துன்பங்கள் நீங்கச் சுய ஆட்சி பெற முயன்றனர். ஆனால் அவர்களிடையே ஒற்றுமையும், தைரியமும் குன்றி இருந்தன. ஆங்கில ஆட்சியில் இவ்விரண்டு அம்சங்களையும் வளர்த்துக்கொண்டார்கள்.

## தீமைகள்

ஆங்கில ஆட்சியினால் தீமைகளும் பல ஏற்பட்டிருந்தன. அவைகளைப்பற்றி இதுவரையிலும் யாரும் எழுதியது கிடையாது. இன்று உண்மையை எடுத்துரைக்கக் கூடிய அளவுக்கு நாம் சுதந்திரம் பெற்றுள்ளோம்.

1. **ஆயுதங்கள் தாங்கக்கூடாது:** இந்தியர் ஆயுதங்களைக் கையாளக் கூடாதென்று ஆயுதச் சட்டம் செய்திருந்தனர். இதனால் ஆண்மைத்தனம் குன்றி இருந்தது. நம் நாட்டை நாம் காப்பாற்றிக் கொள்ளும் கடமையை நாம் செய்யாமல் பிறரைக் கூலிக்கு வைத்துக்கொண்டு பாதுகாத்து வந்தோம். இதனால் தைரியத்தை இழந்ததோடு சர்வதேசங்களின் மத்தியில் இந்தியாவின் மதிப்பும் குறைந்திருந்தது.

2. **அந்நியருக்கு வியாபாரச் சலுகைகள்:** இந்திய ஆட்சி இந்தியருக்காக வல்லாமல் அந்நியரின் லாபத்தைக் கருதி நடத்தப்பட்டது. கைத்தொழில்கள் அவர்கள் கையில் இருந்தது. எல்லாச் சலுகைகளும் அவர்களுக்கே. இதனால் இந்நாட்டு மக்களின் நிலைமை கேவலமாயிற்று.

3. **கல்வி பரவவில்லை:** ஜப்பான் 50 ஆண்டுகளுக்குள் 100 சதவீதம் கல்வியைப் பரவச்செய்து கொண்டது. ஆனால் 200 ஆண்டுகள் ஆங்கில ஆட்சியில் $1\frac{1}{2}$ சதவீதம் கல்வி நம் நாட்டில் பரவியுள்ளது.

4. **பொருளாதார நிலைமை:** இந்தியா கடன்பட்ட நாடாயிற்று. இந்நாட்டின் கடன்சுமை நம்மை நசுக்குகிறது. ஆயினும் மக்கள் வயிறார உண்டதில்லை. மக்களின் பொருளாதார நிலையை உயர்த்த சர்க்கார் வேண்டுவன செய்யவில்லை. மக்களுக்கு ராணுவப் பயிற்சி கொடுக்கப்படவில்லை. எல்லா உத்தியோகங்களும் வெகுகாலம் வரையில் இந்தியருக்குச் சம உரிமையோடு கொடுக்கப்படவில்லை. நாட்டில் ஒற்றுமை வளராமல் வேற்றுமைகளைக் கிள்ளிவிட்டுக் கொண்டே இருந்தார்கள். இவை போன்ற எத்தனையோ தீமைகளும் நிகழ்ந்தன.

ஆனால் இன்று ஆட்சி நம் கையில் வந்துவிட்டது. நடந்ததைக் குறித்து வருந்துவதில் பயனில்லை. நடந்த விஷயங்களை எச்சரிக்கையாக வைத்துக்கொண்டு நாம் நமது நன்மைக்கான வழிகளை நமது மாபெரும் தலைவர்களின் உதவியைக்கொண்டு வகுத்துக்கொள்ள வேண்டும்.

### பயிற்சிகள்

1. ஒழுங்குபடுத்தும் சட்டம் உண்டாவானேன்? அதன் நிபந்தனைகள் யாவை? அதன் குறைகள் யாவை? அக்குறைக்கு எவ்வாறு, எப்பொழுது விமோசனம் ஏற்பட்டது?

2. முதல் மஹாராஷ்டிர யுத்தம் நடைபெறுவானேன்? அதில் ஆங்கிலேயர் அடைந்த லாபம் என்ன?

3. இரண்டாவது மைசூர் யுத்தத்தில் நடந்த போர்களை விவரித்துக் கூறுக.

4. துணைப்படைத் திட்டம் என்பது என்ன? அதை யொட்டின உடன்படிக்கையின் நிபந்தனைகள் யாவை? அவ்வுடன்படிக்கையை எளிதில் ஒப்புக்கொண்டவர்கள் யார்?

5. நான்காவது மைசூர் யுத்தத்தின் முடிவில் ஆங்கிலேயருக்குக் கிடைத்த நாடுகள் எவை?

6. ஸீடெட் டிஸ்ட்ரிக்ட்ஸ் என்பவை எவை? அப்பெயர் வருவானேன்?

7. கர்னாடகம், கோரா, அல்லாஹாபாத், ரோஹில்கண்ட், தஞ்சாவூர் நாடுகளை வெல்லெஸ்லி எங்ஙனம் சம்பாதித்துக்கொண்டார்?

8. வெல்லெஸ்லி காலத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் பரவியிருந்ததை விளக்க ஒரு படம் வரைந்து காட்டுக.

9. இரண்டாவது மூன்ருவது மஹாராஷ்டிர யுத்தங்களில் சம்பந்தப் பட்டவர்கள் யார் யார்? அவர்கள் செய்த போர்கள் எவை? அவற்றின் முடிவு என்ன?

10. மஹாராஷ்டிர சாம்ராஜ்யம் க்ஷீணிக்கக் காரணங்கள் யாவை?

11. ராஜாராம் மோஹன் ராய் யார்? அவரை இந்தியர்கள் கொண்டாடுவானேன்?

12. ஸிந்து நாட்டை ஆங்கிலேயர்கள் ஏன் எப்பொழுது, எவ்வாறு சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டனர்?

13. ஆங்கிலேயருக்குப் பஞ்சாப் எவ்வாறு கிடைத்தது?

14. டல்ஹௌஸி கொண்டொழுகின கொள்கை என்ன? அதனுல் ஆங்கிலேய சாம்ராஜ்யத்துக்கு உண்டான நன்மை, தீமைகள் யாவை?

15. சிப்பாய்கள் கலகம் செய்வானேன்? அதன் முடிவு என்ன?

# XII. நமது சுதந்திரப் போராட்டம்

இந்தியா தோற்றத்தில் பலதிறப்பட்ட காட்சிகளே அளிக்க லாம். இயற்கை அமைப்பில் ஒவ்வொரு பாகத்திற்கு மிடையில் வேற்றுமைகள் காணப்படலாம். சீதோஷ்ண நிலைமை மாறு பட்டிருக்கலாம். மக்கள் பேசும் மொழிகள் பலவாக இருக்கலாம். ஆனுல் இவை யாவும் வெளித்தோற்றங்கள். உள்ளே இருக்கும் ஆத்துமா ஒன்றுதான். எல்லா இருதயத்திலும் இந்திய சக்தி பொலிகின்றது. எல்லோருடைய ரத்தக் குழாயிலும் இந்திய ரத்தம் ஓடுகிறது. நமது தாய் 'செப்பும் மொழி பதினெட்டுடை யாள், எனில் சிந்தனே ஒன்றுடையாள்.'

ஆதிகாலந்தொட்டு இந்தியர் இந்நாட்டை ஒரு தனிப் பிரதேசமாகவே குறிப்பிட்டு வந்திருக்கின்றனர். பல அரசாங் கங்கள் இருந்திருப்பினும் நாடு ஒன்றென்றே கருதப்பட்டது. சிந்து நதிக்கரையில் வாழும் பஞ்சாபியும், தாமிரபரணிக் கரையில் வாழும் தமிழ் வேளாளனும் ஒருவித ஒற்றுமையான உள்ளெண்ணம் கொண்டிருக்கிறுர்கள்.

நம் மக்கள் அந்நியர் ஆட்சியினின்றும் விடுபட்டு ஸ்வராஜ்யத்தை ஸ்தாபிக்க அரும்பாடு பட்டிருக்கின்றனர். முகலாய மன்னர் ஔரங்கஜீபின் கொடுங்கோலினின்றும்

நாட்டை விடுவித்து ஸ்வராஜ்யம் ஏற்படுத்த சிவாஜி மகாராஜா செய்த பிரயத்தனங்களைக் குறித்து முன்னொரு பாடத்தில் படித்திருக்கிறீர்கள். அதன் பின்னர் ஆங்கில ஆட்சி கிளைவ், வாரன்ஹேஸ்டிங்ஸ், வெல்லெஸ்லி, டல்ஹௌஸி பிரபுக்கள் காலத்தில் எங்ஙனம் நாட்டிலெங்கும் பரவி இந்தியாவை வசப்படுத்திக் கொண்டதென்பதையும் கவனித்தீர்கள். 1857-ஆம் ஆண்டில் முதல் சுதந்திரப்போர் தொடங்கிற்று. அதில் பேஷ்வா வமிசத்துக் கடைசி அதிபரான நானாசாகேபும், ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாயும், குவாலியரைச் சேர்ந்த தாந்தியாதோபியும், மற்றும் பல வீரர்களும் பங்கெடுத்துக் கொண்டனர். ஆனால் பல காரணங்களால் அவ்வியக்கம் தோல்வியுற்றது. நாட்டில் சரிவரக் கட்டுப்பாடான அமைப்பும், ஒற்றுமையும் வளராமை, வேண்டிய அளவுக்கு ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் நம்மிடம் இராமை, சீக்கியர் வீரர்களாயிருந்தும் அக்காலத்தில் விடுதலைப் போரில் கலக்காமலிருந்தமை, மக்களின் எல்லா வகுப்பினரிடத்திலும் போதுமான உற்சாகமும் இராமை ஆகியவை முக்கியமான காரணங்களாகும்.

கடைசியாக, கற்ற பெரியோர்கள் சட்டவரம்புக் குட்பட்ட முறைகளைக் கையாண்டு, ஆங்கிலேயரிடம் நயமாகப் பேசி நம் நாட்டிற்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து எனப்படும் சுய ஆட்சியைப் படிப்படியாகப் பெறவேண்டு மென்னும் உத்தேசத்துடன் இந்திய தேசீய காங்கிரஸ் (Indian National Congress) ஸ்தாபித்தனர். இச்சபை பம்பாய் நகரத்தில் 1885-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. முதல் கூட்டத்திற்கு இந்நாட்டின் நாலாபக்கங்களிலிருந்தும் 72 பிரதிநிதிகள் வந்திருந்தனர். அன்றைய காங்கிரசுக்கும் இன்றைய காங்கிரசுக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. அங்கே கூடியவர்கள் படித்தவர்கள், சட்ட நிபுணர்கள். சர்க்காரை நோகாமல் தாக்கிப்பேசி, தங்கள் எண்ணத்தைப் பூர்த்திசெய்யும் நோக்கங்கொண்டவர்கள். ஆதியில் காங்கிரஸ் இயக்கத்தில் கலந்துகொண்ட தலைவர்களில் W. C. பேனர்ஜி, டாக்டர் எஸ். சுப்பிரமணிய அய்யர், சர் வில்லியம் வெட்டர்பர்ன், யூல் முதலியவர்கள் முக்கியமானவர்கள்.

அதன் பிறகு இன்னும் சற்றுத் துரிதமாக வேலை நடத்தக்கூடிய ஆற்றலும், உற்சாகமும் கொண்ட மகாதேவ கோவிந்த ரானடே, கோபாலகிருஷ்ண கோகலே, பிரோஜிஷா மேட்டா என்பவர்கள் கலந்துகொண்டார்கள். ரானடே சிறந்த

அறிவாளி. பம்பாய் ஹைகோர்ட்டில் நீதிபதியாக இருந்தவர். அவர் அனுபவம் பரந்தது; அறிவு ஆழ்ந்தது. தேசபக்தி இருதயத்தில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. கோகலே நாட்டின் தொண்டில் தமது முழு வன்மையையும் ஈடு படுத்த எண்ணி இந்திய ஊழியர் சங்கம் (Servants of India Society) என்பதனை ஸ்தாபித்தார். அதில் சேர்ந்த அங்கத்



பிரோஜிஷா மேட்டா



மகாதேவ கோவிந்த ரானடே

தினர்கள் தந்நலமற்ற தியாகிகளாய்ச் சங்கத்தார் கொடுக்கும் சொற்ப ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு தேசத் தொண்டு செய்யக் கங்கணம் கட்டிக்கொண்டனர். அவ்வளவு சிறந்த கோகலே அவர்கள் பூனவில் கல்லூரியில் பேராசிரியராக இருந்தார். அரசியல், பொருளாதாரம், சரித்திரம்—இத்துறை களில் முற்றும் கற்றுணர்ந்தவர். டில்லியிலுள்ள மத்திய சட்ட சபையில் அங்கத்தினராயிருந்து அவர் பல சட்டங்களியற்றுவதி லும், வரவு செலவுத் திட்டங்களை ஒப்புக்கொள்வதிலும் நாட்டின் நலனைக் கருதி வேண்டுவன செய்திருக்கிறார்.

காங்கிரஸ் மகாசபையின் ஆதிகால இயக்கத்தின் பயனுகச் சட்ட சபைகளில் சிறு மாறுதல்கள் செய்யப்பட்டன. சில இந்தியர்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டன. ஆனல் நாட்டின் அந்தஸ்து உயரவில்லை. இந்த நிலையில் கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்த கர்ஸன் பிரபு 1905-இல் வங்காளத்தை

இரண்டு பாகங்களாகப் பிரித்துவிட்டார். இதனால் வங்காளத்திலுள்ள மக்களுக்குள் வேற்றுமை ஏற்படக்கூடும்; நாட்டில் ஒற்றுமை குலையும்; ஆகையால் இது கூடாதென்று இந்தியர் ஆட்சேபித்தனர். கர்ஸன் பிரபு பொது மக்கள் அபிப்பிராயத்திற்குக் கௌரவம் கொடுத்துச் செவிசாய்க்காது புறக்கணித்தார். எனவே பெரும்புயல் போன்ற இயக்கம் ஒன்று தோன்றிற்று. அதைச் சுதேசி இயக்கம் என்றும், வந்தே மாதர இயக்கம் என்றும் வழங்கலானார்கள். மக்கள் வந்தே மாதரம் என்று கூட சொல்லக்கூடாதென்று அரசாங்கத்தார் உத்தரவிட்டார்கள். அடக்குமுறை தாண்டவமாடிற்று. 1906-இல் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் சபையில் தலைமை வகித்த தாதாபாய் நௌரோஜி என்னும் பெரியார் ஸ்வராஜ்யம் பெறுவது தான் இந்தியரின் முக்கியமான நோக்கம் என்று விளக்கமாக உலகறியப் பறை சாற்றிவிட்டார். இவர் இந்தியத் தலைவர்களுள் வயதும் அனுபவமும் முதிர்ந்தவர். இங்கிலாந்தில் இவர் பார்லிமெண்டு அங்கத்தினராயிருந்தவர். இவர் ஸ்வராஜ்யம் என்னும் சொல்லை உபயோகிக்கவும் அதுவே இந்திய அரசியல் இயக்கத்தின் மூலமந்திரமாகிவிட்டது. சுதேசியம், அந்நிய (அதாவது பிரிட்டிஷ்) வஸ்துக்கள் பகிஷ்காரம், தேசீயக் கல்வி—இவை இயக்கத்தின் கருவிகளாயின. நாடெங்கும் சுதேசிப் பொருள்கள் செய்யும் தொழிற்சாலைகளும், பண்டசாலைகளும் நிறுவப்பட்டன. தென்னாட்டிலே திருநெல்வேலி ஜில்லாவில் தேசபக்தி கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்தது. தூத்துக்குடியிலே தேசபக்த சிகாமணியாகிய வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் தமது வக்கீல் தொழிலைக் கவனியாது சுதேசியத்தில் கலந்தார். தமிழர் பண்டைக் காலத்திலே கப்பலோட்டி, கடல் கடந்த நாடுகளோடு வாணிபம் செய்து வந்ததை மறுபடியும் மெய்ப்பித்துக் காட்டவேண்டுமென்றெண்ணிச் சுதேசிக் கப்பல் கம்பனியொன்றை ஏற்படுத்தினர். இரண்டு கப்பல்களையும் விலைக்கு வாங்கினர். அந்நியர் வியாபாரம் இதனால் பாதிக்கப்


கோபால கிருஷ்ண கோகலே

படுமென்பதை யுணர்ந்து அரசாங்கத்தார் அவரைச் சிறையி லடைத்துப் பலவிதங்களிலும் துன்புறுத்தினர்.



வ. உ. சிதம்பரம் பிள்ளை



தாதாபாய் நௌரோஜி

சுதேசி இயக்கத்தினால் நாட்டில் புத்துயிர் தோன்றிற்று. நவயுகம் ஆரம்பமாயிற்று. தீவிர வாதிகளென்றழைக்கப்பட்ட ஒரு சாரார் லோகமான்ய பால கங்காதர திலகரின் தலைமையில் ஸ்வராஜ்ய சித்திக்காகப் பாடுபடலாயினர். சூரத்தில் 1907-இல் நடந்த காங்கிரஸில் மிதவாதிகள், தீவிர வாதிகளுக்கிடையே பிளவு ஏற்பட்டது.

1908-இல் மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் அளிக்கப் பட்டன. 1915 வரையில் காங்கிரஸ் மிதவாதிகள் ஆதிக்கத்தில் இருந்துவந்தது. லோகமான்ய திலகர் ஆறுவருஷங்கள் தண்டிக் கப்பட்டுச் சிறையிலிருந்தார். 1914-இல் விடுதலையடைந்தார். அவர் வெளியே வந்ததும் தேசீய இயக்கம் உயிர் பெற்றெழுந் தது. நம் நாட்டைத் தமது தாய் நாடாகக் கொண்ட அன்னி பெஸண்ட் அம்மையார் 'ஹோம் ரூல்' அல்லது சுய ஆட்சி இயக்கத்தைத் தொடங்கினார். திலகரும் அதில் கலந்து கொண்டார். இந்தக் கிளர்ச்சியின் பயனாக அக்காலத்தில் இந்தியா மந்திரியாக இருந்த மாண்டேகு என்பவர் இந்தியா வுக்குப் பொறுப்பாட்சியைப் படிப்படியாக அளிப்பதே ஆங்கி லேயரின் நோக்கம் என்று லண்டன் பார்லிமெண்டு சபையில் தெரிவித்தார்.

ஆனால் சீர்திருத்தம் கொடுக்க எண்ணிய அரசாங்கத்தார் மற்றொரு பக்கம் அடக்கு முறையையும் கையாளவெண்ணி ரௌலட் சட்டம் என்பதனை இயற்றினர். இதைத் தாக்கி



லோகமான்ய திலகர்



அன்னிபெஸண்ட் அம்மையார்

நாடெங்கும் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. இச்சமயத்தில்தான் மகாத்துமா காந்தியவர்கள் தமது சத்தியாக்கிரஹ இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

## காந்தியுக ஆரம்பம்

ரௌலட் சட்டத்தை வாபீசு வாங்காவிடில் குறிப்பிட்ட சட்டங்களை மீறுவதென்று தீர்மானித்து 1919 ஏப்ரல் 6-ஆம் தேதி சத்தியாக்கிரஹ நாள் கொண்டாடினர். அதே மாதம் 13-ஆம் தேதி அமிர்தசரஸ் என்னுமிடத்தில் கூடிய பொதுக் கூட்டமொன்றில் ஒரு குற்றமும் செய்தறியாத பொதுமக்கள் மீது ஜெனரல் டயர் என்பவன் துப்பாக்கிகளைப் பிரயோகித்துக் குண்டுகளை வீசி 1500 பேரைச் சுட்டுத் தள்ளினான். இதைக் கேட்ட நாட்டு மக்களிடையே ரத்தக் கொதிப்பு உண்டாயிற்று; பரபரப்பு ஏற்பட்டது. கிலாபத்து விஷயமாக முஸ்லிம்களுக்கு பிரிட்டிஷாரிடம் ஏற்கெனவே மனக்கசப்பு இருந்துவந்தது. இந்த நிலைமையில் மகாத்துமா காந்தி 1921-இல் தமது ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினர். பல்லாயிரக் கணக்கான இந்தியர்

சிறை சென்றனர். சர்க்காருக்கு உதவிபுரிவதை மக்கள் படிப்படியாக நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று காங்கிரஸ் தீர்மானித்தது. கோர்ட்டுகள், பள்ளிகள் பகிஷ்கரிக்கப்பட்டன. அந்நிய ஆடைகளை வாங்குவதில்லை என்று மக்கள் தீர்மானித்துக் கொண்டனர். இந்த நிலைமையில் மகாத்துமா காந்தி சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்க எண்ணினர். ஆனல் அவருடைய இயக்கம் முற்றிலும் அஹிம்சா தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. ஓரிடத்தில் திடீரென ஜனங்கள் பலாத்காரத்தை உபயோகப்படுத்தியதால் அவர் சட்ட மறுப்பை நிறுத்திவிட்டார். ஆங்கில அரசாங்கத்தார் அவரை ஆருண்டுகள் தண்டித்துச் சிறையிலடைத்தார்கள்.

## ஸ்வராஜ்யக் கட்சித் தோற்றம்

வங்கம் தந்த தேசபக்தர் தேசபந்து சித்தரஞ்சன தாஸ் என்பவர் சட்டசபைகளைக் கைப்பற்றி அவைகளை நமக்குச் சாதகமாக உபயோகித்துக்கொள்ள வேண்டுமென்றும், அரசாங்கத்தின் போக்கில் முட்டுக்கட்டைகள் போடவேண்டுமென்றும் போதித்து இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஸ்வராஜ்யக் கட்சியைத் தோற்றுவித்தார். மத்திய சட்டசபையிலும், பல மாகாண சட்டசபைகளிலும் காங்கிரஸ்-ஸ்வராஜ்யக் கட்சியே பெரும்பான்மைக் கட்சியாயிற்று. மத்திய சட்டசபையின் தலைமைப் பதவிக்குத் தேசபக்தர் வித்தல்பாய் படேல் தேர்ந்தெடுக்கப்பட்டார். பன்முறை வரவு செலவுத் திட்டம் நிராகரிக்கப்பட்டது. அரசாங்கத்துக்குத் தோல்வி மேல் தோல்வி ஏற்பட்டுக் கொண்டு வந்தது. இந்த நிலைமையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்திய அரசியல் நிலைமையைப் பரிசீலனை செய்து, அடுத்தபடியாகக் கொடுக்கவேண்டிய சீர்திருத்தங்களைச் சிபார்சு செய்ய ஒரு கமிஷனை நியமித்தார்கள். அதன் தலைவராக ஸர் ஜான் சைமன் எனப்பட்டவர் நியமிக்கப்பட்டதால் அதற்கு சைமன் கமிஷன் என்னும் பெயர் வழங்கப்பட்டது.

சைமன் கமிஷனில் ஓர் இந்தியர் கூட அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. அது முற்றிலும் ஆங்கிலேயர்களடங்கிய கூட்டமாக இருந்தது. எனவே இந்தக் கமிஷனை இந்தியரனைவரும் பகிஷ்கரித்தனர். அவர்கள் சில சீர்திருத்தங்களைச் சிபார்சு செய்தார்கள். மாகாணத்தில் இரட்டை ஆட்சி இதுவரையிலும் இருந்துவந்தது. மேலும் கொஞ்சம் அதிகாரம் மக்களிடம் கொடுக்கப்பட வேண்டுமென்றும், மத்திய அரசாங்

கத்தில் சில இலாகாக்களை மக்களின் பிரதிநிதிகள் கையில் கொடுக்கவேண்டுமென்றும் சைமன் கமிஷன் சிபார்சு செய்தது. இதை ஜனங்கள் வெறுத்துக் கூக்குரலிட்டனர். காங்கிரஸ் மகா சபை இந்தியாவுக்குப் பரிபூரண சுயஆட்சி உடனே கொடுக்கப் படவேண்டுமென்று தீர்மானித்தது. மகாத்துமா காந்தி 1930-இல் மறுபடியும் சத்தியாக்கிரஹம் தொடங்கி உப்புச் சட்டத்தை மீறினர். மறுபடியும் லட்சக் கணக்கான ஆண்களும், பெண் களும் சிறை சென்றனர்.

## வட்டமேஜை மகாநாடுகள்

1931-இல் ஆங்கில அரசாங்கத்தார் லண்டனில் ஒரு வட்ட மேஜை மகாநாட்டைக் கூட்டினர்கள். இந்தியாவிலிருந்து எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளையும் அழைத்து அவர்களுடைய ஏகமனதான எண்ணங்களைப் பெற்று, நாட்டின் அரசியலமைப் பைத் தீர்மானிக்க அவர்கள் எண்ணினர்கள். ஆனல் தேசத்தில் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்று அவர்களுடைய பிரதிநிதி ஸ்தாபனமாக விளங்கிவந்த காங்கிரஸ் சட்டமறுப்பு நடத்திவந்தபடியால் லட்சக்கணக்கான தொண்டர்கள் சிறை சென்றிருந்தனர். இதன் காரணமாகக் காங்கிரஸ் இம்மகாநாட் டில் ஈடுபட மறுத்தது. மகாநாடு கூடிற்ருயினும் அதனல் பயன் ஒன்றும் ஏற்படவில்லை. இந்தியாவில் அதுகாலை கவர்னர் ஜெனரலாயிருந்துவந்த இர்வின் பிரபு மகாத்துமா காந்தியோடு சமரசப் பேச்சுக்களைப் பேசி ஒப்பந்தம் செய்துகொண்டு சிறையிலடைக்கப்பட்டிருந்த காங்கிரஸ் வாதிகளை விடுவித்தார். இங்கிலாந்திலும் தொழிற்கட்சி பார்லிமெண்டில் ஆதிக்கம் பெற்றது. அக்கட்சியைச் சேர்ந்த ராம்செ மாக்டொனல்ட் என் பவர் பிரதம மந்திரியானர். 1932-இல் மறுபடியும் வட்டமேஜை மகாநாடு கூடிற்று. மகாத்துமா காந்தியவர்கள் காங்கிரஸின் சார் பாக அம் மகாநாட்டில் கலந்துகொண்டார். ஆனல் இந்து முஸ்லிம் பிரச்னையைத் தீர்ப்பது கஷ்டமாயிற்று. இம்மகாநாடும் பெரிதாக ஒன்றும் சாதித்துவிடவில்லை. இந்தியாவில் கவர்னர் ஜெனரல் மாறி, வில்லிங்டன் பிரபு வந்தார். அவர் வந்த பிறகு மறுபடியும் காங்கிரஸ் வாதிகள் ஒடுக்கப்பட்டுச் சிறையிலடைக் கப்பட்டனர். மகாத்துமாவும் இந்தியா திரும்பியதும் சிறைக் கனுப்பப்பட்டார்.

மறுபடியும் 1933-இல் வட்டமேஜை மகாநாடு கூடிற்று. 1934-இல் பார்லிமெண்டு சபையார் ஒரு கமிட்டியை நியமித்து இந்தியாவுக்கு அளிக்கவேண்டிய சீர்திருத்தங்களடங்கிய ஒரு

யாதாஸ்தைத் தயாரித்தனர். 1935-இல் சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

## சமூகச் சீர்திருத்தங்கள்

இந்திய சமுதாயத்தில் பல குறைகள் இருந்து வந்தன. ஜாதிக் கொடுமைகள், ஜாதி வேற்றுமைகள், ஜாதி ஏற்றத் தாழ்வுகள் என்பவை சமூகத்தின் ஒற்றுமையைக் குலைத்துப் பல பிரிவினைகளை உண்டாக்கின. கல்வி பரவாத காரணத்தால் மக்கள் பல துராசாரங்களுக்கும், மூட நம்பிக்கைகளுக்கும் ஆளாகி இருந்தார்கள். நாடு செழித்து ஓங்க வேண்டுமானால், மக்கள் சீர்பட வேண்டுமானால், இத் தீய பழக்கங்களைக் களைந்தெறிய வேண்டியது அவசியமாயிற்று. மக்கள் விழி பெற்று நல்வழியை நாட வேண்டியிருந்தது. அவர்களுக்கு நற்போதனைகளினால் சீர்திருத்தங்களைக் கற்பிக்கப் பல மகான்கள் தோன்றினார்கள். வங்கநாட்டில் ராஜாராம் மோஹன் ராய், கேசவ சந்திரசேன் என்னும் பெரியார்கள் தோன்றி அரிய ஊழியம் செய்து வந்தனரென்பதை நீங்கள் படித்தீர்கள். தமிழ் நாட்டில் புத்துயிரளித்த கவிச்சக்கரவர்த்தி—பாட்டுக்கொரு கவி பாரதி எனப் புகழ்பெற்ற சுப்பிரமணிய பாரதியார் தோன்றி நற்பாதை எது வென்றறியாது அலைந்துகொண்டிருந்த தமிழ் மக்களுக்குத் தமது கவிப்பெருக்கால் அமுதம் ஊட்டினார். நாம் என்றும் மறக்க முடியாத ஊழியம் புரிந்து சாவாப் புகழையும் தமக்குத் தேடிக்கொண்டார்.



சுப்பிரமணிய பாரதியார்

இது போலவே தெலுங்கு தேசத்தில் மக்களுக்கு அறிவைக் கொடுக்கும் தொண்டில் தேசோத்தாரக நாகேச்வர ராவ் என்பவர் ஈடுபட்டிருந்தார். இவர் பம்பாயில் வியாபாரம் செய்து வந்தார். அக்காலத்தில் தெலுங்கர்களுக்கு நல்லறிவை ஊட்டி அவர்களுக்காக உழைத்து வந்த பத்திரிகைகள் மிகமிகச் சொற்பம். எனவே இவர் பம்பாயில் 'ஆந்திர பத்திரிகா' என்னும் வாரப்பத்திரிகையைத் தொடங்கினார். சிறிது காலத்

திற்கெல்லாம் அப்பத்திரிகையைச் சென்னைக்கு மாற்றித் தினசரியாகவும் ஆக்கினர். தாம் வியாபாரத்தில் சம்பாதித்த ஏராளமான பொருளை மக்களின் சேவையில் செலவு செய்தார்.

ஆந்திர தேசத்தில் ஊழியம் செய்த பெரியார்களில் ராஜமஹேந்திரவர வாசியான கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு என்பவரும் ஒருவர். இவர் சமூகச் சீர்திருத்தக்காரர். விதவைகளுக்கு மறுமணம் செய்விப்பதிலும், சிறுவர் சிறுமிகளுக்குக் கல்வி கற்பிப்பதிலும் தமது ஊக்கத்தைச் செலுத்தினர். இன்றும் இவர் பெயரால் ஒரு கலாசாலை நடைபெற்று வருகிறது. இவர்களைப்போல் ஊழியம் செய்த உத்தமர் எண்ணற்றவர்.

## அரசியல் சீர்திருத்தங்கள்

இந்திய அரசியலில் காந்தியுகம் தோன்றிய காலத்தில் ஆங்கில அரசாங்கத்தார் இந்நாட்டிற்குச் சீர்திருத்தங்கள் அளித்தனரென்று முன்பு கூறப்பட்டதல்லவா? அதற்கு 'மாண்டேகு—செம்ஸ்போர்டு' சீர்திருத்தங்கள் என்னும் பெயர் வழங்கப்பட்டு வருகிறது. இந்தச் சீர்திருத்தம் மாகாணங்களில் 'இரட்டை ஆட்சி'யை ஏற்படுத்தியது. மாகாண ஆட்சியின் ஒரு பகுதி, அதாவது மாகாண சர்க்கார் அதிகாரத்திற்குட்பட்ட இலாகாக்களில் சில பொது மக்களின் பிரதிநிதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகள் வசம் மாற்றிக் கொடுக்கப்பட்டது. மந்திரிகள் கையில் ஒப்படைக்கப்பட்ட இலாகாக்களுக்கு 'மாற்றப்பட்ட இலாகாக்கள்' என்பது பெயர். கவர்னரின் நிர்வாகசபை அங்கத்தினர்கள் கையில் இதர இலாகாக்கள் இருந்து வந்தன. இரண்டு இனங்களுக்கும் கவர்னர் பொது மேலதிகாரி. மத்திய சட்டசபையில் மக்களின் பிரதிநிதிகள் பெரும்பான்மையோராயினர். ஆனல் இவர்களுக்குச் சில உரிமைகளிருந்தனவே யல்லாது பொறுப்புக்கள் கிடையா.

மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களுக்குப் பிறகு 1935-இல் புதிய சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதென்பதைக் கவனித்தோம். இந்தச் சீர்திருத்தத்தில் இரண்டு பாகங்களுண்டு. ஒன்று மாகாணங்களுக்குச் சம்பந்தமானது. மற்றென்று மத்திய சர்க்கார் அமைப்பை விவரிப்பது. மாகாண ஆட்சியைப் பற்றி அடுத்த பாடத்தில் கவனிப்போம்.

மத்திய சர்க்காரில் சமஷ்டி முறையைக் கையாளுவதென்று நிர்ணயிக்கப்பட்டது. சமஷ்டி முறை என்றல் என்ன? பல

சிறிய ராஜ்யங்கள், சமஸ்தானங்கள் அல்லது மாகாணங்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய பொது நன்மைக்காக ஒரு பொது சர்க்காரை அமைத்துக் கொள்வது சமஷ்டி எனப்படும். அவ்வாறு ஒன்றுகூடும் சிறிய அங்கங்கள் தமக்குள்ள அதிகாரத்தில் குறிப்பிட்ட சிலவற்றை மத்திய அல்லது சமஷ்டி சர்க்காருக்கு மாற்றிக் கொடுக்கும். இந்த ஏற்பாட்டில் மாகாணங்களும், சுதேச ராஜ்யங்களும் சமஷ்டி அங்கங்களாக இருக்க வேண்டுமென்பதே சட்டத்தின் நோக்கம். இந்தச் சமஷ்டி ஏற்பாட்டை இந்தியாவிலுள்ள எந்தக் கட்சியுமே ஒப்புக்கொள்ளவில்லையாதலால் அதை அமுலுக்குக் கொண்டு வரவில்லை. ஆனால் அதில் அடங்கிய ஒரு பாகம் மாத்திரம் நடைமுறையில் ஏற்க வேண்டியதாயிற்று. சமஷ்டிய நியாய ஸ்தலம் (Federal Court) நிறுவ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மாகாணங்களுக்கிடையே ஏதேனும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால் அதைத் தீர்த்து வைக்க வேண்டுமல்லவா? அதற்காகவே சமஷ்டி நீதிமன்றம் நிறுவப்பட்டது.

## இந்து முஸ்லிம் ஒற்றுமை

இந்துக்களும் முஸ்லிம்களும் பல நூற்றுண்டுகளாக இந்நாட்டில் ஒற்றுமையாக வசித்து வருகின்றனர். ஆனல் ஆங்கில ஆட்சி தொடங்கிய பிறகு, அதிலும் முக்கியமாக இந்தியர் இந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பைத் தாம் ஏற்க விரும்பிக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்த பின்னர் ஆங்கிலேய அதிகாரிகள் முஸ்லிம்களை இந்துக்களிடமிருந்து வேறே பிரித்து அவர்களுக்குத் தனித் தொகுதி, வகுப்புவீதப் பிரதிநிதித்துவம் போன்ற சலுகைகளைக் காட்டி, இந்தியர் என்னும் பொது எண்ணம் மறைந்து போய் இந்துக்கள் முஸ்லிம்கள் என்னும் வேற்றுமை தோன்றும் வண்ணம் நடந்து கொண்டனர். இதன் பயனுக நாட்டில் இந்து முஸ்லிம் வேற்றுமைகள்



முகம்மதலி ஜின்ன

இருந்தது மாத்திரமேயல்லாது அவ்வப்போது ஆங்காங்கு இந்து முஸ்லிம் கலகங்களும் நிகழ்ந்து வந்தன. நாட்டின் நலனைக் கருதி உழைத்து வந்த பல தேசபக்தர்கள் இவ்விரு இனத்தாரும் ஒற்றுமையாய் இருக்கவேண்டுமென்று அரும்பாடு பட்டு வந்திருக்கின்றனர். முக்கியமாக மகாத்துமா காந்தியவர்கள் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக எவ்வளவோ தியாகம் செய்திருக்கிறார். தம் உயிரைப் பணயமாக வைத்து உபவாசமிருந்திருக்கிறார். கலகங்கள் நடக்குமிடங்களுக்குச் சென்று இதமான சொற்களினால் மக்களை நல்வழிப்படுத்திச் சண்டைகளை நிறுத்தி ஒற்றுமையை வளர்த்தார். கலவரம் முற்றி உயிர்ச்சேதம் அதிகமாக நடைபெற்ற இடங்களுக்குச் சென்று தம் இனிய சொற்களால் மக்களின் கோபத்தைத் தணியச் செய்தார். கடைசியில் அவர் உயிரையே இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகக் கொடுத்தார்.

ஆதியில் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டவர்களில் முகம்மதலி ஜின்னா என்பவரும் ஒருவர். ஆனால் பிற்காலத்தில் எக்காரணத்தினாலோ இவர் வேற்றுமையைப் பெருக்குவதில் ஈடுபட்டுவிட்டார். 1940-இல் இவர் தலைமையில் ‘முஸ்லிம் லீக்’ சபை ஒரு புதிய திட்டத்தை வெளியிட்டது. இந்தியாவின் ஜனத்தொகையில் முஸ்லிம்கள் ஐந்தில் ஒரு பங்கினராக இருந்தமையால் சிறுபான்மையோர் என்று இதுகாறும் கருதப்பட்டு வந்து அந்நிலைக்கேற்பச் சலுகைகளும், உரிமைகளும் பெற்று வந்தனர். ஆனால் இந்தப் புதிய திட்டத்தில் முஸ்லிம்கள் சிறுபான்மையோரல்லரென்றும், இந்தியா ஒரு தேசமன்று என்றும், முஸ்லிம்கள் ஒரு தனி இனம் ஆவாரென்றும் விளக்கி இந்தியாவைக் கூறுபோட்டு அதில் முஸ்லிம்கள் பெருவாரியாக இருக்கும் பாகங்களை அவர்களுக்குக் கொடுத்து அதை ஒரு தனி ராஜ்யமாக அமைக்க வேண்டுமென்றும் கூறினர். இவருடைய திட்டத்திற்கு இவருடைய பிடிவாதமே பெரிய பலத்தைக் கொடுத்தது.

## கிரிப்ஸ் திட்டம்

1939-இல் தொடங்கிய இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்றுவந்த காலத்தில் ஜப்பானியர் மலேயா, பர்மா நாடுகளைப் பிடித்துக்கொண்டு விட்டனர். இந்தியாவையும் பிடித்துக் கொள்ளலாம் என்னும் பீதி அரசாங்கத்தாரிடம் இருந்தது. நாட்டின் பாதுகாப்புக்காக இந்தியரைத் திரண்டு வர வேண்டு

மென்று அறைகூவி யழைத்தனர். என்றும் கேட்டு வந்தது போல் காங்கிரஸ் சபை அப்போது கூட இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் உடனே கொடுக்க வேண்டுமென்றும், அவ்வாறு கொடுத்தால் நாட்டைப் படையெடுப்பினின்றும் பாதுகாக்கும் பொறுப்பைத் தாம் ஏற்கத் தயாராக இருப்பதாகவும் அறிவித்து, தங்கள் விடுதலை இயக்கத்தை முன்னிலும் பன்மடங்கு மும்முரமாக நடத்தி வந்தது.



சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ்

இந்தியரைத் திருப்தி செய்வித்து நாட்டின் ஆட்சியில் அவர்களுக்கு ஒருவித அதிகாரத்தைக் கொடுத்துச் சமரசப்படுத்த எண்ணங் கொண்டு அப்போது ஆங்கில மந்திரிசபை அங்கத்தினராயிருந்த, இந்திய முன்னேற்றத்திற்குச் சாதகமான எண்ணங் கொண்டவரான சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் என்பவரை இந்தியாவுக்கு அனுப்பினார்கள். அவர் இந்தியாவுக்கு 1942-இல் வந்தார். எல்லாக் கட்சித் தலைவர்களையும் சந்தித்தார். அவர்களுடன் கலந்து ஆலோசனை செய்ததன் பயனாக ஒரு திட்டத்தைத் தயார் செய்தார். அந்தத் திட்டத்தின் முக்கியமான அம்சங்கள் பின் வருமாறு :

1. இந்தியர் கோரிக்கையை நிறைவேற்றும் எண்ணத்தோடு ‘இந்திய யூனியன்’ ஒன்றை நிறுவப் பிரிட்டிஷ் சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்கள். இந்திய யூனியனுக்கு டொமினியன் அந்தஸ்து உண்டு. இந்தியர் பிரிட்டிஷ் காமன்வெல்திலிருந்து வெளியேற விரும்பினால் அவர்கள் அவ்வாறே செய்யலாம்.

2. யுத்தம் நின்றதும் அரசியல் நிர்மாண சபையொன்று பிரிட்டிஷ் இந்தியா, சுதேச ராஜ்யங்கள்—இவை இரண்டுக்கும் பொதுவாக ஏற்படுத்தப்படும். இரண்டு ஷரத்துக்களின் பேரில் அந்த நிர்மாண சபையின் சிபார்சுகள் ஒப்புக் கொள்ளப்பட்டுப் பிரிட்டிஷ் சர்க்காரால் நடவடிக்கை நடத்தப்படும். ஷரத்துக்கள்: (அ) இந்தப் புதிய அரசியல் அமைப்பை ஒப்புக்கொள்ளாத மாகாணங்கள் தங்களுக்கெனத் தனியமைப்பை ஏற்படுத்திக்

கொள்ளலாம். அவ்வமைப்புக்கும் இந்திய யூனியனுக்குள்ள அந்தஸ்து உண்டு. சுதேச ராஜ்யங்களும் தங்கள் இஷ்டம்போல் இந்திய யூனியனில் சேரலாம் அல்லது சேராமலும் இருக்கலாம்.
(ஆ) இந்த அரசியல் நிர்மாண சபைக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் நிர்வாகப் பொறுப்பை மாற்றும் விஷயமாக ஓர் ஒப்பந்தம் ஏற்படும்.

3. யுத்தம் நடைபெறும் காலத்தில் எல்லாக் கட்சித் தலைவர்களும் தத்தம் கட்சி பலத்தை எல்லாம் அரசாங்கத்தைப் பலப்படுத்துவதற்காக சேகரித்து உதவி புரியவேண்டும்.

இந்தத் திட்டத்தைக் காங்கிரஸ் நிராகரித்தது. காங்கிரஸ் என்ன செய்யப்போகிறதென்று பார்த்துக்கொண்டிருந்த முஸ்லிம் லீக் தலைவர் ஜின்னுவும் நிராகரித்துவிட்டார். தாம் வந்த காரியம் நடைபெருமல் கிரிப்ஸ் அவர்களும் நாடு திரும்பினுர்.

இதன் பின்னர் இந்தியர் தங்களது சுதந்திரப் போரைப் பலப்படுத்தினுர்கள். என்றும் எதிர்பாராத வகையில் 1942-இல் சுதந்திரப் போர் நடைபெற்றது. தலைவர்கள் யாவரும் சிறையிலடைக்கப்பட்டனர். தலைவர்களில்லாத ஜனங்கள் கட்டுக் கடங்காமல் சுதந்திர வெறிகொண்டு குழப்பங்களை விளைவித்தார்கள். இதே சமயத்தில் இந்தியத் தலைவர்களில் ஒருவரான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் கல்கத்தாவில் காவலில் வைக்கப்பட்டிருந்தும், தப்பித்துக் கொண்டுபோய் வெளி நாடுகளுக்குச் சென்று அங்கே இந்தியாவின் சுதந்திரத்திற்குப் போராடுவதற்காக 'இந்திய தேசீயப் படை' என்னும் ராணுவத்தைக் கூட்டினுர். ஒரு தூது கோஷ்டியை அனுப்பி இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்த்துவைக்க முயன்ருர்கள். இம்மந்திரி சபையார் இந்தியாவுக்கு வந்த போது அரசாங்கத்தை அமைக்க எவ்வளவோ முயன்றனர். காங்கிரசும், நாட்டில் பெரும்பான்மையோரும் நாட்டைத் துண்டாடுவது மதியீனம் என்று நினைத்து அதை ஆட்சேபித்தார்கள். ஜின்னுவின் தலைமையைக் கொண்ட முஸ்லிம்கள் நாட்டைப் பிளப்பதே நன்மையைப் பயக்கும் என்று பிடிவாதமாக வாதாடினுர்கள். இதனுல் பிரிட்டிஷ் சர்க்கார் நாட்டை இரண்டு டொமினியன்களாகப் பிரித்து விடுவதென நிச்சயித்தனர். இந்திய யூனியன் என்று ஒரு நாடும், பாகிஸ்தான் என்று மற்ருெரு நாடும் ஏற்படுத்துவதென்றும், பாகிஸ்தானில் சேர விரும்பும் பிரதேசங்கள் கீழ்க்கண்டவாறு தங்கள் எண்ணத்தைத் தெரிவிக்கலா மென்றும் தீர்மானிக்கப்பட்டது.

1. பஞ்சாப், சிந்து, வங்காளம், பலூசிஸ்தானம் மாகாணங்களில் சட்டசபை அங்கத்தினர்களின் வாக்குக்கள் எடுத்து நிர்ணயிக்க வேண்டும்.

2. வடமேற்கு எல்லை மாகாணத்தில் பொதுஜன வாக்காளருடைய வாக்கினால் தீர்மானிக்க வேண்டும்.

3. வங்காளமும், பஞ்சாபும் பிளவுபட விரும்பினால் பிளவுபட்டுப்போகும் பாகங்களின் எல்லைகளை நிர்ணயிக்க கமிஷன்கள் நியமிக்கப்படும்.

4. அஸ்ஸாமில் சில்ஹெட் ஜில்லா இருக்க விரும்புகிறதா அல்லது கிழக்கு வங்காளத்தில் சேர விரும்புகிறதா வென்பதை அந்த ஜில்லாவில் வாக்கெடுத்து நிர்ணயிக்க வேண்டும்.

வாக்குக்கள் எடுக்கப்பட்டன. இந்த ஏற்பாட்டின் படிக்குப் பிரிட்டிஷ் பார்லிமென்டில் வெகு துரிதமாக இந்திய சுதந்திரச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தியா 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-இல் சுய ஆட்சியுடன் கூடிய டொமினியன் ஆயிற்று.

ஏறக்குறைய அதே காலத்தில் நிறுவப்பட்ட அரசியல் நிர்ணய சபை இந்தியாவின் எதிர்கால அரசியலை நிர்ணயிக்கத் தொடங்கிற்று. அச்சபையின் தீர்மானத்தின்படி 1950-ஆம் ஆண்டு ஜனவரி 26 முதல் இந்தியா ஜனநாயக ஆட்சி பெற்ற சுதந்திரக் குடியரசு நாடாக விளங்குகிறது. பாபு ராஜேந்திரப் பிரஸாத் என்பவர் அதன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். பண்டித ஜவஹர்லால் நேரு பிரதம மந்திரியாக இருந்து அரசியலை நடத்தி வருகிறார்.



பாபு ராஜேந்திரப் பிரஸாத்

## சுதேச சமஸ்தானங்களின் நிலை

முதலில் சுதேச மன்னர்கள் ஒவ்வொருவராக இந்திய யூனியனோடு தொடர்பு கொண்டார்கள். ஆனால் தொடர்பு மாத்திரம் போதாதென்று நம் தலைவர்களில் சர்தார் படேல் போன்றவர்கள் கருதினார்கள். நூற்றுக்கணக்கான சிறிய ராஜ்யங்கள் வெவ்வேறு ஆட்சி முறைகளுடன் நாட்டில் பரவி இருந்தால் இந்தியாவின் ஒற்றுமைக்கும் வலிமைக்கும் குறைவேற்படும். ஆகையால் ஆங்காங்கு சுதேச ராஜ்யங்களைப் பல வட்டங்க

ளாக வகுத்து அவைகளை ஒன்று சேர்த்துப் பொது ஆட்சியை ஏற்படுத்தலானார்கள். இந் நாட்டிலிருந்த 700-க்கு அதிகமான சுதேச ராஜ்யங்கள் இன்று 15 வட்டங்களுக்குள் அடங்கிப் போய்விட்டன. நாடு கட்டுப்பாடான அமைப்பைக் கொண்டதனால் ஆட்சிமுறை திறமையாக இருக்கின்றது. ஏற்றத்தாழ்வுகள், வித்தியாசங்கள், கலவரங்கள், குழப்பங்கள் யாவும் குறைந்து ஒழுங்கான வகையில் நாடு முன்னேற்றமடைந்து வருகிறது.

## மொழிவாரி ராஜ்யங்கள்

நாட்டில் பல மொழிகளைப் பேசி வருவதால் மக்கள் ராஜ்யப் பிரிவினையை மொழிவழியாக இருக்குமாறு அமைக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். இதனால் அனுகூலங்களுமுண்டு; நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கக்கூடிய சில இடைஞ்சல்களுமுண்டு. ஆனால் நாடு அமைதியடையும் வரையில் நாம் நிதானித்துவிட்டு, பிறகு தீர ஆலோசித்து ஒழுங்கான முறையில் ராஜ்யங்களைத் திருத்தி யமைத்துக் கொள்ள வேண்டும். ஆந்திர ராஜ்யம் 1953 அக்டோபர் முதல் ஏற்பட்டது. மற்றவை நாளடைவில் ஏற்படலாம்.

## புத்துயிர்

அரசியல் சுதந்திரம் அடைந்ததன் பயனாக நாட்டில் புத்துயிர் தோன்றி இருக்கிறது. மக்களுக்கு தந்நம்பிக்கை, தன் மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த ஊக்கத்தின் பயனாக நாட்டில் தொழில், பொருளாதாரம், சமூகம் இவை யாவும் சீர்திருந்தி, விருத்தியடையுமானால் இந்தியா உலகத்திலுள்ள நாடுகளுக்கு நடுநாயகமாக விளங்கும். இன்று ஆசிய நாடுகளுக்கு இந்தியா தலைமை வகிக்கிறது. நாளை உலகத்தின் ஜோதி என விளங்கக் கூடிய ஆற்றல் இருக்கிறது. நாம் அதற்கேற்றவாறு நடந்து கொள்ள வேண்டும்.

## மாகாண ஆட்சி

1919-இல் கொடுக்கப்பட்ட மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் பயனாக மாகாணங்களில் இரட்டை ஆட்சி ஏற்பட்டதென்று தெரிந்துகொண்டோம். அதன் பிறகு 1935-இல் வழங்கப்பட்ட சீர்திருத்தத்தின்படி மாகாண ஆட்சி முறை பெரிய மாறுதலடைந்தது. மாகாண சர்க்கார் நடத்திவரும்

எல்லா இலாகாக்களும் மந்திரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டன. சட்டசபைகள் முற்றிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் களடங்கியதாயிற்று. இதில் பெரும்பான்மைக் கட்சியின் கையில் மாகாண ஆட்சியின் பொறுப்பு விடப்பட்டது. எல்லா மந்திரி களையும் பெரும்பான்மைக் கட்சித் தலைவரே தேர்ந்தெடுப்பார். எனவே மாகாணங்கள் சம்பந்தப்பட்ட வரையில் பொறுப்பாட்சி ஏற்படுத்தப்பட்டது. ஆனால் பின்னடைந்த ஜாதியாரின் முன்னேற்றம், ஐரோப்பியரின் கல்வி போன்ற இரண்டொரு விஷயங்கள் மாத்திரம் கவர்னர், மன்னர் பிரானின் பிரதிநிதி என்னும் காரணத்தினால் அவரிடம் விசேஷ அதிகாரத்தின் கீழ் விட்டுவிடப்பட்டிருந்தது. இந்த விசேஷ அதிகாரத்தையும் கவர்னர்கள் அனுவசியமாக உபயோகிப்பதில்லை என்று வாக் களித்தனர். எனவே மாகாணங்கள் சம்பந்தப்பட்ட வரையில் பரிபூரணமான சுய ஆட்சி கிடைத்ததென்றே கூறவேண்டும். இதனால்தான் 1937-இல் இந்தச் சீர்திருத்தத்தின் கீழ் முதன்முத லாக மந்திரிசபை ஏற்பட்டபோது காங்கிரஸ் பொறுப்பேற்று எட்டு மாகாணங்களில் தனது ஆட்சியை ஏற்படுத்தி நடத்தி வந்தது.

1947-இல் செய்யப்பட்ட மாறுதலினால், அதாவது சுதந்திரம் அடைந்த பின்னர், மாகாண ஆட்சியின் நிலைமை என்ன? மன்னரின் பிரதிநிதியாயிருந்த கவர்னர் மக்களுக்குக் கட்டுப் பட்டவராகிவிட்டார். இந்தியா குடியரசு நாடாகிவிட்டபடியால் மக்களுக்குப் பொறுப்பும் அதிகாரமும் கிடைத்துவிட்டன. எனவே அவருடைய விசேஷ அதிகாரங்கள் பெயரளவில் இருக் கின்றன. மந்திரிகளே ஆட்சியை நடத்தி வருகிறார்கள்.

புதிய குடியரசு அமைப்பில் மாகாணங்கள் ராஜ்யங்களென் றழைக்கப்படுகின்றன. இந்தியக் குடியரசு யூனியனின் அமைப் புக்கும் சட்டங்களுக்கும் முரண்படாத எல்லா வகைகளிலும் இந்த ராஜ்யங்கள் தத்தம் முன்னேற்றத்திற்கான வழிகளைத் தேடிக் கொள்ளலாம்.

## உலக அமைப்பில் இந்தியா

இந்தியா சுதந்திரம் பெற்றதும் அதன் பொறுப்பு அதிக மாயிற்று. நாட்டின் பாதுகாப்பு மக்களுடையதாயிற்று. இந்தியா முன்னேற்றமடைவதை மற்ற எந்த நாட்டினரும் இனித் தடை செய்வார்கள் என்பதே கிடையாது. உலகத்திலுள்ள நாடுகளினிடையே இந்தியாவின் மதிப்பும் அந்தஸ்தும் அளவு

கடந்து பெருகி இருக்கிறது. இந்தியாவின் பண்டைய நாகரிகம், இயற்கைச் செல்வம், உலக மக்கள் திரண்டு குழுமி வாழும் பிரதேசத்தின் மத்தியில் இருக்கும் அதன் இருப்பிடம் முதலிய பல விஷயங்கள் இந்நாட்டின் பெருமை, பொறுப்பு, மதிப்பு யாவற்றையும் வளர்த்து விட்டன. மேலும் நம் நாடு போர் வழியை இகழ்ந்து சமாதான வழியையும் நேர்மையான நீதி வழியையும் நாடி உலக சமாதானத்திற்காக உண்மையாகப் பாடுபட்டு வந்த உத்தமர் காந்தியடிகள் காட்டிய நல்வழியைப் பின்பற்றுகிறது. ஆகையால் உலக சமாதானப் பிரியர் யாவரும் நம்மை நோக்கிய வண்ணமாக இருக்கின்றனர்.


பண்டித ஜவஹர்லால் நேரு

ஆசிய நாடுகள் யாவும் இந்தியாவின் தலைமையை ஒப்புக் கொண்டிருக்கின்றன. ஜப்பான் யுத்தத்தில் பெற்ற பெருந் தோல்வியின் காரணமாக அந்நியர் கையில் சிக்குண்டு, சரணடைந்து வீழ்ந்து கிடக்கிறது. சைனு பதின்மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வந்த போரினுல் பலஹீனப்பட்டு, கட்டுப்பாடின்றி, குழப்பத்தில் மூழ்கி இருக்கிறது. உள்நாட்டுக் கலகங்கள் அங்கே பல பிரிவினைகளை உண்டாக்கி இருக்கின்றன. மற்ற ஆசிய நாடுகளில் பல அந்நியர் ஆதீனத்திலிருக்கின்றன; அவை தாமும் சுதந்திரம் பெற்றுச் சுகவாழ்வு வாழ இந்தியாவின் உதவியை நாடுகின்றன.

உலகத்திலுள்ள வல்லரசுகள் இந்தியாவின் பலம், நாணயம் முதலியவற்றை உணர்ந்து இந்தியாவோடு நட்புக்கொண்டு வாழ விரும்புகின்றன. ஐக்கிய தேசங்கள் போன்ற பொதுச் சங்கங்களில் இந்தியாவின் செல்வாக்கு பெருவாரியாக வளர்ந்து விட்டது. இவ்வளவுக்கும் காரணம் நமது நாட்டுத் தலைவர்களின் நேர்மையும் கண்ணியமான நடத்தையுமேயாம். இன்று இந்தியா குடியரசாக மாற விரும்பியதால் காமன்வெல்த்தை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனுல் இந்தியாவின் ஒத்துழைப்பையும் சகவாசத்தையும் விரும்பிக் காமன் வெல்த்தின் அமைப்பையே மாற்றிக் குடியரசு இந்தியாவை அதில்

இருக்கச் செய்திருக்கிறார்கள். நம் தலைவர் பண்டித ஜவஹர் லால் நேருவின் ஆழ்ந்த அரசியல் அறிவு இதிலிருந்து நன்கு விளங்குகின்றது.

இனி இந்தியா ஆக்கத் தொழிலில் ஈடுபட்டு எல்லாத் துறைகளிலும் முன்னேறி உலகத்திலேயே மிகவும் உன்னதமான நிலைமையை அடையும்.

## பயிற்சிகள்

1. இந்திய தேசீய காங்கிரஸ் ஏற்பட்ட வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுக.

2. வங்கப் பிரிவினையின் பயன் என்ன?

3. 'ஹோம் ரூல் இயக்கம்' என்றால் என்ன? அதை நடத்தியவர் யார்?

4. 'ஒத்துழையாமை' என்றால் என்ன? இந்த இயக்கத்தைத் தோற்றுவித்தவர் யார்? ஏன் தோற்றுவித்தார்? எப்போது?

5. காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்ட வரலாற்றைக் கூறுக.

6. வட்டமேஜை மகாநாடுகளின் பயன் என்ன?

7. 'இரண்டு நாடுகள்' இயக்கத்தின் விளைவு என்னவென்பதைச் சுருக்கமாக விளக்குக.

8. சமூகச் சீர்திருத்தத்திற்காக உழைத்த பெரியார் இருவரைப் பற்றி உனக்குத் தெரிந்ததைக் கூறுக.

9. சுருக்கமாகக் குறிப்புக்கள் எழுதுக:—லோகமான்ய திலகர், ஸ்வராஜ்யக் கட்சி, ஜின்னா, சைமன் கமிஷன், வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுதேசி இயக்கம், உப்பு சத்தியாக்கிரகம், காமன்வெல்த்.

**வாழ்க இந்தியா**

**ஜெய் ஹிந்த்!**

# GLOSSARY (கலைச் சொற்கள்)

Age - காலம், யுகம்
Alpine Climate - ஆல்ப்ஸ் சீதோஷ்ணம்
Anicut - அணைக்கட்டு
Arctic Circle - வட துருவ வட்டம்
Basin - வடி நிலம்
Bleaching powder - நிறம் நீக்கிப் பொடி, சலவைத் தூள்
Block mountains - மடியா மலை
Brown Coal - கபில நிலக்கரி
Bye products - உடன் விளை பொருள்கள்
Canal, Inundation - வெள்ளக் கால்வாய்
Carboniferous - நிலக்கரி தரும்
Census - ஜனத்தொகைக் கணக்கு
Cereal - புல் தானியம்
Clay soil - களிப்பு மண்
Climate, Cold - கடுங்குளிர்ச் சீதோஷ்ணம்
Climate, Dry - வறண்ட சீதோஷ்ணம்
Climate, Equatorial - பூமத்திய சீதோஷ்ணம்
Climate, Hot - வெப்பச் சீதோஷ்ணம்
Climate, Tropical - அயன மண்டல சீதோஷ்ணம்
Coal, Anthracite - அனல் மிகு நிலக்கரி
Coal, Bituminous - புகை மிகு நிலக்கரி
Coal, peat - கபில நிலக்கரி
Coniferous forests - ஊசி இலைக் காடுகள்
Continental shelf - கண்டத்திட்டு
Dam - அணை
Delta - டெல்ட்டா
Density of Population - ஜன நெருக்கம்
Economic products - விலை பொருள்கள்
Entrepot - இறக்கேற்றுத் துறை
Geography, Human - மானிட பூகோளம்
Geography, Regional - இயற்கைப் பிரதேச பூகோளம்
Geological Age - பூகர்ப்ப யுகம்
Grand Trunk Road - முக்கியப் பெரு ரஸ்தா
Greenwich Meridian - கிரீனிச் தீர்க்கரேகை
Influence, Geographic - இயற்கையமைப்பின் விளைவு
Irrigation - நீர்ப்பாசனம்
Isotherms - சம உஷ்ணக் கோடுகள்
Local time - தல நேரம்
Longitude - தீர்க்கரேகை
Lumbering - மரப்பண்ணை
Manganese - மங்கனீசு
Man power - ஆட்பலம்
Manufactured articles - செய் தொழிற் பொருள்கள்
Manufacturing Centres - செய் தொழிற் புலங்கள்
Manufacturing industries - செய் தொழில்கள்
Map reading - படம் படித்தல்
Map study - பட ஆராய்ச்சி
Merket Towns - சந்தை ஊர்கள்
Metal - உலோகம்
Mine - சுரங்கம்
Mineral - தாதுப் பொருள்
Monsoon - பருவக்காற்று
Natural regions - இயற்கைப் பிரதேசங்கள்
Packing industry - பஸ்தா தொழில்
Pastoral farming - மேய்ச்சல் பண்ணை
Pastoral industries - மேய்ச்சல் தொழில்கள்
Reservoir - நீர்த் தேக்கம்
Standard Time - திட்ட நேரம்
Tar - தார்
Waterfall - நீர் வீழ்ச்சி

220



Act - சட்டம்
Age, Vedic - வேத காலம்
Autonomy - சுய நிர்வாகம்
Buddha's Eight-fold path - புத்தரின் எண்வகை மார்க்கம்
Cabinet - மந்திரி சபை
Caste system - சாதி முறை
Ceremonials - சடங்குகள்
Cheque - செக்கு, உண்டியல்,
Citizen - குடி, பிரஜை
Commission - கமிஷன்
Commonwealth - பொது நல அரசு, காமன்வெல்த்
Communal representation - வகுப்பு வாரிப் பிரதி நிதித்துவம்
Constituency - வாக்காளர் தொகுதி
Constitution, Federal - கூட்டாட்சி அமைப்பு
Co-operative Credit Society - கூட்டுறவு நிர்ணயச் சங்கம்
Council of State - மேல் அரசாங்க சபை
Democracy - ஜன நாயகம்
Diarchy - இரட்டை ஆட்சி
Dictator - சர்வாதிகாரி
Doctrine of Lapse - அவகாசியிலிக் கொள்கை
Dominion Status - டொமினியன் அந்தஸ்து
Economic life - பொருளாதார வாழ்க்கை
Empire - சாம்ராஜ்யம், ஏகாதிபத்தியம்
Extremists - தீவிர வாதிகள்
Fanaticism - மதவெறி
Franchise - வாக்குரிமை
Home Rule - ஹோம் ரூல், சுய ஆட்சி
Idol worship - விக்கிரக ஆராதனை
Imperial preference - ஏகாதிபத்தியச் சலுகை
Indian National Congress - இந்திய தேசீய காங்கிரசு
Industrial Revolution - தொழிற் புரட்சி
Inscription - கல் வெட்டு
International trade - பல நாட்டு வர்த்தகம்
Minorities - சிறுபான்மையோர்
Ministerial responsibility - மந்திரிப் பொறுப்பு
Nationalists - தேசீய வாதிகள்
No tax Campaign - வரிகொடா இயக்கம்
Political sovereignty - அரசியல் ஆதிபத்தியம்
Raw produce - கச்சாப்பொருள்
Reform Bill - சீர்திருத்த மசோதா
Republic - குடியரசு
Responsible Government - பொறுப்பாட்சி
Round Table Conference - வட்ட மேஜை மகாநாடு
Self-Governing Dominions - சுய ஆட்சி டொமினியன்கள்
Steam power - நீராவி சக்தி
Strike - வேலை நிறுத்தம்
Subject, Reserved - விடா இலாகா
Subject, Transferred - மாற்றிய இலாகா
Subsidiary Treaty - துணைப் படை உடன்படிக்கை
Vote - வாக்குரிமை
White Paper - வெள்ளை அறிக்கை